# சின்னஞ்சிறு கண்ணசைவில்



சங்கரேஸ்வரி

# உனக்கென வாழும் இதயமடி - சங்கரேஸ்வரி

அத்தியாயம் : 1

காலை வேலையில் அனைவரும் புத்துணர்வுடன் பரபரப்பாக இயங்கி கொண்டிருந்த ஏ.எஸ் (A.S) நிறுவனத்திற்குள் புயல் வேகத்தில் நுழைந்தான் அகிலன்.

அகிலன் வருவதை கண்ட அனைவருமே வேகமாக எழுந்து அவனுக்கு குட் மார்னிங் சொல்ல,அவனோ அதை கண்டு கொள்ளதவாறு அவன் அறைக்குச் சென்றான்.

"இவர் எதுக்கு இப்படி வேகமாக ஓடுடாறு அதுவும் காலையில ஒன்பது மணிக்கெல்லாம் வந்துட்டாரு..?" என்று அங்கு வேலை செய்யும் ஒருவன் கேட்க,

"அநேகமாக இன்னைக்கு எம்.டி வருவாரு நினைக்கிறேன்,அதான் இவரு சீக்கிரம் வந்துருப்பாரு...?"என்று தன் அருகில் இருந்தவனுக்கு பதில் கூறினான் மற்றொருவன்.

"ஐயோ எம்.டி வருவாரா..! அப்போ இன்னைக்கு இவர் நம்மள என்ன டார்ச்சர் பண்ண போறாரோ..?"

"டேய் அமைதியா வேலை பாருடா,அவர் ரூமுக்குள்ள இருந்தாலும் அவர் பார்வை இங்கே தான் இருக்கும்..."என கூறி கொண்டிருக்கும் போதே,

இன்னும் சற்று நேரத்தில் அனைவருக்கும் கான்பிரன்ஸ் கால்ல மீட்டிங் என்ற அறிவிப்பு வர அனைவரும் துரிதமாக அதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்தனர்.

மீட்டிங் நடைப்பதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த அகிலனின் பி.ஏ அவன் அறைக்குள் ஒரு வித பயத்துடன் நுழைந்தான்.

"மே ஐ கமின் சார்..."

"எஸ் கமின் பிரதாப்,எல்லா ஏற்பாடு முடிஞ்சதா..?இன்னும் கொஞ்ச நேரத்துல எம்.டி வந்துருவாரு எல்லாரையும்

அவங்க பிரசெண்டேசன்னோட மீட்டிங் ஹாலுக்கு வர சொல்லுங்க..?"என்றவனின் பார்வையும்,கையும் தன் முன்னிருந்த லேப்டாப்பில் செயல்பட்டுக் கொண்டிந்தது.

"ஓகே சார்..."என்றவன் திரும்பி செல்ல,

"ஒரு நிமிஷம் பிரதாப்,எல்லாரும் வந்துடாங்களா..?"

"சார் அது வந்து...." திணறியவாறு ஏதோ கூற வர, "சொல்லுங்க யார் இன்னும் வரல..?"என்று அனல் பறக்க நேர்கொண்ட பார்வையுடன் கேட்க,

அவனது அந்த நேரடிப் பார்வையில் மறைக்கணும் என்று நினைத்த அனைத்தும் வெளிப்பட, " எழிலரசன் சாரும்,யாழ்வேந்தன் சாரும் இன்னும் ஆபீஸ் வரல..." திணறியவாறு கூறி முடித்தான்.

அதை கேட்டவனோ வாட் என கத்தியவாறு அதிர்ந்து எழுந்து நின்றான்.

"இன்னும் பத்து நிமிஷத்துல அவங்க ரெண்டு பேரும் என் முன்னாடி வரணும், கெட் அவுட்..."என கத்த தப்பித்தால் போதும் என நினைத்த பிரதாப் வேகமாக வெறியேறி தன் மொபலை எடுத்தான்.

ஜெயபிரகாஷ், சித்ராதேவி தம்பதியரின் மகன் அகிலன்,மகள் சுதிகீர்த்தி.

ஜெயபிரகாஷ் தன் கடின உழைப்பால் இப்போது சென்னையில் பிரபல புகழ்பெற்ற A. S நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

தான் தொடங்கும் எந்த ஒரு கம்பெனிக்கும் தன் இரு பிள்ளைகளின் பெயரின் முதல் எழுத்தான A அகிலன் என்றும் S சுதிகீர்த்தி என்றும் அதை சேர்ந்தே தொடங்குவார்.

இப்போது இந்த நிறுவனத்தின் அனைத்து பொறுப்பையும் கடந்த ஒரு வருடமாக தன் மகன் அகிலனிடம் ஒப்படைத்திருந்தார்.

தன் திறமையால் தனக்கு அளித்த இந்த பதவியை சிறப்பாக

தன் தந்தைக்கு (எம்.டி) செய்து காட்ட வேண்டும் என்ற கர்வத்துடன் இருந்தான் அகிலன்.

"அம்மா எனக்கு நேரமாச்சு,நேத்து நான் என் டிரெஸ்ஸை அயர்ன் பண்ண சொன்னேனே பண்ணிட்டீங்களா..?"என கோவமாக கூறியவாறு இடுப்பில் டவல் மட்டும் அணிந்து கொண்டு ஈர தலையுடன் சமையலறைக்குள் நுழைந்தான் இளஞ்செழியன்.

தன் தாய் செய்து தரும் காலை உணவினை எந்த ஒரு பரபரப்மின்றி மெதுவாக சமையல் மேடையில் அமர்ந்தவாறு உண்டு கொண்டு இருந்த தன் அண்ணன் யாழ்வேந்தனை கண்டான்.

"என்னடா இது இப்படி ஈரத்தலையோடு வந்துருக்கே..."என கேட்டவாறு சமையல் வேலையை அப்படியே விட்டவர் தன் முந்தனையால் செழியனின் தலையை துவட்ட,

தன் மனதில் இதுவரை இருந்த கோபம் அனைத்தும் மறைய, "அம்மா விடும்மா நானே துவட்டிகிறேன்,நீ என் ட்ரெஸ் மட்டும் எடுத்துத்தா,லேட்டாகிருச்சிம்மா அப்பா வேற என்கூட பேங்க்கு வரணும் சொன்னாரும்மா..."என்க,

"இதோஒரு நிமிஷம் எடுத்து தரேன்..."என்றவர் வேகமாக வெளியே செல்ல, "அம்மா என்னோட அடுத்த தோசை..."என்று வேந்தன் கேட்டது காற்றில் கரைந்தது.

"டேய் அண்ணா,என்னடா இது ஆபீஸ் கிளம்பாம இப்படி உட்கார்ந்துகிட்டு இருக்கே..?"

"நான் அப்பவே கிளம்பிட்டேன்டா ஆனா அம்மா சுடுற நெய் தோசை தான் என்ன போக விடல,எத்தனை தடவை சொல்லுறேன் உன் டென்ஷனை கொஞ்சம் குறைச்சிக்கோ,வா முதல நீ சாப்பிடு..."என்றவன் தன் தம்பிக்கு தன் கையாலே தோசை வார்த்து கொடுத்தவாறு அறிவுரை கூறினான்.

ரத்னா,திருமுருகன் தம்பதியரின் இரு மகன்கன் தான் யாழ்வேந்தன்,இளஞ்செழியன்.

திருமுருகன் தினக்கூலி வேலை செய்து கஷ்டப்பட்டு தன் மகன்களை படிக்க வைக்க அதன் பலனாய் யாழ்வேந்தன் B.E முடித்து சில வருடம் வெளி நாட்டில் பார்த்து இப்போது கடந்த ஒன்டறை வருடமாக A.S நிறுவனத்தின் வேலை பார்க்கிறான்.

இளஞ்செழியனோ M.B.A முடித்ததும் தன் விட முயற்சியால் தனியார் வங்கியில் வேலை கிடைக்க கடந்த எட்டு மாதங்களாக அதை சிறப்பாக செய்து கொண்டு வருகிறான்.

இருவரும் தன் பெற்றோரின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்ற நினைத்து அவர்களின் விருப்பப்படி கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் சொந்த வீட்டை கட்டி முடிக்க,இப்போது எந்த ஒரு கவலையுமின்றி தன் மகன்களின் திறமை நினைத்து நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர் ரத்னா திருமுருகன் தம்பதியர்கள்.

"அகிலன் சார் வந்துட்டாங்க..."என்று பிரதாப்பிடம் இருந்து மெசேஜ் வர,அடுத்தநொடி தன் தம்பியை கூட மறந்து தன் பைக்கை எடுத்துக் கொண்டு சிட்டென பறந்தான் யாழ்வேந்தன்.

"அண்ணா காலேஜ்க்கு வேற நேரமாகுது,இப்பவே மணி ஒன்பதரை பத்து மணிக்கு எனக்கு எக்ஸாம் இருக்கு..."என தவிப்புடன் கூறியவாறு தன் அண்ணனின் பின் பைக்கில் அமர்ந்திருந்தாள் வளர்மதி.

"பொறும்மா சிக்னல் வேற போட்டுட்டாங்க,அது முடிஞ்சதும் கொஞ்சம் நேரத்துல போயிருரலாம்..."என கூறிக் கொண்டிருக்கும் போதே பிரதாப்பிடம் இருந்து அழைப்பு வந்தது.

"என்ன பிரதாப் சொல்லு...?"

"அகிலன் சார் வந்துட்டாங்க எம்.டி வராங்களாம் பத்து மணிக்கு மீட்டிங்,வேந்தன் சார் வேற இன்னும் வரல,அகிலன் சார் உங்க ரெண்டு பேரையும் பத்து நிமிஷத்துல என் முன்னாடி நிக்கணும் சொல்லிருகாரு..."

"ஏதாவது சொல்லி சமாளிச்சிருக்கலாம்ல,சரி விடு நான்

கொஞ்சம் நேரத்துல வந்துறேன்..."என கூறிய எழிலரசன் போனை வைத்தான்.

"என்ன அண்ணன் எதுவும் முக்கியமான வேலை இருக்கா..? நான் வேணுன்னா ஆட்டோ பிடிச்சி போகட்டா..?"

"இல்ல வேண்டாம் நானே விடுறேன் அப்பறம் உனக்கு லேட்டாகிரும்..."என கூறிய எழில் சிக்னல் முடிஞ்சதும் தன் பைக்கின் வேகத்தை கூட்டினான்.

எழிலரசன்,வளர்மதி இருவரும் கோமதி நாராயணன் தம்பதியரின் வாரிசுகள்.

எழிலரசன் தன் பள்ளி படிப்பை முடித்ததும் நாராயணன் ஒரு விபத்தில் இறந்து விட என்ன செய்வது என தெரியாமல் நின்ற கோமதி தன் அண்ணனின் உதவியை நாடினர்.

ஆனால் அவரோ உதவ மறுக்க அதை கண்ட எழிலரசனோ தன் படிப்பு,கனவுகள் அனைத்தையும் மறந்து குடும்ப பாரத்தை அப்போதே சுமக்க ஆரம்பித்தான்.

அவனது நல்ல நேரமோ என்னவோ நாராயணன் இறந்த விபத்திற்கு உதவி பணம் வர,கோமதி கட்டாயப்படுத்தி அவனது படிப்பை தொடர வைக்க முயன்றான்.

அவனும் நல்ல மதிப்பெண் பெற்றதால் சென்னையில் ப்ரீ சீட் கிடைக்க தன் குடும்பத்தை விட்டு ஹாஸ்டலில் தங்கி விடுமுறைக்கு ஊருக்கு வரும் போதெல்லாம் சிறு சிறு வேலை செய்து கொண்டே படித்து முடித்தான்.

இப்போது எழிலரசன் A.S நிறுவனத்தில் பணிபுரிய, வளர்மதியோ B.sc கடைசி வருடம் படித்துக் கொண்டிருந்தாள்.

நேரம் செல்ல தன் முதலாளிக்கு என்ன பதில் கூறுவது என தெரியமால் தவிப்புடன் இருவரின் வருகைக்காக காத்திருந்தான் பிரதாப்.

அவனை சோதிக்க விரும்பாத கடவுள் இருவரையும் வரவழைக்க அவர்களை கண்டதும் மூச்சு விட்டவன்

நிம்மதியாக கீழே இறங்கி வந்தான்.

பார்க்கிங் ஏரியாவில் பைக்கை நிறுத்திய வேந்தன் திரும்ப அதே நேரம் அங்கே வந்து சேர்ந்தான் எழிலரசன்.

"என்ன எழில் சார் சீக்கிரம் வந்துட்டீங்க போல...?"

"விளையாடாதீங்க வேந்தன் சார்,வாங்க சீக்கிரம் போகலாம் எம்.டி வேற வர போறாராம்..." பேசியவாறு என்ட்ரன்ஸ் அருகில் வர அவர்களை நோக்கி ஓடி வந்தான் பிரதாப்.

"சார் உங்க ரெண்டு பேருக்கும் தான் காத்துகிட்டு இருந்தேன்,அகிலன் சார் உங்களை வர சொன்னாங்க..."என்று கூறி முடிக்கும் முன்னே அவர்களின் முன் BMW கார் வந்து நிற்க மூவரின் பார்வையும் அதை பார்த்து திரும்பியது.

அதிலிருந்து இறங்கிய எம்.டி யை (ஜெயபிரகாஷ்) கண்டவர்கள் வேகமாக அவர்கள் அருகில் சென்று வரவேற்றனர்.

"ஏன் ரெண்டு பேரும் இந்த கோலத்துல இருக்கீங்க..?எங்கே உங்க ஐடி, ஷர்ட் கூட இன் பண்ணாம இருக்கீங்க,இதுல தலை முடி வேற கலைஞ்சி போய், இப்படி தான் தினமும் வருவீங்களா மிஸ்டர் வேந்தன் அண்ட் எழில்..." கோவமாக கத்த,

"சாரி சார் நீங்க வர்றதுனால இன்னைக்கு மீட்டிங் ஹால்ல நாங்களே அரேஞ் பண்ணுனோம்,பண்ணி முடிச்சதும் நீங்க வந்துட்டீங்க உங்கள பார்த்தும் வரவேற்க வேகமா ஓடி வந்ததுனால தான் சார் இந்த கோலம்..."என கூறிய வேந்தன் எழிலரசனை பார்த்து கண்ணடித்தான்.

"என்ன எழில்,வேந்தன் சொல்லுறது எல்லாம் உண்மையா...?"என கேட்டவாறு முன்னே நடக்க ஆரம்பிக்க,அவனது பார்வையோ தவிப்புடன் வேந்தனின் புறம் திரும்பியது.

அவனோ சைகையால் ஆமாம் என கூற சொல்ல, "வேந்தன் சார் சொல்லுறது எல்லாம்..."என கூற வருவதற்குள் எதிரில்

அகிலன் வந்து தன் எம்.டியை (தந்தையை) வரவேற்று அழைத்துச் சென்றான்.

சிறிது நேரத்தில் அனைவரும் மீட்டிங் ஹாலில் அமர்ந்திருக்க உள்ளே நுழைந்த ஜெயபிரகாஷ், அகிலன் இருவரையும் கண்டு அனைவரும் எழுந்து நின்றனர்.

அகிலனின் பார்வையோ வேந்தன்,எழில் இருவரின் மீதே கோவத்துடன் பதிய, "ஐயோ இந்த சார் வேற இப்படி முறைக்கிறாரே,மீட்டிங் முடிஞ்சதும் என்ன சொல்ல போறாரோ..."என மனதிற்குள் எழிலரசன் நினைத்துக் கொண்டிருக்க,

அவன் நினைவினை கலைப்பது போல், "மிஸ்டர் எழிலரசன் நீங்க இந்த கம்பெனி டிவலெப்மெண்ட் பண்ணுறதுக்கு ரெடி பண்ண பிரசென்டேஷன் எக்ஸ்பிலைன் பண்ணுங்க..."என்றனர்.

தன் லேப்டாப்பை ஆன் பண்ணியவன் முந்தைய நாள் இரவு முழுவதும் தான் செய்த பிரசென்டேஷன் அனைத்தையும் எக்ஸ்பிளைன் செய்து கூறினான்.

அங்கிருந்த அனைவரும் அவனின் திறமையை எண்ணி வியக்க அதை கலைப்பது போல் இப்போது அகிலனின் மொபைல் ஓசை எழுப்பியது.

தன் தாயிடம் இருந்து அழைப்பு வர அதை எடுத்தவன் அனைவரிடமும் மன்னிப்பு கேட்டு விட்டு வெளியேறினான்.

அடுத்தநொடியே பதட்டத்துடன் உள்ளே நுழைந்தவள், "அப்பா நாம்ம வீட்டுக்கு போகணும் சீக்கிரம் வாங்க எமெர்ஜென்சி,சாரி கைஸ் இந்த மீட்டிங் கேன்சல் எல்லாரும் உங்க கேபின்க்கு போங்க..."என்றவன் அனைவரும் அவன் கூறியதை உணரும் முன்னே தன் தந்தையை அழைத்துக் கொண்டு விரைந்தான்.

அவர்கள் தன் காரை நெருங்கும் வேளையில் பின்னோடு ஓடி வந்த வேந்தன், "சார் எனி ஹெல்ப்..?"என்க,

"நத்திங் நான் பார்த்துகிறேன், நீங்க ஆபீஸ்சை

கவனிச்சிக்கோங்க..."என்றவன்,

வீட்டில் தன் தங்கையின் செயலால் தாயின் அழுகுரல் மட்டுமே செவியில் ஒலிக்க தன் காரை கிளப்பினான்.

## அத்தியாயம் : 2

பிரம்மாண்டமான மாளிகைக்குள் நுழைவதற்கு அகிலனின் கார் பொறுமையின்றி ஓசை எழுப்ப,இருபுறமும் இரு காவலர்கள் வந்து வேகமாய் திறந்தனர்.

வாசலில் தங்கள் வருகைக்காக நின்றிருந்த சித்ரா தேவியை கண்டதும் இறங்கி தவிப்புடனும் வேகத்துடனும் தந்தையும் மகனும் விரைந்தனர்.

"என்னாச்சு சித்ரா எதுக்கு இவ்வளோ அவசரமா வர சொன்னே..?"

"அம்மா கீர்த்திக்கு என்னாச்சு...?"என்று பதட்டத்துடன் இருவரும் கேட்க,

"என்னங்க நம்ம கீர்த்தி..."என புலம்பியவாறு தன் கணவனின் நெஞ்சில் அழுகையுடன் சாய,தன் மனைவியின் தலையை வருடிக் கொடுத்தவாறு வீட்டுக்குள் அழைத்து வந்தார் ஜெயபிரகாஷ்.

"அம்மா நீங்க கவலைப்படாதீங்க, நான் போய் கீர்த்தி கிட்ட பேசுறேன்,அவ மார்னிங் சாப்பிட்டாளா..?"

"இல்லப்பா..."

"சரி நான் போய் கூட்டிட்டு வரேன் நீங்க எல்லாருக்கும் லஞ்ச் எடுத்து வைங்க..."என்ற அகிலன் தன் தங்கையை காண அவள் அறைக்குள் நுழைந்தான்.

அறை முழுவதும் சிறு வெளிச்சமின்றி இருட்டுடன் இருக்க,டோரின் அருகில் இருந்த ஸ்விட்சை ஆன் பண்ண அந்த அறை இருந்த கோலத்தை கண்டு திகைத்தான்.

பொருட்கள் அனைத்தும் ஆங்காங்கு சிதறி

கிடைக்க,படுக்கையில் சாய்ந்து விம்மி அழும் தன் தங்கையை கண்டவன் தானும் உள்ளம் கலங்க, அதை மறைத்தவன் அவள் அருகில் சென்று அமர்ந்தான்.

"கீர்த்தி..."அவள் தலையை வருடியவாறு அழைக்க,அவன் கையை தட்டி விட்டு திரும்பி படுத்தாள்.

"கீர்த்தி இப்போ என்னாச்சு எதுக்கு இப்படி எல்லாத்தையும் போட்டு உடைச்சிருக்கே..?"

"ஓ அப்போ நான் அழுகுறது உன் கண்ணுக்கு தெரியல,அந்த பொருள் எல்லாம் உடைஞ்சது மட்டும் தான் தெரியுது,அப்படி தானே...?" இதுவரை அழுது கொண்டிருந்தவள் இப்போது எழுந்து கோபத்துடன் கேட்க,

தன் தங்கையின் இந்த செயலால் உள்ளுக்குள் சிரித்தவன், "சரிம்மா நான் கேட்டது தப்பு தான்,இப்போ ஏன் நீ அழுதுகிட்டு இருக்கே..?" அவள் கையை எடுத்து தன் கைக்குள் வைத்துக் கொண்டு கேட்டான்.

"அண்ணா என்னால முடியல,எனக்கு இந்த வீட்டுக்குள்ள,இந்த ரூமுக்குள் இருக்க மூச்சு மூட்டுது, இன்னும் எத்தனை நாள் தான் இந்த கொடுமையை அனுபவிக்கும்,இதுக்கு பேசாம நான் செத்து..."கூறி முடிக்கும் முன்னே,

"கீர்த்தி..!"என கத்தியவன் அவளை இழுத்து தன் நெஞ்சோடு சாய்த்துக் கொண்டான்.

"ஏன் கீர்த்தி இப்படியெல்லாம் பேசுற, நீ இந்த வீட்டோட மகாராணி,எங்க மூணு பேரோட உலகமே நீ தானடா,நீ இல்லாம எங்களால ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது,இனிமே இப்படியெல்லாம் பேசாதே..."என்க,

தன் அண்ணன் கலங்கினதை கண்ட பிறகே தான் கூறியதின் அர்த்தம் புரிய, "ஐ ஆம் சாரி அண்ணா,இனிமே நான் இப்படி பேச மாட்டேன்,ஏதோ ஒரு கோபத்துல தெரியாம பேசிட்டேன்..."என்றவாறு அவனிடம் இருந்து விலகினாள்.

"சரி இப்போ என்ன உனக்கு வீட்டுக்குள்ள இருக்க பிடிக்கல

அப்படி தானே,அப்போ பாட்டி வீட்டுக்கு போறையா..?"

"இல்ல என்னால உங்க எல்லாரையும் விட்டுட்டு இருக்க முடியாது ஆனா நான் உங்க எல்லாருக்கும் பாரமா இருக்கேன்ல..."

"அப்படி எல்லாம் இல்லமா, சரி விடு இப்போ என்ன பண்ணலாம்..."

"நானும் உன் கூட ஆபீஸ் வரேன்..."என்க,அவனோ அதை கேட்டு அதிர்ந்து எழுந்தான்.

"கீர்த்தி நீ...உன்னால எப்படி அங்கே..."சற்று தடுமாற்றதுடன் என்ன கூறுவது என தெரியமால் தந்தியடிக்க,

"என்ன அண்ணா என்னால முடியாதுன்னு நீயே முடிவு பண்ணிட்டையா...?"

"அப்படியில்ல கீர்த்தி உன்ன யாராவது எதுவும் சொல்லிட்டா அப்பாவாலையும்,என்னாலையும் தாங்க முடியாது,அதான் உன்ன எங்கையும் இதுவரைக்கும் நான் கூட்டிட்டு போகல..."

"அண்ணா அது நம்ம ஆபீஸ் தானே,பிளீஸ் என்னால இங்கே இருக்க முடியல,வெளி உலகத்துக்கு போகணும் நினைக்கிறேன்..."கெஞ்சி கேட்க,

இதற்கு மேல் அவளிடம் எதுவும் பேச முடியாது என்பது புரிய, "சரி நாளைக்கு கூட்டிட்டு போறேன்..."என்றான்.

"தேங்க்ஸ் அண்ணா..."

"சரி வா சாப்பிட போகலாம்..."என்றவாறு தன் தங்கையை அழைத்துக் கொண்டு கீழே சென்றான்.

அதன் பின் அனைவரும் அமர்ந்து மதிய உணவு உண்ண,கீர்த்தி கூறியதை அப்படியே தன் பெற்றோரிடம் கூறினான்.

"சரிம்மா உனக்கு என்ன விருப்பமோ அதையே செய்,நாங்க யாரும் அதை தடுக்க மாட்டோம்..."என்றவர் தன் மகனின்

புறம் திரும்பி,

"நாளையில இருந்து நானும் கீர்த்தியும் தினமும் ஆபீஸ் வருவோம்,நம்ம எம்பிளாயி எல்லார் கிட்டையும் சொல்லிரு அகில்..."என்க, சரி என்றவாறு தன் உணவினை முடித்துக் கொண்டு மறுபடியும் ஆபீஸ் கிளம்பினான்.

அகிலன் ஆபீஸ்க்குள் நுழைய அவன் நடையில் எப்போதும் இருக்கும் சுறுசுறுப்பு இப்போது இல்லாததை உணர்ந்த பிரதாப்,அதை பற்றி யோசித்தவாறு நடக்க,எதிரில் வந்த எழிலரசனின் மீது மோதி நின்றான்.

"டேய் என்னாச்சுடா,இப்படி எதையாவது யோசிச்சிட்டு இங்கே சுத்திக்கிட்டு இருக்காதே..?அப்பறம் அகிலன் சார் பார்த்தா உன்ன வேலையை விட்டே தூக்க போறாரு..."

"சார் நான் யோசிக்கிறதே அவரை பத்தி தான்..."

"ஏன் என்னாச்சு அவருக்கு,அவரை பத்தி நீ என்னத்த யோசிக்கிற...?"

"அகிலன் சார் இப்போ தான் வந்தாங்க,ஆனா ஒரு மாதிரி டல்லா இருக்காரு,ஏன்னு தெரியல சரி நான் போய் என் வேலையை பார்க்குறேன்..."என்றவன் தன் வேலையை பார்க்க செல்ல,யாருக்கோ தன் மொபைலில் மெசேஜ் அனுப்பிய எழிலரசன் அகிலனின் அறைக்குள் நுழைந்தான்.

தலையில் கை வைத்துக் கொண்டு எதையோ யோசித்தவாறு அமர்ந்திருந்த அகிலனை பார்த்தவன், "மே ஐ கமின் சார்..."என்க,

"வாடா எழில்..."அவனது அழைப்பில் தோழமை தெரிய,

"என்னாச்சு அகில்..? ஏன் ஒரு மாதிரியா இருக்கே..?"

"ஒன்னுமில்லைடா,நான் நல்லா தான் இருக்கேன்..."

"இதை நாங்க நம்பனும்மாக்கும், உன் மூஞ்சை பார்த்தாலே தெரியுது நீ டல்லா இருக்குறது..."என கூறியவாறு உள்ளே நுழைந்த யாழ்வேந்தன் அவன் முன்னிருந்த டேபிளில் ஏறி அமர்ந்தான்.

"காலையில மீட்டிங்கை கேன்சல் பண்ணிட்டு வேகமா போனே நான் ஹெல்ப் வேணும்மானு கேட்டேன் வேண்டான்னு சொன்னே சரி,இப்பவும் எங்க ரெண்டு பேருக்கிட்ட என்ன பிரச்சனைன்னு சொல்ல மாட்டிகே, அப்போ உன் பெர்சனலை எங்க கிட்ட சொல்ல கூடாது முடிவு பண்ணிட்டே அப்படி தானே,சரி வாடா போகலாம் எழில்..."என்றவன் வெளியே செல்ல முயல,

"டேய் நில்லுங்கடா ரெண்டு பேரும்,நானே டென்ஷன்னா இருக்கே இதுல நீங்க வேற..."

"அதை தானே கேட்குறோம் நாங்க ரெண்டு பேரும் சொல்லுடா..."

"நாளையிலிருந்து ஆபீஸ்க்கு என் தங்கச்சி கீர்த்தி வர போறாடா,இனிமே தினமும் அவளும் அப்பாவும் வருவாங்க,அப்பா இதை நம்ம எம்பிளாயி எல்லார்கிட்டையும் சொல்ல சொல்லிருக்காரு,ஆனா கீர்த்திக்கு..."அவளை பற்றி கூற ஆரம்பிக்கும் போதே,

"டேய் இது நல்ல விசியம் தானே இதுக்கு எதுக்கு அப்செட்டா இருக்கே,உனக்கு என்ன இதை எல்லார்கிட்டையும் சொல்லணும் அவ்வளோ தானே நாங்களே சொல்லிறோம்,நாளைக்கு அவங்க வரவேற்புக்கு செய்ய வேண்டிய ஏற்பாடு எல்லாம் எங்க ரெண்டு பேரு பொறுப்பு..."என்ற வேந்தன் சந்தோஷமாக செல்ல,அவன் பின்னே அதே சந்தோஷத்துடன் சென்றான் எழிலரசன்.

"இவனை பத்தி தெரிஞ்சு கிட்டே முழுசா சொல்லாம அரைகுறையா சொல்லிட்டேனே..."தலையில் கை வைத்து கொண்டு தன்னை தானே திட்டிக் கொண்டான் அகிலன்.

வேந்தன்,அகிலன்,எழிலரசன் மூவரும் ஒரே காலேஜில் படிக்க முதல் வருடமே அவர்களின் நட்பு ஆரம்பமானது.

அகிலன்,எழிலரசன் இருவரும் அமைதியான குணத்துடன் இருக்க,அதற்கு மாறாக இருந்தான் வேந்தன்.

காலேஜில் ஏதாவது பிரச்சனை, சண்டை என்றால் அங்கு முதல் ஆளாய் இருப்பான். ஒரு சில நேரங்களில் அவனே

அந்த பிரச்சனைக்கு காரனமாகவும் இருப்பான்.

பிரின்சிபல் வரை செல்லும் போது ஏதாவது ஒரு பொய் சொல்லி அவனுக்கு துணை நின்று அகிலன் காப்பாற்ற,பொய் என்றே அறியாத எழிலரசனோ உண்மையை கூற,மாட்டிக் கொண்டு நிற்பான் யாழ்வேந்தன்.

காலேஜில் இருக்கும் நாட்களை விட மூவரும் வெளியே சுற்றும் நாட்களே அதிகம். விடுமுறை நாட்களில் அகிலன் தன் வீட்டுக்கு நண்பர்களை அழைக்க ஒரு சில நேரங்களில் வருபவர்கள் மற்ற நேரங்களில் ஏதாவது ஒரு காரணம் சொல்லி வர மறுப்பார்கள்.

ஆனால் அகிலனோ அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல்,ஹாஸ்டலில் இருக்கும் எழிலை அழைத்துக் கொண்டு விடுமுறை நாட்கள் அல்லது ஏதாவது பண்டிகை நாட்கள் என்றால் வேந்தனின் வீட்டிலே ஆட்டம் போட ஆரம்பிப்பார்கள்.

இவர்களுடன் ஸ்கூல் படிக்கும் இளஞ்செழியனும்(யாழ்வேந்தன் தம்பி) சேர்ந்து கொள்ள,அந்த நொடி ஏனோ தன் குடும்பத்துடன் இருப்பது போல் உணர்ந்து கொள்வான் எழிலரசன்.

காலேஜ் முடியும் நேரம் கேம்பஸ் இன்டெர்வியூவில் மூவருக்கும் வேலை கிடைக்க அகிலனோ தன் தந்தையின் வற்புறுத்துததால் அவன் கம்பெனியில் வேலை பார்க்க மற்ற இருவரும் ஒவ்வொரு புறமாக வெளிநாட்டிற்கு பறந்து சென்றனர்.

வருடங்கள் சென்றாலும் அவர்களது நட்பு தொடர்ந்து கொண்டேயிருக்க கிராமத்தில் இருக்கும் எழிலரசனின் தங்கை பள்ளி படிப்பை முடித்தாள்.

தன் தங்கையை பெஸ்ட் காலேஜில் படிக்க வைக்க வேண்டும் என்று நினைத்த எழிலரசன் தன் வெளிநாட்டு வாழ்க்கையை விட்டுவிட்டு சென்னையில் தன் குடும்பத்துடன் தங்க ஆரம்பித்தான்.

எழில் சென்னைக்கு வந்ததை அறிந்த அகிலனோ அவனை தந்தையின் மூலம் அவனுக்கே தெரியமால் தன் ஆபீஸிற்கு நுழைய வைத்தான்.

வேலை கிடைத்த பிறகே அது அகிலனின் ஆபீஸ் என்பதை புரிய விலக முயன்றவனை கட்டாயப்படுத்தி இருக்க வைத்தான்.

அதன் பின் மறு வருடமே வேந்தனின் தந்தைக்கு உடல்நிலை சரியில்லாமல் போக அதற்காக வந்தவனையும் தன் கம்பெனியில் இணைத்துக்கொண்டான்.

மூவரும் அந்த கம்பெனியில் எம்பிளாயி போல் வேலை பார்க்க திடீரென அகிலனை தன் மகன் என அனைவரிடமும் அறிமுகப்படுத்தி அவனிடம் முழு பொறுப்பையும் ஒப்படைத்தார் ஜெயபிரகாஷ்.

அவனும் தன் தோழர்கள் இருக்கும் தைரியத்தில் அதை ஏற்றுக் கொள்ள ஆனால் அவர்களோ தாங்கள் இருவரும் இங்கே வேலை செய்ய வேண்டும் என்றால் ஒரு எம்பிளாயி போல் நடத்த வேண்டும் என்ற கூற சரி என்றவாறு ஒத்துக் கொண்டான்.

ஒரு சில நேரங்களில் அவனையே அறியாமல் நட்புடன் பேச அதை அப்படியே வேறு விதமாக மற்றவர் முன்னிலையில் மாற்றி விடுவார்கள் இருவரும்.

மறுநாள் விடிய அன்று சீக்கிரமே அலுவலகத்திற்குள் நுழைந்த எழிலரசனையும்,யாழ்வேந்தனையும் கண்ட செக்யூரிட்டி புன்னைகையுடன் குட் மார்னிங் கூற அதை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு உள்ளே நுழைந்தனர்.

தன் புது முதலாளியை வரவேற்க தேவையான ஏற்பாடுகள் அனைத்தும் ரெடி பண்ண அவர்களுடன் பிரதாப்பும் இணைந்து கொண்டான்.

இவர்கள் மூவரின் ஏற்பாடுகளையும் கண்ட ஒருவன் மற்றொருவனிடம், "டேய் என்னடா இது ஆபீஸா இல்ல பார்லிமென்ட்டா தினமும் ஒவ்வொருத்தங்களா வர ங்க,

நேத்து என்னடானா எம்.டி வந்தாரு இன்னைக்கு என்னடான அவங்க பொண்ணு வர போறாங்களாம்..."என புலம்பியவாறு வர அதை கேட்டவாறு அவன் முன் நின்றான் யாழ்வேந்தன்.

அவன் இருப்பதை அறியாமல் பேசியதை தன் செயலை நினைத்தவாறு பயத்துடன் நிற்க, "மிஸ்டர் ஆனந்த் இங்கே யார் வந்தா உங்களுக்கு என்ன,உங்களை யாரும் இன்வைட் பண்ணுனாங்களா இல்லைல்ல போங்க உங்களுக்கு கொடுத்த வேலையை பாருங்க..."என்றவாறு விலகி செல்ல,

தன்னை அனைவர் முன்னிலும் அவமானப்படுத்திய வேந்தனை பழிவாங்கும் பார்வையுடன் பார்த்துக் கொண்டு நின்றான் ஆனந்த்.

காலேஜில் படிக்கும் போது தனக்கு ஒரு தங்கை இருக்கிறாள் என்று அகிலன் அடிக்கடி கூறி இருக்கிறான் தான் ஆனால் ஒரு நாள் கூட அவளை கண்டதில்லை இருவரும்.

இப்போது ஆவலுடன் அங்கு வேலை செய்யும் அனைவருமே கையில் பூங்கொத்துடன் காத்திருக்க சிறிது நேரத்திலே அகிலனின் கார் வந்து நின்றது.

அதிலிருந்து இறங்கிய சுதிகீர்தியை கண்டதும் இருவரும் திகைத்து போய் தன்னிலை மறந்து நின்றனர்.

## அத்தியாயம் : 3

சுதிகீர்த்தியை கண்டதும் இருவரும் பேரதிர்ச்சியில் உறைந்து சில நொடிகள் நிற்க அடுத்தநொடியே இருவரும் எல்லையில்லா சந்தோஷத்தில் மிதந்தனர்.

அவளுக்கென்று எடுத்தது போல் லைட் ப்ளூ சல்வார் அவள் மேனிக்கு கச்சிதமாய் பொருந்திருக்க,துப்பட்டாவை ஒரு புறமாய் போட்டிருந்தாள்.

இடைவரை மட்டுமே இருந்த கூந்தல் காற்றில் ஆட,வில்லாய் வளைந்த புருவங்களுக்கு மத்தியில் சிறு கோபுர போட்டு பதிந்திருக்க அவளை தோளோடு அணைத்தவாறு நின்றார் ஜெயபிரகாஷ்.

அங்கிருந்த அனைவரும் கொடுக்கும் பூங்கொத்தினை புன்னகை தவழும் இதலுடன் சந்தோஷமாக வாங்க அவள் அருகில் நெருங்கினார் இருவரும்.

"வெல்கம் மேடம்..."என்று வேந்தன்,எழில் இருவரும் ஒரே போல் கூற அவர்கள் கையில் வைத்திருந்த பூங்கொத்தையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள்.

"என்னாச்சு இவளுக்கு இவ்வளோ அமைதியா இருக்கா அவங்க அப்பா இருக்குறதுனால தெரியாத மாதிரி நடிக்கிறாளா இல்ல இந்த ஒன்றை வருஷத்துல என்ன மறந்துட்டாளா..."வேந்தன் நினைக்க,

"என் நியாபகம் தான் இருக்காது சரி ஆனா என் முகத்தையும்மா மறந்தாங்க எதுவும் தெரியாதா மாதிரி இருக்காங்க..." இருவரும் அவள் செயலை பற்றி யோசித்தவாறு நிற்க,

"சரி வாங்கப்பா போகலாம்..."என்ற அகிலன் தன் தங்கையும்,தந்தையும் அழைத்துக் கொண்டு சென்றான்.

எதையோ யோசித்தவாறு அப்படியே நின்ற இருவரையும் கண்ட பிரதாப் அவர்களை அழைக்க,நினைவிலிருந்து கலைந்த இருவரும் வருவதாக கூறினர்.

அதன் பின் அவரவர் வேலையை பார்க்க செல்ல முக்கியமானவர்களை மட்டுமே கான்பிரன்ஸ் ஹாலிற்கு வர சொல்ல அடுத்தநொடியே அனைவரும் அங்கிருந்தனர்.

சுதிகீர்த்தியை அகிலனும்,ஜெயபிரகாசும் அழைத்து வர அனைவரும் மரியாதையுடன் எழுந்து நின்றனர்.

இப்போதும் தன்னை தெரியாது போல் இருக்கும் அவளின் செயலை கண்டு மனதிற்குள் ஓராயிரம் குழப்பதுடனும்,யோசனையுடனும் நின்றனர் இருவரும்.

அவளை எம்.டி சேரில் அமர வைத்த அகிலன் அனைவரும் அமர சொல்லி தன் உரையை தொடங்க ஆரம்பித்தான்.

"ஹலோ கைஸ் ஷி இஸ் மை சிஸ்டர் சுதிகீர்த்தி,அப்பறம் ஒரு முக்கியமான விசியம்..."என்றவனின் குரல் சற்று தளர,

"அண்ணா ஒரு நிமிஷம் நானே என்ன பத்தி சொல்லிக்கிறேன்..."என்றவள் தன்னை பற்றி கூற எழுந்தாள்.

"என்ன வரவேற்க நீங்க பண்ணுன எல்லா ஏற்பாடுகளுக்கும் மிக்க நன்றி,கொஞ்சம் மாசமா நான் ஒரு ஜெயில் வாழ்க்கை வாழ்ந்துகிட்டு இருந்தேன்,அதிலிருந்து இன்னைக்கு தான் விடுபட்டு வந்திருக்கேன்,இங்கே வந்து உங்க எல்லாரோட இனிமையான குரலை கேட்க ரெம்ப சந்தோஷமா இருக்கு,ஆனா என்ன ஒரே ஒரு கவலை தான் உங்க குரலை கேட்ட என்னால உங்க யாரையும் பார்க்க முடியல,ஏழு மாசத்துக்கு முன்னாடி ஒரு விபத்துல எனக்கு கண் பார்வை போச்சு..."என கூறி முடிக்கும் முன்னே அதை கேட்டு அதிர்ச்சியில் எழுந்தே நின்றான் எழிலரசன்.

யாழ்வேந்தனோ அவள் கூறியதை கேட்டு உயிரற்ற ஜடம் போல் உறைந்து போய் அமர்ந்திருந்தான்.

அவள் கூறியதை கேட்ட அனைவரும் சற்று வருத்தப்பட,அகிலனின் பார்வையோ தன் இரு தோழர்களின் மீது இருந்தது.

பிரதாப் தன்னை உலுக்கிய பிறகே தன் நிலை புரிய சட்டென இருக்கையில் அமர்ந்தான் எழிலரசன்.

அதன் பின் சிறிது நேரம் சுதிகீர்த்தி ஏதேதோ பேச அவள் கூறியதை இருவரும் செவி மட்டுமே கேட்டதே தவிர மனமோ அதை ஏற்றுக்கொள்ள மறுத்தது.

மனம் முழுவதிலும் இருவருக்கு அவளை பார்த்த தருணம் மட்டுமே நினைவில் இருக்க,அங்கிருந்த அனைவரும் தன் கேபினுக்கு செல்ல ஆரம்பித்தனர்.

தன் நினைவிலிருந்து கலைந்த இருவரும் எழ வேந்தனின்

பார்வையோ அவளிடமே இருக்க,எழிலரசனின் பார்வையோ அவளை காண கூட தயங்கியது.

கடைசியாக சென்ற மூவரையும் நிற்க சொன்ன அகிலன், "பிரதாப் இனிமே கீர்த்திக்கும் நீ தான் பி.ஏ, அவளுக்கு ஏதாவது ஹெல்ப்ன்னா நீ தான் செய்யணும் சரியா..."என்க, சரி என்றவாறு வெளியே சென்றான்.

ஜெயபிரகாஷ்க்கு போன் வர அவரும் எழுந்து செல்ல, "கீர்த்தி இவங்க ரெண்டு பேரும் என்னோட பெஸ்ட் பிரெண்ட்ஸ்,யாழ்வேந்தன் அண்ட் எழிலரசன்..."

"உங்க ரெண்டு பேர் பத்தியும் தான் என்கிட்ட அண்ணா அடிக்கடி பேசுவான்,அவன் சொல்லும் போதெல்லாம் உங்களை பார்க்கணும் ஆசைப்படுவேன், ஆனா இப்போ நீங்க ரெண்டு பேரும் என் முன்னாடி இருந்து என்னால பார்க்க முடியல..."

"எதுக்கு இப்படி பேசுறீங்க நாங்க இங்கே தானே இருக்க போறோம்,கண்டிப்பா நீங்க எங்களை சீக்கிரம் பார்ப்பீங்க..."என்று எழிலரசன் பரிதவிப்புடன் கூற,அவளோ சிறு புன்னகையை உதிர்த்தாள்.

அவளது அந்த சிறு புன்னகைக்குள் இருந்த வலி வேந்தனை என்னவோ செய்ய, "சரி எனக்கு கொஞ்சம் ஒர்க் இருக்கு கிளம்புறேன்..."என்று பொதுவாக கூறி விட்டு வெளியேறினான் யாழ்வேந்தன்.

அதன் பின் எழிலும் வெளியேற ஏனோ அவர்கள் இருவரின் குரலை எங்கோ கேட்டது போல் உணர்ந்தாள் சுதிகீர்த்தி.

"அண்ணா இவங்க ரெண்டு பேரையும் நான் பார்த்துருக்கேன்னா...?"

"நிச்சியமா அதுக்கு வாய்ப்பே இல்ல..."

"இல்ல அண்ணா இவங்க ரெண்டு பேரோட குரலை கேட்டது போல இருக்கு..."

"அப்படியெல்லாம் ஒன்னுமில்லை அது உன் பிரமையா இருக்கு,சரி வா போகலாம்..."என்ற அகிலன் தன் தங்கையை

அழைத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றான்.

அன்று முழுவதும் இருவருக்கும் எப்படியோ செல்ல பிரதாப்பிடம் சொல்லிக் கொண்டு சீக்கிரமே கிளம்பினர்.

ஹாலில் அமர்ந்து இரவு சமையல் செய்ய தேவையான மாவினை பிசைந்து கொண்டிருந்த கோமதியின் அருகில் வந்து அமர்ந்தான் எழிலரசன்.

"என்னாச்சுப்பா ஏன் ஒரு மாதிரியா இருக்கே..?,ஆபீஸ்ல வேலை அதிகமா..?சீக்கிரமே வந்துட்டே..?ஆமா வளரு எங்கே..?"

"நான் அவ காலேஜ் போகல,அவளே வந்துருரேன்னு சொன்னா..."என்றவன் மனதிலோ, "கண்டிப்பா இன்னைக்கு என்னால சுதிகீர்த்தியின் நினைவோட அந்த காலேஜ் போக முடியாது..."நினைத்துக் கொண்டிருக்க,

தன் மகன் எதையோ நினைத்து கலங்குவதை கண்டவன், "கண்ணா என்னாச்சுப்பா அம்மா கிட்ட சொல்ல மாட்டியா..?" அவன் தலையை வருடிக் கொடுத்தவாறு கேட்டார்.

"அம்மா நம்ம அகிலனோட தங்கச்சி ஆபீஸ்க்கு இன்னைக்கு வர்றதா சொன்னேன்ல..."

"ஆமா,ஏன் அவங்க வரலையா..?"

"வந்தாங்கம்மா, ஆனா அவங்களுக்கு எட்டு மாசத்துக்கு முன்னாடி ஒரு விபத்துல கண் பார்வை இழந்துட்டாங்க அதான் கொஞ்சம் கஷ்டமா இருக்கு வேற எதுவும் இல்லமா,சரி நான் கொஞ்சம் நேரம் போய் ரெஸ்ட் எடுக்குறேன்..."என்றவன் அதற்கு மேல் எதுவும் கூறாது தன் அறைக்குள் ஒழிந்து கொள்ள,

ஏனோ தன் மகன் தன்னிடம் வேறு எதையோ மறைக்கிறான் என்பதை உணர்ந்தவன் அவனாகவே கூறட்டும் என்று நினைத்து சமயலறைக்குள் நுழைந்தான்.

தன் அறைக்குள் நுழைந்த எழில் உடை கூட மாற்றாமல் படுக்கையில் விழ அவனது மனதிலோ சுதியின் முகம் மட்டுமே நினைவில் வந்து அவன் நிம்மதியை இழக்கச்

செய்தது.

"அவளோட இந்த நிலைமைக்கு ஒரு வேலை நான் தான் காரணம்மா,அன்னைக்கு நான் கொஞ்சம் சீக்கிரம் போயிருந்தா இன்னைக்கு அவ சந்தோஷமா இருந்திருப்பால..."என்றவனின் நினைவுகளோ கடந்த சில மாதங்களுக்கு முன் நடந்ததை நினைத்தது.

"ஏண்டி இந்த நேரம் அவனை ஆபீஸ்ல இருந்து வர சொன்னே..."

"அண்ணா தானே நீ எப்போ காலேஜ் போகணுமோ அப்போ கூப்பிடு வரேன்னு சொன்னான் அவனுக்கு மதிய சாப்பாடு எடுத்து வைம்மா சீக்கிரம் வந்துருவான் நான் போய் கிளம்புறேன்..."என்ற வளர்மதி தன் அறைக்குள் நுழைய,சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தான் எழிலரசன்.

வாசலில் நின்றவாறு ஹாரனை மட்டும் ஒலிக்க விட அதை கண்ட வளர்மதி, "அண்ணா ஒரு பைவ் மினிட்ஸ் அதுக்குள்ள நீ வந்து சாப்பிடு நான் கிளம்பிருவேன்..."என்க,

அவளது இந்த பாசத்தை அறிந்த எழில் எப்படியும் தான் சாப்பிட்டால் தான் கிளம்புவாள் என்பதை அறிந்தவன் அவள் விருப்பப்படியே செய்தான்.

அதன் பின் அவளை அழைத்துக் கொண்டு காலேஜ் செல்ல, "என்ன வளரு எல்லாம் படிச்சிட்டீல..? நல்லா எழுதனும் சரியா,ஆல் தி பெஸ்ட்ம்மா..."

"தேங்க்ஸ் அண்ணா, நீ கொஞ்சம் சீக்கிரம் போ..."என்க,சரி என்றவன் தன் தங்கையின் கட்டளைக்கு இணங்க அடுத்தநொடியே அவள் காலேஜின் முன் நின்றான்.

"சரி அண்ணா நீ போ..."என்றவள் திரும்ப அவளை நோக்கி தவிப்புடன் ஓடி வந்தாள் வந்தனா.

"வளரு இன்னைக்கு எக்ஸாம் கேன்சல் நீ வீட்டுக்கு போ,நானும் கிளம்பிட்டேன்..."

"ஏன் என்னாச்சு..?" என்று எழிலரசன் கேட்க,

"அதுவா அண்ணா சி பிளாக் இருக்குற ஹெமிஸ்டரி லேப் மேஜர் பயர் அக்சிடென்ட்டாச்சி,அந்த சைடு போக முடியல..."

"அச்சோ உள்ள யாரும் இருக்காங்களா..?"

"ஆமா வளரு கொஞ்சம் பேர் இருக்காங்க எல்லாரும் இப்போ வெளியே வர போராடிகிட்டு இருக்காங்க..."என்று வந்தனா கூறிக் கொண்டிருக்கும் போதே சி பிளாக்கை நோக்கி ஓடினான் எழிலரசன்.

தன் அண்ணன் செல்வதை பார்த்தவள், "ஐயோ அண்ணா நில்லு..."என்றவாறு அவன் பின்னே ஓட,அவனோ அதற்குள்ளாகவே அந்த பிளாக்கிற்குள் நுழைய அவளை பிடித்து தடுத்தாள் வந்தனா.

விரைவாய் பரவி கொண்டிருந்த தீயை அணைக்க போராட அந்த அறை முழுவதும் தீயும், புகையுமாய் இருக்க தன்னால் முயன்ற அளவு அங்கிருந்த வரை வெளியேற்ற போராடினான்.

எங்கு திரும்பினாலும் நெருப்புக் குமிழியாய் தெரிய சில மாணவர்கள் அவனும் சேர்ந்து அந்த அறையில் இருந்த பெண்களை வெளியேற்ற முயன்றனர்.

அனைவரும் சற்று வெளியேறும் நேரம் பயர் ஸ்டேசனின் உதவியால் நெருப்பு சிறிது அணைந்து புகை மூட்டமாக இருக்க,ஒரு பெண்ணின் குரல் வலியுடன் அந்த அறையில் ஒலித்தது.

அவன் செவியை தீண்டிய நொடி அனைத்து இடங்களிலும் தேட அவனுக்கு பின்புறம் சுவரை ஒட்டியவாறு ஒரு பெண் அமர்ந் திருப்பது போல் தெரிய அவள் அருகில் நெருங்கினான்.

அவள் அருகில் நெருங்கும் போதே அவளின் மேலிலும் தீ காயம் பட்டுருப்பதை அறிந்தவன்,உள்ளம் பதற வெகுவாய் அவள் அருகில் நெருங்கினான்.

சுவரில் சாய்ந்திருந்தவள் அப்படியே சரிய போக அவளை

வந்து தங்கினான் எழிலரசன்.

ஏனோ அந்த பெண்ணின் முகம் பழகியது போல் தோன்ற, "இங்கே பாரும்மா உனக்கு ஒன்னுமில்லை நீ நல்லா தான் இருக்கே,முதல எழுந்திரு வா நம்ம போகலாம்..."அவள் கன்னத்தை தட்டியவாறு அவளை தாங்கிக் கொண்டு கூற,

அவன் கூறியது செவியில் விழுந்தாலும் உள்ளங்காலில் ஏற்பட்ட தீ எரிய அவன் முகத்தை வலியுடன் ஏறிட்டவள், "என்னால எழுந்திருக்க முடியல,எரியுது..." பல்லை கடித்துக் கொண்டு கூறியவள் அவனை கையை இறுக பற்றினாள்.
அவள் முகத்தை கண்டு எதற்கென்று தெரியாமல் அவனும் கலங்க,அவன் கலங்கிய முகத்தை கண்டவள் அப்படியே தன் விழிகளை மூடி மயங்கினாள்.

அவள் கன்னத்தை தட்டி எழுப்ப முயன்று தோற்றவன் அவளை இரு கைகளிலும் தூக்கி கொண்டு வெளியேறினான்.

அதே நேரம் இங்கே வெளியே தன் அண்ணனை நினைத்து அழுது கொண்டிருந்த வளர்மதியை சமாதானம் செய்து கொண்டிருந்தாள் வந்தனா.

"ஹே அங்கே பாரு அண்ணா வந்துட்டாங்க..."என்றதும் கண்ணை துடைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்க்க அவனோ ஒரு பெண்ணை தூக்கிக்கொண்டு வந்தான்.

அதே நேரம் ஆம்புலன்ஸ் வர,அவள் தோழிகள் என்று சில பேர் வந்து அவளை அழைத்துக் கொண்டு சென்றனர்.

அவர்கள் செல்லவே அந்த பெண்ணை கண்டவாறு நின்ற எழிலரசனை அழுகையுடன் அணைத்துக் கொண்டாள் வளர்மதி.

"எதுக்கு அண்ணா இப்படி பண்ணுனா,உனக்கு எதுவும் அடிபடலைல,உனக்கு ஏதாவது ஆகிருந்த நான் அம்மாக்கு என்ன அண்ணா பதில் சொல்லுவேன்,நீ இல்லாம எங்களால எப்படி அண்ணா இருக்க முடியும்...."அழுது கொண்டே புலம்ப,

"வளரு முதல ஆழாதே இப்போ அந்த பொண்ணு இடத்துல நீயிருந்தா என்னால அப்படியே போக முடியுமா சொல்லு...?"

அவளோ அதற்கு பதில் கூறாமல் அமைதியுடன் இருக்க,அந்த பெண்ணிற்கு எதுவும் ஆக கூடாது என்று வேண்டிக் கொண்டு தன் தங்கையை அழைத்துக் கொண்டு சென்றான் எழிலரசன்.

அத்தியாயம் : 4

நாட்கள் அதன் போக்கில் சென்று கொண்டிருக்க அன்று சீக்கிரமே காலேஜ் முடிந்ததால் தன் அண்ணனுக்கு அழைத்தாள் வளர்மதி.

அவனோ தனக்கு முக்கியமான வேலை இருப்பதாக கூற சரி என்றவள் அடுத்த அழைப்பை தன்னவனுக்கு விடுத்தாள்.

அவள் அழைத்த அடுத்த பத்து நிமிடத்தில் அவள் முன் வந்து நின்றான் இளஞ்செழியன்.

"ஹாய் பேபி..."என்க, அவன் அழைப்பை கண்டு முறைத்தவள் விலகி செல்ல,அவள் கை பிடித்து தடுத்தான்.

"சாரி மதி கோவிச்சிக்கிடாதே இனிமே அப்படி சொல்ல மாட்டேன் பைக்ல ஏறு..." அவள் கைகளை பிடித்து கெஞ்ச அமைதியாக ஏறி அமர்ந்தாள்.

பைக்கில் சைடு கம்பியை பிடித்துக் கொண்டு அமர, "அம்மணி ரெம்ப கோவமா இருக்காங்க போல..." உள்ளுக்குள் நினைத்தவன் பைக்கின் வேகத்தை வேணுமென்றே கூட்டினான்.

அவன் வேகத்தை கண்டு மிரண்டவள், "இளா மெதுவா போ ஏன் இவ்வளோ வேகம்..." என்க, அவனோ அதை காதில் வாங்கிக் கொள்ளாமல் இருந்தான்.

அவனை நெருங்கி அமர்ந்து அவன் வயிற்றில் தன் கைகளை வைத்து அழுத்த அதை ரசித்து அனுபவித்தவன் தன் வேகத்தை குறைத்து மெல்ல செலுத்தி வழக்கமாக

செல்லும் பார்க்கு சென்றான்.

இருவரும் அங்கிருந்த இருக்கையில் அமர அவள் தோளில் கை போட்டு நெருங்கி அமர்ந்தான்.

"இளா என்ன இது யாராவது பார்த்துற போறாங்க,கையை எடு..."

"முடியாதுடி யார் பார்த்தாலும் எனக்கு கவலையில்லை,ஆமா என்ன திடீருன்னு போன் பண்ணி பார்க்கணும் சொன்னே,ஐயாவ பார்க்காம இருக்க முடியலையோ..?"

"அப்படியெல்லாம் ஒன்னுமில்லை அண்ணா வர சொன்னதுக்கு வொர்க் இருக்குன்னு சொன்னான் அதான் உன்ன வர சொன்னேன்..."

"அதானே இல்லைனா என் நியாபகம் எல்லாம் உனக்கு வருமா..." கோவத்துடன் கூறியவன் முகத்தை திருப்ப,

இது தங்களுக்கு அடிக்கடி நடக்கும் சண்டை என்றாலும் அவனது இந்த சிறு கோவம் கூட அவளை ஏதோ செய்ய, "இளா சாரி..." வருத்தத்துடன் கூறினாள்.

"ஏய் என்னடி இது பீல் பண்ணிட்டு நான் சும்மா தான் சொன்னேன்..."என்றவன் அவளை இழுத்து தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டான்.

"மதி இப்படியே நீ என் நெஞ்சில சாஞ்சிக்கிட்டே இருக்கணும் ஆசையா இருக்கு,நம்ம கல்யாணம் பண்ணிக்கலாம்மா..?"

"ஹ்ம்ம் சரி பண்ணிக்கலாம் எப்போ பண்ணலாம்...?"

"அடியேய் நான் சும்மா சொல்லலை சீரியஸ்சா சொல்லுறேன்..."

"நானும் தான் சீரியஸ்சா சொல்லுறேன்,இப்போ பண்ணுனா கூட எனக்கு ஒகே தான்..."என்றவள் அவன் நெஞ்சிக்குள் முகத்தை அழுத்தி புதைத்தாள்.

"மதி இப்படியெல்லாம் பண்ணாதே,அப்பறம் நான் சும்மா இருக்க மாட்டேன்..."

"என்ன பண்ணுவ இளா என்ன பார்த்து சொல்லு..." நிமிர்ந்து அவன் முகத்தை பார்த்து கேட்க,அவளது வசீகரிக்கும் விழிகளை கண்டு எப்போதும் போல் மயங்கியவன் இமைக்க மறந்து அவளையே ரசித்தான்.

அந்த நொடி அவனது நினைவுகளோ தங்கள் இருவரின் முதல் சந்திப்பிற்கு சென்றது.

"டேய் என்னடா இது வாங்கடா கிளாஸ் போகலாம் எவ்வளோ நேரம் தான் இப்படியே அரட்டை அடிக்க..." தன் முன்னிருந்த நண்பர்களிடம் கத்திக் கொண்டிருந்தான் இளஞ்செழியன்.

"செழியா கொஞ்சம் நேரத்துக்கு அப்பறம் போகலாம் எப்படியும் இன்னைக்கு கிளாஸ் நடக்க போகுறது இல்ல அப்பறம் என்ன,புதுசா வர்ற பஸ்ட் இயர் ஸ்டுடென்ட்டை கொஞ்சம் நேரம் ரேகிங் பண்ணலாம்...."

"டேய் ஆதி நம்மளும் பஸ்ட் இயர் தாண்டா..."

"நம்ம MCA பஸ்ட் இயர் நம்ம தான் ug க்கு எல்லாம் சீனியர் அதை மறந்துடாதே,நீ வேணும்னா போ நாங்க கொஞ்சம் நேரத்துக்கு அப்பறம் தான் வருவோம்..."

"என்னமோ பண்ணுங்கடா..."என்றவன் திரும்ப அவன் இருக்கும் திசையை பார்த்தவாறு நடந்து வந்தாள் வளர்மதி.

இடைவரை தாண்டிய நீண்ட கருங்கூந்தலை பின்னலிட்டு முன்புறம் போட்டிருக்க, வெள்ளைகல் பதித்த ஜிமிக்கி கம்மலின் அவள் முக அசைவுக்கு ஏற்றவாறு ஆட,அவளது மெலிந்த தோற்றத்தில் அவளுக்கென்றே எடுத்த சல்வார் கச்சிதமாய் பொருந்தி அவள் கொடி போன்ற இடையை காட்ட அழகு பதுமையாய் நடந்து வரும் அவளையே ரசித்தவாறு நின்றான்.

அவன் மட்டும்மில்லாது அங்கிருந்த அனைவர் கண்ணும் அவள் மீதே இருக்க அவர்களை தாண்டி சென்றாள்.

அவள் சென்றதும் அவளை நோக்கி திரும்பியவன், "ஹே பியூட்டி..."என மனதிற்குள் அழைப்பதாய் நினைத்து வெளிப்படையாய் உருகிய குரலில் அழைக்க,

அவன் குரல் செவியை தீண்ட படக்கென்று திரும்பி முறைக்க அவளது இந்த செயலை கண்டு அங்கிருந்த அனைவரும் திகைத்தனர்.

"இப்போ என்ன சொன்னே நீ..."என்றவாறு விழிகளில் கோவம் கொப்பளிக்க செழியனின் முன் வந்து நின்றாள்.

"இத்தனை பேர் இருக்கும் போது நான் தான் சொன்னேன்னு எப்படி கண்டுபிடிச்சா...?" மனதிற்குள் நினைத்தவன், அதையும் அவளிடமே கேட்க,

"எனக்கு தெரியும் அது நீ தான் சொன்னே..? எங்கே நான் சொல்லலைன்னு என்ன பார்த்து சொல்லு பார்க்கலாம்..."

அவள் என்ன கூறுகிறாள் என்று கூட கேட்காது அவளது அந்த வசீகரிக்கும் விழிகளை கண்டு மயங்கியவன், "ஐ லவ் யூ பேபி..."என்க,

அதை கேட்டு அனைவரும் அதிர்ச்சியாகி நிற்க அவளது கரங்களோ அவன் கன்னத்தை பதம் பார்த்தது.

செழியனை அடித்ததை கண்டதும் பைக்கில் அமர்ந்திருந்த அவன் நண்பர்கள் அனைவரும் ஏய் என்றவாறு முன்னே வர அதை கண்டவளோ விழிகளில் சிறு பயம் கூடமின்றி அதை முறைப்புடன் நின்றிருந்தாள்.

"என்ன தைரியம் இருந்தா இவனை கை நீட்டி அடிச்சிருப்பே..."என கேட்டவாறு கோவத்துடன் ஆதி அவள் அருகில் நெருங்க,அவனை பிடித்து தடுத்தான் இளஞ்செழியன்.

"என்ன மன்னிச்சிருங்க நானும் இந்த காலேஜில பஸ்ட் இயர் ஸ்டுடென்ட் தான்,இவங்க எல்லாரும் என்ன ரெம்ப நேரமா ரேகிங் பண்ணிட்டு இருந்தாங்க,இவங்க தான் உங்க கிட்ட இப்படி பேச சொன்னாங்க..."என்றதும் தன் முகத்தில் இருந்த கோவம் மறைய சற்று அமைதியாக நின்றிருந்தாள்.

வளர்மதியின் மேலிருந்த கோவம் அனைத்தும் இப்போது செழியனின் மீது திரும்ப அவனை முறைத்தவாறு நின்றிருந்தான் ஆதி.

ஆதியின் முறைப்பை கண்டவன், "இனிமே இப்படி உங்க கிட்ட நடந்துகிட மாட்டேன்..." கூறி கொண்டிருக்கும் போதே அவள் திரும்ப செல்ல அவளது இந்த செய்கையை மனதுக்குள் ரசித்தான்.

அவள் மறைந்ததும் நண்பர்கள் அனைவரும் செழியனின் மீது பாய, "டேய் விடுங்கடா அடிச்சதும் போதும் நான் பாவம்டா..."என்க,

"என்னது நீ பாவம்மா, பண்ணுறது எல்லாம் பண்ணிட்டு உன்ன ரேகிங் பண்ணுறதா வேற அவ கிட்ட சொல்லுற,அதையெல்லாம் கூட விடு அவ கை நீட்டி எல்லார் முன்னாடியும் உன்ன அடிச்சிருக்கா நீ என்னடா கொஞ்சம் கூட கோவம் இல்லாம அவளுக்கு எக்ஸ்பிளைன் பண்ணிக்கிட்டு இருக்கே,அவ அதை கேட்க கூட இல்லாம எப்படி போற பாரு திமிரு பிடிச்சவா..."என்ற ஆதியின் குரலை காதில் கூட அவள் சென்ற திசையில் பார்த்தவாறு அவள் நினைவுகளோடு நின்றான்.

அவள் தன் அருகில் வந்த நின்ற அந்தநொடி வில்லாய் வளைந்த புருவங்களுக்கு மத்தியில் அனைவரையும் ஈர்க்கும் அளவுக்கு சிறு கோபுர பொட்டையும்,அனல்கக்கும் விழிகளை கண்டவனின் மனம் அதிலே நிலைக்க தன்னையும் அறியாமல் தன் கூறிய சொல்லை நினைத்து சிரித்தான்.

எதையோ நினைத்து சிரித்துக் கொண்டிருந்த இளாவை கண்டவள், "இளா எதுக்கு இப்படி சிரிக்கிற அப்படி என்ன நினைச்சா...?" என்றவாறு கிளம்புவதற்கு எழுந்து நின்றாள்.

"ஒன்னுமில்லை மதி நம்ம பஸ்ட் மீட்டிங் பத்தி நினைச்சேன்..."என்றதும் கோவத்துடன் தன் கையில் வைத்திருந்த பேக்கை அவன் மீது வீசி எறிந்தவள் தன் இடையில் இரு கைகளையும் வைத்தவாறு முறைத்துக் கொண்டு நின்றாள்.

அவள் கோவத்தை கண்டு சிரித்தவன், "ஹே மதி இதே மாதிரி தான் அன்னைக்கும் கோவப்பட்டே உன்கிட்ட பிடிச்சாதே எதுக்கும் பயப்பிடமா எல்லாத்தையும் தைரியமா பேஸ் பண்ணுறது தான் ஐ லவ் யூ பேபி..."என கூறிக் கொண்டிருக்கும் போதே அவனை தாக்க ஆரம்பித்தாள்.

"உன்னால எப்படிடா அன்னைக்கு என்ன ஏமார்த்த முடிஞ்சது பிராடு..."என்றவள் விலகி செல்ல,

அவள் பின்னே ஓடி வந்தவன், "மதி நான் பண்ணது வேணும்னா பொய்யா இருக்கலாம் ஆனா நான் சொன்னதுயெல்லாம் உண்மை தானடி, சாரி மதி பளீஸ் போகாதே நில்லு..."அவள் கை பிடித்து கெஞ்ச அதன் பின்னே சற்று அமைதியாக நின்றாள்.

அதன் பின் சிறிது நேரம் பேச நேரம் செல்ல அவளை அழைத்துக் கொண்டு அவள் இருக்கும் தெருவில் சென்று விட்டவன் அவள் வீட்டிற்குள் நுழைவதை பார்த்ததும் தன் பைக்கில் கிளம்பினான்.

வாரத்தில் மூன்று அல்லது நான்கு நாட்கள் ஆபீஸ்ற்க்கு வந்து சென்றால் சுதிகீர்த்தி.

தன்னால் எதுவும் செய்ய முடியாது என தோன்றினாலும் வீட்டில் அந்த நாலு சுவருக்குள் அடைந்து கொள்ள பிடிக்காமல் இங்கு வர நினைத்தாள்.

அவள் இருக்கும் நேரங்களில் எல்லாம் வேந்தன்,எழிலின் பார்வை அவள் புறம் மட்டுமே இருக்கும்.

இவர்களின் பார்வை மட்டுமே தன் தங்கையின் மேல் இருந்தாலும்,இருவரின் மனதிலும் ஏதோ ஒரு தவிப்பு இருப்பதை உணர்ந்தவன் அது என்னவென்று அறிவதற்கான நேரத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தான் அகிலன்.

இந்த ஏழு மாதங்களாக தங்கள் வீட்டில் உள்ளவர்களின் குரலை மட்டும் கேட்டு பழகியிருக்க இப்போது பலரின் குரலை கேட்க சந்தோசமாக உணர்ந்தாள்.

தான் இந்த ஆபீஸ்றகுள் நுழைந்து இரண்டு வாரத்திற்கு மேல் சென்றிருக்க மற்ற இடங்களுக்கு செல்ல வேண்டும் என்று நினைத்தாள்.

"அண்ணா நான் நம்ம கார்மெண்ட்ஸ் பேக்டிரி போகணும் ஆசையா இருக்கு என்ன கூட்டிட்டு போறையா...?"

"அங்கையா அங்கே எதுக்கு அதெல்லாம் வேண்டம் நீ இங்கே மட்டும் இருந்தா போதும்..."என கூறியவாறு லேப்டாப்பில் தன் வேலையை செய்து கொண்டிருந்தான்.

"நீ கூட்டிட்டு போறையா இல்ல நானே போகவா..?"என்றவாறு வேகமாக எழுந்து செல்ல,

"ஏய் கீர்த்தி நில்லு ஒரு நிமிஷம் எனக்கு கொஞ்சம் நேரத்துல ஒரு கிளைன்ட்டை மீட் பண்ணனும் அதுனால நாளைக்கு போகலாம் சரியா..? நான் கண்டிப்பா கூட்டிட்டு போறேன்..."என்றவன் சிறு குழந்தைக்கு கூறுவது போல் தன் வேலை டென்ஷன்னையும் மீறி அமைதியாக கூறினான்.

"சாரி அண்ணா நான் இங்கே வந்து உன்ன டிஸ்டர்ப் பண்ணுறேன்ல..."

"அப்படியெல்லாம் பேசாதே கீர்த்தி நீ முதல உட்காரு..."என்றவன் தன் வேலையை பார்க்க அமைதியாக அங்கிருந்த சோபாவில் அமர்ந்தாள்.

நேரம் செல்ல தன் தங்கையின் முகத்தை கண்டவள் மனதில் ஏதோ தோன்ற, "கீர்த்தி நீ வேணும்னா பிரதாப் கூட போய்ட்டு வரையா..?"என்க,

"ஹ்ம்ம் சரி அண்ணா..."என்றவள் சந்தோஷமாக எழ பிரதாப்பிற்கு அழைத்தான்.

அவனோ அடுத்த நொடியே அகிலனின் முன் நிற்க தன் தங்கையின் விருப்பபதை கூறியவள் அவளை அழைத்துச் செல்ல கூறினான்.

"சார் மீட்டிங் இருக்கும் போது என்னால எப்படி போக முடியும் நான் போய் தான் ஹோட்டல்ல இருந்து

கிளைன்ட்டை கூட்டிட்டு வரணும்..."

"ஆமா நான் எப்படி இதை மறந்தேன்..." யோசித்தவாறு தன் தங்கையின் முகத்தை காண அவள் வருத்தத்தை கண்டவன், "கீர்த்தி சாரி..."என்றான்.

"பரவாயில்லை அண்ணா..."என்க,அதே நேரம் அறைக்குள் நுழைந்தான் யாழ்வேந்தன்.

"சார் நீங்க கேட்ட எல்லாத்தையும் ரெடி பண்ணி இந்த பையில்லை வைச்சிருக்கேன்..."என்றவன் அவன் முன் வைத்து விட்டு திரும்ப,கவலையுடன் அமர்ந்திருந்த சுதியை கண்டான்.

## அத்தியாயம் : 5

அகிலன் கொடுத்த வேலையை முடித்து அவனிடம் பைலை ஒப்படைத்து திரும்பியவன் கவலையுடன் அமர்ந்திருந்த சுதிகீர்த்தியை கண்டான்.

"என்னாச்சு நம்ம ஆளு டல்லா உட்கார்ந்துகிட்டு இருக்கு சரியில்லையே இப்படி இருக்க கூடாதே..." மனதிற்குள் கூறிக் கொண்டவன், "சார் என்னாச்சு எதுவும் ஹெல்ப் வேணும்மா ஏன் எல்லாரும் சைலென்ட்டா இருக்கீங்க...?"என்றான்.

"பிரதாப் நீங்க ஹோட்டல் ரூம் போய் கிளைன்ட்டை கூட்டிட்டு வாங்க..."என கூறிய அகிலன் அவனை அனுப்ப அவன் சென்றதும் வேந்தனின் புறம் திரும்பினான்.

"வேந்தா நீ கீர்த்தியை கார்மெண்ட்ஸ்க்கு கூட்டிட்டு போறையா அவளுக்கு வெளியே சுத்தி பார்க்கணும் ஆசையா இருக்காம்,எனக்கு கிளைன்ட் மீட்டிங் வேற இருக்கு..."

அவன் கூறியதை கேட்டு உள்ளுக்குள் மகிழ்ந்தவன் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "நான் எப்படி கூட்டிட்டு போக அவங்களுக்கு இதுல விருப்பம் இருக்கணும்ல,என் கூட எப்படி..."என தயங்கி கொண்டு உரைக்க,

"என் அண்ணாவே உங்க கூட அனுப்பும் போது எனக்கு எந்த எதிர்ப்பும் இல்ல,அதுவும் இல்லாமல் நீங்க என் அண்ணனோட பிரெண்ட் கண்டிப்பா என்ன பத்திரமா பார்த்துகிடுவீங்க..."

"உன் அண்ணனோட பிரெண்டா மட்டும் நான் இதை செய்யல நீ எனக்கானவ உன்னோட எல்லா ஆசையையும் நான் நிறைவேத்தனும் இது என்னோட கடமை..." மனதிற்குள் நினைக்க,

"சரி ரெண்டு பேரும் போய்ட்டு வாங்க, வேந்தா நீ என்னோட கார் யூஸ் பண்ணிக்கோ..."என்றவன் தன் கார் கீயை தந்தான்.

"பாவி அவ என் கூட பைக்ல வருவான்னு நினைச்சா இவன் காருல போக சொல்லுறான்னே சரி அவ நம்ம கூட வர்றதே போதும்..." மனதிற்குள் தன் தோழனை திட்டிக் கொண்டு வாங்கினான்.

"வாங்க..."என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வெளியேற அவர்களின் முன் வந்து நின்றான் எழிலரசன்.

இருவரும் வெளியே செல்வதை பார்த்தவன் செல்பவர்களிடம் எங்கு செல்கிறீர்கள் என்று கேட்க கூடாது என்பது தெரிந்ததாலும் அவர்கள் எங்கு செல்ல போகிறார்கள் என்பதை அறிய நினைத்தான்.

தன் முன் வந்து எதையோ யோசித்துக் கொண்டு நிற்பதை பார்த்த வேந்தன், "எழில் சார் மேடம் கார்மெண்ட்ஸ் போகணும் சொன்னாங்க அதான் எம்.டி என்ன கூட்டிட்டு போக சொன்னாரு நாங்க கிளம்புறோம் வாங்க மேடம்..."என்றவன் எழிலரசன் பதில் கூறும் முன்னே அவளை அழைத்துக் கொண்டு விரைந்தான்.

"இவனுக்கு என்னாச்சு ஏன் இப்படி வேகமா ஓடுறான்..." யோசித்தவாறு தன் கேபினுக்கு சென்றான்.

"அப்பாடா ஒரு வழியா இவங்க எல்லார் கிட்டயும் இருந்து தப்பிச்சு வரதுக்குள்ள என் உயிரே போச்சு..." ஆபீசில் இருந்து வெளியே வந்து மூச்சு விட்டான்.

"யாழ் எங்கே இருக்கீங்க..?" இதுவரை ஏதோ பேசிக் கொண்டு வந்த்வன் இப்போது அமைதியாக இருக்கவே அவன் எங்கு சென்றானோ என்று எண்ணி கேட்டாள்.

"இங்கே தான் இருக்கேன் நான் போய் பார்கிங்க்ல இருந்து கார் எடுத்துட்டு வரேன் நீங்க இங்கையே நில்லுங்க..."

"ஹ்ம்ம் சரி..."என்றதும் காரினை எடுத்துக் கொண்டு வந்தவன் அவளுக்கு முன் இருக்கையை திறந்து விட காரில் ஏறி அமர்ந்தாள்.

டிரைவர் இருக்கையில் அமர்ந்தவனின் மனமோ இரண்டு வருடங்களாக தேடிய பொக்கிஷமான தன்னவள் தன் அருகில் இருக்க அவளை பார்த்து ரசித்தவாறு அவளுடனான தன் முதல் பயணத்தை தொடங்க ஆரம்பித்தான்.

இருவருக்கும் என்ன பேசுவது என தெரியாமல் அமைதியாகவே வர ஏனோ அந்த அமைதியை வெறுத்தவள், "ஏன் அமைதியா வரேங்க ஏதாவது பேசலாமே..?"என்க,

"ஹ்ம்ம் சரி மேடம்..."என்றவன் மனதிற்குள், "இப்படியே என் வாழ்க்கை முடியிற வரைக்கும் உன்னோடான இந்த பயணம் எனக்கு கிடைச்சா சந்தோஷமா இருக்கு..."நினைத்துக் கொண்டிருக்க,

"என்ன மேடம் எல்லாம் சொல்லி கூப்பிட வேண்டாம் பேர் சொல்லியே கூப்பிடுங்க..."

"நீங்க மட்டும் என்ன பார்த்தா இப்படி சொல்ல மாட்டீங்க..."

"ஏன் அப்படி சொல்லுறீங்க..?,"

"நம்மளோட சந்திப்பு அப்படி..."மனதிற்குள் நினைத்தவனுக்கு அவர்களின் சந்திப்பு நினைவு வர இதழில் சிறு புன்னைகை உதிர்க்க அந்த செய்கையை காண முடியதவளாய் அமர்ந்திருந்தாள்.

"உங்களை தான் கேட்குறேன் யாழ் ஏன் அப்படி சொன்னீங்க..?நம்ம ஏற்கனவே மீட் பண்ணிருக்கோம்மா..?

உங்க கிட்ட பேசும் போது உங்க கூட பழகுன பீலிங்க்ஸ் வருது..."

"இவ கேட்டதுக்கு ஆமானு சொன்னா எப்போ பார்த்தோம்னு கேட்பா அப்படி கேட்டடா நான் யாருன்னு சொல்லிட்டா ருத்திர தாண்டவம் ஆடுவாளே இப்போ என்ன பண்ணலாம்..."

"நீங்க ஏன் இவ்வளோ சைலென்ட்டா வரேங்க..?"

"அப்படியெல்லாம் இல்ல சு...கீ...மேடம்..." எப்படி கூப்பிடுவது என தெரியாமல் தந்தியடிக்க,

"நீங்க என்ன கீர்த்தின்னு கூப்பிடுங்க..."

"எல்லார் கூப்பிடுற மாதிரி எல்லாம் கூப்பிட முடியாது நீங்க எனக்கு ஸ்பெஷல் அதுனால உங்கள சுதி தான் கூப்பிடுவேன்..."

அவன் கூறியதில் ஏதோ ஒன்று அவளை குழப்ப, "நான் ஏன் உங்களுக்கு ஸ்பெஷல்..?" கேள்வியாய் கேட்க,

"நீங்க மட்டும் என்ன யாழ் சொல்லுறீங்க அதான் நான் சுதி சொன்னே, என்ன நீங்க குற்றவாளி கிட்ட விசாரிக்கிற மாதிரி ஒவ்வொரு கேள்வியாய் கேக்குறேங்க..?இப்படியே கேட்டுக்கிட்டே வந்தா நான் கார்மெண்ட்ஸ் கூட்டிட்டு போக மாட்டேன்..."

"ஓகே சரி நீங்க எப்படி கூப்பிடனும் தோணுதோ அப்படியே கூப்பிடுங்க..."என்றவள் அதன் பின் அமைதியாக வர,

"அப்பாடா நம்மளையே கொஞ்சம் நேரத்துல டென்ஷன்னாகிட்டா..."மனதிற்குள் நினைத்தவாறு கார்மெண்ட்ஸ்க்கு அழைத்துச் சென்றான்.

அவர்கள் இறங்கியதும் மேனேஜர் வந்து வரவேற்க அவளை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தனர்.

மேனேஜர் ஒவ்வொன்றையும் கூறிக் கொண்டே வர வேந்தன் அதற்கு அவரிடம் கேள்வி கேட்க இருவரும் மாற்றி மாற்றி பேசிக் கொண்டே வந்தனர்.

அவர்களுடன் நடந்து வந்த கீர்த்திகோ அங்கே வேலை செய்யும் மக்களின் குரல் மிசின்களின் ஓசை அனைத்தையும் கேட்டுக் கொண்டே வர் மனதிற்குள் இதை பார்க்க முடியாத கவலை அரித்துக் கொண்டிருந்தது.

அதே கவலையுடன் நடந்து வந்து கொண்டிருந்தவளின் காலில் திடிரெண்டு ஏதோ தடுக்க ஸ்...ஆஆ...என்றவள் தடுமாறி நிற்க முடியாமல் முன்புறமாக கிழே விழ போக அதை கண்டவனோ தன் கையை நீட்டி அவள் கொடிஇடையை தன்னுடன் சேர்த்து வளைத்தான்.

"ஏய் சுதி பார்த்தும்மா..."பதறியவாறு அவளை தாங்கியவன் தன் தோளை இறுகப் பற்றிக் கொண்டிருந்தவளை மெல்ல விலக்கி அவளை மேலிருந்து கீழ் வரை ஆராய்ந்தான்.

நுனி விரல் அருகில் வீங்கி சிவந்து கொண்டிருப்பதை கண்டவன், "ஐயோ சுதி வீங்க ஆரம்பிடிச்சிருச்சி,வா நாம்ம ஹாஸ்பிட்டல் போகலாம்..."என்றவன் பதறி தவிப்பு புலம்ப,

அவன் தன்னை தாங்கிய போது அவன் நெஞ்சில் சாய்ந்து மீண்ட ஒரு வினாடி,உலகமே மறந்தாள்.

அவன் உரிமையாய் தன்னை அழைத்தது தனக்காக தவித்தது அனைத்தையும் கேட்டவள் விழிகளில் கண்ணீர் வடிய தன்னை அணைத்தவாறு புலம்பிக் கொண்டிருந்தவனின் நெஞ்சில் சாய்ந்தாள்.

அவளது இந்த செய்கையை எதிர்பாரதவன் சுற்றியிருந்த அனைவரும் தங்களை பார்ப்பதை கண்டு அவளை தன்னிடம் இருந்து மனமேயில்லாமல் விலக்கியவாறு, "மேடம் ரெம்ப வலிக்குதா..?" என்றான்.

அவனது இந்த குரலில் இருந்த வேற்றுமையை உணர்ந்தவள், "இல்ல நீங்க..."என்று ஏதோ கூற வர,

"இந்தாங்கம்மா முதல தண்ணீ குடிங்க..."என்ற பெண்மணி தண்ணீர் தர அதை வாங்கிய வேந்தன் அவளை அருகில் இருந்த சேரில் அமர வைத்து அவளுக்கு புகட்டினான்.

அவர்களுடன் வந்த மேனேஜர், "போங்க போய் எல்லாரும்

வேலையை பாருங்க..."என்றதும் அனைவரும் கலந்து போக, "என்ன மேடம் பார்த்து வர வேண்டியது தானே நீங்க ஏன் அவ்வளோ ஓரமா நடந்து வந்தீங்க..?"என்றார்.

"என்னால..."என்று தன் பார்வை இழந்ததை கூற வர முயல, "நீங்க போய் அக்கௌன்ட்ஸ் பையில் எடுத்துட்டு வாங்க,நாங்க ஆபீஸ் ரூம்ல இருக்கோம்..."என்ற வேந்தன் அவளை அழைத்துக் கொண்டு சென்றான்.

"சுதி இங்கே இருக்குற யாருக்கும் உங்க நிலைமை தெரியாது நீங்க எல்லார் கிட்டயும் சொல்லணும் அவசியம் இல்ல..."என்றவன் அவள் கால்லை தொட பதறி எழுந்தாள்.

"ஐயோ யாழ் என்ன இது..."

"என்ன ஒரு டாக்டரா நினைச்சிக்கோங்க இப்போ நான் மருந்து போடனும் முதல உட்காருங்க..."என்றவன் அவளை அருகில் சோபாவில் அமர வைத்து சிவந்திருந்த அவள் விரலுக்கு மருந்திட்டான்.

அவனது இந்த செய்கை அவள் மனதை கலங்கச் செய்ய, "யாழ் ப்ளீஸ் தயவு செய்து சொல்லுங்க நான் உங்களை பார்த்துருக்கேன்ல..?"என்க,

"எதுக்கு மறுபடியும் மறுபடியும் இதையே கேட்குறீங்க..?"

"என் லைப்ல மறக்க முடியாது ஒருத்தன் இருக்கான் அவன் செய்கை என்ன ரெம்ப பாதிச்சது,ஒன்றரை வருஷத்துக்கு முன்னாடி நான் லண்டன்ல ug படிக்கும் போது தான் மீட் பண்ணுனேன் அவன் குரல் உங்க குரல் மாதிரி தான் இருக்கு அதான் கேட்டேன்..."

"ஓ சரி ஆனா நான் லண்டன் போனதே இல்ல ஒரே போல ஏழு பேர் இருப்பாங்கன்னு கேள்விப்பட்டிக்கோம்ல அதே மாதிரியா இருக்கு நீங்க சொல்லுறது சரி ரெஸ்ட் எடுங்க நான் அக்கௌன்ட்ஸ் செக் பண்ணிட்டு வந்துறேன் அப்பறம் போகலாம்..."என்றவன் வேகமாக வெளியேறினான்.

"நீ என் மேல எவ்வளோ வெறுப்பா இருக்கேன்னு நீ சொல்லும் போதே எனக்கு புரியுது எனக்கு நீ வேணும் எந்த

ஒரு சூழ்நிலையிலும் நான் உன்ன விட்டு போக மாட்டான்,நீ நினைச்சது நான் தான் சொல்லுற நேரம் வரும் போது நீ என் மனைவியா தான் சுதி..." மனதிற்குள் ஒரு முடிவெடுத்தவன் தன் வேலையை பார்க்கச் சென்றான்.

அதன் பின் தன் வேலை அனைத்தையும் முடித்தவன் அவளை அழைத்துக் கொண்டு சென்று வீட்டில் விட்டு ஆபீசிற்கு சென்றான்.

அகிலனின் கார் ஓசை கேட்டதும் வெளியே வந்த சித்ரா(சுதியின் தாய்) சுதி இறங்குவதை பார்த்ததும் அவள் அருகில் சென்றான்.

வேந்தனை கண்டதும் சந்தோஷமாக, "அட வேந்தன் நீயா உள்ள வா ஏன் அப்படியே கிளம்ப போற..?"என்க,

"இல்லமா இருக்கட்டும் நான் கிளம்புறேன் ஆபீஸ்ல வேலை இருக்கு நீங்க உங்க ஹெல்த்தை கவனிச்சிக்கோங்க நான் கிளம்புறேன்..."என்றவன் சுதியை கண்டவாறு சென்றான்.

அவன் சென்றதும் கீர்த்தியை அழைத்துச் செல்ல அவளது நடையில் வித்தியாசத்தை உணர்ந்தவர், "ஏய் கீர்த்தி என்னாச்சும்மா..."என்றவாறு அவளை அகிருந்த சோபாவில் அமர வைத்தார்.

"ஒன்னும்மில்லமா லைட்டா ஸ்லிப் ஆகிட்டேன்,அது இருக்கட்டும் யாழ்லை உங்களுக்கு முன்னாடியே தெரியுமா நம்ம வீட்டுக்குகெல்லாம் வந்துருக்காங்களா..?"

"ஹ்ம்ம் ஆமா எழிலும் வேந்தனும் எப்பையாவது அகிலன் கூட்டிட்டு வருவான் நம்ம அகிலனுக்கு இவங்க ரெண்டு பேருனா உயிரு,அவன் காலேஜ் படிக்கும்போது நான் உன்ன பார்க்க அம்மா வீட்டுக்கு வரும் போது வாடா அகிலா கூப்பிட்டா கூட வர மாட்டேன்னு சொல்லிருவான் எப்போ பார்த்தாலும் அவங்க கூட இருப்பான் ரெண்டு பேரும் நல்ல கேரக்டர்ம்மா..."

"ஒ சரிம்மா ஆனா வேந்தன் இப்போ ஒன் இயர்ரா தானே நம்ம ஆபீஸ்ல வொர்க் பண்ணுறாங்க அதுக்கு முன்னாடி

என்ன பண்ணுனாங்க..?,எங்கே இருந்தாங்க..?"

"ஏதோ பாரின்ல வேலை பார்த்தானாம் எங்கேனு தெரியல உங்க அண்ணனுக்கு தான் தெரியும், இவங்க நட்பு இப்படியே இருந்தா போதும் நான் போய் உனக்கு காபீ போட்டு எடுத்துட்டு வரேன்..."என்றவர் கிச்சனுக்குள் நுழைய வேந்தனை பற்றி அறிய நினைத்தவள் தன் அண்ணனின் வருகைக்காக காத்திருந்தாள்.

## அத்தியாயம் : 6

பொறுமையின்றி கோவமாக கத்திக் கொண்டிருந்த அகிலனின் முன் என்ன செய்வது என தெரியாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தான் பிரதாப்.

"உன்ன தான் கேட்குறேன் சொல்லு எப்படி நம்ம இந்த கான்ட்ராக் எடுக்க போறோம்ன்னு அந்த கம்பெனிக்கு தெரியும்..?, நம்ம கொடுக்க போற கொட்டேசனோட மதிப்பு அவனுக்கு எப்படி தெரியும்...?"

"சார் எனக்கு எதுவும் தெரியாது..."

"நீயும் நானும் சேர்ந்து தானே ரெடி பண்ணுனோம் என்ன மீறி அது போகல அப்போ நீ தானே..?"

"சத்தியமா இப்படி ஒரு காரியத்தை நான் என்னைக்கும் செய்ய மாட்டேன் சார்..."

"அப்போ நான் தான் அவன் கிட்ட கொடுத்தேனா..?"

"ஐயோ நான் அப்படி சொல்லலை சார்..."

"இன்னும் ஒன் ஹவர்ல எப்படி அவங்க அந்த டென்டரை எடுத்தாங்கன்னு தெரிஞ்சே ஆகனும் அப்படி மட்டும் தெரியல நீ அடுத்த நிமிஷமே இந்த வேலையை விட்டு போகணும்..."

"சார் ஒன் ஹவர்ல எப்படி..." பயந்து தயங்கி கூற, அவனை எரித்து விடும் பார்வை பார்த்தான் அகிலன்.

அவனது இந்த உஸ்ன பார்வையில் நடுங்கியவன்,

"கடவுளே இவர் கிட்ட இருந்து என்ன காப்பாத்தேன்..."மனதிற்குள் நினைத்துக் கொண்டு செல்லவா வேண்டாமா என்ற யோசனையுடன் நின்றான்.

அவன் பையலை பிடித்துக் கொண்டு அப்படியே நிற்பதை பார்த்தவன் கோவமாக, "இன்னும் ஏன் இங்கையே.." கத்தி முடிப்பதற்குள் டோரை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் எழிலரசன்.

"அப்பாடா ஒரு வழியா இவர் வந்து காப்பாத்திடாரு...." மனதிற்குள் நினைத்தவாறு எழிலிடம் ஒரு நன்றி பார்வையை வீசி விட்டு அங்கிருந்து வெளியேறினான் பிரதாப்.

அவன் சென்றதும் கோவத்துடன் இருந்த தன் நண்பனை நெருங்கியவன் அருகிலிருந்த நீரினை எடுத்து அவனிடம் நீட்டினான்.

அவனோ அமைதியுடன் அதை வாங்கி பருக, "என்னாச்சு அகில் ஏன் இவ்வளோ கோவம்..."என்றவாறு அவனை அழைத்துக் கொண்டு வந்து சோபாவில் அமர வைத்து அவன் அருகில் அமர்ந்தான்.

"ஒரு கவர்மென்ட் கான்ட்ராக் ஒன்னு நம்ம கையை மீறி அந்த ரீஜென்ட் கார்மெண்ட்ஸ்க்கு போயிருச்சு...இது மட்டும் அப்பாக்கு தெரிஞ்சா அவர் என்ன பத்தி என்ன நினைப்பாரு, அவர் என்ன நம்பி இந்த பொறுப்பை கொடுத்திருக்காரு நான் என்னடானா இப்படி பண்ணி வச்சிருக்கேன்..."

"சரி விடு அகில் இது இல்லைனா வேற இதுக்கு போய் இப்படி டென்ஷன்னாகாதே அது உன் உடம்புக்கு தான் கெடுதலு உன் திறமையை பத்தி எம்.டிக்கு நல்லாவே தெரியும்..."

"ஆனா இது பிரதாப்க்கு எனக்கு மட்டும் தான் தெரியும் நாங்க தான் அந்த கொட்டேஷன் கூட ரெடி பண்ணுனோம்,எப்படி எங்களை மீறி போச்சுன்னு தெரியல..."

"போனது போனது தான் அதையே மறுபடியும் யோசிக்காதே

வேற வேலைய பாரு..." என்றவன் அவனது இருக்கையில் அமர வைத்து வெளியேறினான்.

எழில் சென்றதுக்கு பிறகே தான் அதிகமாக பிரதாப்பிடம் கோவபட்டதை உணர்ந்தவன் அவனுக்கு அழைத்து மன்னிப்பு வேண்ட அதன் பின்னே சற்று நிம்மதியாக உணர்ந்தான்.

தன் இருக்கையில் வந்து அமர்ந்த எழிலின் மனதிலோ அகிலன் கூறிய வார்த்தையே மீண்டும் ஒலிக்க யாரோ ஒருவன் கம்பெனிக்கு துரோகம் செய்வதாய் தோன்ற அதை இப்போதே முயன்றான்.

பிரதாப்பை அழைத்து கொட்டேஷன் ரெடி பண்ணும் போது நடந்த அனைத்தையும் விசாரித்தவன் அடுத்தநொடி தன் முன்னிருந்த கணினியில் அகிலனின் அனுமதியின்றி அவன் அறையில் இருந்து சிசிடீவி கேமிராவை ஆன் பண்ணினான்.

"சார் எம்.டி ரூமையே செக் பண்ண போறீங்களா..?,கொட்டேஷன் என் கையில தானே இருந்தது..."

"நீங்க ரெடி பண்ணுனா அந்த கொட்டேஷன் எம்.டி ரூம்ல வச்சி தானே..?,அப்போ அங்கிருந்த தான் எடுத்திருக்கணும்..."என்றவன் அவன் அறையில் நடந்த அனைத்தையும் பூட்டேஜில் தேடினான்.

ஆபீஸ் முடிந்து அனைவரும் கிளம்பும் நேரம் அகிலன் லேப்டாப்பில் எதோ செய்து கொண்டிருக்க அதே நேரம் அவன் அறைக்குள் யாரோ நுழைவது தெரிந்தது.

அவனது பின்புறம் மட்டுமே தெரிய அகிலன் முன் பைலை வைத்து விட்டு முகத்தை சற்று மறுத்துக் கொண்டு செல்வதை கண்டான்.

"யார் இவன், பிரதாப் உங்களால அடையாளம் கண்டு பிடிக்க முடியுதா..?"

"சார் இங்க நூறு பேருக்கு மேல வேலை பார்க்குற அதுவும்

இல்லாம
கார்மெண்ட்ஸ்,டெக்ஸ்சைல்,என்டர்பிரைசஸ்,ஸ்பின்னிங் மில்ல இருந்து அடிக்கடி வருவாங்க இதுல யாருன்னு எனக்கு எப்படி சார் தெரியும்..."

"தெரியாது தெரியாது சொல்லிட்டே இரு இன்னும் கொஞ்சம் நேரத்துல எம்.டி சொன்னது மாதிரி நீ இந்த ஆபீசை விட்டு போக தான் போற..."என்றவன் எழுந்து செல்ல அவன் பின்னே ஓடினான்.

"சார் என்ன நீங்களே இப்படி சொல்லுறீங்க,எதாவது ஹெல்ப் பண்ணுங்க இன்னும் பத்து நிமிஷம் தான் இருக்கு ஒன் ஹௌவர் முடிய, என் வேலை உங்க கைல தான் சார் எதாவது யோசிங்க பாஸ்..." அவனிடம் கெஞ்ச,

அவனது இந்த செய்கையை கண்டு சிரித்தவன், "கவலைப்படாதே நீ போக மாட்டே,உன்ன வச்சி தானே நானும் வேந்தன் சாரும் இஷ்டபட நேரம் வர முடியும்..." கூறியவாறு அகிலனின் அறைக்குள் நுழைந்தான் எழிலரசன்.

"இப்போ நாம்ம உள்ள போகவே வேண்டாமா...?" யோசித்தவாறு நிற்க, அவனையும் அழைத்துக் கொண்டு சென்றான் எழிலரசன்.

"என்னாச்சு எழில்...?" உள்ளே வந்த இருவரையும் கண்டு அகிலன் கேட்க,தான் இதுவரை அறிந்த அனைத்தையும் கூறியவன் அவனிடமே கேட்க,

"ஐயோ நான் யாருன்னு கவனிக்கலையே முக்கியமான மெயில் செக் பண்ணிட்டு இருந்ததால நிமிர்ந்து பார்க்கல..."

"சரி சார் அது யாருன்னு கூடிய சீக்கிரமே கண்டு பிடிச்சிரலாம்..."என்க,

அகிலனின் மனதிலோ பெருங்கோவம் கொழுந்து விட்டு எரிய,அவன் கண்களில் இருந்து வரும் அக்னிப்பார்வை அங்கிருந்த இருவரையும் பொசுக்கும் அளவுக்கு செல்ல,அவன் கைகளோ அருகிலிருந்த சுவரில் பதிந்தது.

அவனது செய்கையை கண்டு இருவருமே மிரள அகிலனின் கையில் வழிந்த உதிரத்தை கண்டு பதறிய எழில் அவனருகே நெருங்கினான்.

"பிரதாப் பர்ஸ்ட் ஐடு பாக்ஸ்சை( first aid box) எடுத்து தாங்க..."என்றவன் அகிலனை அழைத்து சோபாவில் அமர வைத்து பிரதாப் போக சென்னான்.

பிராதாப் வெளியே சென்றதும், "லூசாடா நீ எதற்கெடுத்தாலும் கோவம் தான் முதல கோவபடுறதை நிறுத்து இப்போ வலி யாருக்கு உனக்கு தானே, வா முதல ஹாஸ்பிட்டல் போகலாம்..."என்றவாறு வழிந்து கொண்டிருந்த உதிரத்தை துடைத்து பேண்டேஜ் போட்டு விட அப்போது அதே கோவத்துடனே அமர்ந்திருந்தான்.

"விடுடா என்ன..."என்றவன் கையை உதறிக் கொண்டு எழுந்து அந்த அறையிலே அங்கும் இங்கும் நடைமாறினான்.

அவனது சிந்தனை முழுவதும் அன்று நடந்ததிலே இருக்க, அகிலனை பார்த்த முதல் நாளிலிருந்து இதுநாள் வரை எதற்கெடுத்தாலும் பொறுமையின்றி கோவம் கொள்ளும் இந்த குணம் இன்று வரை அப்படியே இருக்க அவனின் செயலை கண்டு கவலையுடன் அமர்ந்திருந்தான் எழிலரசன்.

தன் இருக்கையில் அமர்ந்து சிறிது நேரம் எதையோ யோசித்தவன் மூளையில் மின்னல் வெட்ட வேகமாக தன் அறையை விட்டு யாரையோ தேடி வெளியேறினான்.

எழிலும் அவன் பின்னே செல்ல ஆனந்தின் கேபினின் முன் சென்று நின்றவன், "ஆனந்த்..."என்க,

அவனது இந்த கத்தலில் அங்கிருந்த அனைவருமே ஒரு நொடி அதிர்ந்து எழுந்து நின்றனர்.

"சார்..."என்றவாறு இருக்கையில் இருந்து எழுந்து அவன் முன் வர,அவனது கன்னத்தில் இடியென தன் கைகளை பதித்தான்.

அவனது விரல் தடம் அனைத்தும் அவன் கன்னத்தில் பதிந்திருக்க அனைவரின் முன் தன்னை அடித்த அவமானத்தில் நின்றிருந்தான் ஆனந்த்.

"இன்னும் ஒன் ஹௌர்வல உன் ரிசைன்னிங் லெட்டர் உன் கைக்கு வரும் அதுல சைன் பண்ணிட்டு நோட்டீஸ் பிரியர்டு டென் டேஸ் இருந்துட்டு நீ கிளம்பலாம்,இதுக்கு அப்பறம் ஒரு நொடி கூட நீ என் முகத்துல முழிக்க கூடாது,பிரதாப் அதுக்கு தேவையான ஏற்பாடு செய்யுங்க..."என்றவன் அதே கோவத்துடன் செல்ல பலிவாங்கும் வெறியுடன் அகிலனை கண்டவாறு நின்றிருந்தான்.

சுதியை அவள் வீட்டில் விட்டு வந்த வேந்தன் ஆபீசில் நுழைய ஒரு வித அமைதியை கண்டவன் எழிலிடம் சென்று விசாரித்தான்.

அவனோ நடந்த அனைத்தையும் கூறியவன், "நம்ம ஆபீஸ் டேட்டா எல்லாம் நமக்கே தெரியாம அகிலன் ரூம்ல கேமரா வச்சு கண்காணிச்சிருக்கான்..."என்க,

"அவனை..."பல்லை கடித்துக் கொண்டு செல்ல பார்க்க , "வேந்தா விடு அகிலன் ஏற்கனவே தண்டனை கொடுத்துடான். ஆமா கீர்த்தி மேடம் எங்கே..?நீ மட்டும் வந்துருக்கே..?"

"அவங்களை வீட்டுல வீட்டுட்டு வந்துட்டேன்..."என்றவன் தன் அறைக்குச் சென்றான்.

அன்று இரவு அகிலன் தாமதமாக வீட்டிற்குச் செல்ல அவனுக்காக காத்திருந்த சுதிகீர்த்தி தன் தாயிடம் கூறிக் கொண்டு மெல்ல அவள் அறைக்குச் சென்றாள்.

அவள் சென்ற சிறிது நேரத்தில் வீட்டுக்குள் நுழைந்த அகிலனை கண்டவர், "என்னாச்சு ஏன் இவ்வளோ நேரம்..? உன் கிட்ட சுதி ஏதோ பேசணும் சொன்னா இப்போ தான் தூங்க போனா..?சரி நீ வா வந்து சாப்பிடு..."என்றவர் எழ முயல,

"வேண்டாம்மா எனக்கு பசிக்கல..."என்றவன் தன் தாயின் மடியில் தலை சாய்ந்தான்.

"எழில் எல்லாம் சொன்னான் அவனுக்கு தண்டனை கொடுத்தே சரி நீயும் ஏன்பா தண்டனை வாங்கிக்கிற இப்போ வேதனை யாருக்கு உனக்கு தானே..."என்றவரின் விரல்களோ தன் மகனின் அடிபட்ட கையை வருடிக் கொடுத்தது.

"என்னால என் கோவத்தை கன்ட்ரோல் பண்ணவே முடியல நானும் எவ்வளவோ ட்ரை பண்ணி பார்த்துட்டேன்..."

"அதுக்கு ஒரு வழி இருக்கு..."

"என்னது அது..."

"உனக்கு ஒரு கல்யாணம் பண்ணி வச்சா சரியாகிடும்..."

"அட போங்கம்மா நீங்க வேற எதுக்கெடுத்தாலும் இதையே சொல்லுறேங்க எனக்கு இப்போ அதுல எல்லாம் விருப்பம் இல்ல,பிசினஸ் டிலவப் பண்ணனும், அப்பறம் கீரத்திக்கு ஒரு நல்ல வாழ்கை அமைச்சி தரனும்..."

தன் கனவுகளை கூறிக் கொண்டே போக தன் தாயின் கலக்கத்தை கண்டு நிறுத்தியவன், "அம்மா என்னாச்சு ஏன் அலுகுறீங்க..?"என்றான்.

"எனக்கு கீர்த்தியை நினைச்சா தான் கவலையா இருக்கு கண்ணா அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையனும்..."

"கவலைப்படாதீங்க அம்மா எனக்கு நம்பிக்கை இருக்கு சீக்கிரமே அவளுக்கு கண் பார்வை கிடைக்கும் நல்ல வாழ்க்கையும் கிடைக்கும் நீங்க நிம்மதியா இருங்க, உங்க பையன் எல்லாத்தையும் பார்த்துகிடுவான்..."

"உன் கிட்ட பேசுனா மட்டும் தான் கண்ணா எனக்கு கொஞ்சம் நிம்மதியா இருக்கு,போ போய் ரெஸ்ட் எடு,அப்பறம் இந்த கோவத்தை மட்டும் குறைச்சிகோ கண்ணா..."என்றவாறு தன் மகனின் நெற்றியில் இதழ் பதித்து அவன் அறைக்கு அனுப்பி வைத்தார்.

அதே நேரம் இங்கே தன்னவளின் நினைவுகளோடு தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தான் வேந்தன்

அவள் வலியுடன் முகம் சுருங்கி தன் நெஞ்சில் சாய்ந்து மீண்ட ஒரு நொடி தனக்குள் உருவான மாற்றம்,அவள் தனக்கு மட்டும் சொந்தமானவள் என்ற உரிமையை உணர்ந்ததை நினைத்து இதழில் மெல்லிய புன்னகை உதிர்க்க கற்பனையில் அவள் முகம் கண்டான்.

"சுதி சீக்கிரமே உன்ன எனக்கானவளாக்குவேன்,கண்டிப்பா என்ன பத்தி தப்பா தான் நினச்சிக்கிட்டு இருப்பே, பார்க்கலாம் என்ன நடக்க போகுதுன்னு..."என்றவன் கனவில் அவள் முகம் கண்டவாறு நித்திரைக்குச் செல்ல முயன்றான்.

அவளை தன்னவளாக தன் அருகில் கொண்டு வர வேண்டும் என நினைத்தவன் அவள் மனதில் என்ன இருக்கிறது தனக்கும் அவளுக்கும் இடையில் இருக்கும் அகிலனை நட்பையும் அவன் தந்தை தன் மேல் வைத்த நம்பிகையும் மறந்தான்.

மறுநாள் விடியல் கதிரவன் மெல்ல விழி திறந்த அந்த அதிகாலை பொழுதில் வளர்மதியின் மொபைல் விடாது ஓசை எழுப்பி கொண்டே இருந்தது.

"அடியேய் வளரு உன் போனு ரெம்ப நேரமா அடிக்குது கொஞ்சம் சீக்கிரம் வாடி...."என்ற கோமதி அவளுக்கான மதிய உணவினை தயார் செய்து கொண்டிருந்தார்.

"அம்மா நான் குளிச்சிட்டு இருக்கேன் ஒரு பைவ் மினிட்ஸ் ஆகும், யாருன்னு பாரும்மா..." பாத்ரூமிற்குள்ளிருந்து குரல் கொடுக்க,

தன் செல்ல மகளை மனதிற்குள் திட்டிக் கொண்டு ஹாலுக்கு வர அதே நேரம் தன் உடற்பயிற்சியை முடித்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான் எழிலரசன்.

"கண்ணா அந்த போனை எடுத்து யாருன்னு பாருடா அம்மாக்கு வேலை இருக்கு..."என்றவர் மறுபடியும் கிட்சனுக்குள் நுழைய சார்ஜ் ஏறிக் கொண்டிருந்த தன் தங்கையின் மொபைல் அருகில் சென்றான்.

ஸ்வீட்டி என்று பதிந்திருந்தை பார்த்தவன், "வளரு ஸ்வீட்டி

நேம் வருது..."என்றவாறு அதை எடுத்து ஹலோ என்றான்.

"ஹலோ..!ஹலோ..."மறுபடியும் அழைக்க அங்கே இளஞ்செழியன் தன் மொபலை கட் பண்ணினான்.

அதற்குள் வேகமாக வளர்மதி வர, "என்னென்னு தெரியல வளரு அவங்களே கட் பண்ணிட்டாங்க, நான் போய் கிளம்பிட்டு வரேன் வந்து உன்ன விடுறேன்..." என்றவன் தன் அறைக்குள் நுழைய அடக்கி வைச்சிருந்த மூச்சினை வெளியிட்டாள்.

"இவனை யாரு இப்போ போன் பண்ண சொன்னா..?நல்ல வேளை பேசிக் தொலைக்கல எப்படியும் மறுபடியும் போன் பண்ணுவான்,காலேஜ் போனதுக்கு அப்பறம் பேசிக்கலாம்..."மனதுக்குள் நினைத்தவாறு மொபைல் ஆப் பண்ணி வைத்து சென்றாள்.

அதன் பின் நேரம் செல்ல கோமதி பரிமாற அண்ணன் தங்கை இருவரும் சேர்ந்து உணவுண்டு கிளம்ப ஆரம்பித்தனர்,

வளர்மதியை அழைத்துக் கொண்டு செல்ல செல்லும் வழியில், "யாரு வளரு காலையில போன் பண்ணுனாங்க..?"என்ற தன் அண்ணனின் தீடிர் கேள்வியில் திகைத்து நடுங்கினாள்.

மிரர் வழியாக தன் தங்கையின் முகத்தை கண்டவன், "சொல்லு வளரு உன்ன தான்மா கேட்குறேன்..."என்க,

"அண்ணா.....அது வந்து.... நம்ம வந்தனா தான் அண்ணா..." திக்கி தடுமாறி கூற தன் தோளினை பற்றியிருந்த அவள் கையின் நடுக்கத்தை உணர்ந்தவன் அவள் தன்னிடம் எதையோ மறைக்கிறாள் என்பதை அறிந்தான்.

அதன் பின் அவளிடம் வேறெதும் பேசாமல் அமைதியாக வர அதே நேரம் இவள் வரவினை எதிர்பார்த்து காலேஜின் வெளியே காத்திருந்தான் இளஞ்செழியன்.

## அத்தியாயம் : 7

வளர்மதியின் வரவிற்காக காலேஜில் வெளியே காத்துக் கொண்டிருந்த செழியன் அவள் அண்ணனுடன் வருவதை கண்டும் கண்டுகொள்ளாதவாறு தன் மொபலை நோண்டிக் கொண்டு பைக்கின் மேல் அமர்ந்திருந்தான்.

இளஞ்செழியனை கண்ட வளர்மதி பயத்துடன் இருக்க அவனின் முன் வந்து தன் பைக்கை நிறுத்தினான் எழிலரசன்.

"என்ன செழியா இங்கே நிக்கிறா..?" என்க,தன் அண்ணனின் பின்னிருந்து இறங்கினாள் வளர்மதி.

"என் பிரெண்டோட தம்பி இந்த காலேஜில தான் படிக்கான் அவனுக்காக தான் காத்துகிட்டு இருக்கேன்,நீங்க நல்லா இருக்கீங்களா அண்ணா..?"என்றவன் பணிவுடன் அவன் முன் நின்று கேட்க,

"நல்லா இருக்கேன்டா,சரி வளரு நீ போ நான் ஈவினிங் வரேன்..."என்க சரி என்றவாறு உள்ளே நுழைந்தாள்.

"அப்பறம் உன் வேலையெல்லாம் எப்படி போகுது அப்பா,அம்மா எப்படி இருக்காங்க..?பார்த்து ரெம்ப நாள்ளாச்சு இந்த வீக்கென் உங்க வீட்டுக்கு வரேன்..."

"ஹ்ம்ம் சரி அண்ணா நீங்க போங்க ஆபீஸ்க்கு,லேட்டாகிருச்சு நான் அவனை பார்த்துட்டு கிளம்புறேன்..."

"இல்ல பரவாயில்லை நான் வேணும்னா இருக்குறேன் அவன் வந்ததும் போறேன்..."

"நீங்க போங்க அண்ணா நான் பார்த்துகிடுறேன்..."என்றவன் அதன் பின் ஏதேதோ சொல்லி எழிலை அனுப்பி வைத்தான்.

அவன் சென்றதும் மதிக்கு மெசெஜ் அனுப்ப அடுத்த நொடி கோவத்துடன் அவன் முன் நின்றாள் வளர்மதி.

"இளா எத்தனை தடவை சொல்லிருக்கேன் எனக்கு போன் பண்ணாதேன்னு,இன்னைக்கு மட்டும் அண்ணனுக்கு தெரிஞ்சா இதுக்கு அப்பறம் என்ன காலேஜிற்கே அனுப்பிருக்க மாட்டாங்க,இனிமே நீ மட்டும் இப்படி

பண்ணுனா நான் உன்ன பார்க்குறது இதுதான் கடைசியா இருக்கும் சொல்லிட்டேன்..." படபடவென்று பொரிந்து விட்டு செல்ல,

"மதி நீயே என்ன பார்க்கணும் ஆசைப்பட்டாலும் என்னால இனிமே உன்ன பார்க்கவே முடியாது..."என்க, அவன் கூறியதை கேட்டு ஒரு வித அதிர்ச்சியுடன் திரும்பி நின்றாள்.

"என்னாச்சு இளா, நீ என்ன சொல்லுற..."என்றவாறு அவன் அருகில் செல்ல,

"நான் உன்கிட்ட பேசணும் வா நம்ம வெளியே போகலாம்..."என்றவன் அவள் கரம் பற்றி அழைத்தான்.

"ஏதா இருந்தாலும் இப்படியே சொல்லு எனக்கு இன்னைக்கு பிராக்டிக்கல் இருக்கு..."என்றவள் அவனிடம் இருந்து தன் கையை பிரிக்க,

"எனக்கு மும்பைக்கு ட்ரான்ஸ்பர் ஆகிருச்சி நாளைக்கே கிளம்பனும்,இனிமே உன்ன பார்க்க முடியாது..." என்றவன் விடாது அவள் கையை இறுக பற்றினான்.

பற்றியிருந்த அவன் கையின் அழுத்தத்திலே அவன் தவிப்பை உணர்ந்தவள் விழிகளில் கண்ணீர் வடிய அப்படியே நின்றாள்.

எப்போதும் தன்னை ஈர்க்கும் அவளது வசிகரிக்கும் விழி இன்று கலங்க தன் நெஞ்சோடு அவளை அழைத்துக் கொண்டு ஆறுதல் கூற மனம் ஏங்க பொது இடம் கருதி அமைதியாக தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு நின்றான்.

"மதி நான் கிளம்பனும் நாளைக்கு..."

"திடீருன்னு இப்படி சொல்லுற என்ன விட்டு என்னைக்கும் பிரிய மாட்டேன்னு தானே சொன்னே,இப்போ நீயும் என்ன விட்டு போறையா..?"என்றவள் அழுது கொண்டு கூற,

"நான் விரும்பி இதை கேட்கல கொஞ்சம் நாளு தான் மறுபடியும் இங்கையே வந்துருவேன்,உன்ன விட்டு எங்கையும் போக மாட்டேன்..."

"நீ கண்டிப்பா போகணும்மா எனக்கு ரெம்ப பயமாயிருக்கு ப்ளீஸ் போகாதே இளா..."

"சாரி மதி நான் போய் தான் ஆகனும் அடிக்கடி வரேன் சரியா, எனக்கு இன்னைக்கு முழுக்க உன் கூடவே இருக்கணும் ஆசையா இருக்கு அதான் உனக்கு கால் பண்ணுனேன், ப்ளீஸ் நம்ம எங்கையாவது போகலாம்..." என்றவன் அவள் கையை தன் கைக்குள் வைத்துக் கொண்டு கூறினான்.

அதே நேரம் அவர்கள் அருகில் வந்த வந்தனா, "மதி சீக்கிரம் வா எக்ஸாம் இருக்கு லேட்டாகுது,நீங்க அப்பறம் பேசிக்கோங்க..."என்றவள் மதியை அழைத்துக் கொண்டு செல்ல முயல,அவளோ நகராது அப்படியே நின்றாள்.

"இளா..." ஏக்கத்துடன் அழைக்க,

"சரி நீ போ மதி ஈவினிங் மீட் பண்ணலாம்,எக்ஸாம் நல்லா எழுது ஆல் தி பெஸ்ட்..."கலகத்துடன் அவளை அனுப்பி வைக்க,அதை கண்ட வந்தனாவிற்கே மனம் கலங்கியது.

தான் இங்கிருந்தால் அவள் கிளம்ப மாட்டாள் என்பதை அறிந்தவன் அவர்களிடம் சொல்லிக் கொண்டு செல்ல,மதியை அழைத்துக் கொண்டு காலேஜ்ற்குள் நுழைந்தாள்.

"மதி என்னாச்சு ஏன் உன் கண் கலங்கிருக்கு உங்களுக்குள்ள எதாவது பிரச்சனையா..?"

"வந்தனா..." அழுகையுடன் அவளை அனைத்துக் கொள்ள,அவளை சிறிது நேரம் அழ விட்டவள் அமைதியாக இருந்தாள்.

"இளாவை ட்ரான்ஸ்பர் பண்ணிட்டாங்கலாம்,இனிமே என்னால அவனை பார்க்க முடியாது..."

"ஏய் லூசாடி நீ எதுக்கு எடுத்தாலும் இப்படி அழுகுறதை நிறுத்து அவன் என்ன அங்கையே இருக்க போறான்,அடிக்கடி வருவான் அவனை பார்க்கணும் தோணுதா வீடியோ கால் பண்ணு,இதுக்கு போய்

அழுதுகிட்டு வா எக்ஸாம்க்கு டைம்மாச்சு..."என்றவள் அவளை அழைத்துக் கொண்டு செல்ல,ஏனோ உள்ளுக்குள் பெரும் பயம் ஒன்று அவளை அலைகழித்தது.

எப்போது ஈவினிங் வரும் அவனை காண்போம் என்ற தவிப்பில் அன்றைய நாளை கடக்க முயல,அவள் கண்ட ஒவ்வொரு திசையிலும் இளாவின் முகமே நியாபகம் வந்தது.

முதல் நாள் அவனை கண்ட போது தன்னையும் அறியாமல் அவன் கூறிய பொய்யை நம்பியது,மறுநாள் தன் அண்ணனுடன் தன்னை கண்டதற்கு பின் மன்னிப்பு வேண்டி தன்னுடன் பழகிய விதம்,அவனது குறும்புச் செயல் தன்னிடம் காதலை சொல்லிய தருணம்,இந்த காலேஜில் தங்கள் இருவரும் சந்தோஷமாக கழித்த நினைவுகள் அனைத்தும் வந்து சேர துடித்துக் கொண்டிருந்தாள்.

அகிலன் அன்று வெளியே சென்றிருக்க அவன் இருக்கையில் அமர்ந்திருந்தாள் சுதிகீர்த்தி.

"மே ஐ கமின் சார்..."என் கேட்டவாறு டோரை தட்டிக் கொண்டு ஆனந்த் வர அங்கே அமர்ந்திருந்த கீர்த்தியை கண்டான்.

"மேடம் சார் இல்லையா..?" பணிவாய் கேட்க,

"இல்ல அண்ணா வெளியே போயிருக்காங்க கொஞ்சம் நேரத்துல வந்துருவாங்க,என்ன சொல்லணும் சொல்லுங்க நான் சொல்லிறேன்..."

"ஒன்னுமில்லை மேடம் நான் சார் வந்ததும் வரேன்..."என்றவன் செல்ல முயல.

"பரவாயில்லை என் கிட்ட சொல்லுங்க நான் கால் பண்ணி அண்ணா கிட்ட சொல்லிறேன்..."

"இல்ல மேடம் ஒரு பேப்பர்ஸ் சைன் பண்ணனும் அதை வாங்க தான் வந்தேன் உங்களால தான் அதை பண்ண முடியாதுல,உங்களுக்கு கண் இல்லியே..."என்றவன் இன்னும் ஏதேதோ சொல்ல,

அவன் மனதில் அகிலன் தன்னன அடித்து அவமானப்படுத்தியதை மட்டுமே நினைத்து குரோதத்துடன் கூற, அவன் கூறியதை கேட்டவள் கண் கலங்கியவாறு அப்படியே இருக்கையில் அமர்ந்தாள்.

அவளை கண்டு சந்தோஷமாக திரும்ப அடுத்தநொடி தன் கன்னத்தை பற்றிக் கொண்டு நின்றான் ஆனந்த்.

திடீரென்டு கேட்ட ஓசையில் கலங்கிக் கொண்டு இருந்தவள் எழுந்து நிற்க, "இதுக்கு அப்பறம் ஏதாவது சுதி கிட்ட பேசுனா நீ உயிரோட இருக்குற கடைசி நாள் இது தாண்டா,கெட் அவுட்..."என்று யாழ்வேந்தன் கத்த அவனை பார்த்து முறைத்தவாறு வெளியேறினான்.

"சாரி சுதிம்மா அவன் ஏதோ தெரியாம பேசிட்டான் இனிமே உன் முன்னாடியே வர மாட்டான் நீ இதை நினைச்சி பீல் பண்ணாதே சரியா..."என்றவன் அவள் அருகில் நெருங்கி பின் எதையோ நினைத்து விலகி நிற்க.

அவன் தனக்கு ஆறுதல் கூறியவாறு தன்னை நெருங்கியது பின் விலகி நின்றது அனைத்தையும் உணர்ந்தவள் மனதில் பெருங் குழப்பம் வந்து சென்றது.

அவன் வெளியே செல்ல முயல்வதை காலடி ஓசையில் மூலம் அறிந்தவள், "ஒரு நிமிஷம் இப்போ நடந்ததை அண்ணா கிட்ட சொல்ல வேண்டாம் பிளீஸ்..."என்க,

"நீ என்கிட்ட கெஞ்சனும் அவசியமே இல்லை நீ எப்படி சொன்னாலும் உன் பேச்சுக்கு நான் மறுப்பு சொல்ல மாட்டேன்..." மனதிற்குள் நினைத்தவன் சரி என்றவாறு தன் அறைக்கு சென்றான்.

அவன் சென்றதும் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தவளுக்கு மனம் முழுவதும் ஆனந்த் சொன்னதே ஒலிக்க சற்று பின் சாய்ந்து விழி மூடினாள்.

நேரம் சென்று கொண்டிருக்க மொபைல் ஓசையில் கலைந்தவள் மெல்ல எழுந்து தேடி அதை எடுத்தாள்.

"ஹலோ கீர்த்தி நான் சத்யா பேசுறேன் எப்படி

இருக்கே...?"என்று அவள் தோழி கேட்க,

தன் உயிர்த் தோழியின் குரலை கேட்ட அடுத்தநொடி தன் மனதில் இருந்த கவலை அனைத்தையும் கொட்டி தீர்த்தாள்.

"சத்யா நான் இப்போ ரெம்ப பலகீனமாகிட்டேன் என்னால முடியல நான் எல்லாதைக்கும் பாரமா இருக்கேன்னு தோணுது இதுக்கு அன்னைக்கே அந்த கடவுள் என்ன காப்பாத்தாம கொன்னுருக்கலாம் கொஞ்சம் நாளுல என் வீட்டுல இருக்குறவங்க கூட என்ன மறந்திருப்பாங்க..."என புலம்பிக் கொண்டு இருக்க,

அதே நேரம் சீக்கிரம் வீட்டிற்குச் செல்வதற்கு அகிலனிடம் கேட்க உள்ளே நுழைந்த எழிலரசன் அனைத்தையும் கேட்டவாறு நின்றான்.

அவள் இப்போது அனுபவிக்கும் இந்த கொடிய வலிக்கு தானும் ஒரு காரணமோ என்ற நினைப்பில் தவித்தவன் அப்படியே அமைதியாக வெளியேறினான்.

சில நாட்களாக சந்தோசமாக இருந்த தன் மகள் இன்று கவலையுடன் வீட்டிற்குள் நுழைய அவளை கண்ட அந்தநொடியே அதை உணர்ந்தார் சித்ரா தேவி.

"கனகா எல்லாருக்கும் சாப்பாடு எடுத்து வை..."என்று வேலைகாரியை கூறியவர் தன் மகளை அழைத்துக் கொண்டு அவள் அறைக்குச் சென்றார்.

"கீர்த்தி நீ போய் பிரெஸ் ஆகிட்டு வா அப்பறம் எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாம்..."என்க,சரி என்றவாறு தன் தாய் எடுத்துக் கொடுத்த உடைகளை வாங்கிக் கொண்டு பாத்ரூமிற்குள் நுழைந்தாள்.

"இவளுக்கு என்னாச்சு ஏன் எதையோ நினைச்சிகிட்டு இருக்கா,ஒரு வேலை ஆபீஸ்ல யாரும் எதாவது சொல்லிருப்பாங்களா அப்படினா என்கிட்ட அகிலன் சொல்லிருப்பானே..?" தன் மனதை போட்டு குழப்பிக் கொண்டு இருக்க சிறது நேரம் கழித்து வெளியே வந்தாள்.

"கீர்த்திம்மா என்னாச்சு ஏன் ஒரு மாதிரியா

இருக்கே..?"கேட்டவாறு அவள் கூந்தலை பின்னலிட,

"ஒன்னுமில்லைம்மா..."என்றவனில் குரலில் ஏதோ ஒன்று இருக்கிறது என்பதை அறிந்த சித்ரா அவளாகவே கூறட்டும் என்று நினைத்து அவளை அழைத்துக் கொண்டு சென்றார்.

இரவு தாமதமாக வீட்டுக்குள் வந்த யாழ்வேந்தன் வாசலில் அமர்ந்திருந்த தன் பெற்றோரை கண்டான்.

"என்னாச்சு என் ரெண்டு பேரும் வெளியே உட்கார்ந்திருக்கீங்க..? சாப்டீங்களா..?செழியா எங்கே நாளைக்கு கிளம்ப தேவையான ஏற்பாடு எல்லாம் பண்ணிட்டானா..?"

"ஹ்ம்ம் எல்லாம் ரெடி பண்ணிட்டான் நல்லா காத்தடிச்சது அதான் கொஞ்சம் நேரம் வெளியே உட்கார்ந்திருக்கலாம் நினைச்சோம்,அவன் இல்லாம எப்படி தான் இருக்கவோ..."

"ஐயோ அம்மா அவன் எங்கே போக போறான்,பக்கத்துல தான் இருப்பான் உங்களுக்கு எப்பயெல்லாம் அவனை பார்க்கணும் தோணுதோ என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லுங்க அடுத்த நிமிஷமே அவனை என் செல்ல அம்மா முன்னாடி கொண்டு வந்து நிப்பாட்டுவேன்..."என்றவன் தன் தாயின் தாடையை பிடித்து கெஞ்சியவாறு அவர் மடியில் தலை சாய்ந்தான்.

"இன்னைக்கு என்னப்பா ரெம்ப நேரமாச்சி வா அம்மா சாப்பாடு எடுத்து வைக்கேன்,எழுந்திரு..."

"அது இருக்கட்டும் நான் அப்பறம் சாப்பிடுறேன்,உங்க ரெண்டு பேரும் கிட்டையும் ஒரு முக்கியமான விசியம் சொல்லனும்..."

"என்னப்பா சொல்லனும் சொல்லு..."

"நான் என்ன பண்ணுனாலும் அது சரியா இருக்கும்ன்னு நீங்க நம்புறீங்களா..?"

"ஹ்ம்ம் கண்டிப்பா நம்புறோம்ப்பா அப்படி என்ன செய்ய போறே..."

"எனக்கு இது போதும் சந்தோஷமான காரியத்தை தான் செய்ய போறேன், சாப்பாடு எதுவும் வேண்டாம்..."என்றவன் மனதிற்குள் முடிவெடுத்து சந்தோஷமாக விசிலடித்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான்.

அவனது மனம் முழுவதும் தன்னவளில் நினைப்புடன் இருக்க,இதை எதையும் அறியாத அவளோ ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள்.

அத்தியாயம் : 8

நாட்கள் இரவு பகல் பாராது சென்று கொண்டிருக்க இளஞ்செழியன் மும்பை சென்று இரண்டு வாரங்களாக,அவன் நினைப்புடன் அமர்ந்திருந்த வளர்மதியின் அருகில் வந்து அமர்ந்தாள் வந்தனா.

"என்னாச்சு வளரு செழியன் இன்னைக்கு கால் பண்ணலையா...?"

"இப்போ தான் பேசுனேன்,இந்த வீக்கென்ட் வரேன்னு சொன்னான் ஆனா இப்போ நான் நெக்ஸ்ட் வீக் வரேன்னு சொல்லுறான்..."

"ஓ அதுக்கு தான் அமைதியா இருக்கா..?"

"அன்னைக்கு ஈவினிங் மட்டும் அண்ணன் வராம இருந்தா நான் இளாவை பார்த்திருப்பேன்,நான் உன் கூட பேசணும்ன்னு எவ்வளோ ஆசையா கூப்பிட்டான் ஆனா என்னால தான் போக முடியல..."

"சரி விடு வளரு, இது நம்ம பைனல் இயர் இன்னும் கொஞ்சம் நாள் தான் இருக்கு,முதல ப்ராஜெக்ட் வொர்க் முடிப்போம் வா..."என்றவள் அவளை அழைத்துக் கொண்டு செல்ல,

ஒவ்வொரு நொடியில் இளாவின் நினைவிலிருந்து தன்னை கலைத்து படிப்பை நினைவிற்கு கொண்டு வரும் தன் தோழியை செயல் கண்டு மனதிற்குள் நன்றி கூறியவள் அவளுடன் கிளாஸிற்குள் நுழைந்தாள்.

அதே நேரம் இங்கே தன்னை சுற்றி ஒரு வலையை பிண்ணிக் கொண்டு அதற்குள்ளே முடங்கிக் கிடந்தாள் சுதிகீர்த்தி.

அறையினுள்ளே அடைந்து கிடைக்கும் தன் மகளை கண்டு வருந்திய சித்ரா தன் கணவனிடமும்,மகனிடமும் புலம்பித் தவித்தார்.

"அம்மா அவ தனியா இருக்கணும் ஆசைப்படுறா விடுங்கம்மா அப்படியே இருக்கட்டும்..."

"ஆமா சித்ரா அகிலன் சொல்லுறதும் சரி தான் நீ ஏன் அவளை தொந்தரவு பண்ணுற,அவ இஷ்டப்படி இருக்க விடு..."

"நான் சொல்லுறது உங்களுக்கு புரியலையா..?அவ ரூமை விட்டு வெளியே கூட வர மாட்டிக்கா,யார் கிட்டையும் பேச மாட்டிக்கா அவளுக்கு சாப்பாடு கொடுக்க கெஞ்சுறேன்,அப்பவும் கடமைக்கு தான் சாப்பிடுறா..?என்ன பிரச்சனைன்னு கேட்ட அமைதியா இருக்கா இப்போ கூட நம்ம கூட சேர்ந்து சாப்பிடா கூப்பிட்டேன் எனக்கு வேண்டாம் நான் வரல சொல்லி கத்துறா,கோவப்படுற எரிஞ்சி விழுகுற..?எனக்கு ரெம்ப பயமா இருக்கு,இது எல்லாத்தைக்கும் காரணம் நீங்க தான் அவ ஒழுங்கா உங்க அம்மா வீட்டுலையே இருந்திருப்பா,அவளை பிடிச்சி படிக்க அங்க இங்க அனுப்பி வைச்சி இப்போ கடைசியா வீட்டுக்குள்ள முடங்க வச்சிடீங்க, இப்போ சந்தோஷமா..?" தன் மனதில் இருந்ததை கொட்டித் தீர்க்க,

"சொல்லி முடிச்சிடையா சித்ரா இல்ல இன்னும் எதுவும் இருக்கா..?அப்படியே இருந்தாலும் நைட் பேசிக்கலாம்,எனக்கு முக்கியமான மீட்டிங் இருக்கு அகில் சீக்கிரம் வா..."என்றவர் எழுந்து செல்ல, அவர் பின்னே பாதி சாப்பாட்டில் எழுந்து சென்றான் அகிலன்.

"டேய் அகில் சாப்பிட்டு போடா..."என்க, அவனே அதற்கு முன்னே வீட்டை விட்டு மின்னல் வேகத்தில் வெளியேறினான்.

"இப்படி பறந்து பறந்து உழைக்கிறது எதுக்கு சந்தோஷமா

ஒரு வாய் சாப்பிடா தானே, இங்கே அதை கூட செய்ய விடமா இப்படி இழுத்துட்டு போறாரு பெத்த பையனை..."புலம்பியவாறு கிட்சனுக்குள் நுழைந்தார் சித்ரா தேவி.

"அகில்..."

"ஹ்ம்ம் சொல்லுங்கப்பா..." சாலையில் பார்வை இருந்தாலும் செவி தந்தையின் புறம் இருந்தது.

"சுதி பத்தி டாக்டர் கிட்ட கொஞ்சம் பேசணும் ஈவினிங் ஹாஸ்பிட்டல் போகணும் மறந்துறாதே..?"

"ஹ்ம்ம் ஓகேப்பா..."

"ஆபீஸ்ல என்ன நடக்குது ஒரு வேலை சுதியை யாராவது எதுவும் சொல்லிடங்களா..?"

"தெரியலப்பா நான் இருக்குற நேரம் எந்த பிரச்சனையும் வரல,நான் வேணும்னா வேந்தன்,எழில் கிட்ட கேட்குறேன்..."

"இல்ல கேட்க வேண்டாம்,ஸ்பின்னிங் மில் கார்மெண்ட்ஸ் எல்லாம் ரவுண்ட்ஸ் போனியா..?"

"இல்லப்பா ஆபீஸ் வொர்க் கொஞ்சம் அதிகம் வேந்தனும், சுதியும் போயிட்டு வந்தாங்க,வேந்தன் எல்லா அகௌன்ட்ஸ்யும் செக் பண்ணி என்கிட்ட காட்டிடான்..."

"அவங்க ரெண்டு பேரும் போனாங்களா..?"

"ஹ்ம்ம் ஆமாப்பா நான் தான் அனுப்புனேன்..."

"சரி இனிமே இப்படி பண்ணாதே..."

அதுவரை அவர் கேட்ட அனைத்திருக்கும் பதில் சொல்லவன் இப்போது குழப்பத்துடன் காரினை டெக்ஸ்டையில் முன் நிறுத்த அதிலிருந்து இறங்கினார் ஜெயபிரகாஷ்.

"அப்பா ஒரு நிமிஷம் இனிமே இப்படி பண்ணாதேன்னு சொன்னீங்களா..?எதுக்கு அப்படி சொன்னேங்க...?"

மனதுக்குள் வேந்தனையும்,சுதியையும் அனுப்பியதை நினைத்து கேட்க,

"ரவுண்ட்ஸ் போறது உன்னோட வேலை அது அவன் வேலை இல்ல இனிமே இப்படி பண்ணாதே..."என்றதும் தான் நிம்மதியாக உணர்ந்தான்.

"சரிப்பா நான் கிளம்புறேன்..."என்றவன் திரும்ப செல்ல,

"ஒரு நிமிஷம் அகில்..."

"என்னப்பா..." தன் தந்தையின் அருகில் வர,

"வேந்தன்,எழில் ரெண்டு பேரும் ஆபீஸ் ஸ்டாப் தான் அதை மறந்திடாதே வெளியே மட்டும் நீங்க பிரெண்ட்ஸ் அவ்வளோ தான் நீ ரெம்ப இடம் கொடுக்காதே,அவங்க ரெண்டு பேரும் எப்போ வராங்கன்னு போறங்கன்னு எனக்கு தெரியாது நினைச்சியா..?"

"இல்லப்பா நான் தான் அவங்களுக்கு வெளி வேலை..." கூறி முடிப்பதற்குள் தன் தந்தையின் முறைப்பை கண்டவன், "சாரிப்பா இனிமே இப்படி பண்ண மாட்டேன்,நான் கிளம்புறேன்..."என்றவன் தன் காரை எடுத்துக் கொண்டு விரைந்தான்.

வழக்கம் போல் புயல் வேகத்தில் ஆபீஸ்க்குள் நுழைய அடுத்தநொடி அவன் முன் நின்றான் பிரதாப்.

"இன்னும் யாரெல்லாம் ஆபீஸ் வரல..?"

"எல்லார் வந்துட்டாங்க சார்..."

"சரி டென் ஒ கிளாக் மீட்டிங் எல்லாரையும் ரெடியா இருக்க சொல்லு..."என்றவன் தன் வேலையை பார்க்க அவனது கோவம் அறிந்த பிரதாப் எதுவும் கேட்காமல் அமைதியாக வெளியேறினான்.

அவன் கூறியது போல் பத்து மணிக்கு அனைவரும் தயாராக இருக்க, அவன் உள்ளே நுழைந்ததும் அனைவரும் எழுந்து நின்றான்.

"சிட் ப்ளீஸ்,நான் இந்த கம்பனி டிவலெப்மென்ட்டாக எல்லாத்தையும் மாத்த போறேன்,இதுல யாருக்கு விரும்பமோ அவங்க இருக்கலாம் மத்தவங்க பேப்பர் போட்டு போயிட்டே இருக்கலாம், ஆபீஸ் டைம் இனிமே நயன் ஒ கிளோக் கிடையாது, எய்ட் ஒ கிளாக் அதே மாதிரி க்ளோசிங் டைம் ஈவினிங் சிக்ஸ் ஒ கிளாக்,வொர்கிங் ஹவர்ஸ் யாரும் வெளியே போகணும்னா அதுக்கு என் பெர்மிசன் இருக்கணும்,

அப்பறம் வேந்தன் நீங்க இனிமே பேக்டரி அக்கவுன்ட்ஸ் செக் பண்ண வேண்டாம்,ஆபீஸ் வொர்க் மட்டும் போதும் உங்களுக்கு,இனிமே அதையெல்லாம் பிரதாப் நீங்க தான் பார்த்துக்கணும்,ஸ்பினிங் மில் இனிமே மேனேஜர் நீங்க தான், எழில் நீங்க தான் எனக்கு பி.ஏ நான் எங்கே போனாலும் நீங்க வரணும்..."தன் மனதில் இருந்த அனைத்தையும் கூறி முடித்தான்.

ஒரு சிலருக்கு அவன் கூறியதில் சந்தோஷம் இருக்க,வேந்தன் எழில் இருவருக்கும் அவன் எதற்காக இந்த முடிவை எடுத்தான் என்ற யோசனையில் எதுவும் தெரிவிக்காமல் அமைதியாக வெளியேறினர்.

சில நாட்களாக சுதி ஆபீஸ் வராதது வேறு இருவரின் மனதை கலங்கச் செய்ய அதை எப்படி அகிலனிடம் கேட்பது என்ற யோசனையிலே சுற்றி வந்தனர்.

அவர்கள் யோசனையை கலைப்பது போல் அவர்கள் அருகில் வந்த பிரதாப், "வேந்தன் சார்,எழில் சார் உங்க ரெண்டு பேருக்கும் நான் மேனேஜர் ஆகுறதுல விரும்பம்மில்லையா..?ஏன் சைலெண்டா இருக்கீங்க..?"என்க,

"ஐயோ அப்படியெல்லாம் இல்ல பிரதாப் இது வேற யோசனை,ஆல் தி பெஸ்ட் பார் யுவர் நியூ ஜாப்..."என்றவாறு இருவரும் விலகி செல்ல தன் அறைக்குச் சென்ற அகிலன் அதை கேட்க அவர்கள் அமைதி அவனையும் ஏதோ செய்தது.

மூவரும் அந்த அலுவலகத்திற்குள்ளே சுற்றி வந்தாலும்

தேவைக்கு மட்டும் பேசிக் கொண்டு இருக்க, தங்கள் நட்புக்குள் விரிசல் வருவதை போல் உணர்ந்தனர்.

தன் நிறுவனத்திற்கு வந்த ஜெயபிரகாஷ் அகிலனின் பி.ஏவாக எழில் இருந்தாலும் சிறு துளி நட்பு கூட இப்போது அவர்களுக்கு நடுவில் இல்லாதை கண்டார்.

தன் சொந்த ஊரில் இருந்து சிலர் வந்திருப்பதாக சித்ராவிடம் இருந்து அழைப்பு வர, "அகில் வா நம்ம வீட்டுக்கு போகலாம்..?எழில் நீங்க ஆபீஸ்சை கவனிச்சிக்கோங்க..."என்றவர் தன் மகனை அழைத்துக் கொண்டு சென்றான்.

"அகில்..."

"சொல்லுங்கப்பா..."

"அப்பா ஏதாவது தப்பா சொன்னாதா நினைக்கிறையா..? நான் உங்க பிரெண்ட்ஸ்ஷிப்ல விரிசல் வரணும்ன்னு நினைக்கல..?"

"என்னப்பா இப்படியெல்லாம் பேசுறீங்க என்மேல தப்பு இருக்க போய் தான் தானே நீங்க சொல்லுறீங்க நான் தான் என்ன மாத்திக்கனும்,சாரிப்பா..."

"கார்மெண்ட்ஸ் மேனேஜர் என்கிட்ட..."என்று ஏதோ சொல்ல வர,

"அப்பா வீட்டுக்கு யார் வந்துருக்கா..?"

"கிராமத்துல இருந்து வந்துருக்காங்காலம் வீட்டுக்கு போனா தான் தெரியும்..."என்க,அதன் பின் இருவரும் எதுவும் பேசாமல் வீட்டிற்குச் சென்றனர்.

"ஆடடா வாங்க சித்தப்பா,வாங்க மாப்பிள்ளை என்ன கொளுந்தனாரு எல்லாரும் எப்படி இருக்கீங்க..?" மலர்ந்த முகத்துடன் தன் சொந்த ஊர் மக்களை விசாரித்தவாறு அவர்கள் அருகில் அமர்ந்தார் ஜெயபிரகாஷ்.

"சித்ரா எல்லாருக்கும் குடிக்க மோர் கொண்டு வா..."

"அதெல்லாம் நான் வந்ததும் மருமக கொடுத்துட்டா,நீ தான் லேட்டா வந்துருக்கே..."என்ற நாராயணமூர்த்தி அகிலனின் புறம் திரும்பினார்.

"ஆட ராஜாவாட்டம் வளர்ந்துடையே கண்ணா..."என்க,

"என்ன ஆசிர்வாதம் பண்ணுங்க தாத்தா..."என்றவன் அவர் காலில் விழிந்து ஆசிர்வாதம் வாங்கினான்.

"முருகன் சித்தப்பா,பெருமாள் மாமா ரெண்டு பேரும் நல்லா இருக்கீங்களா..?"

"நல்லாயிருக்கோம் அகிலா வந்து உட்காரு..."என்க,அவர்கள் அருகில் சென்று அமர்ந்தான்.

முதலில் தன் பெற்றோரின் நலம் விசாரித்த ஜெயபிரகாஷ் ஊரில் நடக்கும் விசியங்கள்,விவசாயம் என்று பொதுவாக பேச அவர்கள் பேசுவதை கேட்டவாறு அமர்ந்திருந்தான் அகிலன்.

"இந்த வருஷம் நம்ம ஐயனர் கோவில் கட்டலாம் இருக்கோம்,உங்க அப்பா தான் உன்ன பார்த்துட்டு வர சொன்னாரு..."

"ரெம்ப நல்ல விசியம் சித்தப்பா அப்படியே பண்ணுங்க ஒரு நிமிஷம்..."என்றவர் தன் அறைக்கு செல்ல அடுத்தநொடி தன் மனைவியுடன் வெளியே வந்தார்.

"இந்தாங்க சித்தப்பா..."என்றவர் ஒரு தட்டில் பழம்,வெத்தலை பாக்கு வைத்து அதில் மேல் சில இராண்டாயிரம் கட்டுகள் வைத்து தர அதை சந்தோஷமாக வாங்கிக் கொள்ள தம்பதியராய் அவர் காலில் விழிந்து ஆசிர்வாதம் வாங்கினார்.

"சரி வாங்க எல்லாரும் சாப்பிடலாம்..."என்ற சித்ரா தேவி அனைவரையும் அழைக்க,

"ஒரு நிமிஷம் நாங்க இன்னொரு முக்கியமான விசியத்தை பத்தி பேசணும்,ஐயா கிட்ட பேசுனதுக்கு உன் கிட்ட பேச சொன்னாரு..."என்று நாராயண மூர்த்தி மற்ற இருவரையும் பார்த்தவாறு பேச ஆரம்பிக்க,

"சொல்லுங்க சித்தப்பா..."

"அது வந்து நம்ம பெருமாளோட பையனுக்கு பொண்ணு பார்த்துக்கிட்டு இருக்கோம்,அதான் நம்ம பாப்பாவை கேட்கலாம் வந்தோம் பையன் நல்லா படிச்சிருக்கான்,ஒரு கேட்ட பழக்கம் இல்ல, நல்ல வசதி நீ என்ன சொல்லுறப்பா,ஆமா எங்கே நான் வந்ததுல இருந்து பாப்பாவையே காணும் சித்ரா எங்கம்மா என் பேத்தி..?"

"சித்தப்பா எனக்கு இதுல சந்தோஷம் தான் அவ ரூம்ல தான் இருக்கா ஆனா நம்ம கீர்த்திக்கு..."என்று இழுக்க,

"சித்ரா போம்மா போய் நீ பாபாப்வை கூட்டிட்டு வா,அவளை பார்த்து ரெம்ப நாளாச்சு,நான் வந்தது அவளுக்கு தெரியாதா ஏன் என்ன பார்க்க வரல,கீர்த்தி பாப்பா நான் மூர்த்தி தாத்தா வந்துருக்கேன்..."

"மாமா நான் போய் கூட்டிட்டு வரேன் நீங்க உட்காருங்க..."என்றவர் தன் மகள் அறை நோக்கிச் சென்றனர்.

அதன் பின் பெரியவர்கள் அனைவரும் பேச, "அப்போ உனக்கு சம்மதம்ன்னா இன்னைக்கே வெத்தலை பாக்கு மாத்திக்கலாம்..."என்றவர் பேத்தியின் வருகைக்காக சந்தோஷமாக காத்திருக்க,அகிலன் ஜெயபிரகாஷ் இருவரும் தவிப்புடன் காத்திருந்தனர்.

நேரம் செல்ல கீர்த்தியை தோளோடு அணைத்தவாறு அழைத்து வர, "வா தாயி எப்படி இருக்கே கண்ணு..."என்றவாறு அவள் தலையை வருடிக் கொடுக்க அமைதியாக நின்றாள்.

அவளது அமைதி அங்கிருந்த அனைவரையும் யோசிக்க வைக்க, "சித்தப்பா கீர்த்திக்கு ஒரு விபத்துல பார்வை போச்சு..." திணறிக் கொண்டு கூற,

"ஐயோ ஐயனாரப்பா என் பேத்திக்கு இப்படி ஒரு குறையை கொடுத்துட்டையே..?" கலங்கியவாறு புலம்பினார்.

அதன் பின் புலம்பியவாறு ஏதேதோ சொல்ல அமைதியாக

கேட்டுக் கொண்டு இருந்தாள்.

"சரிப்பா எங்களுக்கு பஸ்க்கு நேரமாச்சு நாங்க கிளம்புறோம்,வா முருகா பெருமாளு நாம்ம கிளம்பலாம்..."

"ரெண்டு நாலு தங்கிட்டு போகலாம்ல சித்தப்பா..."

"இருக்கட்டும்ப்பா ஊருல நாத்து வேற நாடவனும் போய்ட்டு வரோம்..."

"சரி பார்த்துட்டு போய்ட்டு வாங்க அகில் நீ போய் விட்டு வா..."

"சரிப்பா..."

அவர்கள் அனைவரும் எழுந்து செல்ல, "என்ன மன்னிச்சிரு பிரகாஷ் வீட்டுல எல்லார் கிட்டயும் சம்மதம்மான்னு கேட்டுட்டு சொல்லுறோம்..."என்றவர் அவர் பதிலுக்கு காத்திருக்காமல் சென்றனர்.

"நாங்களே போய்க்குறோம்..."என்க டிரைவரை அழைத்து அவர்களை வழியனுப்பி வைத்து வீட்டிக்குள் நுழைய வீடு இருந்த கோலத்தை பார்த்து அதிர்ந்தனர்.

"நான் உயிரோட இருக்கணும்மா இல்ல இருக்க கூடாதா..? எனக்கு கண் தான் இல்ல காது நல்லா தான் கேட்குது,அவங்க பேசுனது எல்லாம் கேட்டுட்டு தான் இருந்தேன்..."

"ஐயோ கீர்த்தி நாங்களா கல்யாணம் பேச்சி ஆரம்பிக்கல அவங்க தான்ம்மா..."

"பேசாதீங்க யாரும், இனிமே யாராவது என்ன பார்க்க வந்தாங்க என் கிட்ட பேசணும் சொன்னாங்கன்னு மட்டும் சொன்னேங்கனா நான் உயிரோட இருக்குற கடைசி நாள் அது தான்..."கோவமாக கத்தியவள் தட்டு தடுமாறி அறைக்குள் நுழைய,

என்ன செய்வது என தெரியாமல் அனைவரும் அவரவர் அறைக்குள் முடங்கினர்.

அத்தியாயம் : 9

என்ன பேசுவது எதற்காக ரெஸ்டாரென்ட் வந்தோம் என்று கூட தெரியாது மூவரும் யோசனையுடன் அமர்ந்திருந்தனர்.

இவர்களின் அமைதி நீடித்துக் கொண்டிருக்க அமைதியை வெறுத்த யாழ்வேந்தன் முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

"இப்போ என்னாச்சு எதுக்கு இந்த அமைதி..? எழிலு உனக்கு அகில் பி.ஏவா இருக்க பிடிக்கலையா..? டேய் அகில் நீ ஏன்டா ரெண்டு நாளா ஏதோ வாழ்க்கையே பறிபோன மாதிரி சுத்திட்டு இருக்கே..?"

"எனக்கு கீர்த்தியை நினைச்சா ரெம்ப கவலையா இருக்குடா..?"

அவன் கீர்த்தியின் பெயரை ஆரம்பித்ததும் இருவரும் ஒரே போல், "ஏன் என்னாச்சு அவங்களுக்கு..."என்றனர்.

கிராமத்தில் இருந்து வந்தது அவர்கள் கேட்டது அவளின் செய்கை என அனைத்தையும் கூற, "முடியலடா கத்துறா மார்னிங் கூட நான் பார்க்கணும் போனா சின்ன பிள்ள மாதிரி எல்லாத்தையும் தூக்கி எரியுற யாரையும் விட மாட்டிக்கா,பேச மாட்டிக்கா,இப்படியே விட்ட அவளுக்கு எதுவும் ஆகிருமோ எதுவும் பண்ணிக்குவளோ நினைச்சா பயம்மா இருக்கு..." கலகத்துடன் கூற அதை கேட்டு இருவரும் அதிர்ச்சியில் இருந்தனர்.

"போதும்டா நீங்க பார்த்ததும் என் சுதியை என்கிட்டே கொடுத்திடுங்க,அவளை நான் என் கண்ணுக்குள்ள பார்த்துகிடுவேன்,அவ என் உசுருடா..." அவள் துன்பத்தை கண் முன் கண்டது போல் வேதனையுடன் யாழ்வேந்தன் கூற,

அடுத்தநொடி அது ரெஸ்டாரென்ட் என்று கூட பாராமல் அவன் கழுத்தை நெறித்தான் அகிலன்.

"என்னடா சொன்னே அவ உன் சுதியா..?இதுக்கு அப்பறம் அவ பேரை கூட நீ சொல்ல கூடாது..."என்றவன் தன் உயிர்த் தோழன் என்று பாராமல் அவன் கழுத்தை நெறிக்க

இருவரையும் போராடி விலக்கினான் எழிலரசன்.

அவன் கூறியது தனக்கு அதிர்ச்சி தான் என்றாலும் அவர்களின் சண்டையை கண்டவன், "டேய் அகில் என்னடா இது விடு முதல, இது ரெஸ்டாரென்ட் வா நம்ம இங்கே இருந்து போகலாம்..." எழிலரசன் இருவரையும் அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

அருகில் இருந்த பார்க்குக்கு செல்ல இருவரும் கோவத்துடன் ஒவ்வொரு புறமாக திரும்பிக் கொண்டு நிற்க நடுவில் நின்றிருந்தான் எழிலரசன்.

"டேய் வேந்தா என்னது இது கீர்த்தி நம்ம அகிலனோட தங்கச்சிடா உன்னால எப்படி இப்படி..."

"அவ அகிலனோட தங்கச்சின்னு தெரியுறதுக்கு முன்னாடியே நான் அவளை விரும்ப ஆரம்பிடிச்சேன், அவ என் சுதி எனக்கு மட்டும் சொந்தம் இதுக்கு மேல அவ கஷ்டபடுறதை பார்த்துட்டு என்னால கண்டுக்காம இருக்க முடியாது..." தன் மனதில் இருப்பதை சொல்லிக் கொண்டே போனான்.

ஆனால் அகிலனின் மனதிலோ அன்று அவன் தந்தை கூறிய சொல்லே ஒலிக்க என்ன செய்வது என தெரியாமல் தலையை பிடித்துக் கொண்டு அமர்ந்தான்.

அவன் அருகில் சென்று அமர்ந்த வேந்தன், "அகில் ப்ளீஸ் என்ன மன்னிச்சிருடா நான் பண்ணது தப்பு தான் நான் அவளை பார்த்ததும் உன் கிட்ட சொல்லிருக்கணும்,என்னால சொல்ல முடியாத நிலைமை..."என்றதும்,

அகிலன் மனமோ கீர்த்தி தன்னிடம் அடிக்கடி வேந்தனை பற்றி பேசுவதை நினைத்தது.

"கீர்த்தியும் உன்ன விரும்புறாளா..?"

அவனது இந்த தீடிர் கேள்வியில் தடுமாறியவன் அமைதியாக இருக்க, "உன்ன தான் கேட்குறேன் சொல்லு வேந்தா நான் எந்த நம்பிகையில என் அப்பா கிட்ட உன்

காதலை சொல்ல முடியும்..."என்க,

எதை பற்றியும் யோசிக்காமல் பட்டென்று, "அவளும் என்ன விரும்புறா.." என்றான்.

"கீர்த்தி உன்ன விரும்புறாளா! ஒரு வார்த்தை கூட யார்கிட்டையும் இதை பத்தி சொன்னது கிடையாது நீ எப்போ கீர்த்தியை பார்த்தே..? நீங்க எப்போ விரும்ப ஆரம்பிடிச்சீங்க..?"

"ஒன்றரை வருஷத்துக்கு முன்னாடியே..."

"அப்போ நீ அவளை லண்டனை வச்சி மீட் பண்ணிக்ருகையா..?அதான் கீர்த்தி உன் வாய்ஸ் கேட்டதுக்கு மாதிரி இருக்குன்னு சொன்னால,டேய் நீ உண்மையிலே என் மச்சான்னாக போறையா..?எனக்கு ரெம்ப சந்தோஷமா இருக்குடா...? என்ன மன்னிச்சிருடா கோவத்துல அப்படி பண்ணிட்டேன்..."என்றவன் சந்தோஷ மிகுதியில் தன் நண்பனை கட்டிக் கொண்டு கத்த,

அதை கண்ட எழிலுக்கு கீர்த்தியை வாழ்க்கையை பற்றி தன் மனதில் இதுவரை அழுத்திக் கொண்டிருந்த பாரம் நீங்க நிம்மதியாக உணர்ந்தான்.

"டேய் போதும்டா இப்படி கட்டி பிடிச்சிக்கிட்டு இருந்தா பாக்குறவங்க எல்லாம் தப்பா நினைக்க போறாங்க..." சிரித்துக் கொண்டு எழில் கூற, அவன் கூறியதில் அங்கு நடந்து சென்றவர்கள் அனைவரும் அவர்களை விசித்திரமாக கண்டனர்.

விடிந்ததிலிருந்து ஏதோ யோசனையுடன் அமைதியாக இருந்த தன் மகனின் அருகில் வந்து அமர்ந்தார் சித்ராதேவி.

"என்னாச்சு கண்ணா ஏன் ஒரு மாதிரியா இருக்கே..?ஆபீஸ் கிளம்பலையா..?உடம்பு எதுவும் சரியில்லையா..?"என்றவாறு அவன் நெற்றி கழுத்தை தொட்டுப் பார்க்க,

"ஒன்னுமில்லைம்மா அப்பா கிளம்பிட்டாரா..?"

"கிளம்பிட்டு இருக்காரு..."

"அம்மா நான் ஒரு முக்கியமான விசியம் சொல்லணும் நம்ம கீர்த்தியோட வாழ்க்கையை பத்தி..."

"ஏதா இருந்தாலும் சீக்கிரம் சொல்லுடா எனக்கு என்னமோ நீ யோசிக்கிறதை பார்த்தா பயம்மா இருக்கு..."

"அம்மா எல்லாம் நல்ல விசியம் தான் நீங்க பதறாதீங்க நான் எடுத்த முடிவுக்கு அப்பா சம்மதிப்பாறன்னு நினைச்சா தான் பயமா இருக்கு..."

"உன் தங்கச்சிக்கு உன் மேல எல்லா உரிமையும் இருக்கு நீ அவ வாழ்கையில என்ன பண்ணுனாலும் அது நல்லதா தான் இருக்கும்,அம்மா உன்கூட துணையா இருப்பேன், என்னைக்கும் இது நான் உனக்கு கொடுக்குற வாக்கு..."

"தேங்க்ஸ்ம்மா..."என்க,

"என்ன அம்மாவும் பையனும் ஏதோ பேசிட்டு இருக்கீங்க போல, என்ன அகில் ஆபீஸ் கிளம்பலையா..?"

"அப்பா அது வந்து..." எப்படி சொல்லுவது என தெரியாமல் தயங்க,

"சொல்லு அகில்,சித்ரா சாப்பாடு எடுத்து வை..."என்றவர் திரும்ப யாழ்வேந்தன் தன் பெற்றோருடன் நுழைவதை கண்டார்.

தன் தந்தையின் பார்வை சென்ற இடத்தை பார்த்த அகில் அதிர்ந்து நிற்க, "இவனை யாரு இப்போ வர சொன்னா..? கடவுளே எதுவும் பிரச்சனை வர கூடாது..."தவிப்புடன் மனதிற்குள் நினைத்தவன் அவர்களை வரவேற்றான்.

"வாங்க அப்பா,வாங்க அம்மா..."என்றவன் தன் பெற்றோரை பார்க்க சித்ராதேவி புன்னைகையுடன் முன் வந்து அவர்களை வரவேற்றார்.

"வாங்க அண்ணா,உட்காருங்க அண்ணி உட்காருங்க மூணு பேரும் கனகா எல்லாருக்கும் டீ கொண்டு வா..." அவரின் இந்த உரிமையான பேச்சில் தயக்கமாக தன் மகனுடன் வந்தவர்கள் இப்போது சற்று நிம்மதியாக உணர்ந்தனர்.

சுதி படும் துன்பத்தை கேட்டவன் அவளை தன் அணைப்புகுள்ளே வைத்துக் கொள்ள வேண்டும் என்பது மட்டுமே மனதில் இருக்க எதை பற்றியும் யோசிக்காமல் தன் பெற்றோரிடம் கூட கூறாமல் அவர்களை அழைத்துக் கொண்டு வந்திருந்தான்.

இங்கு வந்ததிருக்கு பிறகே இதுவரை யோசிக்காதே சில விசியங்கள் தோன்ற அவன் பார்வையோ ஜெயபிரகாஷின் மேல் சில நொடி படிந்து மீண்டது.

இப்போது என்ன செய்வது எப்படி பேச்சை ஆரம்பிப்பது என தெரியாமல் யோசிக்க, "என்ன வேந்தன் எதுவும் விசேஷமா அப்பா அம்மா எல்லாரையும் கூட்டிட்டு வந்திருக்கே..."என்ற ஜெயபிரகாஷ் அங்கிருந்த சோபாவில் அமர,

"நான் ஒரு முக்கியமான விசியம் சொல்லணும் சார் உங்ககிட்ட..." தைரியமாக அவரிடம் கூறினாலும் மனதிற்குள்ளோ, "கடவுளே என்னால என் அப்பா அம்மா அவமானப்பட கூடாது..." நினைத்தவன் விசியத்தை கூற ஆரம்பிக்க,

"அப்பா அவங்கள நான் தான் வர சொன்னேன் நம்ம கீர்த்தியை பார்க்கணும் சொன்னாங்க அதான் வேந்தனை கூட்டிட்டு வர சொன்னேன்..." குறுக்கே வந்து அகிலன் யாரும் அறியா வண்ணம் வேந்தனை கண்டு முறைத்தவாறு கூற,

அங்கிருந்த அனைவரின் பார்வையையும் சந்தேகமாக இருவரையும் கண்டது.

ரத்னா,திருமுருகன் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, "அம்மா கீர்த்தியை கொஞ்சம் கூட்டிட்டு வாங்க..." கெஞ்சும் பார்வையில் அகிலன் அழைக்க,

தன் மகனின் பேசும் பேச்சில் ஏதோ ஒரு முடிவில் இருக்கிறான் என்பதை உணர்ந்த சித்ரா கணவனை காண அவரோ கோவத்துடன் நின்றிருந்தான்.

"அம்மா போங்கம்மா ப்ளீஸ்..."

"என்னப்பா இது அவ தான் வர மட்டாளே..?" அமைதியாக அவனுக்கு கேட்கும் குரலில் கூறியவர் தன் மகனுக்காக அவளை அழைக்க செல்ல அதுவரை அமைதியாக இருந்தவர், "சித்ரா நில்லு...."என்று வீடே அதிரும் அளவுக்கு கத்தினார்.

அவரது கத்தலில் வேந்தனின் பெற்றோர் இருவரும் எழுந்து நிற்க முதல் முறையாக எதை பற்றியும் யோசிக்காமல் தான் எடுத்த முடிவினை நினைத்து கலக்கம் தோன்ற அதை சமாளிக்கும் தைரியத்துடன் நின்றான் யாழ்வேந்தன்.

"அகில் என்ன இது இங்கே என்ன நடக்குது..? நீ மனசுல என்ன நினச்சிக்கிட்டு இருக்கே..? இவங்க வந்ததுக்கான உண்மையான காரணத்தை சொல்லு..."

"அப்பா அது வந்து நம்ம கீர்த்தியை பொண்ணு கேட்டு..."கூறி முடிப்பதற்குள் அவன் கண்ணம் செவ்வென சிவந்தது.

"என்னங்க என்ன இது தோளுக்கு மேல வளர்ந்த பையனை அடிச்சிக்கிட்டு..." குறுக்கே வந்து அவரை தடுக்க,

"நீ விடு சித்ரா பெத்த அப்பன் நான் உயிரோட இருக்கும் போது எனக்கு தெரியாம என் பொண்ணு வாழ்க்கையை பார்க்க நினைக்கானா இவன், நம்ம தகுதி,அந்தஸ்து எங்கே..?இங்கே நிக்கிறானே இவனோட தகுதி எங்கே..? இவனுக்கு என் பொண்ணு கேட்குதா..? இவன் எல்லாம் இந்த வீட்டு படியேறி என் பொண்ணை கேட்குற அவளுக்கு இடம் கொடுத்து வச்சது யாரு இதோ நிக்கிறானே உன் பையன் இவன் தானே..." கோவமாக பல்லை கடித்துக் கொண்டு கத்தியவர் அகிலனை மறுபடியும் போட்டு அடிக்க,

தன் தந்தை தன்னை அடித்ததை கூட பெரிதாக நினைக்காதவன் தனக்கும் கீர்த்திக்கும் எந்த சம்மந்தமும் இல்லாதது போல் கூறியது,தகுதி அந்தஸ்து பார்த்து பேசிய அனைத்தும் கேட்டவன் கோவமாக முதல் முறையாக தன் தந்தையை எதிர்த்து நின்றான்.

தன்னை அடிக்க வந்த தன் தந்தையின் கையை பிடித்து தடுத்தவன், "இப்போ என்ன சொன்னேங்க தகுதி,தகாதரம்,அந்தஸ்து இதெல்லாம் உங்க கிட்ட இருக்க

போய் தான் எங்கே அம்மா உங்களுக்கு கட்டி கொடுத்தாங்களா..? சரி எங்க தாத்தா சொத்து தரலைன்னா இப்போ இந்த தகுதிக்கு இப்போ வந்துருப்பீங்களா..? சரி அதையும் விடுங்க அன்னைக்கு உங்க சொந்த ஊருல இருந்து ஒருத்தவங்கள வந்தாங்காலே வீட்டுல கேட்டுட்டு முடிவு சொல்லுறோம்னு எவ்வளோ நாசுக்கா வேண்டாம் சொல்லிட்டு போன்னாங்க அவங்க கிட்ட போய் மறுபடியும் பொண்ணு கேட்டீங்க பாருங்க அப்போ எங்கே போச்சு உங்க அந்தஸ்து..." தன் மனதில் இருப்பதை சொல்லிக் கொண்டு போக,

"டேய் என்னடா இது அவர் உங்க நல்லதுக்கு..."

"அம்மா நீங்க கொஞ்சம் நேரம் அமைதியா இருங்க,அவ இப்போ கல்யாணம் வேணும்ன்னு கேட்டாலா..? சரி உங்க பொண்ணு மேல ரெம்ப அக்கறை இருக்குல்ல அப்போ ஏன் அவளை உங்க கூட வச்சிகாம ஒவ்வொரு ஊருக்கா அனுப்புனீங்க..? பாசமா எங்கே ரெண்டு பேர் கிட்ட ஒரு வார்த்தையாவது பேசிருப்பீங்களா..?எங்களுக்காக என்ன செய்ஞ்சீங்க இதுவரை, ரெண்டு நாளுக்கு முன்னாடி கீர்த்தி ட்ரீட்மென்ட் பத்தி பேச ஹாஸ்பிட்டல் போகணும் சொன்னீங்களே போனீங்களா..? இன்னும் எவ்வளோ சம்பாதிக்கணும் நினைக்கிறீங்களோ சம்பாதிச்சிகோங்க நீங்க இருக்குற வரைக்கும் நீங்க சொன்ன தகுதி,அந்தஸ்து உங்க கூட வரும்,ஆனா நாங்க யாரும் உங்க கூட இருக்க மாட்டோம், எங்களுக்கு நீங்க சொன்ன தகுதி தேவையில்லை,பாசம் அரவனைப்பு,சொந்த பந்தம் தான் வேணும்..." மூச்சு வாங்க தன் மனதில் இருந்த அனைத்தையும் கூறியவன் விண்டோவின் அருகில் சென்று வெளிப்புறம் அமைதியான இயற்கையை வேடிக்கை பார்த்தவாறு நின்றான்.

இப்போது என்ன செய்வது என தெரியாமல் ரத்னா,திருமுருகன் இருவரும் தன் மகனை பார்க்க, அவனோ எதை பற்றியும் யோசிக்காமல் சுதியின் அறை நோக்கி சென்றான்.

அவன் செல்வதை பார்த்த ஜெயபிரகாஷ் அவனை தடுக்க

போக குறுக்கே வந்து நின்றார் சித்ராதேவி.

"சித்ரா எவனோ ஒருத்தன் நம்ம பொண்ணு ரூமுக்கு போறான்..."

"என் பொண்ணு வாழ்க்கை நல்லா இருக்கணும் நினைக்கேன்,ப்ளீஸ் உங்களை கெஞ்சி கேட்குறேன் இதுல நீங்க தலையிடாதீங்க..." இரு கை எடுத்து கும்பிட்டு கண்ணீர் மல்க கேட்க,

"ச்சே என்னமோ பண்ணி தொலைங்க..." கோவமாக கத்தியவர் தன் கையில் வைத்திருந்த கோர்ட்டை வீசி எரிந்து வீட்டை விட்டு வெளியேறினார்.

அவர் சென்றதும் வேந்தனின் பெற்றோரின் அருகில் வந்த சித்ரா, "என்ன மன்னிச்சிருங்க அவர் பேசினது தப்பு, நீங்க மனசுல எதுவும் நினைச்சிக்காதீங்க..?"என்றவர் அதன் பின் என்ன சொல்வது என்று தெரியாமல் நிற்க,

"எல்லா அப்பனுக்கு வர்ற நியமான கோவம் தான்ம்மா என்ன எங்கே பையன் கொஞ்சம் முன்னாடியே சொல்லிருந்தா நாங்க இங்கே வந்து நின்னுருக்க மாட்டோம், நாங்க வந்தது தப்பு தான் நீங்க தான் எங்கள மன்னிக்கணும்,வா ரத்னா கிளம்பலாம்..."என்றவர் தன் மனைவியை அழைத்துக் கொண்டு செல்ல,

"ஒரு நிமிஷம் நில்லுங்க அப்பா..."என்ற அகிலன் அவர் முன் வர,

அவரோ எதுவும் சொல்லாம அமைதியாக நிற்க, "தயவு செய்து உங்க மருமகளை கூட்டிட்டு போயிருங்க எனக்கு என் பிரெண்டோட லைப் ரெம்ப முக்கியம் அவனுக்கு கீர்த்தி இல்லாம இருக்க முடியாது,என் பிரெண்ட்டும் என் தங்கச்சியும் சேர்ந்து வாழனும் நினைக்கிறேன்,நான் வேன்னும்னா உங்க காலுல கூட விழுகுறேன்..."என்றவன் அவர் காலில் விழ போக,

"ஐயோ கண்ணா என்னப்பா இதெல்லாம் நீயும் என் பையன் மாதிரி தான் நீ போய் என் காலுல விழுந்துகிட்டு இப்போ சொல்லுறேன் உன் தங்கச்சி தான் எங்கே வீட்டு மருமக..."

"ரெம்ப நன்றிப்பா..."

"இருக்கட்டும்ப்பா எல்லா ஏற்பாடு பண்ண ஆரம்பிக்கலாம்..."என்க,

அதே நேரம், "மாமா..!,அத்தை..!" என்ற சுதியின் குரல் வந்த திசையை பார்த்து திரும்ப அவளை தோளோடு அணைத்தவாறு வேந்தன் அழைத்து வர அவள் நிலையை கண்டு இருவரும் திகைத்து நின்றனர்.

## அத்தியாயம் : 10

சுதியின் அனுமதியின்றி அவள் அறை கதவினை திறந்து கொண்டு உள்ளே நுழைந்த வேந்தன் அவள் நின்ற கோலத்தை கண்டு திகைத்தான்.

கண்ணனுக்காக ஏங்கி காத்திருந்த மீராவை போல் சுவரில் தலை சாய்ந்து ஜன்னல் கம்பியை பற்றி உயிரற்ற ஜடம் போல் நின்றிருந்தாள்.

"சுதி..." உருகிய குரலில் அழைத்தவன் அவள் அருகில் வர, சிறு ஓசையிலே யார் குரல் என்பதை அறிந்தவள் தன் கண்களை துடைத்துக் கொண்டு திரும்பினாள்.

"யாழ் நீங்க எப்படி இங்கே வந்தீங்க..?என்னாச்சு இது அண்ணா ரூம் இல்ல..." தீடிரெண்டு அவன் வருகையை எதிர்பாராமல் தடுமாறி உரைக்க,

"நான் உன்ன தேடி தான் வந்தேன்..."என்றவன் அவள் அருகில் வந்து நின்றான்.

அவன் தனக்கு வெகு அருகில் இருப்பதை உணர்ந்தவள் சற்று பின் நகர, "ஐ லவ் யூ சுதி..."என்றவாறு அவளை இழுத்து தன் நெஞ்சில் சாய்த்து தோளோடு சேர்த்து அணைத்தான்.

என்றும் மாறாத அவன் வாசமும் இதமான அணைப்பும் அவன் சொல்லாமலே யார் என்பதை உணர்த்த, இதுவரை குழம்பிக் கொண்டு இருந்தவள் இப்போது குழப்பம் தீர அவனிடம் இருந்து தன் பலம் கொண்டு விலகியவள் அவன்

கன்னத்தை பதம் பார்த்தாள்.

அவன் அடித்த அடியை சுகமாய் வாங்கியவன், "ஐ ஆம் சாரி சுதி..."என்க, தன் கோவம் தீரும் வரை மாறி மாறி அறைந்தவள் ஓய்ந்து போய் படுக்கையில் அமர்ந்தாள்.

"ஏன்டா இப்படி பண்ணுனா நான் எத்தனை தடவை கேட்டேன் நீ யாருன்னு சொல்லிருக்கலாம்ல..."கோவத்துடன் கத்த,

"எனக்கு நீ வேணும்ன்னு நினைச்சேன்,நான் யாருன்னு சொன்னா நீ என் கிட்ட கூட வர மாட்டே அதான் சொல்லலை,என்ன மன்னிச்சிரு சுதி என்னால நீ இல்லாம இருக்க முடியாது,நான் உன்ன உயிருக்குயிரா நேசிக்கிறேன்,நீ என்ன சொன்னாலும் செய்யுறேன் ஆனா இனிமே ஒரு நொடி உன்ன விட பிரிய மாட்டேன்..." அவள் முன் மண்டியிட்டு தன் மனதில் இருப்பதை அவள் கரம் பற்றி தவிப்புடன் கூறினான்.

வெடுக்கென்று தன் கையை எடுத்தவள் அவன் சட்டை காலரை கொத்தாக பற்றி, "அன்னைக்கு ஏன்டா அப்படி பண்ணுனா நான் உன்கிட்ட பேசினா விதம் தப்பு தான் அதுக்காக நீ ச்சே..."என்றவள் அவனை விட்டு விலகி திரும்பி நிற்க,

"அதான் நான் வந்துட்டேன்னே உனக்கு எந்த ப்ராபளம் வரவிடலைல..."

"பேசாதே சப்போஸ் நீ வராம இருந்திருந்த இந்த நேரம் நான் உன் முன்னாடி இருந்திருக்க மாட்டேன்டா..." அன்று நடந்த அனைத்தும் கண் முன் தோன்ற அழுகையுடன் மடிய அவளை தன்னோடு தாங்கிக் கொண்டான்.

தன் நெஞ்சுக்குள் புதைந்து சாய்ந்து அழும் தன்னவளை என்ன சொல்லி சமாதானப்படுத்துவது என தெரியாமல் தவித்துக் கொண்டு நிற்க,

"நான் உன் மேல கோவமா இருப்பேன்னு நீயே எப்படி முடிவு பண்ணலாம்,இந்த ஒன்றரை வருஷமா உன்ன நினைக்காதே நொடியே இல்ல,நான் அங்கே இருந்த

ஒவ்வொரு நிமிஷமும் என் கண்ணு உன்ன மட்டும் தான் தேடிட்டு இருந்தது,ஆனா இப்போ..."என்றவள் எதையோ யோசித்து அவனிடம் இருந்து பதறி விலகினாள்.

அவளும் தன்னை விரும்புகிறாள் என்ற தித்திப்பில் இருக்க,தீடிரெண்டு அவளது விலகலை எதிர்பாரதவன் புரியாமல் விழித்தான்.

"நீங்க முதல வெளியே போங்க உங்கள யாரு இங்க வர சொன்னா..?ப்ளீஸ் இங்கிருந்து போங்க நான் யாரையும் பார்க்க விரும்பல..."கத்தியவள் அவனுக்கு தன் முகத்தை காட்டாமல் அழுது கொண்டு திரும்பி நிற்க,

சிறிது நேரத்திற்கு முன் அவள் தன்னிடம் பேசிய ஒருமை பேச்சு இப்போது யாரிடமோ பேசுவது போல் அவள் பேசிய பேச்சுகள் அனைத்தும் சேர்ந்து கோவத்தை கிளப்ப,அவளை இறுக பற்றி தன் புறம் இழுத்தான்.

"என்னடி நினைச்சிக்கிட்டு இருக்கேன் நீ..?நீயும் உங்க அப்பா மாதிரி வெளியே போடா நாயே சொல்லுறையா..?உங்க பேச்சை கேட்கணும் எனக்கு ஒரு அவசியமும்மில்லை, இங்கே நான் மட்டும் வரல என் அப்பா,அம்மாவும் வந்திருக்காங்க, நீ என்ன பண்ணுவியோ எனக்கு தெரியாது இப்போ அவங்க கிட்ட பேசணும் என் கூட வர்ற..."என்றவன் அவளை இழுக்க,

"ப்ளீஸ் யாழ் என்ன விடுங்க நான் வரல..." என்றவள் அவனிடம் இருந்து போராடி விலக முயல,

"ஏண்டி என்ன கொல்லுற நான் உயிரோட இருக்கணும் நினைச்சா என் கூட வா..."என்க, அதன் பின் அமைதியாக அவனுடன் செல்ல அவளை அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

"இப்போ உன் மாமியார்,மாமனார் உன் முன்னாடி தான் இருக்காங்க கூப்பிடு..."

"என்னால முடியாது..." தவிப்புடன் கூற,

"கூப்பிடு..." என்றவன் அவளை தோளோடு சேர்த்து இறுக்க

அதிலே அவன் கோவத்தை உணர்ந்தவள், "மாமா..!அத்தை..! " என்றாள்.

சுதியின் அழைப்பு அவள் புறம் திரும்பச் செய்ய முதலில் அவள் நிலையை கண்டு திகைத்தவர்கள் பின் பரிதவித்தனர்.

அவர்கள் அருகில் அழைத்து வந்த வேந்தன், "அம்மா, அப்பா இவ தன் சுதிகீர்த்தி உங்க மருமக,நான் உங்க கிட்ட முன்னாடியே சொல்லாதது தப்பு தான் என்ன மன்னிச்சிருங்க..."என்றவன் தன் பெற்றோரிடம் கெஞ்சும் பார்வையில் மன்னிப்பு வேண்ட,

அவர்களோ அதை கண்டு தன் செல்ல மகனை முறைத்தவாறு, "இனிமே எங்ககிட்ட எதுவும் பேசாதேடா நீ, ஏண்டா முன்னாடியே சொல்லலை..." கோவத்துடன் கூறினார்.

அவளோ அதை தவறாக நினைத்து, "அத்தை அவர் மேல எந்த தப்பும்மில்லை,..."என்க,

தன் மகனுக்கு துணை நிற்கும் அவள் செயலை கண்டவர் மனதிற்குள் சந்தோஷப்பட்டாலும் அவள் தந்தை கூறிய சொற்கள் நினைவுக்கு வந்து கலங்கச் செய்தது.

"சரி நாங்க கிளம்புறோம்..."என்ற ரத்னா அவள் தலையை வருடி விட அவர்கள் இருவரின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினாள்.

"சம்மந்தி உங்க மருமகளை எப்போ கூட்டிட்டு போறீங்க..." தயங்கி கொண்டு சித்ரா கேட்க, அதை கேட்ட கீர்த்தி முள்ளின் மேல் நிற்பது போன்று தவித்தாள்.

வேந்தனின் பெற்றோர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து என்ன சொல்வது என தெரியாமல், "பெத்தவர் விருப்பமில்லாமல் எப்படி..."என்க,

தன் தந்தை பேசிய வார்த்தைகள் நிச்சியமாக இவர்களை காயப்படுத்திருக்கும் என்பதை உணர்ந்தவள், "எங்க அப்பா என்ன பேசுனாங்கன்னு எனக்கு தெரியாது ஆனா அது உங்க

மனச ரெம்ப கஷ்டப்படுத்திருக்குன்னு தெரியும்,எனக்காக எங்க அப்பாவை மன்னிச்சிருங்க அத்தை ப்ளீஸ்..."கண்ணீருடன் கூற,

அவளின் கண்ணீர் அவர்களை உருகச் செய்ய, "என்னமா நீ போய் கண் கலங்கிட்டு, முதல கண்ணை துடை அடுத்த மூகூர்த்தததுல உங்களுக்கு கல்யாணம் சரியா இப்படி அழுதுகிட்டு இருக்காதே..."என்க, அங்கிருந்த அனைவரும் சந்தோஷமாக உணர கீர்த்தியோ அதை கேட்டு பெரும் அதிர்ச்சியில் வேந்தனின் கையை இறுக பற்றினாள்.

அவள் அதிர்ச்சியை கண்டு மனதிற்குள் ரசித்தவன் அவள் கையை ஆதரவாய் பற்றினான்.

அதன் பின் மூவரும் கிளம்ப அதுவரை விடாது தன்னவள் கையை பற்றிக் கொண்டிருந்தவன் இப்போது பிரிக்க அவளது முகம் மாறுவதை கண்டவன் அழுத்தமாக இறுகப் பற்றினான்.

அவள் மனதில் இருப்பதை எப்படி அறிந்தானோ, "அத்தை நான் சுதி கிட்ட கொஞ்சம் பேசணும் அவளை கூட்டிட்டு போகலாம்மா..."என்றவாறு தன் மாமியாரிடம் கேட்க,அவரோ என்ன சொல்வது என தெரியாமல் தன் மகனை பார்த்தார்.

அவனோ சம்மதம் தெரிவிக்க, "அம்மா,அப்பா வாங்க நான் உங்களை வீட்டுல விடுறேன்..."என்ற அகிலன் வேந்தனின் பெற்றோரை அழைத்துச் செல்ல,அவனோ பார்வையால் தன் நண்பனுக்கு நன்றி கூறி தன்னவளை அழைத்துச் சென்றான்.

அவர்கள் அனைவரும் செல்ல அதை கண்ட சித்ரா ஒரு புறம் தன் மகளின் வாழ்க்கையை எண்ணி சந்தோசமாகவும்,மற்றொரு புறம் தன் கணவரின் செய்கையை எண்ணி கலக்கமுடன் அப்படியே சோபாவில் அமர்ந்தார்.

அருகிலிருந்த பார்க்குக்கு அவளை அழைத்துச் செல்ல அவனது கையை பற்றிக் கொண்டு அமைதியாக வந்தாள்.

ஓர் இடத்தில் அமர வைத்து அவள் அருகில் அமர்ந்தவன், "சுதி இப்போ சொல்லு உன் மனசுல என்ன இருக்கு..?நீ எதை நினைச்சு பயப்புடுற..? எதுக்காக இப்படி எல்லார் மனசையும் நோகடிக்கிற..?"என்க,

"ப்ளீஸ் இந்த கல்யாணம் வேண்டாம் என்னால உங்களுக்கு கஷ்டம் தான்,ஏற்கனவே நான் ரெம்ப நொந்துட்டேன் இதுல என்னால உங்க குடும்பத்துல உள்ளவங்களுக்கு கஷ்டம் தான்..."

"நீ இப்படி சொல்லுவேன்னு தெரிஞ்சி தான் என் அம்மா,அப்பாவை பார்க்க வைச்சேன்,அவங்களே சம்மதம் சொல்லிட்டாங்களே அப்பறம் என்னமா,உன்ன எதுவும் சொல்லிருவாங்கன்னு நினைக்கிறையா..?"

"இல்ல..."

"அப்பறம் என்னமா..."

"நான் உங்களை பார்க்கணும்..."என்றவள் அவன் முகத்தை தன் விரலால் வருட,

இதயமே பலமடங்கு வலியுடன் துடிதுடிப்பது போல் உணர்ந்தவன் அவளை இழுத்து தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

அவன் துடிப்பின் ஓசை அவளும் அறிய அவன் நெஞ்சில் கை வைத்து மெல்ல வருடினாள்.

"சீக்கிரம் நீ என்ன பார்ப்பே அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு,உனக்கும் இருக்கணும், நீ நாளையில இருந்து ஆபீஸ் வர்றே உன் கூட எப்பவும் நான் துணையா இருப்பேன், என் மேல நம்பிக்கை இருந்தா மட்டும் இந்த கல்யாணத்துக்கு நீ ஒத்துக்கிடனும், அப்படி உனக்கு சம்மதம்ன்னா நாளைக்கு ஆபீஸ் வர்ற, உன்ன முதல் தடவை லண்டல வச்சி பார்த்தே அதே கீர்த்தியா நீ வரணும் ஆசைப்படுறேன்..."என்றவன் அவளை அழைத்துக் கொண்டு அவள் வீட்டில் விட மறுநாளுக்கு காத்திருந்தான்.

அன்று இரவு முழுவதும் தவித்தவன் மறுநாள் விடிந்ததும்

சீக்கிரமே கிளம்பி ஆபீஸ் செல்ல அங்கு எழிலரசனிடம் நடந்த அனைத்தையும் கூறினான்.

"என்னடா இது நம்ம எம்.டியா அப்படி பேசுனாரு..? அகிலனை வேற அடிச்சாரா..?"

"நம்ம எம்.டி இல்ல, அப்போ அவரு சுதியோட அப்பா..."என்றவன் தன்னவளுக்காக காத்திருக்க அகிலன் மட்டும் வருவதை கண்டான்.

சுதி வராதது அவனுக்கு ஏமாற்றத்தை அழிக்க, "டேய் நான் சொல்லுறது முன்னாடி உன்ன யாரு வர சொன்னா..? நல்லா அவமானப்பட்டையா..?"என்க,

"சாரிடா மச்சான் என்னால உனக்கு அடி..."என்றவன் சிரித்தவாறு அவன் தாடையை பிடித்து திரும்பி பார்க்க,

"என்னடா நக்கலா..."என்றவன் அவன் வயிற்றில் குத்த அவர்கள் இருவரின் செய்கையை கண்டு தலையில் அடித்துக் கொண்டு நின்றான் எழிலரசன்.

"உங்க ரெண்டு பேருக்கும் வெக்கமே இல்லியா..?அவர் நேத்து அந்த கேள்வி கேட்டுருக்காரு,உன்ன அந்த அடி அடிச்சிருக்காரு நீங்க என்னடானா எதுவும் நடக்காத மாதிரி பேசிட்டு இருக்கீங்க..?"

"பெத்தவங்கன்னா அப்படி தான் இருப்பாங்க அதெல்லாம் கொஞ்சம் நாளுல சரியாகிடும்..?சரி வா எழில் வந்து வேலையை பாரு அப்பறம் கல்யாண வேலை வந்துரும் அதை வேற கவனிக்கணும்..."என்ற அகிலன் எழிலை அழைத்துக் கொண்டு செல்ல,

அவனோ சந்தோஷமாக அகிலனின் காரினை நோக்கி செல்ல அவன் நினைத்தது போலவே அதில் அமர்ந்திருந்தாள் சுதிகீர்த்தி.

"வா சுதி..."என்றவன் அவளை அழைக்க,

"நான் உங்க கிட்ட பேசணும்..."என்க, அவள் அருகில் வந்து அமர்ந்தான்.

"அப்பா நேத்து ரெம்ப திட்டிட்டாருன்னு அண்ணன் சொன்னான் எல்லாம் எனக்காக தான் தானே ஐ ஆம் சாரி, நேத்து அப்பா கிட்ட நைட் பேச ட்ரை பண்ணுனேன் அவர் என்கிட்ட ஒரு வார்த்தை கூட பேசல கோவமா இருக்காரு,அண்ணன் என்னடானா கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ண ஆரம்பிடிச்சிட்டான்,அப்பா இல்லாம எப்படி..." தவிப்புடன் கூற,

"என் நண்பன் எது பண்ணுனாலும் அதுல கண்டிப்பா எதாவது ஒரு நம்மை இருக்கும்,உங்க அப்பா நம்ம கல்யாணத்துக்கு கண்டிப்பா வருவாரு, நீ கவலைப்படமா இரு..." என்றவன் அதன் பின் சிறிது நேரம் ஏதேதோ பேசி அவளை சிரிக்க வைக்க,

"சரி லேட்டாகிருச்சி வா ஆபீஸ் போகலாம்..."என்றவன் அவளை அழைத்துக் கொண்டு செல்ல அதற்குள்ளாகவே அகிலன் அனைவர்க்கும் இவர்கள் திருமணத்தை பற்றி கூறி இருக்க அனைவரும் வாழ்த்தையும் இருவரும் சந்தோசமாக ஏற்றுக் கொண்டனர்.

சுதியை பார்க்கும் போதெல்லாம் மனதிற்குள் இருந்த தவிப்பு இப்போது இல்லாம போக சந்தோசமாக மனநிறைவுடன் வாழ்த்து கூறினான் எழிலரசன்.

அதன் பின் அவரவர் வேலையை பார்க்க செல்ல, "எழில் உங்க கிட்ட ஒன்னு கேட்கணும்..."என்ற கீர்த்தி சற்று தயங்க,

"எதுவும் ஹெல்ப் வேணுமா மேடம்..?"

"ஹ்ம்ம் ஆமா நான் உங்களை இனிமே அண்ணன்னு கூப்பிடட்டா..."

"இதை என் கிட்ட கேட்கணும் அவசியமே இல்ல,உங்களுக்கு எப்படி கூப்பிடனும் தோணுதோ அப்படியே கூப்பிடுங்க, நீங்களும் எனக்கு வளர் மாதிரி தான்..."

"வளரா அது யாரு என்ன பண்ணுறாங்க..?"

"அவ என் தங்கச்சி மகேஸ்வரி ஆர்ட்ஸ் காலேஜில பைனல்

இயர் படிக்கிறா..."

"நானும் அங்கே தான் பி.ஜி படிச்சேன் அப்போ தான் எனக்கு பார்வை..." கூறி முடிக்கும் முன்னே,

"சரி ஓகே எப்போ ட்ரீட் தர போறீங்க..?"என்ற எழில் பேச்சை மாற்ற அதன் பின் தோழர்கள் மூவரும் ஏதேதோ பேச, கீர்த்தி மட்டும் எதையோ யோசித்தவாறு நின்றாள்.

## அத்தியாயம் : 11

மண்டபம் முழுவதும் ஆட்கள் நிறைந்திருக்க ஐயர் திருமணத்திற்கு தேவையான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து கொண்டிருக்க அவருக்கு உதவி செய்து கொண்டிருந்தான் இளஞ்செழியன்.

ரத்னா,திருமுருகன் இருவரும் ஜோடியாக நின்று அனைவரையும் வரவேற்றுக் கொண்டிருக்க,அகிலனோ பரபரப்புடன் பறந்து கொண்டிருந்தான்.

தன் மகளின் வற்புறுத்துதலுக்காக மனமேயில்லாமல் வந்த ஜெயபிரகாஷ் தனக்கும் இந்த திருமணத்திற்கும் சம்மந்தமே இல்லாதது போல் முன் வரிசையில் அமர்ந்திருந்தார்.

அவரின் செயலை கண்ட சித்ரா கவலையுடன் அவர் அருகில் வர, "என்னங்க நம்ம பொண்ணு கல்யாணம் நீங்க என்னடானா யாரோ மாதிரி உட்கார்ந்துக்கிட்டு இருக்கீங்க போங்க போய் கெஸ்ட்டை கவனிங்க,சொந்தகாரங்க வேற வந்துருக்காங்க எழுந்திருங்க..."யாருக்கும் கேட்காமல் அமைதியாக கூறியவர் அவரை எழுப்பி விட,

"ஏய் நீங்க எல்லாம் என்ன நினைச்சிகிட்டு இருக்கீங்க..? என் பொண்ணு கல்யாணம் மாளிகையில நடக்கணும் நீங்க என்னடானா இப்படி சின்ன கட்டடத்துல வச்சி நடத்துறீங்கா..?இதுல என்னையும் வேற வர வச்சிட்டீங்க..." முகத்தை சுழித்துக் கொண்டு சுற்றுபுறம் பார்த்தவாறு கூறினார்.

"ஏன் இவ்வளோ ஆசைப்படுற நீங்களே இந்த கல்யாணத்தை

நடத்தி வைக்க வேண்டியது தானே..?"

தன் மனைவியை முறைத்தவர் எதுவும் சொல்லாமல் விலகி செல்ல தன் மகள் இருக்கும் அறைக்குள் நுழைந்தார்.

அதே நேரம் எழிலரசன் தன் தங்கையுடன் மண்டபத்திற்கு நுழைய அவர்களை வாசலிலே எதிர் கொண்ட ரத்னா இன்முகத்துடன் வரவேற்றார்.

"வாம்மா நல்லா இருக்கையா..? அம்மா கூட்டிட்டு வரலையா எழில்..?"

"இல்லம்மா அம்மா நீங்க மட்டும் போய்ட்டு வாங்கன்னு சொல்லிட்டாங்க..."

"சரி, நீ வாம்மா நாம்ம உள்ளே போகலாம்..."என்றவர் அவளை அழைத்துச் செல்ல எழிலோ திருமுருகனுடன் சேர்ந்து வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தான்.

"உன் பேர் என்னமா..?"

"வளர்மதி..."

"நேத்து நைட் வந்துருக்கலாம்ல சரி வா என் மருமகளை காட்டுறேன்..."என்றவர் மணப்பெண் அறை நோக்கி செல்ல, ஐயருக்கு உதவி செய்து கொண்டிருந்தாலும் செழியனின் பார்வை ஒவ்வொரு நொடியும் வாசல் புறம் மட்டுமே இருந்தது.

தன் தாயுடன் பேசியவாறு உள்ளே நுழைந்த தன்னவளை கண்டு மெய் மறந்து நின்றான்.

அவளை இதற்கு முன் புடைவையில் பார்த்திருந்தாலும் ஏனோ இப்போது பச்சை பட்டில் தேவைதையாய் ஜொலிக்க தன்னிலை மறந்து ரசிக்க ஐயரோ அவன் கவனத்தை கலைத்தார்.

"கொஞ்சம் அந்த சந்தனத்தை எடுத்துக் கொடுங்க..."என்க,

"இந்தாங்க ஐயரு..."என்றவன் வேகமாக எடுத்து கொடுத்து மனையை விட்டு இறங்கி அவளை நோக்கி செல்ல,

குறுக்கே வந்து நின்றான் அகிலன்.

"டேய் செழியா உங்க அண்ணன் மாலையை எங்கே வச்சே..? வா வந்து எடுத்துக் கொடு..."என்றவன் அவனை இழுத்துச் செல்ல,

"அண்ணா அது அவன் ரூம் கபோர்டல தான் இருக்கு நீங்க போய் பாருங்க எனக்கு முக்கியமான வேலை இருக்கு..."என்றவன் அவள் அறைக்குள் நுழைவதற்குள் செல்ல முயன்றாள்.

மணமகள் அறைக்குள் அருகில் நெருங்க தன் தாயின் முன் அவளை அழைக்கவும் முடியாது இப்போது என்ன செய்வது என தெரியாமல் யோசித்தவாறு நின்றவன், "ஏலே முருகா அந்த டெக்கரேசன் எல்லாம் சீக்கிரம் ரெடி பண்ணு..."என்க, அவன் குரல் செவியில் விழுந்த மறுநொடி திரும்பி பார்த்தாள் வளர்மதி.

ஒரு மாதத்திற்கு அவனை கண்டவள் மனமோ ஓடிச் சென்று அணைத்துக் கொள்ள துடிக்க, "என்னமா நின்னுட்டே வா போகலாம்..."என்றவர் அவளை அழைத்துச் செல்ல பார்வையால் அவனிடம் விடை பெற்றாள்.

சுதியை அலங்காரம் செய்ய அவள் அருகில் சித்ரா நிற்க அங்கிருந்த சேரில் அதிகாரமாய் அமர்ந்திருந்தார் இராஜேஸ்வரி (ஜெயபிரகாஷ் தாய்).

"அம்மாடி மருமகளே நேத்து நான் ஊருல இருந்து வரும் போது கொண்டு வந்த நம்ம பரம்பரை நகையெல்லாம் என் பேத்திக்கு போட்டு விடு..."

"ஹ்ம்ம் சரி அத்தை..."என்றவர் அவர் கூறியதை செய்ய,வளர்மதியுடன் உள்ளே நுழைந்தார் ரத்னா.

"அட வா ரத்னா ஆமா யாரு இந்த பொண்ணு..?"

"என் பொண்ணு மாதிரி நம்ம எழிலரசனோட தங்கச்சி..." என்றவர் வளர்மதியை நோக்கி, "இவங்க தான் கீர்த்தியோட பாட்டி..." என்றார்.

அழகாய் சிறு புன்னகை உதிர்த்த வளர்மதி அவர் காலில்

விழுந்து ஆசிர்வாதம் வாங்க அவளை வாழ்த்தியவர், "உன் பேரென்னம்மா...?" என்க,

"அவங்க பேர் வளர்மதி..."என்ற சுதிகீர்த்தி புன்னகை முகமாக குரல் வந்த திசையை நோக்கி திரும்பினாள்.

"சரிம்மா நீ கீர்த்தி கூட பேசிட்டு இரு,எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு..."என்ற ரத்னா வெளியே செல்ல, "நில்லுங்க சம்மந்தி நானும் வரேன்..."என்றவாறு அவருடன் சித்ராதேவியும் சென்றார்.

"எழில் அண்ணா தான் உன்ன பத்தி சொன்னாங்க, நீ மகேஸ்வரி ஆர்ட்ஸ் காலேஜ்ல தான் படிக்கிறையா,நானும் அங்கே தான் படிச்சேன் என்ன பார்த்துருக்கையா..? செவன் மந்த் முன்னாடி அங்கே நடந்த தீ விபத்துல என் பார்வை போச்சு..."

"சரி நல்ல நேரம் அதை ஏன் பேசிட்டு சீக்கிரம் ரெடி பண்ணுங்க என் பேத்தியை..."என்ற இராஜேஸ்வரி பாட்டி அருகில் இருந்த பியூட்டிசனிடம் கூறினார்.

அதன் பின் வளர்மதியும் பியூட்டிசனுக்கு உதவி செய்து சுதியை அலங்கரிக்க, சிறு முகசுழிப்பு கூட முகத்தில் இல்லாமல் புன்னைகை முகமாக,அமைதியாக பண்புடன் பெரியவர்களுக்கு மரியாதையை கொடுத்து பேசும் வளர்மதியை கண்டவாறு இராஜேஸ்வரி பாட்டி.

அதே நேரம் வெளியே ஐயர் மணமக்களை அழைத்து வர சொல்ல,அகிலனும் எழிலும் சென்று வேந்தனை அழைத்து வந்து மனையில் அமர வைத்தனர்.

மணமகளை அழைத்து வர சொல்ல தன்னவளின் வருகைக்காக ஆவலாய மனையில் அமர்ந்து காத்திருந்தான் யாழ்வேந்தன்.

வளர்மதி கீர்த்தியை அழைத்து வர இளஞ்செழியனின் பார்வையோ இம்மியும் நகராது மதியையே பார்க்க,வேந்தனின் பார்வையோ கீர்த்தியின் மீது இருந்தது.

இளாவின் பார்வை தன் மேல் இருப்பதை உணர்ந்த மதி

முகம் சிவக்க வெகட்கத்துடன் தலை குனிந்து கீர்த்தியை அழைத்து வர அதை கண்ட இராஜேஸ்வரி பாட்டிக்கு யார் மணப்பெண் என்றே ஒரு நொடி குழம்ப ஆரம்பித்தார்.

அதன் பின் கீர்த்தியை மனையில் அமர வைத்து மதி நகர்ந்து செல்ல அவள் கை பிடித்து தடித்து தன் அருகில் நிறுத்துக் கொண்டார் ரத்னா.

"எங்கே போற இங்கயே நில்லு,நீயும் எங்க குடும்பத்துல ஒருத்தி தான்..."என்க, அதை கேட்டு எல்லையில்லா சந்தோஷத்தில் மிதந்தாள் வளர்மதி.

"அம்மா தெரிஞ்சி சொல்லுதா..?தெரியாம சொல்லுதா..? எப்படியோ சரியா சொன்னதே அதே போதும்..." மனதிற்குள் நினைத்த செழியன் மதியை பார்த்து கண்ணடிக்க,அவன் பார்வையை தவிர்த்து தலை குனிந்தாள்.

ஐயர் திருமாங்கல்யத்தை எடுத்து தர அதை வாங்கிய வேந்தன் தன்னவளில் சங்கு கழுத்தில் முதல் முடிச்சை போட்டவன் அடித்த முடிச்சை போட போக, "ஒரு நிமிஷம் நில்லு கண்ணா..."என்ற ரத்னா, "அம்மாடி வளரு நீ வந்து இந்த ரெண்டு முடிச்சையும் போடு..."என்றார்.

"நானா நான் எதுக்கு..."

"பொண்ணோட நாத்தனார் தான் போடனும் நீ வேந்தனுக்கு தங்கச்சி மாதிரி தானே அதான் உன்ன போட சொல்லுறேன்..."

அங்கிருந்த அனைவரும் அதற்கு ஒத்துக் கொள்ள அவள் பார்வையோ இளாவை கெஞ்சுதலுடன் பார்க்க அவனோ முறைத்தவாறு நின்றான்.

"வளரு என் தயங்குற கட்டு..."எழில் கூற சரி என்றவள் நாத்தனார் முறைக்கு மற்ற இரண்டு முடிச்சிட,அனைவரும் அர்ச்சதை தூவ பெரியவர்களின் ஆசீர்வாதத்தால் வேந்தன் மற்றும் கீர்த்தியின் வாழ்க்கை இனிதே ஆரம்பமானது.

"என் அண்ணனை அண்ணனேன்னு சொல்லாதே மதி..."அடிக்கடி கூறும் இளாவின் சொல் இப்போது ஒலிக்க

தன்னையே நொந்தவாறு முடிச்சிட்டு நிமிர்ந்த மதி இளாவை காண அவனோ கோவத்துடன் விலகி சென்றான்.

அதன் பின் அகிலன் வேந்தனின் கரம் பற்றி தன் மைத்துணன்,தங்கை இருவரும் அழைத்துக் கொண்டு அக்கினியை மூன்று முறை வலம் வந்து தன் அண்ணனின் கடமையை முடித்தான்.

மூத்தவர்களாக நாராயணன்,இராஜேஷ்வரி இருவரிடமும் முதலில் ஆசிர்வாதம் வாங்க,அதன் மற்ற அனைவரிடமும் ஆசிர்வாதம் வாங்கினர்.

வந்தவர்கள் அனைவரும் பரிசு பொருட்களை கொடுத்து வாழ்த்த தன்னவளின் கரம் பற்றி அதை சந்தோஷமாக நன்றி கூறி வாங்கிக் கொள்ள அவன் குரலில் இருந்த மகிழ்ச்சியை மட்டுமே கீர்த்தியால் உணர முடிந்தது.

கீர்த்தியின் முகத்தின் இருந்த கவலையை அறிந்தவன் அவளை தோளோடு அணைத்து, "கொஞ்சம் சிரி பொண்டாட்டி அப்பறம் நம்ம கல்யாண ஆல்பத்தை பார்த்து கோவப்பட கூடாது..."என்றவன் பின் மெல்ல ஏதேதோ பேச மெல்ல புன்னகைக்க ஆரம்பித்தாள்.

அதன் பின் வந்தவர்கள் உணவு உன்ன செல்ல, "வளரு வா நீ வந்து சாப்பிடு நான் உன்ன வீட்டுல விட்டுட்டு வந்துறேன்..."என்ற எழில் தன் தங்கையை அழைத்துக் கொண்டு உணவு உண்ணும் இடத்திற்கு சென்றான்.

அவளை பந்தியில் அமர வைத்து இளா,அகிலன் இருவருக்கும் பரிமாறிக் கொண்டிருக்க அவர்களுக்கு உதவி செய்ய சென்றான்.

வேலையாட்கள் அனைவரும் பரிமாற அவர்களுடன் தன் மகன் வேலைக்காரன் போல் வேலை செய்வதை கண்ட ஜெயபிரகாஷ் அவனை கண்டு முறைத்தவாறு யாரிடமும் சொல்லாமல் தன் வீட்டுக்குச் சென்றார்.

அவனோ அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் சந்தோஷமாக வேலை செய்ய அவன் கம்பெனி ஸ்டாப் அனைவரும் அவன் செய்கையை கண்டு வியந்தனர்.

பறிமாறியவாறு மதியின் அருகில் இளா வர அவனை கண்டவள், "ஐ ஆம் சாரி இளா..."என்றாள்.

அவனோ அதை கண்டு கொள்ளாமல் விலகி செல்ல மனமேயில்லாமல் சிறிது உண்டு விட்டு முதல் ஆளாக எழுந்து சென்றாள்.

வாஷ்ரூம் சென்று திரும்பி வெளியே வர தன் முன் நின்ற இளாவை கண்டவள் ஓடிச் சென்று அணைத்துக் கொள்ள அதன் பின்னே நிம்மதியாக உணர்ந்தாள்.

"சாரி இளா அத்தை அப்படி சொல்லுவங்கன்னு நான் நினைக்கல..."

"பரவாயில்லை விடு சரி நாளைக்கு ஈவினிங் நான் கிளம்புறோம்,மார்னிங் நம்ம வழக்கமா மீட் பண்ணுற பார்க்குக்கு வந்துரு..."என்றவன் வெளியேற தன் அண்ணனை நோக்கி சென்றாள்.

அதன் பின் அனைவரிடமும் சொல்லிக் கொண்டு கிளம்ப வாசலில் நின்றிருந்த இளாவிடம் பார்வையால் விடை பெற்றாள் வளர்மதி.

விருந்தினர் அனைவரும் வாழ்த்து கூறி கிளம்ப ஆரம்பிக்க ரத்னா,திருமுருகன் அருகில் வந்த சித்ரா, "சம்மந்தி நல்ல நேரம் முடியறதுக்குள்ள வீட்டுக்கு போகலாம் வாங்க..."என்க,

அவர்களோ எதையோ நினைத்து வர தயங்க தன் மகன் செய்த செயலை நினைத்த இராஜேஷ்வரி பாட்டி, "மருமகளே எல்லாரும் மாப்பிள்ளை வீட்டுக்கு போகலாம்,எப்படியும் விருந்துக்கு உன் பொண்ணு வர தானே போறா,இப்பவே ரெம்ப நேரமாச்சு இன்னும் புகுந்த வீட்டுல வேற சடங்கு செய்யணும்..." தன் மருமகளிடம் கூறினார்.

மணமக்கள் இருவரையும் வேந்தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு செல்ல இதுவரை அறியாத புது சொந்தங்கள்,புது இடம் அனைத்தையும் உணர்ந்த சுதிகீர்த்தி தன்னவனின் கரம் பற்றி வலது காலை எடுத்து வைத்து உள்ளே

நுழைந்தாள்.

செய்ய வேண்டிய சடங்குகள் அனைத்தையும் செய்ய ஒவ்வொரு நொடியும் அவளுக்கு துணை நின்று வேந்தன் காக்க, மறுபுறம் அவளை எண்ணி குறை கூறும் சொந்தகளின் ஒரு விதமான பேச்சிலிருந்து காத்தனர் ரத்னா,திருமுருகன்.

வந்த விருந்தினர் அனைவரும் மாலை நேரமே கிளம்பி செல்ல,கீர்த்தியின் குடும்பமும் கிளம்ப ஆரம்பித்தனர்.

இருள் சூழ கீர்த்தியை அலங்கரித்த சித்ராதேவி அவளுக்கு அறிவுரை கூற, "கவலைபாடதீங்க சம்மந்தி கீர்த்தியை என் பொண்ணு மாதிரி பார்த்துகிடுவேன் அவளுக்கு இந்த வீட்டுல எந்த குறையும் இருக்காது..."என்றவாறு ரத்னா வர,

"எனக்கும் தெரியும் சம்மந்தி நீங்க அவளை நல்லா பார்த்துக்குவீங்க இருந்தாலும் பெத்தவங்க முறைக்கு அவளுக்கு அறிவுரை சொல்லணும்ல..."

இவர்கள் பேசிக் கொண்டிருக்க, "அம்மா வாங்க கிளம்பலாம்..."என்ற அகிலனின் குரலை கேட்டு வெளியே வந்தனர்.

அதன் பின் அனைவரும் கிளம்ப சிறிது நேரம் தன் மருமகளிடம் பேசிய ரத்னா அவளை அழைத்துக் கொண்டு வேந்தனின் அறை நோக்கி செல்ல,அதே நேரம் தன்னவளில் வருகைக்காக ஆவலாய் காத்திருந்தான்.

தன் தாய் அழைத்து வருவது கண்டவன் அவர்கள் அருகில் வந்து, "நீங்க போய் ரெஸ்ட் எடுங்கம்மா..."என்றவன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

டோரை லாக் செய்தவன் அவளை படுக்கையில் அமர வைக்க அவன் கையை இறுக பற்றியவள் தோளில் தலை சாய்ந்தாள்.

"என்னாச்சும்மா அசைதியா இருக்கா..?,ரெஸ்ட் எடுக்குறையா..?"

அவளோ மறுப்பாய் தலை அசைக்க, "அப்போ உன் மனசுல என்ன இருக்கு..." என்றவாறு அவள் தோளோடு அணைத்திருந்த கையை மெல்ல இறக்கி இடையில் அழுத்தி அவள் கவனத்தை கலைக்க முயன்றாள்.

தன் மேனியில் எல்லை மீறும் அவன் பரிசத்தால் அது தந்த வெம்மையில் அவன் நெஞ்சில் வைத்திருந்த முகத்தை இன்னும் அவனோடு சேர்ந்து அழுத்த...

"இப்படியே உன்னோட இந்த முகத்தை பார்த்துகிட்டே என் வாழ்கை முழுக்க கடைசி நிமிஷம் வரைக்கும் உன் கூட வாழனும் சுதி ..."என்றவாறு அவளை இழுத்து தன் நெஞ்சில் சாய்த்துக் கொள்ள அவனது இந்த செய்கையில் தடுமாறியவள் பின் அவன் நெஞ்சில் தன் முகத்தை புதைத்தாள்.

"உனக்கு இதுக்கு சம்மதம்மா..?" அவள் விருப்பத்தை அறிய நினைக்க,

அவளோ பதில் கூறாது அவன் நெஞ்சில் இன்னும் அழுத்தி புதைய அதை சம்மதமாக நினைத்தான்.

அவளை இழுத்து படுக்கையில் போட்டு அவள் மேல் படர்ந்தவன் கைகளை நகர விடாதவாறு இறுக்கமாக பற்றியவன் இமைக்காமல் அவளது விழிகளை பார்க்க அவன் பார்வை வீச்சின் தாக்கத்தை உணர்ந்தவள் தன் முகத்தை திரும்ப முயல அவள் செவ்விதழை சிறை செய்தான்.

அவள் இதழ் தேனை பருகி தன் தாகம் தீர்த்தவன் முகம் முழுவதும் முத்தமிட்டு தன் தவிப்பை உணர்த்தி கழுத்து வளைவில் முகம் புதைத்து அவள் வாசத்தை நுகர்ந்தான்.

"சுதி..." கிறக்கமாய் அழைத்து அவள் காதுமடல் தீண்டி,கன்னத்தில் புதைந்து,மெல்ல மெல்ல அவள் இதழில் தொலைந்து போனான்.

அவன் சிகைக்குள் கை கோர்த்து வருட அவள் மத்தியில் தொலைந்து போய் அவளை முழுவதும் ஆட்கொள்ள துடிக்க,அவளும் அவனுக்கு இசைந்து கொடுக்க அவன்

இதழ்கள் அவள் மேனியில் தீண்டும் வெம்மையில் அவ்ளும் மெல்லமெல்ல உருக ஆரம்பித்தாள்.

அவள் பெண்மையை முழுவதும் உணர்ந்து தன் வசப்படுத்தி கொண்டு அவள் தேவையை பூர்த்தி செய்து கூடல் முடிந்த பின் விட்டு விலகியவன் அவளை இழுத்து தன் மேல் போட்டுக் கொண்டு இதமாக நெற்றியில் இதழ் பதித்து தன்னோடு சேர்த்து அணைத்தான்.

அவன் வெற்று மார்பில் முத்தமிட்டு முகம் புதைக்க அவனது கைகளோ அவள் மேனியில் மறுபடியும் வலம் வர வெட்கத்தில் நெளிந்தவளை பார்த்தவன் அவள் இடையோடு சேர்த்து அணைத்துக் கொள்ள நீண்ட நாள்களுக்கு பிறகு இருவரும் நிம்மதியாக தங்கள் கவலைகளை மறந்து உறங்கினர்.

## அத்தியாயம் : 12

மறுநாள் விடியல் இனிமையாக துவங்க முதலில் கண் விழித்த சுதி ஏதோ ஒரு சுழலுக்குள் சிக்கிக் கொண்டு இருப்பதை போல் உணர்ந்தாள்.

தன்னிடம் இருக்கும் வித்தியாசத்தை உணர்ந்ததற்கு பிறகே நேற்று இரவு நடந்த நிகழ்வுகள் நினைவுக்கு வர எழ முடியாமல் அவன் மேலையே சாய்ந்தாள்.

தன் வெற்றிடையில் அவன் கரம் அழுத்தி பதிந்து அணைத்துக் கொண்டிருக்க,ஒன்றரை வருடத்திற்கு பிறகு நிம்மதியாக பாதுகாப்பாக தன்னவனின் கை அணைப்பிற்குள் உறங்கிய உறக்கம் நினைவு வர களைப்பு தீர எழ முயற்சித்தாள்.

அவள் எழ முயற்சிப்பதை உணர்ந்த வேந்தன் தூக்க கலகத்துடன் அவளை எழ விடாமல் தன்னுடன் சேர்த்து இறுக அணைத்து, "அதுக்குள்ளவா எழுந்திருக்க போற,இன்னும் கொஞ்சம் நேரம் தூங்கலாம்..."என்க,

"யாழ் எனக்கு என்னமோ விடிஞ்ச மாதிரி தோணுது..."

"ஆமா விடிஞ்சிருச்சி அதுக்கு என்னடி.."என்றவன் அவள் மேனியில் எல்லை மீறி செயல்பட,அவனுக்கு இசைந்து கொடுத்தாலும் எழுப்ப போராடிக் கொண்டிருந்தாள்.

""யாழ் ப்ளீஸ் என் செல்லம்ல எழுந்திருங்க..."

இப்போது முற்றிலும் உறக்கம் கலைய அவளிடம் விளையாட நினைத்தவன், "சரி ஓகே அதுக்கு முன்னாடி உன்னோட ஸ்பெஷல் கிஸ் வேணும்..."என்றவாறு அவள் விரலை எடுத்து இதழில் வைத்து சுட்டிக் காட்ட,

"இப்பவா அதெல்லாம் முடியாது..."என்றவள் அவனிடம் இருந்து விலகி எழ முயல, அவளிடம் சிறிது நேரம் போராடி கேட்டதை வாங்கிக் கொண்டு அவள் கேட்காததையும் கொடுத்து விட்டு விடுவித்தான்.

அதன் பின் இருவரும் சேர்ந்தே கிளம்ப அவளுக்கு தேவையான உடைகள்,உதவிகள் அனைத்தையும் கெஞ்சி கொஞ்சி அவளுக்கு பணிவிடை செய்தான்.

"சுதி..." கிறக்கமாய் அழைத்தவன் அவள் இடையில் கை வைத்து தன் அருகில் இழுத்து கழுத்து வளைவில் முகம் புதைக்க,

"என்னாச்சுங்க வாங்க போகலாம்..." அவன் கை வளைவிற்குள் நெழிந்து கொண்டே கூறினாள்.

"எங்கையும் போக பிடிக்கல இப்படியே உன்கூட பேசிட்டு உன்குரலை கேட்டுகிட்டு உன் பக்கத்துல இருக்கணும் போல இருக்கு..."என்றவன் அவள் காது மடல் தீண்ட,

அவன் செய்கையில் சிலிர்த்தவள் முகம் சிவக்க, "நான் இனிமே உங்க கூட தானே இருக்க போறேன் அப்பறம் என்ன வாங்க முதல போகலாம்..."அவனை தன்னிடம் இருந்து விலகி அழைத்துச் செல்ல முயல அவள் கை பிடித்து தடுத்து நிறுத்தினான்.

"இப்போ என்ன..." சற்று போய் கோவத்துடன் இடுப்பில் கை வைத்துக் கொண்டு கேட்க,

"என் செல்ல பொண்டாட்டி என்ன எப்போ விரும்ப

ஆரம்பிடிச்சான்னு எனக்கு தெரிஞ்சே ஆகனும், அப்போ தான் நான் வெளியே வருவேன்..."என்றவாறு அவளை இழுத்து தன் மடியில் அமர வைத்தவன் தன்னுடன் சேர்த்து அணைத்தான்.

"உங்கள பார்த்த நிமிசத்துலிருந்து மறுநாள் விடிஞ்சதும் எனக்கு உங்க நினைப்பு தான்..."என்றவாறு அவன் தோளில் சாய இருவரின் நினைவுகளும் அவர்களின் கடந்த காலத்திற்கு சென்றது.

சில தினங்களுக்கு முன் திருமண முடிந்த தன் ஒரே செல்ல மகளின் சந்தோஷத்தை கொண்டாட நினைத்த வினோஜ்மனுவல் லண்டனில் இருக்கும் பிரமாண்ட ஹோட்டலில் விருந்திற்கு ஏற்பாடு செய்தார்.

தன் பிஸினெஸ் கிளேன்ட்,ரிலேடிவ்ஸ்,பிரெண்ட்ஸ்,ஆபிஸில் பணிபுரியும் எம்ப்ளாயி என்று தனக்கு தெரிந்த அனைவரையும் அழைத்திருந்தார்.

தன் முதலாளியின் அழைப்பை ஏற்று அந்த பார்ட்டிக்கு வேந்தன் வர, அதே நேரம் தன் தோழியின் அழைப்பிற்காக சுதிகீர்த்தி விருப்பமேயில்லாமல் வந்தாள்.

அவள் விரும்பமின்மைக்கு முக்கியம் காரணம் தோழிகள் அனைவரும் ஒரே போல் உடை அணிந்து வர வேண்டும் என்று கூறியது தான்.

அவர்கள் எடுத்து கொடுத்த உடையை அணிந்து கொண்டு ஹோட்டலுக்கு வர அவள் காரினை விட்டு இறங்கிய அடுத்தநொடி அங்கிருந்த அனைவர் கண்ணும் அவள் மேலே இருக்க,.

"வாவ் சின்ட்ரெல்லா,ஏஞ்சல்,ஜீலியட்,குயின்...."அவர்கள் கூறிய ஒவ்வொரு சொல்லும் செவியில் ஒலிக்க,தன் அழகை ரசித்து அவர்கள் பேசிய பேச்சுகள் அனைத்தும் எரிய வேகமாக லிப்டுக்குள் நுழைந்தாள்.

தன் தோழியின் சந்தோஷத்திற்காக வராத புன்னகையும் வரவழைத்துக் கொண்டு பார்டி நடக்கும் ஹாலுக்குச்

சென்றாள்.

கையில் ஆளுக்கு ஒரு கிளாஸை வைத்துக் கொண்டு கூட்டம் கூட்டமாக புரியாத வார்த்தையில் ஏதேதோ உளறிக் கொண்டிருக்க, "சொல்லுடா மச்சான்..." யாரோ ஒருவனின் தமிழ் பேச்சு செவியில் விழ குரல் வந்த திசையை நோக்கி திரும்பினாள்.

அங்கிருந்த அனைவரும் கோர்ட் அணிந்திருக்க.அவன் மட்டும் பார்மல் உடையில் இருக்க,அவனது வலிய கரம் கையிலிருந்த கிளாஸை பூ போல் பற்றிருக்க,சிரித்து பேசும் போது கன்னத்தில் விழும் குழி,அலை அலை முன் நெற்றி வரை படர்ந்த கேசம்,இருபுறமும் சிறிது முறுக்கி விட்ட மீசை,முகசுழிப்பு, புருவ அசைவு,அவன் பேசும் கிண்டல் பேச்சு அனைத்தையும் தன்னையும் அறியாமல் ரசித்துக் கொண்டிருக்க திடிரெண்டு கேட்ட கை தட்டல் சத்தத்தில் தன் நிலை உணர்ந்தாள்.

மணமக்கள் இருவரும் கை கோர்த்து நடந்து வர அதை கண்டவள் தன் பின் அவன் இருக்கிறானா என்ற நினைப்பில் திரும்பி பார்த்தாள்.

அவனோ சந்தோஷமாக கை தட்டிக் கொண்டிருக்க அவன் சந்தோஷம் அவளையும் தொற்றிக் கொள்ள வேண்டா வெறுப்பாக இருந்தவள் இப்போது சற்று சந்தோஷமாக உணர்ந்தாள்.

அதன் பின் அனைவரும் அவர்களுக்கு வாழ்த்து கூற தன் தோழிக்கு வாழ்த்து கூறி விட்டு விலக மற்ற தோழிகள் அனைவரும் கீர்த்தியை பிடித்துக் கொண்டனர்.

பார்ட்டி டான்ஸ் ஆடுவதற்கு அவளை அழைக்க, முதலில் மறுத்தவள் ஏற்கனவே சிலர் ஜோடியாக ஆடிக் கொண்டிருக்க அவர்களுடன் அவனும் ஆடுவதை கண்டவள் சரி என்றவாறு அவர்களுடன் கலந்தாள்.

ஜோடி மாறி மாறி ஆட கீர்த்தியின் பார்வை ஒவ்வொரு நொடியும் அவன் மேலையே இருக்க, ஏனோ அவளின் உள்மனம் அவனும் தன்னை பார்ப்பது போலே தோன்றியது.

எப்போது அவனுடன் தான் ஆடுவோம் என்று எதிர்பார்த்து காத்திருக்க அவளை வெகு நேரம் சோதிக்காமல் அவன் அருகில் வர மெல்ல உறைய ஆரம்பித்தாள்.

அவனின் ஓர் வழிய கரம் தன் இடையில் அழுத்தி பதிந்திருக்க,மற்றொரு கரமோ அதற்கு மாறாக தன் இடக்கரத்தோடு மென்மையாய் பற்றிருக்க,தன் வலக்கரத்தை அவன் கழுத்து வளைவில் வைத்தவள் அனைவரையும் சுட்டெரிக்கும் அவன் விழிகளை கண்டு உலகம் மறந்து அவன் இழுத்த அசைவுக்கு ஆடினாள்.

அவன் பெயரை அறிந்து கொள்ளும் ஆவல் எழ, "உங்க பெயர்...?" அவள் கூறியது அவன் செவியில் விழிந்து புருவம் உயர்த்தி அவளை பார்க்க அவன் செய்கையை ரசித்தவள் அவன் பதில் அறியும் முன்னே கண்ணிமைக்கும் நேரத்தில் தன்னை சுற்றி விட்டு மற்றொருவளின் கையை பற்றினான்.

வேறொருவனுடன் ஆடினாலும் அவனையே காண அவன் விலகி வெளியேறுவதை கண்டவள் தானும் விலக பார்க்க அது முடியாமல் போக சிறிது நேரம் அவர்களுடன் ஆடினாள்.

மனம் முழுவதும் வெகு அருகில் அவனை கண்டது, அவன் வாசம் இன்னும் தன்னுள் இருப்பது போலே இருக்க தான் ஏன் இப்படி உணர்கிறோம் என்று தெரியாமலே மறுபடியும் அவன் முகம் காண எண்ணினாள்.

ஆடி முடித்து களைப்புடன் விலக தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த சர்வன்டிடம் இருந்த ஜூஸை எடுத்து குடித்து முடிக்கும் நேரம் யாரோ அதை பிடுங்க சற்று எரிச்சலுடன் திரும்பினாள்.

அவன் முகத்தை கண்டு எரிச்சல் சற்று குறைய, "அறிவிருக்கா இல்லையா..?உன்ன யாரு இதை குடிக்க சொன்னா,குடிக்க வேற எதுவுமே கிடைக்கலையா...?" கோவமாக கேட்க,

இதுவரை தன்னை எதிர்த்து யாரும் கேள்வி கேட்காது வளர்ந்தவள் முதல் முறை எவனோ ஒருவன் கோவமாக

தன்னை எதிர்த்து கேள்வி கேட்க அதை கேட்டு கோவம் அதிகரிக்க, "நான் எதை குடிக்கணும் குடிக்க கூடாதுன்னு நீங்க எனக்கு சொல்ல தேவையில்லை..." கோவமாக கத்தியவள் சிறிது நேரம் முன் இவனை தான் ரசித்தோம் என்பதை கூட மறந்தாள்.

"நீ இதை குடிக்க கூடாது,ஏன்னா இதுல..." அவன் பேசிக் கொண்டிருக்க,அதை கண்டுகொள்ளாதவள் தன் கையிலிருந்து பறித்த அதே பானத்தை மறுபடியும் அவன் கையிலிருந்து பற்றி குடித்து முடித்தாள்.

"ஏய் லூசு இது ஒன்னும் ஜூஸ் இல்ல,இதுல ஆல்காஹல் கலந்திருக்கு அது தெரியாம இப்படி குடிச்சிட்டையே..?"

"இதுல ஆல்கஹால் கலந்திருக்குன்னு உங்களுக்கு எப்படி தெரியும்..."கேட்கும் போதே போதை சற்று தலைக்கேற,

"ஏன்னா அது..." சற்று தயங்கியவன், "அதுல ட்ரிங்க்ஸ் கலந்ததே நான் தான்..."என்றான்.

அதை கேட்டு கோவமாக அவன் சட்டை காலரை பற்றி, "யூ பிராடு ஏன் இப்படி பண்ணுனா..." கேட்கும் போதே தலைசுற்ற அதற்குள் அவன் எம்.டி அவனை அழைக்க அவள் கையை விலக்கி விட்டு அவளை அருகிலிருந்த சோபாவில் அமர வைத்து சென்றான்.

அவன் சென்றதும் மனதிற்குள் அவனை திட்டிக் கொண்டே எழுந்தவள் வாஷ்ரூம் சென்று முகத்தை கழுவி விட்டு வந்து தன் தோழியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினாள்.

முதல் முறையாக ட்ரிங்க்ஸ் குடித்தது வேற தலை சுற்ற,தொண்டை ஏரிய சீக்கிரமே கிளம்ப நினைத்தவள் கிழே வர தன் நடையில் இருக்கும் வித்தியாசத்தை தன்னாலே உணர முடிய தள்ளடியவாறு வெளியே வந்தாள்.

திடிரெண்டு யாரோ சிலர் தன் வாயை மூடி இழுத்துச் செல்லவும் அவர்களிடம் இருந்து போராடி விலக முயல அவளை இழுத்துக் கொண்டு அங்கிருந்த கார்டனுக்குள் நுழைந்தனர்.

ஆள் அரவமற்ற அந்த இருட்டு கார்டனில் வண்ண விளக்குகள் மட்டும் அங்காங்கு எரிந்து கொண்டிருக்க அவர்கள் தன்னிடம் தவறாக நடக்க முயற்சிப்பதை உணர்ந்தவள் தன் பலம் கொண்டு கத்தி அவர்களிடம் விலக போராட அவள் முயற்சியை தோற்கடித்தனர்.

கொஞ்சம் கொஞ்சமாக தன் சுயவுனர்வை இழந்து மயக்கத்திற்கு செல்ல அதன் பின் தன்னை சுற்றி என்ன நடக்கிறது என்று கூட தெரியாமல் கண் மூடினாள்.

யாரோ தன் கன்னத்தை தட்டி அழைக்க சிறிது நேரத்திற்கு முன் தான் ரசித்த தன்னவன் முகம் கலங்களாக தெரிய போதையில் கோவமாக அவன் சட்டையை பற்ற அவளை இரு கைகளிலும் பூ மாலையை தூக்கினான்.

மறுநாள் விடிய தலையை பற்றிக் கொண்டு எழுந்து அமர்ந்து சுற்றுபுறம் பார்த்தவள் தன் அறையில் இருக்க இரவு நடந்த அனைத்தும் கண் முன் தோன்ற ஒரு நொடி தன்னை முழுதாய் ஆராய்ந்தாள்.

மெல்ல எழுந்து தன் அறையை விட்டு வெளியே வர ஹாலில் இருந்த சோபாவில் உள்ள காகிதம் அவளை வரவேற்க அதன் அருகில் சென்று யோசனையுடன் எடுத்தாள்.

ஹாய் டியர்,

உனக்கு எந்த பிரச்சனையும்மில்லை நீ நல்லா தான் இருக்கே, என்ன மன்னிச்சிரு,நான் உனக்காக அதுல ட்ரிங்க்ஸ் கலக்கல வேற ஒருத்தனுக்காக கலந்தது, அதை நீ குடிப்பேன்னு நினைச்சி கூட பார்க்கல, அதுனால உனக்கு இவ்வளோ பெரிய ஆபத்து வருன்னு நான் நினைக்கல, நான் அதுக்காக உன்கிட்ட மனசார மன்னிப்பு கேட்குறேன். டேக் கேர்ம்மா...!\

இப்படிக்கு,

உன் நலம் விரும்பி.

அன்று நடந்ததை கூறி முடிக்க, "அப்போ அம்மணி எனக்கு

தெரியாம அப்பவே என்ன சைட் அடிச்சிருக்கே,இது தப்பாச்சே தண்டனை தரணுமே..."என்றவன் அவள் இதழோடு இதழ் பதித்து அவள் தேனை பருக,

அவனிடம் போராடி விலகி அவன் நெஞ்சில் குத்தியவள், "நான் சொன்னது எல்லாம் இருக்கட்டும் நீங்க என்ன எப்போ விரும்ப ஆரம்பிடிச்சீங்க, சரி அதை கூட விடுங்க எனக்கு பயந்துகிட்டு தான் என்கிட்ட இத்தனை நாள் சொல்லலையா..?" அவன் மீசை நுனியை பிடித்து இழுத்தவாறு கேட்டாள்.

"ஏய் லூசு..." வலியில் செல்லமாய் திட்டியவன் அவளை கை வளைவிற்கு கொண்டு வந்து தன் காதலை கூற ஆரம்பித்தான்.

"அன்னைக்கு நீ என்ன பார்த்ததை நானும் பார்த்தேன், உனக்கு எப்படி தோணுச்சோ அதை மாதிரி தான் உன்ன பார்த்ததும் எனக்கு தோணுனது,உனக்கே தெரியாம நீ பார்க்காதே நேரத்துல நான் பார்த்தேன்,அப்பவே என் மனசுல ஆழமா பதிஞ்சிட்டது உன்னோட இந்த மதிமுகம்,நம்ம டான்ஸ் ஆடும் போது அந்த நெருக்கம்..."என்றவன் இப்போது அதை நினைத்து அவளை தன்னுடன் சேர்த்து இறுக்க,

"ஐயோ என்ன இது விடுங்க வலிக்கு..."என்றவள் தன் கொடி இடையில் அழுத்தி பதிந்திருந்த தன்னவன் கையை விலக்க போராட,அவனோ அதை முறியடித்து விடியற்காலை என்பதையும் மறந்து அவளுடன் மறுபடியும் கலக்க ஆரம்பித்தான்.

அவன் செயலை அறிந்தவள் சந்தோஷமாக தன்னை முழுதாய் அவனுக்கு கொடுக்க, "சுதி சுதி...."கிறக்கமாய் அழைக்க,

அவன் தலையை வருடிக் கொடுக்க,அவள் நெஞ்சில் புதைந்தவன், "ஒரு வாரத்திற்கு அப்பறம் நான் வந்தேன் ஆனா நீயில்லை எங்கடி போனே..."புலம்பியவாறு அவள் விரலுடன் தன் விரல் வைத்து விளையடியவாறு கேட்டான்.

"நான் அதுக்கு அப்பறம் ரெண்டு நாளுல ஸ்டடீஸ் முடிஞ்சி

இங்கே வந்துட்டேன்..."

"உன் நினைப்போட தான் இந்த ஒன்ரறை வருஷமா வாழ்ந்துகிட்டு இருக்கேன்,எனக்கு மனைவின்னு ஒருத்தினா அது நீ தான் உன்ன பார்த்தா நொடியே முடிவு பண்ணிட்டேன்,ஆனா அது இவ்வளோ சீக்கிரம் நடக்குன்னு நான் நினைக்கல,உன்ன ஆபீஸ்ல வச்சி பார்த்த அன்னைக்கு நான் எவ்வளோ சந்தோஷப்பட்டேன் தெரியுமா ஆனா நீ என்ன மறந்துட்டேன் நினைக்கும் போது தான் கொஞ்சம் கஷ்டமா இருந்தது அதுக்கு அப்பறம் உன் நிலைமை புரிஞ்சது,

அப்பவே நீ என்கிட்ட தான் இருக்கணும் நினைச்சேன்,இனிமே ஒரு நொடி கூட என் பாதுகாப்பு இல்லாம எங்கையும் போக கூடாது,அதே மாதிரி என் செல்ல பொண்டாட்டி இப்படியே சிரிச்சா முகமா இருக்கணும்,உங்க வீட்டுல இருந்த மாதிரி ரூமுக்குள்ளே அழுதுகிட்டு அடைஞ்சி கிடைக்க கூடாது,இது உன் புருஷனோட கட்டளை..."அதிகாரமாய் ஆரம்பித்து அவளிடம் கொஞ்சி தன் வேலையை காட்டியவாறு கூறினான்.

அதே நேரம் இங்கே வெளியே திடிரெண்டு ஆடிட்டிங் என்று பாங்கிலிருந்து அழைப்பு வர தன் விடுமுறையை கேன்சல் செய்த இளஞ்செழியன் மும்பைக்கு கிளம்ப தயாரானான்.

## அத்தியாயம் : 13

அதிகாலை பொழுதில் பரபரப்பாக கிளம்பிக் கொண்டிருந்த தன் மகன் இளஞ்செழியனை கண்ட ரத்னா அவன் அருகில் வர, "அம்மா நான் மும்பை போகணும் எனக்கு ஆடிட்டிங் இருக்கு லீவ் கேன்சல் பண்ணிட்டேன்..."என்க,

"என்னடானா கண்ணா வந்த ஒரு நாளுல கிளம்புற,ஒரு வாரம் இருப்பேன்னு தானே சொன்னே...?"

"ஆமாம்மா ஆனா திடீருன்னு வேலை வரும்ன்னு நான் நினைக்கலையே..?"என்றவன் தன் உடைகளை எடுத்துக் கொண்டு வேகமாய் பாத்ரூமிற்குள் நுழைய,

அவன் கிளம்புவதற்குள் அவனுக்கான உணவினை தயார் செய்ய புலம்பியவாறு கிட்சனுக்குள் நுழைந்தார் ரத்னா.

இளஞ்செழியன் கிளம்பி தன் லக்கேஜ்சை எடுத்துக் கொண்டு கீழே வர அதே நேரம் தன் மனைவியை அழைத்துக் கொண்டு தன் அறையிலிருந்து வெளியே வந்தான் யாழ்வேந்தன்.

தன் தம்பியை கண்டவன், "என்னடானா இது அதுக்குள்ள கிளம்புற போல,என்னாச்சு திடீருன்னு..." கேட்டவாறு அவன் அருகில் வர,

"முக்கியமான ஆடிட்டிங் அண்ணா நான் சீக்கிரம் கிளம்பனும்,சாரி அண்ணா சாரி அண்ணி..."அவர்களுடன் தான் நேரம் செலவழிக்காதது மனதிற்குள் கவலையை அழிக்க அதை மறைத்தவாறு இருந்தான்.

"சரிடா ஈவினிங் கிளம்பலாம்ல அம்மா எல்லாரும் கோவிலுக்கு போகணும் சொன்னாங்களா..?"

"ஹ்ம்ம் ஆமா அண்ணா ஆனா நான் இப்பவே போகணும்,ப்ளீஸ் அம்மா,அப்பா கிட்ட எனக்காக பேசு அம்மா எப்போ பார்த்தாலும் நான் போற நேரம் அழுதுகிட்டே இருக்கு..." அவன் கூறி முடிக்க அதை கேட்டவாறு அங்கே வந்தார் ரத்னா.

"என்ன என்னடா பண்ண சொல்லுற வாரம் வாரம் வரேன்னு சொல்லுறான் ஆனா வர மாட்டிங்கிறான்,இப்பவும் அதையே தானே சொல்லிட்டு போக போறான்..."

"ஐயோ என் செல்ல அம்மா ஒன்னு பண்ணே நீ வேணா என் கூடவே வந்துறேன்..." தன் தாயின் கண்ணத்தை கிள்ளியவாறு கூறினான்.

"போடா உன் கூட வந்துட்டா என் புருஷனை யாரு பார்க்குறது,நீ முதல சீக்கிரம் இங்க வர பாரு..."

"அப்போ பையனை விட உனக்கு உன் புருஷன் தான் முக்கியம்மா..."

"ஆமாடா என் கடைசி காலம் வரைக்கும் எனக்கு அவர்

தானே துணை..."தன் சின்ன மகனின் தலையை வருடியவாறு கூற, எங்கோ ஆரம்பித்து எதையோ பற்றி பேசிக் கொண்டிருக்கும் அவர்களின் பேச்சை கேட்டவாறு நின்றிருந்தாள் சுதிகீர்த்தி.

"ரத்னா மருமகளை கூட்டிட்டு வா பூஜை ரூம்ல விளக்கேத்திடலாம் அப்பறம் சின்னவனுக்கு லேட்டாகுது பாரு சீக்கிரம்..."என்றவாறு திருமுருகன் வர,

"சரிங்க..."என்றவர் தன் மருமகளை அழைத்துக் கொண்டு பூஜை அறை செல்ல அவர்கள் பின்னே மற்ற மூவரும் சென்றனர்.

தன் மாமியாரின் உதவியால் விளக்கேற்றியவள் பெரியவர் இருவரின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினாள்.

அதன் பின் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்டு முடிக்க தன் தம்பியை அழைத்துக் கொண்டு ஸ்டேஷன் சென்றான் யாழ்வேந்தன்.

கிளம்பும் அவரசத்தில் வளர்மதியை பார்க்கு வர சொன்னதை மறந்து போக அவளோ அங்கே தன்னவனின் வருகைக்காக காத்திருந்தாள்.

சந்தோஷமாக கிளம்பி வந்து அவனுக்காக காத்திருக்க நேரம் செல்ல அவன் வராமல் போகவே அவனுக்கு அழைத்தாள்.

அவனோ மொபலை சைலெண்டில் போட்டிருக்க அவள் அழைத்தது தெரியாமல் போக அழைத்து அழைத்து ஓய்ந்து போனவள்,அவனாக அழைத்து மன்னிப்பு கேட்கும் வரை தான் அழைக்க கூடாது முடிவு செய்தவள் காலேஜிற்கு சென்றாள்.

மனதிற்குள் அவன் நினைவு வந்து அலைக்கழிக்க சோர்ந்து போய் அமர்ந்திருந்த தன் தோழியை கண்ட வந்தனா முறைத்தவாறு அவள் அருகில் வந்து அமர்ந்தாள்.

"இப்போ என்னாச்சு எதுக்கு இப்படி மூஞ்ச தொங்க போட்டு உட்கார்ந்திருக்கே,அதான் நேத்து அவங்க அண்ணன்

கல்யாணத்துக்கு போனில்ல அப்போ உங்க ஆள பார்த்துப்பில்ல பின்ன என்னடி..?"

"ஒன்னுமில்லை..."

"என்னாச்சு சொல்ல போறையா..?இல்லையா..? சொல்ல விரும்பம் இல்லைனா சரி நான் கிளம்புறேன்..."என்றவள் எழுந்து செல்ல,

"நில்லு வந்தனா,இளா ஏன் இப்படி பண்ணுறான்னு தெரியல என்ன அவாய்ட் பண்ணுற மாதிரி தோணுது..."

"ஏன் அப்படி நினைக்கிற அந்த அண்ணா அப்படியெல்லாம் பண்ணாது, நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே...?"

"இல்ல வந்தனா நேத்து மண்டபத்துல வச்சி இன்னைக்கு மார்னிங் மீட் பண்ணலாம் நம்ம வழக்கமா மீட் பண்ணுற பார்க்கு வர சொன்னான்,ஆனா நான் எவ்வளோ நேரம் காத்திருந்தேன் தெரியுமா அவன் வரவேயில்லை கால் பண்ணுனா கூட எடுக்க மாட்டிக்கான்..."

"அது என்னமோ தெரியல அந்த கடவுள் உங்க லவ்வ மட்டும் நல்லா விளையாடுறாரு,அன்னைக்கு அது கூப்பிடுச்சி நீ போகல,இன்னைக்கு அது வரேன்னு சொல்லிட்டு வரல,ஏதாவது முக்கியமான வேலையா இருக்கும் எங்கையாவது போயிருக்கும்,நீ அதையே நினைக்காதே நான் கேன்டீன் வரைக்கும் போய்ட்டு வரேன்..."என்றவள் எழுந்து செல்ல இளாவிற்கு அழைக்க முயன்றாள்.

மறுபடியும் அவளுக்கு அழைத்து தோற்று போக முன்பெல்லாம் அவன் அழைக்கும் போது தான் எடுக்காததை நினைத்தவள் இப்போது தான் அழைக்கும் போது அவன் எடுக்காதது மனதிற்குள் வலிக்க வேண்டுமென்றே அவன் செய்வது போலே நினைத்தாள்.

அன்று முழுவதும் எப்படியே செல்ல ஈவினிங் கிளம்பும் நேரம் அவனிடமிருந்து பிஸி என்று மெசேஜ் மட்டும் வர முதல் முறையாக தன் காதலை வெறுக்க ஆரம்பித்தாள்.

இரவு உணவை அனைவரும் சேர்ந்து முடிக்க தன் மனைவியை அழைத்துக் கொண்டு தன் அறைக்கு வந்தான் யாழ்வேந்தன்.

சுதியை இழுத்து தன் மடியில் அமர வைத்தவன் அவள் இடையில் கை வைத்து இறுக அணைத்து கழுத்து வளைவில் முகம் புதைத்தான்.

"ஏதோ சொல்லணும் போல..?"அவன் கேசத்துக்குள் தன் விரலை வைத்து வருட,

"ஹ்ம்ம் ஆமா ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும் ஆனா நீ அதை எப்படி எடுத்துக்குவேன்னு தெரியல..."

"முதல சொல்லுங்க யாழ்..."

"நான் ஜாப் ரிசைன் பண்ணிட்டேன் என்னால அங்கே வேலை பார்க்க முடியாது..."என்க, அவளோ அவன் கூறியதற்கு எதுவும் சொல்லாது அவன் கேசத்தை வருடியவாறு இருந்தாள்.

அவளிடம் இருந்து பதில் வராமல் போக விலகி அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தியவன், "ஏன் எதுவும் பேச மாட்டிக்கே நான் தப்பு பண்ணிட்டேன் உனக்கு தோணுதா..? ஏதா இருந்தாலும் சொல்லு சுதி அமைதியா மட்டும் இருக்காதே..?"என்க,

"நீங்க எந்த தப்பும் பண்ணல யாழ் நீங்க எடுத்த முடிவு சரி தான் இப்போ வேற வேலை கிடைக்கிற வரை என்ன பண்ண போறீங்க..?"

"நான் சொந்தமா பிசினஸ் பண்ணலாம் இருக்கேன் நீ என்ன சொல்லுற இன்னும் இதை பத்தி அம்மா,அப்பா கிட்ட சொல்லலை செழியா மட்டும் சொல்லிருக்கேன். எழில் ஒரு இடம் காட்டினான் அது பிசினஸ் பண்ண செட் ஆகும்ன்னு நினைக்கிறேன்..."

"உண்மையாவ சொல்லுறீங்க சொந்தமா பிசினஸ் பண்ண போறீங்களா..?ஏன் என் கிட்ட முன்னாடியே சொல்லலை..?"

"உனக்கு பிடிக்குமோ பிடிக்கதோன்னு தெரியல அதான்

சொல்லலை,சாரி செல்லம்..."என்றவாறு கெஞ்சியவாறு தன் வேலையை காட்ட அதை ரசித்தவள் அவனுக்கு தன்னை இசைந்து கொடுத்தாள்.

"என்ன பிசினஸ் பண்ண போறீங்க எதுவும் பிளான் பண்ணிருக்கீங்களா..?"

படுக்கையில் படுத்து அவளை இழுத்து தன் நெஞ்சில் சாய்த்தவன், "ஆட்டோ மொபைல் ஷோ ரூம் வைக்கலாம் நினைக்கேன்,அகில்,எழில் ரெண்டு பேரு கிட்ட டிஸ்கஸ் பண்ணனும் நீ என்ன நினைக்கே இது சரியா வரும்மா..?"என்க,

"எனக்கு என்ன தெரியும்,ஆமா நீங்க என்ன படிச்சிருங்க்கீங்க..?"

"பிளஸ் டூ படிச்சிருக்கேன் போதுமா ரெம்ப சீக்கிரம் என்ன பத்தி தெரிஞ்சிக்க நினைக்கிற போல..."என்றவன் அவள் மேனியில் எல்லை மீற அவளோ அமைதியாக இருந்தாள்.

அவளிடம் எந்த அசைவும் இல்லாததை உணர்ந்து அவளிடமிருந்து விலகி அவள் முகம் கண்டவன், "என்னாச்சு சுதி ஏன் எதையோ யோசிக்கிற...?" அவள் கூந்தலை காதோதரம் ஒதுக்கியவாறு கேட்க,

"என்னால பார்க்க முடிஞ்சா அட்லீஸ் கல்யாண பத்திரிக்கையில பார்த்திப்பேன்ல நீங்க என்ன படிச்சிருக்கீங்கன்னு,நான் உங்கள பத்தி இதுவரை எதுவுமே தெரிஞ்சிக்க முயற்சி பண்ணல,ஐ ரியலி சாரி யாழ்..."அவன் கைகளை பற்றிக் கொண்டு கண்ணீருடன் கூறினாள்.

"ஏய் லூசு பொண்டாட்டி நான் ஏதோ சும்மா சொன்னா அதை போய் இவ்வளோ சீரியஸ்சா எடுத்துக்கிற,இருபத்திநாலு மணி நேரமும் என்னையே நினைச்சிக்கிட்டு இருக்க போய் தான் மத்ததுயெல்லாம் மறந்துற போல..."

"நீங்க என்ன சொல்லுறீங்க நான் என்ன மறந்தேன்..."

"பின்ன என்னடி உங்க அண்ணன் கூட தான் படிச்சேன்னு தெரியும் அப்பறம் இப்படி கேட்டா..."

"ஆமா நீங்க எங்க அண்ணன் கூட தானே படிச்சீங்க இதை மறந்தே போய்டேன்..."

"சரி எல்லாமே நியாபகப்படுத்துவோம்மா..."என்றவாறு அவளுடன் படுக்கையில் சரிந்தவன் தன் செயலை காட்ட ஆரம்பித்தான்.

ஹோட்டலில் இரவு உணவை முடித்துக் கொண்டு லேட்டாக தன் பிளாட்டுக்கு வந்த இளஞ்செழியனின் மனம் முழுவதும் வளர்மதியின் நினைவு மட்டுமே சூழ்ந்திருந்தது.

பிஸி என்று மெசேஜ் அனுப்பியதற்கு நிச்சியமாக தன் மேல் கோவமாக இருப்பாள் என்பதை அறிந்தவன் அவளை எப்படி சமாதானம் செய்வது என்ற குழப்பத்துடன் தன் படுக்கையில் சாய்ந்தான்.

நேரம் செல்ல ஏனோ தன் குடும்பத்தின் நினைவும் வளர்மதியின் நினைவு வந்து கலங்கடிக்க தனிமை உணர்வு மனதை வாட்ட நடு இரவு என்று பாராமல் தன்னவளுக்கு அழைப்பு விடுத்தான்.

பலமுறை அழைத்து ஓய்ந்து போக கடைசியாக ஒரு முறை அழைக்க அது உயிர்ப்பித்தது.

மொபலை எடுத்தது யார் என்று தெரியாமல் தான் எப்படி பேசுவது என்ற குழப்பத்தில் இருக்க, "சொல்லு இளா..."அமைதியாக தன்னவள் குரல் ஒழிக்க,

"மதி ஐ மிஸ் யூ..."

அவன் குரலில் இருந்த கழக்கத்தை உணர்ந்தவள் தன் தாயின் தூக்கம் கலையாதவாறு அறையை விட்டு வெளியே வந்து, "என்னாச்சு இளா ஏன் உன் குரல் ஒரு மாதிரியா இருக்கு..." தன் கோவம் மறந்து கேட்க,

தன்னை காணாமலே தன் கவலையை அறிந்தவளை காதலை கண்டு பெருமிதம் கொண்டவன், "தூக்கம் வர மாட்டிங்குது மதி ஏதோ மாதிரி இருக்கு..." அவள் தன் அருகில் இருக்க கூடாதா என்ற ஏக்கத்துடன் கூறினான்.

"ஏன் என்னாச்சு எங்கே இருக்கே..?,மார்னிங் ஏன் என்ன

பார்க்க வரல ஏதாவது பிரச்சனையா இளா...?" பதட்டத்துடன் கேட்க,

"எந்த பிரச்சனையும் இல்லமா சாரி என்னால உன்ன பார்க்க வர முடியல நான் மும்பை வந்துட்டேன்..."

"என்ன இளா இது அதுக்குள்ள மும்பை போய்டையா,என் கிட்ட ஒரு வார்த்தை கூட சொல்லலை..."

"சாரிம்மா..."அவளிடம் கெஞ்சி கூற,அவனது இந்த கெஞ்சல் தன் மனதில் இருந்த கோவம் அணைத்தும் காற்றாய் பறந்து போக அதன் பின் ஏதேதோ சிறிது நேரம் இருவரும் பேசினர்.

மறுநாள் விடியல் ஆழகாய் விடிய மறு வீட்டுக்கு அழைப்பதற்கு அகிலனும்,சித்ராவும் வர தன் குடும்பத்தாரின் குரலை கேட்டதும் சந்தோஷமாக அவர்களை அணைத்துக் கொண்டாள்.

"என்ன கீர்த்தி ரெம்ப சந்தோஷமா இருக்கே போல இங்கே வந்த இந்த ரெண்டு நாளுல எங்க எல்லாரையும் மறந்துட்டே போல..."

"ஐயோ அண்ணா அப்படியெல்லாம் இல்ல என்னால எப்படி உங்கள மறக்க முடியும்..."என்றவாறு அகிலனின் தோளில் சாய,அவள் தோளில் கை போட்டு தலையை வருடிக் கொடுத்தான்.

"அம்மா அப்பா வரலையா..?இன்னும் கோவமா தான் இருக்காரா..?"

"ஏதோ முக்கியமான வேலை இருக்குன்னு சொன்னாரு அதான் வரலம்மா..."தன் கணவரை விட்டுக் கொடுக்காமல் பேசினாலும் அங்கிருந்த அனைவர்க்கும் அவர் மனதில் இருக்கும் எண்ணம் புரிந்தது.

"அப்பா செழியா எங்கே..?நான் வந்ததும் என் முன்னாடி நிற்பான் இன்னைக்கு காணும்..."அவன் பார்வை கோவத்துடன் வேந்தனின் மீது இருந்தாலும் கேள்வி அவன் தந்தையிடம் இருந்தது.

"அவன் நேத்தே மும்பைக்கு போயிட்டான், லீவ் கிடைச்சா

வரேன்னு சொன்னான்..."

"சரிப்பா..."

"சம்மந்தி நாங்க மறு வீட்டுக்கு அழைக்க வந்தோம்,உங்களுக்கு சம்மதம்னா நாங்க கூட்டிட்டு போகட்டுமா...?"

"என்ன இது இதுக்கு போய் எங்கே கிட்ட கேட்டுகிட்டு நீங்க கூட்டிட்டு போங்க..."என்று திருமுருகன் கூற,

"இல்ல மாமா நான் போகல..."என்றவாறு தன் அண்ணனிடம் இருந்து விலகி எழுந்து நின்றாள் சுதிகீர்த்தி.

"ஏன்மா என்னாச்சு இது சம்ரதாயம்..."

"அத்தை அது எனக்கு தெரியும் ஆனாலும் என்ன மன்னிச்சிருங்க எப்போ அப்பா வந்து உங்க எல்லாரும் கிட்ட மன்னிப்பு கேட்டு சந்தோஷமா எங்களை கூப்பிடுறறோ அப்போ போறோம் நாங்க ரெண்டு பேரும்..."

"அம்மாடி மருமகளே உங்க அப்பா மேல உள்ள கோவத்துல இவங்க என்ன பண்ணுனாங்க உனக்காக தானே உன் அண்ணனும்,அம்மாவும் வந்துருக்காங்க..."

தன் மாமனார் கூறியதற்கு பிறகே தன் தாயின் கவலை புரிய, "சாரிம்மா என்ன மன்னிச்சிரும்மா,எனக்கு என்ன பண்ணனும் தெரியல அப்பா இப்படி இருக்கும் போது நான் எப்படி இவரை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வர முடியும்,ப்ளீஸ்ம்மா என்னமா புரிஞ்சிக்கோம்மா..." தன் தாயிடம் கெஞ்சினாள்.

"உனக்கு என்ன பண்ணனும் தோணுதோ அதையே செய் கீர்த்தி, சீக்கிரமே நம்ம அப்பா மனசு திருந்தி உங்கள ஏத்துகிடுவாறு அதுக்கு நான் பொறுப்பு,நீ என் தங்கச்சி சொல்ல எனக்கு ரெம்ப பெருமையா இருக்கு நாங்க கிளம்புறோம்..."என்ற அகிலன் தன் தங்கையின் நெத்தியில் இதழ் பதித்து விடுவித்தான்.

"அம்மா,அண்ணா கொஞ்சம் நேரம் இருங்களே எனக்காக ப்ளீஸ்..."என்க, அவள் விருப்பதிற்காக அன்று முழுவதும்

அவர்களுடனே இருந்தனர்.

வந்ததிலிருந்து தன் கணவனிடம் பேசாமல் அமைதியாக இருந்த அண்ணனை கண்டவன் மனதுக்குள் சிரித்தவாறு, "என்னாச்சு அண்ணா ரெண்டு பேரும் எலியும் பூனையும் இருக்கீங்க போல..."என்க,

"உனக்கு தெரியாதா கீர்த்தி உன் புருஷன் என்ன முடிவு எடுத்துருக்கான்னு..?"

"அண்ணா அவர் தனியா தான் பிசினஸ் பண்ண போறாரு உன்ன விட்டு எங்கையும் போகல ஏன் உனக்கு இதுல விரும்பம் இல்லையா..?"

"கீர்த்திம்மா அப்படியெல்லாம் இல்ல சந்தோஷம் தாண்டா ஆனா எனக்கு பலமா இருந்த ஒரு கை போனது மாதிரி தோணுது ஏனோ கொஞ்சம் வலி அதான் வேற எதுவும் இல்லம்மா..."

அவன் கூறியதை கேட்ட வேந்தன், "டேய் அகில் என்னடா இது லூசு மாதிரி பேசிட்டு நம்ம மூணு பேரும் என்னைக்கும் ஒண்ணா தான் நம்மள யாராலையும் பிரிக்க முடியாது நீ என் பெஸ்ட் பிரெண்ட்டா,அதுவும் இல்லாம இப்போ என் மச்சானா வேற ஆகிட்டே..."என்றவாறு அவனை நட்புடன் அணைத்துக் கொள்ள அதை கண்ட பெரியவர்கள் அனைவரும் சந்தோஷத்தில் மிதந்தனர்.

நாட்கள் செல்ல வங்கியில் லோன் போட்டு தன் இரு தோழர்கள் மூலம் புது தொழில் ஆரம்பிக்க தேவையான அனைத்தையும் வாங்கியவன் ஓர் நல்ல நாளில் தன் ஷோ ரூமை ஆரம்பிக்க நினைத்தான்.

தன் மகன் சொந்த காலில் நிற்பது பெற்றவர்களுக்கு சந்தோஷத்தை அழிக்க சொந்தங்கள் அனைவரும் அழைத்து திறப்பு விழா ஆரம்பித்தனர்.

கீர்த்தியின் தந்தை மட்டும் அழைத்தும் வீராப்பாய் வர மறுக்க மற்ற அனைவரும் மகிழ்ச்சியாய் வந்திருக்க தன் பெற்றோரை அழைத்து திறக்க வைத்தவன் தன் மனைவியுடன் உள்ளே நுழைந்தான்.

அதன் பின் வந்த விருந்தினர் அனைவரும் வாழ்த்து கூறி செல்ல நாட்கள் விரைந்தோடி செல்ல புது தொழிலில் முதலில் தினறியவன் பின் மெல்ல சமாளித்து முன்னேறினான்.

தன் மகனுக்கு உதவியாய் திருமுருகனும் ஷோரூம் வர தன் தந்தையின் உதவியை பலமாய் கருதியவன் தன் குடும்பத்திற்கு மூத்தவனாய் அவர்களை காத்து வந்தான்.

சுதியின் கட்டளைப்படி மதிய உணவிற்கு வீட்டிற்கு வர வீகெண்டில் அவளை எங்கையாவது அழைத்துச் செல்ல,அடிக்கடி அகிலன்,எழில்,செழியன் மூவரும் வந்து செல்ல அதை கண்டு பெரியர்வர்கள் அனைவரும் நிம்மதியாக இருக்க சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர்.

எழுந்ததில் இருந்து நிம்மதியின்றி எதையோ நினைத்து தவித்துக் கொண்டிருந்த தன் மனைவியை கண்ட திருமுருகன் கிளம்பிவாறு தன் மனைவியின் அருகில் வந்தார்.

"என்னாச்சு ரத்னா ஏன் ஒரு மாதிரியா இருக்கே..?"

"என்னேன்னு தெரியல காலையிலிருந்து கண்ணு துடிச்சிகிட்டே இருக்கு ஏதோ தப்பு நடக்க போறது மாதிரி தோணுது..."

தன் தாய் கூறியதை கேட்டவாறு வந்த வேந்தன், "அம்மா எதுவும் நடக்காது நீங்க கவலைப்படாதீங்க நிம்மதியா இருங்க நாங்க கிளம்புறோம் சரியா போய்ட்டு வரேன் சுதி,வாங்கப்பா..."என்றவன் தன் தந்தையை அழைத்துக் கொண்டு செல்ல,

"ஒரு நிமிஷம் நில்லு கண்ணா எல்லாரும் கண்ணு உன் மேல தான் இருக்கு..."என்றவர் வத்தல்,உப்பு,மிளகு எடுத்து வந்து சுற்றி போட்டார்.

""கண்ணா பார்த்து பத்திரமா போப்பா..."என்க, அவர்கள் சென்றதும் ஏதோ ஒரு தவிப்புடன் பூஜை அறைக்குள் நுழைந்தார் ரத்னா.

அத்தியாயம் : 14

காலையில் எழுந்ததிலிருந்து மனதிற்குள் ஏதோ ஒரு வித சங்கடம் எழ அருகிலிருந்த கோவிலுக்கு சென்று வரலாம் என்று முடிவெடுத்தார் ரத்னா.

"அம்மாடி கீர்த்தி நான் பக்கத்துல இருக்குற கோவிலுக்கு போய்ட்டு சட்டுன்னு வந்துறேன் நீ கொஞ்சம் பாத்து இருந்துக்கோ..?"

"நானும் வரேன் அத்தை இங்கே சும்மா தானே இருக்கேன் நீங்க போய்ட்டு எனக்காக வேகமாக திரும்பி வருவீங்க அது எதுக்கு வாங்க நானும் வரேன்..." என்க இருவரும் கிளம்ப ஆரம்பித்தனர்.

தன் மருமகளை அழைத்துக் கொண்டு முருகன் கோவிலுக்கு சென்று சாமியை வழிபட்டு அங்கையே சிறிது நேரம் அமர,ரேடியோவில் ஓடிய கந்தசஷ்டி கவசம் அவர் மனதை கலைத்தது.

"சரிம்மா வா போகலாம் மதிய வேற சமைக்கணும்..? வேந்தனும் உங்க மாமாவும் வந்துருவாங்க..?" என்றவர் எழ முயல,

"அத்தை என்னாச்சு..?உங்க மனசுல ஏதோ உறுத்திக்கிட்டு அது என்னது இப்படி மனசுக்குள்ள போட்டு தவிக்காதீங்க அத்தை,என்னாச்சு சொல்லுங்க அத்தை..?"

"நைட் ஒரு கேட்ட கனவு அதையே நினைச்சிக்கிட்டு இருந்தேனா அதான் இப்போ நிம்மதியா இருக்கு..? மறுபடியும் அதை பத்தி பேச வேண்டாம் வா போகலாம்..."என்றவர் அவளை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றார்.

அதே நேரம் இங்கே எதையோ யோசித்தவாறு அமர்ந்திருந்த அகிலனின் முன் வந்து நின்றான் எழிலரசன்.

"என்னாச்சு அகில் ஏதோ பலமா யோசிக்கிற போல..? கார்மெண்ட்ஸ்க்கு ரவுண்ட்ஸ் போகலையா..?"

"போகணும் இங்கே கொஞ்சம் வேலை அதான் வந்தேன்..?

யாழ் இல்லாம வேலை அதிகமா இருக்குற மாதிரி தோணுது..."

"அப்படியெல்லாம் இல்ல நீ அவனை மிஸ் பண்ணுற அதான் அப்படி யோசிக்கிற..?"

"ஓ அப்படியா அப்போ சார் நேத்து எத்தனை மணிக்கு வீட்டுக்கு போனீங்க சொல்லுங்க பார்க்கலாம்..."

"எழில் ரெம்ப நேரம் வொர்க் பண்ணாதே சீக்கிரம் வீட்டுக்கு போ அம்மாவும் தங்கச்சியும் தனியா வேற இருப்பாங்க நேத்து நீ வீட்டுக்கு போகும் போது பதினோரு மணி நீ போன் எடுக்கலைன்னு பயந்து போய் எனக்கு பண்ணுறாங்க..?"

"அக்கௌன்ட்ஸ் வொர்க் இருந்ததுல லேட் ஆகிருச்சிடா..? இன்னைக்கு சீக்கிரம் போய்றேன் போதுமா நண்பா...?" கை எடுத்து கும்மிட்டு தலை வணங்கி கூற,

அவன் நின்ற தோரணையை கண்டவன் அவன் வயிற்றில் குத்தியவாறு, "டேய் என்ன நக்கலா..."என்றான்.

"இல்ல கிண்டல்..."என்றவாறு அகிலனின் தோளில் கை போட, "டேய் எழில் யாராவது வேலை எடுக்கலாம் அநோஸ்மென்ட்ஸ் பண்ணி இன்டர்வியூ எடுத்திரு..."

"நானா அதெல்லாம் என்னால முடியாது உனக்கு என்னைக்கு பிரீயோ அப்போ டேட் பிக்ஸ் பண்ணிறேன் நீயே ஆள எடுத்துக்கோ..."

"என்னடா இது இதுவும் உன் கம்பெனி மாதிரி..." கூற வருவதற்குள், "ஆள விடுடாப்பா முதல எனக்கு வேலை இருக்கு..."என்றவன் நழுவி வெளியே செல்ல சிரித்தவாறு தன் இருக்கையில் அமர்ந்தான்.

லேப்டாப்பை ஆன் பண்ணியவன் மதிய உணவையும் மறந்து நேரம் சென்றதே தெரியாமல் வேலை பார்த்துக் கொண்டிருக்க இடையூறாய் மொபைலில் ஓசை அவனை கலைத்தது.

வேலை செய்து கொண்டிருக்கும் போது எரிச்சல் படுத்திய தன் தாயின் அழைப்பை கன்டு கோவத்துடன் எடுத்தான்.

"என்னாச்சும்மா எதுக்கு என்ன டிஸ்ட்ர்ப் பண்ணுற..?" எரிச்சலுடன் கேட்க,

"மணி என்னேன்னு தெரியுமா இன்னும் நீ மதியம் சாப்பிடல, அப்படி என்னடா வேலை உனக்கு..?இதுல போன் பண்ணுனா எரிச்சல்படுற பெத்த வயிறுடா அங்கே நீ சாப்பிடாமா என்னால எப்படிடா நிம்மதியா இருக்க முடியும் இதுக்கு தான் ஒரு கல்யாணம் பண்ணனும் அவளுக்காகவது சாப்பிட வருவீல..." கோவத்துடன் ஆரம்பித்து புலம்பி தவித்து முடித்தார்.

"சாரிம்மா மறந்துட்டேன் இதோ கொஞ்சம் நேரத்துல வரேன்..."

"ஒன்னு வேண்டாம் டிரைவர் கிட்ட கொடுத்து விட்டிருக்கேன் சாப்பிட்டு வேலையை பாரு..."என்றவர் போனை வைக்க,

"சீக்கிரம் ரெண்டு பேரை வேலைக்கு எடுக்கணும் அப்போ தான் கொஞ்சமாவது நமக்கு நேரம் கிடைக்கும்.."என்றவாறு கழுத்து,கையை முறுக்கி விட்டவன் வாஷ்ரூம் சென்றான்.

சிறிது நேரம் கழித்து வெளியே வந்தவன் மணியை பார்க்க அதுவோ ஐந்து காட்ட, "லஞ்ச் சாப்பிடற நேரமா இது...?"புலம்பியவாறு தன் தாய் கொடுத்து விட்ட உணவை எடுத்து திறந்தான்.

அதற்குள் லேப்டாப் அருகே வைத்த மொபைல் ஓசை எழுப்ப, "இப்போ என்னவோ..."என்றவாறு அதன் அருகில் செல்ல யாழ்வேந்தனின் நம்பரை கண்டவன் யோசனையுடன் எடுத்தான்.

"சொல்லுடா மாப்பிள்ளை..."என்க அதிலிருந்த வந்த செய்தியை கேட்டவன் பதறி அடித்துக் கொண்டு கிளம்பினான்.

அகிலனின் ஓட்டத்தையும் தவிப்பையும் கண்ட எழில் என்னவோ ஏதோ என்று அவன் பின்னே ஓட ஆபீசில் இருக்கும் அனைவர் பார்வையும் அவர்கள் சென்ற திசையை சூழ்ந்தது.

"டேய் என்னாச்சுடா...?"

"நான் சொல்லுறேன் நீ முதல காருல ஏறு எழில்..."என்க, அவன் ஏறி அமர்ந்த அடுத்தநொடி சீட் பெல்ட் அணிவதற்கு கூட நேரமின்றி சிட்டாக பறந்தான்.

அவனது அசுர வேகம் கண்டு எழிலே ஒரு நொடி பயம் கொள்ள யாழ்வேந்தனின் ஷோரூம் முன் வந்து நின்றான்.

தன் நண்பனை கண்டதும் தவிப்புடன் அவர்களை அணைத்துக் கொள்ள எதற்கும் அஞ்சாது அனைவரையும் மகிழ்ச்சியுடன் வைத்துக் கொண்டு தானும் மகிழ்ச்சியுடன் இருக்கும் வேந்தன் இன்று தவிப்புடன் தங்களை அழைத்ததைக் கண்ட இருவரும் அவனை ஆதரவாய் தழுவிக் கொண்டனர்.

"டேய் என்னாச்சுடா எதுக்கு எங்களை வர சொன்னே, நீ ஏன் ஒரு மாதிரியா இருக்கே..?"

"எனக்கு இப்போ என்ன பண்ணனும் தெரியல நான் மும்பை போகணும் அதான் வர சொன்னேன், அங்கே செழியனுக்கு ஆக்சிடென்ட்டாகி ஹாஸ்பிட்டல சேர்த்துருக்காங்க..? இப்போ தான் போன் வந்தது,அப்பா தான் அட்டன் பண்ணுனாரு..."என்றவனின் பார்வை தன் ஷோரூம் வாசலில் உட்கார்ந்து அழுது புலம்பிக் கொண்டிருந்த தந்தையை நோக்கி சென்றது.

"டேய் அகில் நீ முதல வேந்தனை கூட்டிட்டு மும்பை கிளம்பு நான் இவங்கள சமாளிச்சிட்டு வரேன், கவலைப்படாதே வேந்தா நம்ம செழியனுக்கு ஒன்னும் ஆகாது..." எழில் உரைத்த அடுத்தநொடி வேந்தனை அழைத்துக் கொண்டு அடுத்த பிளைட்டிலே கிளம்பினான் அகில்ன்.

சிறிது நேரம் திருமுருகனுக்கு ஆறுதல் கூறிய எழிலரசன் அவரை அழைத்துக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பினான்.

"அப்பா நீங்களே இப்படி அழுதுகிட்டு இருந்தா அம்மாக்கு யாரு ஆறுதல் கூறுவாங்க,அவன் நம்ம செழியன்ப்பா அவனுக்கு ஒன்னு ஆகாது நாங்க

பார்த்துக்கிறோம்..."என்றவன் அவரை சமாதானப்படுத்தி வீட்டுக்குள் அழைத்துச் சென்றான்.

தன் கணவனை அழைத்துக் கொண்டு எழில் வருவதை கண்ட ரத்னா அவரின் முகத்தில் இருக்கும் வித்தியாசம் கண்டதும் பதறினார்.

"என்னங்க என்னாச்சு ஆமா எங்கே வேந்தா..? எழில் என்னாச்சுடா..?" அவரது இந்த கேள்வியிலே திருமுருகன் அழ ஆரம்பிக்க தன் அறையிலிருந்து மெல்ல வெளியே வந்தாள் சுதிகீர்த்தி.

"எழில் அண்ணா என்னாச்சு அவர் எங்கே..?" என்க, மெல்ல கூற ஆரம்பித்தான்.

அவன் கூறியதை கேட்டதுமே செழியா..! கதறியவாறு ரத்னா ஒப்பாரி வைத்து அழ,

"அம்மா என்னது அவனுக்கு சின்ன அடி தான் நல்லா தான் இருக்கான்...?"

"இல்ல நான் என் பையனை பார்க்கணும், என்ன எப்படியாவது கூட்டிட்டு போ எழில்..."

"சரிம்மா நான் கூட்டிட்டு போறேன் ஆனா இந்த நைட் நேரம் வேண்டாம் காலையில போகலாம் சரியா..."என்றவன் அழுது கொண்டிருந்த மூவரையும் விடியும் வரை காத்து நின்றான்.

அதே நேரம் பதட்டத்துடன் ஹாஸ்பிட்டலுக்கு நுழைந்த இருவரும் செழியன் இருக்கும் அறை கேட்டு விசாரித்து செல்ல அவனுக்கோ ட்ரீட்மென்ட் நடந்து கொண்டிருந்தது.

அவனுடன் பணிபுரியும் ஒருவன் அங்கே இருக்க, "நீங்க ரெண்டு பேரும் செழியனோட அண்ணன்னா..?"என்க,

"ஹ்ம்ம் ஆமா அவனுக்கு என்னாச்சு இப்போ எப்படி இருக்கான் டாக்டர் எதுவும் சொன்னாங்களா..?"இருவரும் மாறி மாறி கேட்க,

"இல்ல இன்னும் எதுவும் சொல்லலை நான் தான்

உங்களுக்கு கால் பண்ணுனேன்,பைக்ல போகும் போது போன் பேசிட்டே போயிருப்பான் போல எதிர் வந்த டேன்கர் லாரி மோதிருச்சின்னு சொன்னாங்க அவன் ஐடி வச்சி தான் என்ன கான்டேக் பண்ணுனாங்க,கவலைபடாதீங்க அவனுக்கு ஒன்னும் ஆகாது,இங்கே கூட்டிட்டு வரும் போது கான்சியஸ் இருந்ததுன்னு சொன்னாங்க சரி நான் கிளம்புறேன் என் வைப் மட்டும் வீட்டுல தனியா இருப்பாங்க எதாவதுன்னா கூப்பிடுங்க இதான் என் அட்ரஸ்..."என்றவன் தன் கார்டை கொடுத்து விட்டு காலையில் வருவதாக கூறி விட்டு சென்றான்.

அவன் சென்றதும் இருவரும் டாக்டரின் வருகைக்காக தவிப்புடன் காத்திருக்க எழில் அகிலனுக்கு அழைத்தான்.

"சொல்லு எழில் அம்மா,அப்பாக்கு எந்த பிரச்சனையும் இல்லைல..?"

"இல்ல நான் பாத்துகிறேன் ரெண்டு பேரும் போய்டீங்களா டாக்டர் என்ன சொன்னாங்க..."

"ஆபரேஷன் பண்ணிட்டு இருக்காங்க வெளியே வந்தா தான் கேட்கணும் நான் அப்பறம் கூப்பிடுறேன் நீ வை..."என்றவன் வேந்தனின் அருகில் சென்று ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்.

நேரம் செல்ல ஆபரேஷன் முடிந்து டாக்டர் வெளியே வர இருவரும் அவர் பதிலுக்காக காத்திருந்தனர்.

"டாக்டர் இப்போ என் தம்பிக்கு எப்படி இருக்கு..?"

"அவங்க உயிருக்கு எந்த ஆபத்து இல்ல இப்போதைக்கு,ஆனா தலையில பலமா அடிபட்டுக்குறதுனால கான்சியஸ் வர நேரமாகும் பதினெட்டு மணி நேரம் கழிச்சி தான் என்னால சொல்ல முடியும்..."என்றவர் விலகி செல்ல,

"கவலைப்படாதே வேந்தா அவனுக்கு ஒன்னும் ஆகாது..."என்ற அகில் அவனுக்கு சிறிது நேரம் ஆறுதல் கூறி எழிலுக்கு அழைத்து டாக்டர் கூறியதை கூறினான்.

"அம்மா நம்ம செழியனுக்கு ஒன்னுமில்லை அவன் நல்லா தான் இருக்கானா கண்ணு முழிக்க தான் கொஞ்சம் டைம் ஆகுமாம் நீங்க அழாதீங்கம்மா..?" எழில் கூற,

"இல்லப்பா நான் என் பையனை பார்க்கணும் என்ன காலையில கூட்டிட்டு போப்பா..." அழுகையுடன் பெற்றவர்கள் கதற சரி என்றான்.

மறுநாள் விடிய சுதிகீர்த்தியை அவள் தாயின் வீட்டில் விட்டவன் வேந்தனின் பெற்றோரை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

இதை எதையும் அறியாத வளர்மதியோ இன்னும் இரு தினங்களில் வருவதாய் கூறிய இளாவின் பேச்சை நினைத்துக் கொண்டு சந்தோஷமாக காலேஜ் கிளம்பினாள்.

"அம்மா சாப்பாடு எடுத்து வைம்மா...?" கூந்தலை பின்னலிட்டவாறு கூற, "நீ முதல வா நான் அப்பவே எடுத்து வச்சிட்டேன்..."என்றார் கோமதி.

"கோவிச்சிக்காதீம்மா..."என்றவாறு தன் தாயை பின்னிருந்து அணைக்க,

"முதல சீக்கிரம் சாப்பிடு உங்க அண்ணா இல்ல நீ பஸ்ல தான் போகணும்..."என்றவர் தோசையை தட்டில் போட்டு அவள் கையில் திணித்தார்.

அதை வாங்கி கொண்டு சமையல் மேடையில் ஏறி அமர்ந்தவள், "என்னது இன்னுமா வரல..? அப்படி என்ன வேலையாம் உன் பையனுக்கு நானே கூப்பிடுறேன்..."என்றவாறு தன் மொபைல எடுக்க,

"விடு வளரு அவன் வருவான் எனக்கு போன் பண்ணி சாப்பிட்டேன் சொன்னா..? நீ முதல கிளம்பு..."என்றவர் தன் மகளுக்கு லஞ்ச் ரெடி பண்ணி தந்தார்.

"சரிம்மா நான் போய் என் ப்ராஜெக்ட் வொர்க் நோட் எடுத்துட்டு வரேன்..."என்றவள் அதை தன் அறையில் சென்று எடுத்துக் கொண்டு அவசரமாக கிளம்ப டைனிங் வைத்த மொபைலை மறந்தாள்.

அவள் சென்ற அடுத்த நிமிடமே அதற்கு அழைப்பு வர, "ஐயோ வளரு போனை வச்சிட்டு போய்டாலே இது வேற அடிக்குதே..!இப்போ என்ன பண்ண சரி யாருன்னு கேட்போம்..."புலம்பியவாறு அதை எடுத்தார்.

"வளரு நான் ஆதி (இளாவின் தோழன்) பேசுறேன் உன் கிட்ட கொஞ்சம் பேசணும்..."தவிப்புடன் தன் நண்பனுக்கு நேர்ந்ததை கூற வர,

"யாருப்பா நீ நான் அவ அம்மா பேசுறேன் அவ போனை மறந்து வச்சிட்டு போய்ட்டா...?"

"ஓ அப்படியா சரிம்மா நான் அவ பிரெண்ட் தான் காலேஜ்ல பார்த்துகிறேன் சரிம்மா நான் வச்சிருறேன்..."என்றவாறு தன் மொபலை கட் பண்ணினான்.

சிறு வயதிலிருந்து தன்னுடனே ஓருடல் போல் இருந்தவன் இன்று உடல் முழுவதும் கட்டுகளுடன் சுயவுனவின்றி படுக்கையில் கிடக்க அதை காண முடியாது கதறினான் யாழ்வேந்தன்.

நேரம் செல்ல சென்று கொண்டேருக்க தன் நண்பனின் கண்ணீர் அகிலனையும் கலங்கச் செய்ய, "வேந்தா என்ன இது இன்னும் கொஞ்சம் நேரத்துல அப்பா அம்மா எல்லாரும் வந்துருவாங்க,நீ என்னடானா இப்படி அழுதுகிட்டு இருக்கே...?" கூறி கொண்டிருக்கும் போதே இருவரையும் அழைத்துக் கொண்டு எழில் வர,

அசைவின்றி படுத்திருந்த தன் மகனை கண்டதும், "கடவுளே எதுக்கு எங்களுக்கு இப்படி ஒரு சோதனையை தரே என் பையன் உயிரா காப்பாத்துப்பா..."பெற்றவர்கள் இருவரும் கதற காண முடியாது வெளியேறினான் யாழ்வேந்தன்.

ஈவினிங் காலேஜ் முடிந்து வந்தனாவுடன் வளர்மதி வர அவள் முன் வந்து நின்றான் ஆதித்தியா.

அவனை கண்டதும் சந்தோஷமாக, "ஆதி அண்ணா, நீங்க என்ன இங்கே யாராவது பார்க்க வந்தீங்களா..?"கேட்க,

"ஹ்ம்ம் ஆமா நீ என் போனை வீட்டுல வச்சிட்டு வந்தே,

நான் உன்கிட்ட ஒரு முக்கியமான விசியம் சொல்லணும்..."தவிப்புடன் வேகமாக கூற வர,

அவன் குரலில் வித்தியாசத்தை கண்டவள் ஏதோ சரியில்லாமல், "ஆதி அண்ணா என்னாச்சு..?என்றாள்.

"நம்ம செழியனுக்கு ஆக்சிடென்ட்டாகி ஹாஸ்பிட்டல்ல அம்மிட் பண்ணிருக்காங்க வளரு, உங்க அண்ணன் கூட இப்போ அங்கே தான் இருக்காங்க..."தலையில் அடித்துக் கொண்டு கூற, அதை கேட்டவளோ அப்படியே அங்கையே மயங்கி சரிந்தாள்.

அத்தியாயம் : 15

தன் அறையில் தன்னவனின் நினைவுடன் அழுது கரைந்து கொண்டிருந்த வளர்மதியை கண்ட வந்தனா ஆறுதல் கூற முயன்று தோற்றாள்.

"வளரு இங்கே பாரு நான் மறுபடியும் சொல்லுறேன் உன்னோட செழியனுக்கு ஒன்னும்மாகாது அவனுக்கு சீக்கிரம் சரியாகிடும் இப்படியே நீ அழுதுகிட்டு இருந்தா அம்மாக்கு சந்தேகம் வந்திரும் வளரு..."

"இளாவை நான் இப்பவே பார்க்கணும் என்னால அவனை பார்க்காம இருக்க முடியல, எனக்கு என் இளா வேணும் நான் போகணும்..."முழங்காலில் தன் முகத்தை புதைத்து அழுது கொண்டிருந்தவள் திடிரெண்டு எழுந்து செல்ல முயல அவளை தடுத்து நிறுத்தினாள் வந்தனா.

வளர்மதியின் முகத்தை கண்டவள் ஆறுதலாய் அவளை அணைத்துக் கொள்ள தன் தோழியின் மடியில் சாய்ந்து அழுது கரைந்தாள்.

"அம்மாடி வளரு..." கோமதியின் குரலில் பதறி அவளை தன்னிடமிருந்து எழுப்பினாள் வந்தனா.

"வளரு அம்மா வராங்க நீ முதல அழுறதா நிறுத்தி கண்ணை துடை..."என்றவள் அவள் கண்ணீரை துடைத்து விட, கோமதி உள்ளே வர அதே நேரம் குளியலறையில் நுழைந்தாள் வளர்மதி.

"எங்கம்மா வளரு, பாத்ரூம்ல இருக்காளா..? இந்தாங்க ரெண்டு பேரும் இந்த டீயை குடிங்க நான் சாப்பிடா ஏதாவது செய்யுறேன்..."

"ஹ்ம்ம் வேண்டாம்ம்மா பரவாயில்லை..."

"சரி இன்னைக்கு காலேஜ் என்ன சீக்கிரம் முடிச்சிருச்சா அதுக்குள்ள வந்துடீங்க..?"

"ஆமா சீக்கிரம் முடிஞ்சிருச்சி சரிம்மா நான் வந்து ரெம்ப நேரமாச்சி கிளம்புறேன்..."என்றவள் அதற்கு மேல் தான் அங்கு இருந்தால் தானே எதாவது உளறிவிடுவோம்மோ என்ற பயத்தில் பதறி அடித்துக் கொண்டு வெளியேறினாள்.

"என்னாச்சு இந்த பிள்ளைக்கு ஏன் ஒரு மாதிரியா பதட்டமா இருக்கா...? சரி நமக்கு என்ன அம்மாடி வளரு வந்து இந்தா டீயை குடுச்சிரு.." என்றவர் தன் வேலையை பார்க்கச் சென்றார்.

இருட்டத் தொடங்க கோமதி வற்புறுத்தியும் தலைவலி என கூறி தன் அறையிலே முடங்க, "என்ன புள்ளைகளோ ரெண்டு பேரும்..." புலம்பியவாறு சென்றார்.

இளாவை காண சென்ற ஆதியிடம் இருந்து அழைப்பு வராதா என்ற நினைப்பில் மொபைலை பார்த்தவாறு ஓய்ந்து போனாள்.

நேரம் நள்ளிரவை கடந்து செல்ல திடிரெண்டு கேட்ட ஓசையில் அமர்ந்தவாறு உறங்கிய வளர்மதி விழிக்க ஆதியிடமிருந்து அழைப்பை கண்டதும் அடுத்த நொடி அதை உயிர்ப்பித்தாள்.

"ஆதிண்ணா இளாக்கு எப்படி இருக்கு நான் அவன் கிட்ட பேசணும் ப்ளீஸ் அவன் கிட்ட கொடுங்க நான் அவன் குரலை கேட்கணும் அவன் எப்படி இருக்கான்னு தெரிஞ்க்சிடனும் ப்ளீஸ் அண்ணா ப்ளீஸ்..." அழுது புலம்பி கதற,

"மதி..."என்ற இளாவின் உருகிய அழைப்பில் ஒரு நொடி உலகமே ஸ்சம்பித்தது போல் அப்படியே தன் புலம்பலை

நிறுத்தினாள்.

அவன் அழைப்பு மட்டுமே தன்னுள் ஒலிக்க, "வளரு லைன்ல தான் இருக்கையா..?,வளரு வளரு..."என்ற ஆதியின் குரலில் தன்னிலைக்கு வந்தவள்,

"இளா..!இளா..! அவன் கிட்ட குடுங்க அண்ணா..."

"அவன் மயக்கத்துக்கு போய்ட்டான் இப்போ ரெம்ப நல்லா இருக்கான் நான் வர்ற கொஞ்சம் நேரம் முன்னாடி கூட கண் முழிச்சானாம் நீ கவலைப்படாதே வளரு, நாங்க எல்லாம் இவனுக்கு துணையா இருக்கோம்,சரி உங்க அண்ணா வர்றான் நான் வைக்கிறேன்..."என்றவன் போனை வைக்க தன்னவன் குரலை கேட்ட பிறகே நிம்மதியாக படுக்கையில் சாய்ந்தாள்.

மறுநாள் விடியல் இளாவின் அழைப்பு மட்டுமே இன்னும் செவியில் ஒலிக்க அதே நினைவுடன் எழுந்து காலேஜ் செல்ல கிளம்பி சோர்ந்த நடையுடன் வெளியே வந்தாள்.

அவளுக்கு காலை உணவினை கோமதி எடுத்து வைத்துக் கொண்டிருக்க பூஜை அறையின் முன் சென்று நின்றவள், "பகவானே நான் உன்கிட்ட கெஞ்சி கேட்டுக்கிறேன் என்னோட இளாக்கு எதுவும் ஆக கூடாது, எனக்கு இளாவை பார்க்கணும் ஏதாவது பண்ணுங்க ப்ளீஸ்...?" விழிகளில் கண்ணீர் வர அதை கட்டுபடுத்திக் கொண்டு வேண்டினாள்.

"என்னாச்சு இந்த புள்ளைக்கு..."யோசித்தவாறு கோமதி சாப்பாடு எடுத்து வைக்க அதே நேரம் வீட்டின் லேன்லைன் ஓசை எழுப்பியது.

"வளரு வந்து சாப்பிடு..."என்ற கோமதி போனை எடுத்தார்.

"ஹ்ம்ம் சொல்லுப்பா எழில்..?"என்ற குரலில் டைனிங் டேபிள் அருகே சென்றவள் அப்படியே நின்றாள்.

"எங்கேப்பா இருக்கே..? எப்போ வருவே..? என் குரல் ஒரு மாதிரி இருக்கு..? என்னாச்சுடா கண்ணா என் அழுகுற..?" கோமதி பதறி கேட்க, அதே நேரம் தன் கையை டேபிளில் இறுகப் பற்றிக் கொண்டு நின்றாள் வளர்மதி.

அவன் என்ன கூறினானோ அதை கேட்ட கோமதி, "ஐயோ பகவானே உனக்கு மனசாட்சியே இல்லையா..?" கதற, அதை கேட்ட அடுத்தநொடி தன் அறைக்குள் புகுந்தாள் வளர்மதி.

"துறு துறு சுத்திட்டு இருந்தானே அவ உயிரை போய் பறிச்சிட்டானே அந்த கடவுள்..? சரிப்பா பார்த்து பத்திரம்மா எல்லாரையும் கூட்டிட்டு வா..?"என்றவர் கலங்கி கொண்டிருந்த தன் மகனிடம் சிறிது நேரம் ஆறுதலாய் பேசி விட்டு போனை வைத்தார்.

"வளரு நம்ம..."என்றவாறு திரும்பி தன் மகளை காண அவளோ காணாமல் போயிருக்க அவள் அறை நோக்கிச் சென்றார்.

"அம்மாடி வளரு வளரு..."கத்த

"ம்ம்..."என்ற குரல் மட்டும் வர,

"நான் போய் கடைசியா ஒரு தடவை அந்த புள்ளையை பார்த்துட்டு வரேன், நீ பார்த்து இருந்துக்கோ, கூட துணைக்கு வந்தனா வர சொல்லிக்கோம்மா..? நான் போய்ட்டு வரேன்..."முந்தானையால் முகத்தை பொத்திக் கொண்டு அழுகையுடன் கூறிக் கொண்டு சென்றார்.

இளஞ்செழியன் இறந்த செய்தி சுதிகீர்த்தியின் வீடு அவன் தோழர்கள் என அனைவர்க்கும் தெரிய வர அடுத்தநொடி அவன் வருகையை எதிர்பார்த்து அவன் வீட்டின் முன் நின்றனர்.

நேரம் செல்ல இளஞ்செழியனின் உடலை கொண்டு வர ரத்னா, திருமுருகன் இருவரும் தலையை அடித்துக் கொண்டு அழ, அவர்கள் இருவரையும் தங்கினான் அகிலன்.

அதன் பின் செய்ய வேண்டிய சடங்குகள் அனைத்தையும் வேந்தனை ஆறுதல்ப்படுத்தி அகில்,எழில் இருவரும் செய்ய வைத்தனர்.

அந்தே வீடே அழுகையில் கரைய யாருக்கு யார் ஆறுதல் கூறுவது என தெரியாமல் புலம்பி அழுது கரைந்து

கொண்டிருந்தனர்.

அன்றைய நாலும் எப்படியே செல்ல மறுநாள் அவன் அஸ்தியை யாழ்வேந்தன் வீட்டிற்கு கொண்டு வர அதை கண்ட ரத்னா நெஞ்சை பிடித்துக் கொண்டு மயங்கி சரிந்தார்.

மூச்சியற்று கிடந்த தன் தாயை கண்ட பதறிய யாழ்வேந்தன் அடுத்தநொடி ஹாஸ்பிட்டலில் சேர்த்தனர்.

திருமுருகன் இப்போதும் புலம்பி கொண்டிருக்க, சுதிகீர்த்தியோ தன்னால் எதுவும் செய்ய முடியவில்லையே என்ற கவலையில் தன் மாமனாரின் அருகே அமர்ந்திருந்தாள்.

"டேய் என்னடா இது நீயே இப்படி அழுதுட்டு இருந்தா அப்பாக்கு யாரு ஆறுதல் சொல்லுறது..?அம்மாக்கு ஒன்னும்மாகாது வேந்தா..."

"ஆமாடா வேந்தா அகில் சொல்லுறதும் சரி தான் முதல அப்பாவையும், கீர்த்தியையும் பாரு எப்படி இருக்காங்கன்னு, நீ முதல நல்லா இருந்தா தான் அவங்கள பாத்துக்க முடியும், நடந்ததை என்னைக்கும் மறக்க முடியாது ஆனா முயற்சி பண்ணு வேந்தா..." தோழர்கள் இருவரும் ஆறுதல் கூற சற்று தெளிய ஆரம்பித்தான்.

அதன் பின் நேரம் செல்ல டாக்டர் வர "டாக்டர் அம்மா இப்போ எப்படி இருக்காங்க, எதுவும் சீரியஸ் இல்லியே..?" என்க ரத்னாவிற்கு முதல் அட்டேக் வந்திருப்பதாக கூறினார்.

"இப்போ பயப்பிட தேவையில்லை அவங்க நல்லாயிருக்காங்க ஆனா இனிமே நீங்க நல்லா கவனிச்சிக்கோங்க, இதுக்கு அப்பறம் இப்படி ஏதாவது நடந்த அவங்க உயிர்க்கே ஆபத்தா வரும், நீங்க போய் பாருங்க..."

"சரி டாக்டர்..."என்ற யாழ் அடுத்த நொடி தன் தாயை காண விரைந்தோட அவன் பின்னே மற்றவர்களும் சென்றனர்.

"அவரோ அழ்ந்த உறக்கத்தில் இருக்க எழில் அப்பாவையும், கீர்த்தியையும் வீட்டுக்கு கூட்டிட்டு போடா நான் அம்மாவை

பார்த்துகிறேன்..." யாழ்வேந்தன் கூற, சரி என்ற எழில் இருவரையும் அழைத்துச் செல்ல முயல சுதிகீர்த்தியோ வர மறுத்தாள்.

"மாமாவை மட்டும் கூட்டிட்டு போங்க கொஞ்சம் நேரம் ரெஸ்ட் எடுக்கட்டும், நான் இங்கையே இருக்கேன் அண்ணா ப்ளீஸ்..."என்க, வேந்தனும் மறுப்பு சொல்லாமல் இருக்க திருமுருகனை மட்டும் அழைத்துக் கொண்டு சென்றான்.

அகிலும் சாப்பிட ஏதாவது இருவர்க்கும் வாங்க வெளியே செல்ல தன் மனைவியின் மடியில் தலை சாய்ந்தான் யாழ்வேந்தன்.

சிறிது நேரம் அவன் தலையை வருடிக் கொடுத்தவாறு இருந்தவள், "எல்லாம் சீக்கிரமே சரியாகிடும் யாழ், உங்க தம்பி என்னைக்கும் நம்ம கூடவே தான் இருப்பாரு..." என்க அவனோ அதை கேட்டவாறு அமைதியாக கண் மூடினான்.

அதே நேரம் வேந்தனின் தந்தையை அழைத்துக் கொண்டு எழில் வீட்டிற்குள் எழிலின் தாய் தண்ணீர் தர அதை வாங்கி திருமுருகனிடம் கொடுத்தான்.

"அப்பா நீங்க முதல இந்தா தண்ணீயா குடிங்க...?"என்க அவரோ மறுக்க வற்புறுத்தி குடிக்க வைத்து அவர் அறையில் சென்று படிக்க வைத்தான்.

வெளியே வந்தவன், "என்னமா நீங்க இங்கே இருக்கீங்க..? வீட்டுக்கு போகலையா...? வளரு ரெண்டு நாள்ல தனியாவா இருக்கா..?" என்க,

"பக்கத்து வீட்டுக்கு லட்சுமி கிட்ட சொல்லிட்டு தான் வந்திருக்கேன், கொஞ்சம் நேரத்திற்கு முன்னாடி தான் வந்தவங்க எல்லாரும் போனாங்க, இப்போ தான் வீட்டெல்லாம் அலசி விட்டேன். இப்போ மதினி (வேந்தனின் தாய்) எப்படிப்பா இருக்கு..?"

"நல்லா இருக்காங்கம்மா நீங்க முதல வீட்டுக்கு போங்க இங்கே நான் பார்த்துக்கிறேன்..."என்க சரி என்றவாறு கிளம்பினார் கோமதி.

இவர்கள் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த திருமுருகன் சொந்தக்காரர்கள் வந்து துஷ்டி விசாரிச்சு செல்ல யாரென்று தெரியாத இவர்கள் இருவரையும் தங்களுக்கு உதவியதை நினைத்து மெல்ல கண் மூடினார்.

இருவருக்கும் உணவு வாங்கிக் கொண்டு அறைக்குள் நுழைய கீர்த்தியின் மடியில் கண் மூடி சாய்ந்திருந்த வேந்தனை பார்த்ததும் அப்படியே வெளியே சென்றான்.

நேரம் செல்ல எழுந்த வேந்தன், "சுதி நீ கொஞ்சம் நாள் உங்க அம்மா வீட்டுல இருக்கையா..?"என்க,

"நீங்க இந்த நிலைமையில இருக்கும் போது நான் உங்கள விட்டு போக மாட்டேன்..." அவன் கைகளை பிடித்துக் கொண்டு கூற,

"ப்ளீஸ் சுதி கொஞ்சம் நாள் எனக்காக நான் தினமும் வந்து பார்க்குறேன் ப்ளீஸ்..." தன் மனைவியிடம் கெஞ்ச வேறு வழியின்றி அமைதியாக தலை அசைத்தாள்.

"சரி நீ இங்கையே இரு கொஞ்சம் நேரம் நான் போய் அகிலனை கூட்டிட்டு வரேன்..."என்றவன் வெளியே செல்ல அங்கிருந்த சேரில் பார்சலை வைத்தவாறு அமர்ந்திருந்தான்.

"அகில்..."

"வாடா இந்தா இதுல சாப்பாடு இருக்கு, இப்போ தான் எழில் போன் பண்ணுனா அப்பா சாப்பிட்டு தூங்கிட்டறாம், நீ சாப்பிடு நான் வேணா அம்மா வர சொல்லவா அத்தைக்கு துணையா இருக்கா..?"

"இல்ல நான் பார்த்துகிறேன் நீ சுதியை உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போடா அவ கொஞ்சம் நாள் அங்கே இருக்கட்டும் ப்ளீஸ்...."

"சரி நாங்க அவளை பத்திரமா பார்த்துக்கிறோம், நீ முதல சாப்பிடு நான் போய் அவளை வீட்டுல விட்டுட்டு வந்துறேன்..."

"இல்ல வேண்டாம் நான் பார்த்துகிறேன் என்னால உனக்கு

நாலு நாள் அலைச்சல்..."

"டேய் வேந்தா என்ன பேசுற நீ என் பிரெண்டுடா உனக்காக நான் என்ன வேணாலும் செய்வேன்..." வேந்தனை அணைத்துக் கொண்டு கூற, "தேங்க்ஸ்டா அகில்..."என்றான்.

அதன் பின் சுதியை அழைத்துக் கொண்டு அவர்கள் வீட்டிற்கு செல்ல ஆரம்பித்தான்.

ஹாலில் உள்ள சோபாவில் அமர்ந்து தன் மொபைலை நோண்டிக் கொண்டிருந்த எழிலுக்கு தன் தாயிடம் இருந்து அழைப்பு வர மணி பத்தை கடந்திருக்க யோசித்தவாறு அதை எடுத்தான்.

"என்னம்மா என்னாச்சு...? நீங்க வீட்டுக்கு போய்டீங்களா..? சாப்பிட்டு தூங்குங்க நான் காலையில வரேன்..." என்க,

அவர் அதற்கு என்ன கூறினாரா அதை கேட்ட அடுத்தநொடி, "என்னமா சொல்லுறீங்க..? நான் வரேன் முதல நீங்க பதட்டப்படமா இருங்க..?"என்றவன் வேந்தனின் பைக்கை எடுத்துக் கொண்டு தன் வீட்டிற்கு கிளம்பினான்.

அத்தியாயம் : 16

தன் மகனின் வருகைக்காக பதட்டத்துடன் கோமதி காத்திருக்க அவரை தவிக்க விட மனமில்லாமல் சீக்கிரமே வீடு வந்து சேர்ந்தான் எழிலரசன்.

"வளருக்கு என்னாச்சு என்னமா...?" என்றவாறு பைக்கை நிறுத்தியவன் அவள் அறை நோக்கி செல்ல,

"என்னேன்னு தெரியலப்பா நான் வீட்டுக்கு வந்து பார்க்குறேன் நேத்து காலையில நான் போகும் போது வச்ச பொருள் எல்லாம் அப்படியே இருக்கு, பக்கத்து வீட்டு லட்சுமி உங்க பொண்ணு வெளியவே வரலைன்னு வேற சொல்லுது எனக்கு ரெம்ப பயமா இருக்குப்பா கதவை தட்டுனா வேற துறக்க மாட்டிக்கா...?"என்க,

"பொறும்மா நீ முதல பயப்பிடமா இரு..."என்றவன் அவள் அறை டோரை தட்டி அவளை அழைக்க பதில் இல்லாமல்

போக வேறு வழியின்றி கதவினை உடைக்க ஆரம்பித்தான்.

போராடி ஒரு வழியாக டோரை உடைத்தவன் உள்ளே செல்ல அவள் இருந்த நிலையை கண்டு பதறினார்.

"அம்மாடி வளரு..."என்றவாறு கோமதி அவளை உலுக்க, உடல் முழுவதும் தீயாய் எரிய, தலை மூடி கலந்து,முகத்தில் கண்ணீர் தடம் பதிந்து சிவந்து போயிருக்க கோமதியோ கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்தார்.

"ஐயோ என் பிள்ளைக்கு என்னாச்சு இப்படி மூச்சு பேச்சு இல்லாம கிடக்குறாலே..?"கோமதி புலம்ப,

அருகிலிருந்த தண்ணீரை எடுத்து அவள் முகத்தில் எழில் தெளிக்க புருவம் மட்டும் சுருங்க, "வளரு இங்க பாரு வளரு வளரு..." அவள் கன்னம் தட்டி எழுப்பினான்.

"சரிம்மா நீங்க கிளம்புங்க ஹாஸ்பிட்டல் போகலாம் நான் போய் ஆட்டோ கூட்டிட்டு வரேன்..." என்றவன் எழுந்து செல்ல தன் மகளின் நிலையை எண்ணி கலங்கினார்.

ஆட்டோவை அழைத்து வந்தவன் தன் தங்கையை தூக்கி கொண்டு ஹாஸ்பிட்டல் விரைந்தான்.

வேந்தனின் தாய் இருந்த அதே ஹாஸ்பிட்டலில் அவளையும் சேர்க்க பரிசோதிக்க ஆரம்பித்தனர்.

மறுநாள் மெல்ல கண் விழித்த கோமதி தன் முன் அமர்ந்திருந்த வேந்தனை கண்டதும் செழியனின் நினைப்பு வர அவனை நோக்கி கை நீட்ட ஆரம்பித்தார்.

தன் தாயை விழித்ததை கண்டதும் அருகில் வர, செழியன் வருவது போல் தோன்ற அவர் எதையோ நினைக்கிறார் என்பதை உணர்ந்த நர்ஸ், "அம்மா நீங்க ஏதாவது நினைச்சு உங்க உடம்ப கெடுத்துக்காதீங்க..? நீங்க முதல ரெஸ்ட் எடுங்க.." என்றவள் அவருக்கு மயக்க ஊசி போட செழியா என்ற உளறலுடன் மயக்கத்திற்கு சென்றார்.

அவர் அருகில் அமர்ந்து சிறிது நேரம் தலையை வருடிக் கொடுக்க, "சார் இந்த மருந்தெல்லாம் கொஞ்சம் வாங்கிட்டு வாங்க..."என்க சரி என்றவாறு வெளியே வந்தான்.

அதே நேரம் அகிலும்,வேந்தனின் தந்தையும் வர, "என்னடா எங்கே போற..?" என்றான் அகிலன்.

"மருந்து வாங்க..."என்க,

"நீ கொடு நான் வாங்கிட்டு வரேன் நீ அப்பாவை உள்ளே கூட்டிட்டு போ..."

"இருக்கட்டும் நான் வாங்கிறேன் நீ ஆபீஸ் போ.."

"அதெல்லாம் போகலாம் அப்பறம், நீ சொன்னா கேட்க மாட்ட கொடு முதல..."என்றவன் அவன் கையில் வைத்திருந்த சீட்டினை வாங்கிக் கொண்டு கீழிறங்கினான்.

அவன் கையில் வைத்திருந்த சீட்டினை பார்த்தவாறே ரிசெப்ஷன் அருகே அகிலன் வர அதே நேரம் தன் தோழி இருக்கும் அறையை பதட்டத்துடன் விசாரித்து கொண்டிருந்தாள் வந்தனா.

அவர்கள் கூறியதும் வேகமாக திரும்பி நடக்க எதிரே வந்த அகிலனின் மீது மோதி நிலை தடுமாறினாள்.

"யே பார்த்து நடந்து வர மாட்டியா..?" கோவத்துடன் அகிலன் கூற, கிழே விழுந்த தன் பர்சினை எடுத்தவாறே, "ஐ ஆம் ரியலி வெரி வெரி சாரி சார்..."என்றாள்.

நிமிர்ந்தவளின் முகத்தில் இருந்த தவிப்பு அவனோ என்னவோ செய்ய, "இட்ஸ் ஓகே..." என்றதும் வேகமாக படியை நோக்கி விரைந்தாள்.

அவளை கண்டவாறு, "என்ன எமர்ஜென்சியோ..." நினைத்தவன் தன் வேலையை பார்க்கச் சென்றான்.

வெளியே சென்று தேவையான மருந்துகளை வாங்கிக் கொண்டு ஹாஸ்பிட்டல் மாடியில் ஏற அதே நேரம் ஓர் அறையிலிருந்து எழிலரசனுடன் பேசிக் கொண்டு வெளியே வந்தாள் வந்தனா.

அவனோ இருவரையும் பார்த்துக் கொண்டி அப்படியே நிற்க எதார்ச்சியாக நிமிர்ந்த எழில் தங்களையே பார்த்துக் கொண்டிருந்த அகிலனை கண்டு அவன் அருகில் வந்தான்.

"வாடா எப்போ வந்தே..?"

"இப்போ தான்..."என்றவனின் பார்வையோ அவன் அருகில் நின்றிருந்த வந்தனாவின் மீதிருக்க அதை கண்ட எழிலா அவளை அறிமுகப்படுத்தி வைத்தான்.

"அகில் இவ பேரு வந்தனா என் தங்கச்சி கிளாஸ்மேட்..."என்றதும் அவனோ சிறிதாக புன்னகைக்க, "சரி எழில் அண்ணா நான் கிளம்புறேன் நீங்க பேசுங்க..."என்றவள் நடக்க ஆரம்பித்தாள்.

அவள் சென்றதும், "இவங்க ஏன் இங்கே வந்துட்டு போறாங்க..?"என்க,

"வளருக்கு திடிருன்னு உடம்பு சரியில்லை இங்கே தான் நேத்து நைட் வந்து சேர்த்தோம் அதான் பார்த்துட்டு போக வந்தா...?"

வளர் என்றதும் ஒரு நொடி யோசித்தவன் அதன் பின் அவன் தங்கை பெயர் என்று நினைவு வர, "ஏன் என்னாச்சு உன் தங்கச்சிக்கு..? இப்போ எப்படி இருக்கா...?" என்றான்.

"இப்போ கொஞ்சம் பரவாயில்லை வைரல் பீவர்டா, வா இந்த ரூம்ல தான் அம்மா இருக்காங்க..." என்றவன் அகிலை அழைத்துக் கொண்டு வளர்மதி இருக்கும் அறைக்குள் நுழைந்தான்.

தன் மகளை பார்த்தவாறு அமர்ந்திருந்த கோமதியின் அருகில் வந்தவன், "அம்மா அகில் வந்துருக்காம்மா..."என்க, திரும்பி அவனை கண்டான்.

நேற்று வேந்தனின் வீட்டில் வைத்து பேச முடியாததை நினைத்தவன், "எப்படிம்மா இருக்கீங்க நல்லா இருக்கீங்களா..?"என்றான்.

"நல்லா இருக்கேன்ப்பா, திடீருன்னு வளருக்கு உடம்பு சரியில்லை..."என்றவரின் பார்வையோ தன் மகளின் மீதிருக்க அதை தொடர்ந்து அவனின் பார்வையும் அவள் மீது பதிந்தது.

வாடி வதங்கிய மலரை போல் இருந்த வெளிறிய முகத்தை

காண, கடைசியாக வேந்தனின் திருமணத்தில் வைத்து பார்த்ததற்கும் இப்போதும் இருக்கும் நிலையை பார்த்தவனுக்கு ஏதோ செய்ய பரிதவிப்புடன் நின்றிருந்தான்.

அவளையே பார்த்துக் கொண்டிருக்க வேந்தனின் அழைப்பு அவனை நினைவுக்கு இழுத்து வந்தது.

வேந்தனின் அழைப்பை பார்த்தவன், "சரிடா வேந்தன் கால் பண்ணுறான் நான் கிளம்புறேன் நீ இங்கே பார்த்துக்கோ..? அம்மா போய்ட்டு வரேன்..." கூறி விட்டு கிளம்பினான்.

அதன் பின் வாங்கிய மருந்துகளை வேந்தனிடம் வந்து தர, "என்னடா இவ்வளோ நேரமாச்சு..?"என்க,

"எழில் தங்கச்சி உடம்பு சரியில்லை இங்கே அட்மிட் பண்ணிருக்காங்க அதான் வரும் போது பார்த்துட்டு வந்தேன்..."

"இப்போ எங்கே இருக்காங்க..?" வேந்தன் கேட்க அவர்கள் இருக்கும் அறையை கூறியவன் சிறிது நேரம் இருந்து தன் அலுவலகத்திற்கு கிளம்பினான்.

ஒரு வாரம் சென்றிருக்க இப்போது ரத்னா,வளர்மதி இருவரும் ஓரளவு தேறியிருக்க அவரவர் வீட்டிற்கு அழைத்து வந்தனர்.

ரத்னாவோ தன் மகனை இழந்த தவிப்பில் இருக்க, வளர்மதியோ தன் மனம் கவர்ந்தவனை இழந்த தவிப்பில் இருந்தாள்.

சுதியை பிரிந்து இருக்க முடியாமல் அவளை சீக்கிரமே வேந்தன் அழைத்து வர தன் அத்தையை தனியாக இருக்க விடாமல் பார்த்துக் கொண்டாள்.

வேந்தனின் மனதில் இருக்கும் கவலைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக கீர்த்தி அழித்துக் கொண்டே வர, ரத்னா, திருமுருகன் இருவரும் மாறியிருக்க, அதே நேரம் உயிரற்ற ஜடம் போல் வலம் வந்தாள் வளர்மதி.

வளர்மதியின் நிலையை கண்டு பெற்றவளும், உடன் பிறந்தவனும் வருந்த அவளிடம் பேச முயற்சி செய்து

தோற்று போய் கொண்டிருந்தனர்.

யாரிடமும் பேசமால் காலேஜ் முடிந்ததும் தன் அறைக்குள் அடைந்து கொள்வது, தங்களுக்காக மட்டுமே அவள் சாப்பிடுவது அனைத்தையும் கண்ட எழிலரசன் வந்தனாவிடம் பேச நினைத்தான்.

மறுநாளே தன் தங்கையை பற்றி கேட்க அவளோ தனக்கு தெரியாது என்று மறுக்க வேறு வழியின்றி அவள் போக்கிலே விட ஆரம்பித்தான்.

மாதங்கள் ஓட வளர்மதி தன் காலேஜ் படிப்பை முடித்தாள்.

டைனிங் டேபிளில் அமர்ந்து காய்கறிகளை வெட்டிக் கொண்டிருந்த வளர்மதியின் அருகில் வந்து அமர்ந்த கோமதி தன் மகளிடம் பேச ஆரம்பித்தார்.

"அம்மாடி வளரு எப்படிம்மா இருக்கே...?"

"என்னமா இது தினமும் என்ன பார்த்துட்டு தானே இருக்கே, அப்பறம் ஏன் இப்படி கேட்குற..?"

"இந்த நாலு மாசம்மா நீ சரியா பேசுறது இல்லைலே அதான்ம்மா கேட்டேன், உனக்கு ஏதாவது பிரச்சனை இருந்தா அம்மா கிட்ட சொல்லுடா கண்ணா..."

தன் தாய் கூறியதை கேட்டவள் மனதிற்குள் என்னவோ செய்ய, "எனக்கு எந்த பிரச்சனையும் இல்ல,காலேஜ் முடிய போகுது பிரெண்ட்ஸ் எல்லாம் விட்டு பிரிய போறேன், ப்ராஜெக்ட் வொர்க், செம் ரிசல்ட், இதுக்கு அப்பறம் என்ன பண்ண, இதான் என் கவலை, பிரச்சனை வேற எதுவும் இல்ல, நீயா கற்பனை பண்ணிக்காதேம்மா நான் போய் குளிச்சிட்டு வரேன்..."என்றவள் தன் அறைக்குள் நுழைந்தார்.

அறைக்குள் நுழைந்தவளோ அழுகை சத்தம் வெளியே கேட்டதவாறு வாயை மூடிக் கொண்டு இளஞ்செழியனின் நினைவில் அழுது கரைந்தாள்.

தன் வேலையை முடித்துக் கொண்டு வந்த எழிலிடம் இரவு உணவை பரிமாறியவாறு அவள் கூறிய அனைத்தையும்

கூறி முடித்தார்.

"அவ தான் படிச்சி முடிச்சிட்டாலே நான் வேணா நம்ம ஊர் ஆளுங்க கிட்ட சொல்லி மாப்பிள்ளை பார்க்க சொல்லட்டா..."

"என்னமா இது இப்போ தானே படிச்சி முடிச்சிருக்கா, மேல படிக்கணும் நினைச்சா படிக்கட்டும் இப்போ கல்யாணம் வேண்டாம் அவ சின்ன பொண்ணு..."என்றவன் மனதிற்குள் எதையோ நினைத்தவாறு தன் அறைக்குச் சென்றான்.

தன் முன் எதையோ யோசித்தவாறு வந்து நின்ற எழிலை கண்ட அகிலன், "என்னடா எழில் என்ன யோசிச்சிட்டு இருக்கே...?" என்றான்.

"நம்ம கொடுத்தா அட்வெர்டீஸ்மென்ட் பார்த்து இண்டர்வியூ எல்லாரும் வந்திருக்காங்க..."

"சரி ஓகே ஒரு டென் மினிட்ஸ் கொஞ்சம் வொர்க் இருக்கு அதை மட்டும் முடிச்சிறேன், அதுக்குள்ள எல்லாரோட டீடைல்ஸ் எல்லாம் கொண்டு வந்து தா எழில்..."

"அதெல்லாம் ரெடியா தான் இருக்கு, எனக்கு ஒரு ஹெல்ப் வேணும் பண்ணுவியா..?"

தன் லேப்டாப்பில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து எழிலை கண்டவன், "என்னடா சொல்லு..." என்றான்.

"வளருக்கு ஒரு ஜாப் வேணும்டா..?அது இங்கே கிடைச்சா நல்லா இருக்கும் நினைக்கேன், என்னனேனு தெரியல அவளை தனியா விட மனசு வரல, கொஞ்சம் நாளா வேற அவ சரியே இல்ல..."

"டேய் இதுக்கு நீ என்கிட்ட கேட்கணும் அவசியமே இல்ல நீ முதல நாளைக்கு அவளை கூட்டிட்டு வா..."

"இல்லடா உங்க அப்பா..."என்று இழுக்க,

"டேய் உனக்கு தான் எங்க அப்பாவை பத்தி தெரியும்ல,நானும் கீர்த்தியும் ஏதாவது நினைச்சா அதுக்கு

தடையா இருக்கிறதே அவர் தான், அதெல்லாம் அப்பறம் பார்த்துக்கலாம் நீ கூட்டிட்டு வா..."என்க சரி என்றவாறு வெளியே சென்றான்.

அதன் பின் இன்டெர்வியூ வந்த அனைவரையும் ஒவ்வொருத்தராக கேள்வி கேட்டு அனுப்ப, தயக்கத்துடன் உள்ளே நுழைந்தாள் வந்தனா.

"மே ஐ கமின்..."

"எஸ்.."என்றவன் நிமிர்ந்து அவளை காண ஒரு நொடி யோசித்தவன் பின் அவள் நினைவு வந்ததும் அவளை அமர சொன்னான்.

"உட்காருங்க..."

"தேங்க்ஸ்..."என்றவள் தன் கையில் வைத்திருந்த பைலை அவனிடம் நீட்ட வாங்கி பார்த்தவன் சில கேள்விகள் கேட்க தன்னால் முடிந்த பதிலை கூறினாள்.

"சரி ஓகே ஒரு டென் மினிட்ஸ் வெளியே வெயிட் பண்ணுங்க..."என்க, சரி என்றவாறு எழுந்தவளின் பார்வையோ சுதிகீர்த்தியின் போட்டோவில் நிலைத்து.

அவளோ அதையே பார்த்துக் கொண்டிருக்க, "என்னாச்சு..?" என்ற அகிலனின் உறுமல் குரலில் பயந்தவள், "ஒன்னுமில்லை சார்..."என்றவள் வெளியே சென்றாள்.

எழிலை அழைத்து தன் முடிவினை கூறியவன் தான் தேர்வு செய்த நால்வரின் டாக்குமெண்டை அவன் கையில் நாளைக்கே வேளையில் சேர சொன்னான்.

அந்த நால்வரின் வந்தனாவும் இருக்க எல்லையில்லா சந்தோஷத்தில் மிதந்தாள்.

தான் எடுத்த முடிவினை அன்று இரவே வளர்மதியிடம் கூற அவளும் வீட்டில் இருந்தால் இளாவின் நினைப்பு அதிகமாக வருவதால் சரி என்று ஒத்துக் கொண்டாள்.

மறுநாள் தன் தங்கையை அழைத்துக் கொண்டு எழில் வர அதே நேரம் தன் முதல் நாள் வேலையை செய்ய

ஆரம்பித்தாள் வந்தனா.

ஆபீஸ் வந்ததும் அகிலனை மொபைலில் அழைத்து கூற, "சரி எழில் நான் கொஞ்சம் நேரத்துல வந்துறேன், இன்னைக்கு புதுசா வந்த இந்த ஐந்து பேரையும் பார்க்க அப்பா வராரு, நீ எல்லாருக்கும் இன்பார்ம் பன்னிரு.." என்க, சரி என்றவாறு தன் மொபலை வைத்தார்.

"சரிம்மா நீ வா..." என்றவன் வளர்மதி அழைத்துக் கொண்டு தன் அலுவலகத்திற்கு நுழைந்தான்.

புதிதாக வந்தவர்களை அறிமுகப்படுத்த நினைத்து அவர்கள் இருக்கும் அறைக்கு செல்ல அங்கே வந்தனா இருப்பதை காண, வந்தனாவோ தன் தோழியை பார்த்த சந்தோஷத்தில் இருந்தாள்.

அதன் பின் அவன் அனைவர்க்கும் ஆபீஸ் விதிமுறைகளை சிறிது நேரம் கூறி எம்.டி வந்ததும் மீட்டிங் ஹாலுக்கு வர சொல்லி சென்றான்.

எழில் சென்றதும் வந்தனா சந்தோஷ மிகுதியில் வளரு..! என கத்தியவாறு அவளை அணைத்துக் கொண்ட சுற்ற அதே நேரம் தன் அறைக்குச் சென்ற அகிலன் அதை கண்டு அப்படியே நின்றான்.

. **அத்தியாயம்** : 17

நாட்கள் செல்ல எழில் கூறியது நினைத்த அகில் வளர்மதியின் அமைதியை கவனிக்க ஆரம்பித்தான்.

அவள் சில நொடிகளில் எதையோ நினைப்பதை கண்டவள் அவளுக்கு மேலும் வேலை கொடுக்க தன் முழு கவனத்தை அதில் செலுத்த ஆரம்பித்தாள்.

அன்றும் அது போல் அவன் செய்ய சொன்ன வேலையை முடித்தவள் அவனிடம் காட்ட அவனோ அது தவறாக இருப்பதாக கூற எரிச்சலுடன் வெளியே வந்து தன் டேபிளில் கையில் வைத்திருந்த பைலை போட்டாள்.

அதை கண்ட வந்தனா, "என்னடி என்னாச்சு...?"என்க,

"என்னால முடிஞ்ச வரைக்கும் நான் இந்த பைலை உள்ளதை சரி பண்ணிட்டேன் ஆனா மறுபடியும் அகிலன் சார் தப்பு இருக்குன்னு சொல்லுறாரு, நான் என்ன தான் பண்ணனும்..."

"நீ முதல உட்காரு..." என்றவள் தன் அருகே அமர வைத்து, "எனக்கென்னமோ நீ வேலையில கான்சென்ரேட் பண்ணலையோன்னு தோணுது...? நீ இன்னும் இளாவை நினைச்சிட்டு தான் இருக்கையா...?"

"என்னால இளாவை மறக்க முடியாது வந்தனா..? அவ என் கூடவே தான் இருக்கான், ஆனா நான் வேலை பார்க்கும் போது முழு கவனத்தையும் இதுல தான் செலுத்துறேன் அப்படி இருந்தும் தப்பு வருது..."

"சரி விடு வளரு, அகில் சாரோட கேரக்டர் பத்தி தான் நமக்கு தெரியுமே..? எப்போ பார்த்தாலும் இஞ்சி தின்ன குரங்கு மாதிரி தானே முஞ்சியை வச்சிருப்பாரு..? இதை நினைச்சு நீ வொரி பண்ணிக்காதே..." வளருக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருக்க,

அதே நேரம், "ஆபீஸ் நேரத்துல என்னத்தை வெட்டியா பேசிட்டு இருக்கீங்க...?" என்ற அகிலனின் கத்தலில் பதறி அடுத்து இருவரும் எழுந்து நின்றனர்.

அவனது கோவ முகம் இருவரையும் பயமுறுத்த பயத்துடனே, "சாரி சார்..."என்றனர்.

"நீங்க ரெண்டு பேரும் இங்கே ஜாயின் டென் டேஸ் மேலாச்சு, பட் ஸ்டில் நோ இம்ப்ரூமென்ட் பார் யூவர் ஜாப்..."

இந்த பத்து நாட்களாக தான் ஓயாது வேலை பார்க்க அகிலன் இப்படி கூறியது வள்ரை கோவப்படுத்த, வந்தனாவோ பணிவுடன் மன்னிப்பு வேண்ட, வளரோ அவனை கண்டு கொள்ளாமல் முகத்தை திருப்பிக் கொண்டு தன் இருக்கையில் அமர்ந்தாள்.

வளரின் இந்த செய்கையால் அகிலனின் விழிகளில் அனல் பறக்க வந்தனாவோ என்ன செய்வது என தெரியாமல் முழிக்க தன் அறைக்குள் புகுந்தான்.

அவன் சென்ற அடுத்தநொடி, "ஏண்டி இப்படி பண்ணுற..? சும்மாவே திட்டுவாரு இதுல நீ அவருக்கு ரெஸ்பான்ஸ் வேற தரல இன்னும் என்ன பண்ண போறாரோ...?" வளரை பார்த்து புலம்ப,

"அவர் என்ன பண்ணுனாலும் எனக்கு கவலையில்லை நான் என் வேலையை சரியா தான் பார்க்குறேன்..."என்றவள் அதே கோவத்துடன் தன் வேலையை பார்க்க ஆரம்பித்தாள்.

நேரம் பத்தை கடக்க இன்னும் வெளியே வராத தன் மருமகளை நினைத்த ரத்னா அவள் அறைக்குச் சென்றார்.

படுத்திருந்த சுதிகீர்த்தியின் அருகே சென்று அமர்ந்தவர், "அம்மாடி கீர்த்தி உடம்பு எதுவும் சரியில்லையா..? வேந்தா வேளைக்கு போய் ரெம்ப நேரமாச்சு ஆனா நீ இன்னும் சாப்பிட வரல..." அவள் தலையை வருடியவாறு கேட்க,

தன் அத்தையின் குரலை கேட்டதும் மெல்ல எழுந்து அமர்ந்தவள், "என்னேன்னு தெரியல ஒரு மாதிரியா இருக்கு..? தலை சுத்துது அத்தை அதான் அப்படியே படுத்துட்டேன்..."

"காய்ச்சல் எதுவும் இருக்கா...?"என்றவர் அவள் நெற்றி கழுத்தை தொட்டு பார்க்க,

"அதெல்லாம் இல்ல அத்தை..."

"சரிம்மா வா ஹாஸ்பிட்டல் போகலாம் நான் போய் மாமாவை ஆட்டோ கூட்டிட்டு வர சொல்லுறேன்..." என்றவர் வெளியே வந்து ஹாலில் அமர்ந்திருந்த தன் கணவனிடம் கூற சரி என்றவாறு வெளியே சென்றார்.

அவர் வருவதற்கு தன் மருமகளை கிளம்ப வைத்தவர் அவளை அழைத்துக் கொண்டு மூவரும் அருகிலிருந்த ஹாஸ்பிட்டல் சென்றனர்.

அவளை பரிசோதித்த டாக்டர் கீர்த்தி கருவுற்றிருப்பதாக கூற பெரியவர்கள் இருவரும் நீண்ட நாட்களுக்கு பிறகு எல்லையில்லா சந்தோஷத்தில் மிதந்தனர்.

கீர்த்தியை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வர

சந்தோஷத்தில் இருந்த பெரியவர்கள் அவள் அமைதியை கவனிக்கத் தவறினர்.

தன் சம்மந்தி சித்ராவிற்கு அழைத்து தான் பாட்டி ஆக போற விசியத்தை கூற அடுத்தநொடியோ கிளம்ப ஆரம்பித்தார்.

தன் மனைவி எங்கோ கிளம்ப ஆரம்பித்ததை கண்ட ஜெயபிரகாஷ், "போன்ல யாரு எங்கே கிளம்புற...?"என்க,

"சம்மந்தியம்மா தான் போன் பண்ணாங்க ஒரு சந்தோஷமான விசயம் நம்ம பொன்னு அம்மாவாக போறா..? வாங்க போய் பார்த்துட்டு வரலாம்..." சந்தோஷத்தில் கூறினார் சித்ரா.

தன் மனைவி கூறியதை கேட்டவர், "என்னால அங்கேயெல்லாம் வர முடியாது நீ வேணும்மா உன் பொன்னை பார்த்து கொஞ்சிட்டு வா..." என்றவர் தன் அறையை விட்டு வெளியேற,

"எப்போ தான் இவர் கோவம் போக போகுதோ..?" புலம்பியவர் தன் மகளை காண சென்றார்.

வேந்தனின் வீட்டிக்கு வந்த சித்ரா தன் மகளை கண்டதும் சந்தோஷ மிகுதியில் அணைத்துக் கொண்டார்.

"சம்மந்தி நான் வேணும்மா கீர்த்தியை கொஞ்சம் நாள் எங்க வீட்டுக்கு கூட்டிட்டு போகட்டும், என் பொண்ணை நான் பக்கதுல வைச்சி பார்த்துகிடனும் நினைக்கேன்..?"

"வேந்தனும், மருமகளும் சரி சொன்னா வேணா கூட்டிட்டு போங்க சம்மந்தி..." ரத்னா கூற,

"நீ என்னம்மா சொல்லுற கீர்த்தி..?"

"அம்மா எனக்கு கொஞ்சம் டையடா நான் எங்கையும் வரல..? நான் போய் கொஞ்சம் நேரம் ரெஸ்ட் எடுக்கட்ட..?"என்க,

"சரிம்மா வா வந்து ரெஸ்ட் எடு..." என்ற ரத்னா தன் மருமகளை அழைத்துக் கொண்டு அவள் அறைக்குச் சென்றார்.

படுக்க வைத்து ரத்னா வெளியே செல்ல பெரியவர்கள் அனைவரின் சந்தோஷம், அவர்கள் தன் குழந்தையின் மேல் வைக்க போகும் பாசம்..."அனைத்தையும் நினைத்தவள் வயிற்றில் தன் கையை வைத்தவாறு தன் மனதில் புதிதாய் குடியேறிய பாரத்தை நினைத்து அழ ஆரம்பித்தாள் சுதிகீர்த்தி.

இரவை நெருங்க தன் வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்க்கு வந்த வேந்தன் நீண்ட நாட்களுக்கு பிறகு தன் பெற்றோரின் முகத்தில் இருக்கும் சந்தோஷத்தை கண்டு மகிழ்ந்தான்.

"என்ன நடந்தது ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கீங்க..?" என்றவாறு சோபாவில் அசதியில் சாய,

"நாங்க தாத்தா, பாட்டி ஆக போறோம்ல, அதான் சந்தோஷம்..." அவர்கள் கூறியதை கேட்ட அடுத்தநொடி வேகமாக எழுந்து நின்றான்.

"என்ன சொல்லுறீங்க அம்மா..? சுதி..! சுதி..!" சந்தோஷத்தில் கேட்க,

"ஆமாடா கண்ணா, நீ அப்பாவாக போற..?" தன் தாய் கூறியதை கேட்டவன் துள்ளி குதிக்க, அவன் செயலை கண்டு பெற்றவர்கள் சிரிக்க ஆரம்பித்தனர்.

"சுதி எங்கம்மா..?"

"ரூம்ல தான் இருக்கா..." என்றதும் குதித்துக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்தான்.

படுத்திருப்பதை கண்டவன் அவள் அருகில் வந்து அமர்ந்து, "சுதி நான் ரெம்ப சந்தோஷமா இருக்கேன்..? தேங்க்ஸ்ம்மா..."என்றவன் அவள் நெற்றியில் இதழ் பதித்து தலையை வருடி விட, மெல்ல எழுந்து அமர்ந்தாள்.

அவள் முகத்தில் இருந்த கவலையை அவளை கண்ட நொடியோ கண்டறிந்தவன், "சுதி..." என அழைத்தவாறு அவள் கண்ணம் பற்ற அவளோ அதை தடுத்து முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

சுதியின் அழுகையை காண முடியாது அவளை இழுத்து தன் நெஞ்சில் புதைத்தான்.

சிறிது நேரம் அழ விட்டவன் அவள் அழுகை குறைந்ததும் மெல்ல தன்னிடம் இருந்து விலக்கினான்.

"என்னம்மா என்னாச்சு..? ஏன் அழுகுற இது சந்தோஷமான விசியம் தானே...?"

"யாழ் நான் நம்ம குழந்தை வளர்ச்சியை பார்க்கணும் நினைக்கிறேன், எனக்கு பார்வை வேணும்..." தன்னவனின் நெஞ்சில் சாய்ந்து அழ,

அவள் மனதில் இருக்கும் தவிப்பை உணர்ந்தவன், "சுதி அழாதே..?நீ நிச்சியம்மா நம்ம குழந்தையோட வளர்ச்சியா பார்பே..? இதுக்கு நான் பொறுப்பு எனக்கு கொஞ்சம் நாள் மட்டும் டைம் கொடும்மா...?"என்றவன் அவள் நெற்றியில் இதழ் பதிக்க அழுகையுடன் அவன் தோளில் சாய்ந்தாள்.

தன் மனைவி தன்னிடம் கேட்க முதல் கோரிக்கையை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என நினைத்தவன் மறுநாளே அதற்கான செயலை செய்ய ஆரம்பித்தான்.

எழில்,அகிலன் இருவரிடமும் தான் தந்தையாக போகிற நற்செய்தியை கூற அவர்களும் சந்தோஷத்தில் மிதந்தனர்.

சுதியின் மனதில் இருக்கும் கவலையையும் கூற, "கவலைப்படாதே வேந்தா நான் எனக்கு தெரிஞ்சா டாக்டர் எல்லார்கிட்டையும் இன்பார்ம் பண்ணுறேன்...?என் மருமகன் வளர்ச்சியை கண்டிப்பா கீர்த்தி பார்ப்பா..." அகிலன் கூற,

எழில் மனமோ தான் அன்று சீக்கிரம் சென்றிருந்தால் கீர்த்திக்கு இப்போது இந்நிலை வந்திருக்காது என்று தோன்ற குற்றவுணர்வுடன் இருந்தான்.

அதன் பின் மூவரும் வேளையில் இருந்தாலும் ஒரு புறம் கீர்த்தியின் கவலையை போக்க முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

நாட்கள் செல்ல கீர்த்தியின் கவலையும் அதிகரித்து

கொண்டே செல்ல தான் எவ்வளோ முயற்சி செய்தாலும் இதுவரை தோல்வியை தர, அதில் ஏற்பட்ட கோவம் அனைத்தையும் தன் பனியாளர்களிடம் காட்ட ஆரம்பித்தான் அகிலன்.

அகிலனின் கோவம் கண்டு ஆபீஸ்சில் பணிபுரியும் அனைவரும் பயப்பிட ஆரம்பிக்க ஒரு சிலர் வேலையே வேண்டாம் என்று ஓட ஆரம்பித்தனர்.

அன்றும் அதே போல் கோவத்துடன் ஆபீசிற்குள் நுழைய, அகில்னை கண்ட வந்தனா பயந்து போய் தன் கையில் வைத்திருந்த பைலை இறுக்கினாள்.

அவளது பயத்தை கண்ட வளர்மதி, "என்னடி என்னாச்சு..? ஏன் நிக்கிற, சார் கிட்ட சைன் வாங்க போறேன் தானே எழுந்திரிச்சே..? அப்பறம் என்ன..?"

"சார் ரெம்ப கோவமா இருக்காரு வளரு எனக்கு பயமா இருக்கு..?, ப்ளீஸ் எனக்காக இதுல சைன் வாங்கி தாயே..?"

"என்னது நானா..?என்னால முடியாது கொஞ்சம் வெயிட் பண்ணு என் வொர்க் முடிச்சது நான் சைன் வாங்க போவேன் அப்பவேனா என் கூட வா...?" என்றவள் தன் வேலையை பார்க்க,

"ஓ உனக்கும் அகில் சாரை பார்த்தா பயமா அதான் ரெண்டு பேரும் போகலாம் சொல்லுறியா..?"

வந்தனா கூறியதை கேட்டு திரும்பி அவளை முறைக்க, "சரி சரி எனக்கு தான் பயம் போதுமா..." என்றவள் அவள் முடிக்கும் வரை காத்திருந்தாள்.

அதன் பின் இருவரும் தனக்கு கொடுத்த வேலையை முடித்துக் கொண்டு அவன் அறைக்குச் சென்றனர்.

"சார்..." என்றவாறு இருவரும் முன் வந்து நிற்க,

"கெட் லாஸ்ட் எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு..." தன் முன்னிருந்த லாப்டாப்பை உடைத்து விடும் வேகத்தில் எதையோ செய்து கொண்டு கூறினான்.

"வாடி போகலாம்..." என்ற வந்தனா அவள் கை பற்றி இழுக்க,

அவன் நேத்து தன்னிடம் கொடுக்கும் போதே சீக்கிரமே வேண்டும் என்று கூறியது நினைவு வர, "சார் நீங்க கொடுத்த வொர்க்கை முடிச்சிட்டேன் இதுல சைன் பண்ணுனா முடிஞ்சிரும்..." என்றவள் அவன் முன் பைலை நீட்டினாள்.

"நான் தான் வேலை இருக்குன்னு சொல்லுறேன்ல புரியாதா உனக்கு அறிவிரு..." கத்தியவாறு எழுந்தவன் அவள் முகத்தை பார்த்ததும் கூறாமல் அப்படியே நிறுத்தினான்.

ஒரு நொடி வளரின் முகத்தை கண்டவன் பின் என்ன நினைத்தானோ, "சாரி, வச்சிட்டு போங்க நான் பார்த்துக்கிறேன்..." என்றவன் அருகிலிருந்த தண்ணீரை எடுத்து பருகினான்.

இருவரும் அதை வைத்து விட்டு செல்ல தனக்கு அடிக்கடி வரும் இந்த அதீத கோவத்தை நினைத்து அப்படியே சேரில் அமர்ந்தான்.

நேரம் செல்ல திடீரென்று உள்ளே நுழைந்த எழிலின் வருகைக்காக கண்டதும், "என்னடா என் மூச்சு வாங்க ஓடி வர...?"என்க

"ஒன்னுமில்லைடா ஒரு சந்தோஷமான விசியம் இப்போ தான் வேந்தா போன் பண்ணுனா..? உன் தங்கச்சிக்கு பார்வை கிடைக்க போகுதாம்..? கீர்த்தி இந்த உலகத்தை பார்க்க போறா..?"

"என்னடா சொல்லுற உண்மையாவா..? எவ்வளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா, நான் இப்பவே வீட்டுக்கு போய் அம்மா,அப்பா கிட்ட சொல்லுறேன்..."என்றவன் சந்தோஷமாக செல்ல, முதல் முறையாக வளரும்,வந்தனாவும் அவன் புன்னைகை தவழும் முகத்தை கண்டனர்.

கீர்த்தியின் வீட்டில் அனைவர்க்கும் அந்த இன்பச்செய்தி பரவ ஒன்றரை வருடங்களுக்கு பிறகு இந்த உலகத்தை

காண போகும் மகிழ்ச்சியில் இருந்தாள் சுதிகீர்த்தி.

என்ன தான் தன் மகளின் மீது கோவமாக இருந்தாலும் அவளுக்கு பார்வை கிடைக்க போகிறது என்ற விசியத்தை அறிந்த ஜெயபிரகாஷ் தன் குடும்பத்துடன் ஹாஸ்பிட்டல் விரைந்தார்.

அதன் பின் ஆப்ரேசன்க்கு தேவையான ஏற்பாடுகள் அனைத்தும் ரெடியாகி ஆபரேசன் நடக்க நல்ல படியாக முடிய வேண்டும் என்ற பதட்டத்தில் காத்திருந்தான் யாழ்வேந்தன்.

நேரம் செல்ல நல்ல படியாக ஆபரேசன் முடிய அவள் கண் கட்டை திறக்கும் நாளுக்காக ஆவலாய் காத்திருந்தனர் அனைவரும்.

வேந்தனோ ஒவ்வொரு நொடியும் தன்னுடனே இருக்க அதை உணர்ந்த சுதி, "எனக்கு ஒன்னுமில்லை நானும் உங்க குழந்தையும் நல்லா தான் இருக்கோம், இப்படி நாள் முழுக்க என் கூடவே இருந்தா ஷோரூம்மை யாரு பார்த்துகிடுவா..."

"அதெல்லாம் இருக்கட்டும் உங்க மாமா சும்மா தானே இருக்காரு அவர் பார்த்துகிடுவாரு. இவன் இருக்கிறது நமக்கு ஒத்தாசையா இருக்கு. வேணுங்கிற போதெல்லாம் கடைக்கு அனுப்பே..?" ரத்னா கூற, அதை கேட்டு அங்கிருந்த அனைவருமே சிரிக்க ஆரம்பித்தனர்.

நாட்கள் செல்ல அவள் கண் கட்டினை பிரிக்கும் நாலும் வர டாக்டரின் வருகைக்காக காத்திருந்தனர்.

சிறிது நேரத்தில் அவரும் வந்து பரிசோதித்து அவள் கட்டினை பிரிக்க அதே நேரம் அங்கிருந்த அனைவரையும் விலக்கி அவள் முன் எழிலரசனை நிறுத்தினான் அகிலன்.

## அத்தியாயம் : 18

கீர்த்தியின் முன் எழிலை நிறுத்தியதை கண்டு அனைவரும் புரியாமல் விழிக்க மெல்ல விழி திறந்தாள் சுதிகீர்த்தி.

முதலில் கலங்கிய விழிகளுடன் எழிலை காண பின்

சிரம்மப்பட்டு விழி திறந்து அவனை கண்டவள் முகத்தில் சந்தோஷத்துடன் விழிகளில் கண்ணீருடன் அவன் முன் கரம் நீட்டினாள்.

அவள் செய்கையை பெரியவர்கள் புரியாமல் விழிக்க தன் மனைவியை பார்த்துக் கொண்டிருந்தவன் வேந்தன் அவள் கண்ணீரை கண்டு அருகில் வந்து, "சுதி ஆர் யூ ஓகே..?" என்றான்.

அதன் பின்னே திரும்பி தன் கணவனை கண்டவள் அவன் கைகளை பற்றிக் கொண்டு, "இவங்க எப்படி...? நான் நான்..." எழிலை கண்ட சந்தோஷத்தில் பேச்சே வர மறுக்க,

"கீர்த்தி இவன் எழிலரசன் என் பிரெண்டு..? நீ இத்தனை நாளா தேங்க்ஸ் சொல்லணும் நினைச்சிக்கிட்டு இருந்தது இந்த லூசுக்கு தான்...?" அவன் தோளில் கைகளை போட்டவாறு கூறினான் அகிலன்.

"நான் முதல அவங்கள செக் பண்ணிக்கிட்டுமா..?" டாக்டர் கூற அனைவரும் விலகினர்.

அதன் பின் அவர் பரிசோதித்து விட்டு செல்ல, "டேய் என்னடா நடக்குது இங்கே..? எனக்கு எதுவும் புரியல,கீர்த்தி நீயேம்மா எழில் கிட்ட தேங்க்ஸ் சொல்லணும் நினைச்சே..?" என்றவாறு அவள் அருகில் சித்ரா அமர, தன் தாயை கண்டவள் ஆசையுடன் அணைத்துக் கொண்டாள்.

"நீ நல்லா இருக்கீல..? இப்போ எந்த பிரச்சனையும் இல்லையே..?" கேட்டவாறு ரத்னா அவளின் மறு புறம் அமர, தன் அத்தை, மாமாவின் முகத்தை முதல் முறை கண்டாள்.

"அம்மா உங்க பொண்ணு இன்னைக்கு உயிரோட நம்ம முன்னாடி நிக்கிறதுக்கு காரணம் எழில் தான்ம்மா, அன்னைக்கு நடந்த ஆக்சிடென்ட்ல இவளை காப்பாத்துனது இவன் தான்..."என்ற அகிலன் எழிலை முறைத்துக் கொண்டு கூற,

"கீர்த்தி இது உண்மையா..?" சித்ரா கேட்க, அவளும் ஆம் என்று தலையைக்க அடுத்தநொடி தன் நண்பனை கட்டிக் கொண்டு தேங்க்ஸ் கூறினான் யாழ்வேந்தன்.

"தேங்க்ஸ்டா எழில், தேங்க் யூ வெரி மச் டா, சுதியை என்கிட்ட சேர்த்ததுக்கு..." மகிழ்ச்சியில் தன் தோழனை அணைத்துக் கொண்டு கூறியவன் பின் எதையோ யோசித்து அகிலன் புறம் திரும்பினான்.

"ஆமா இது உனக்கு எப்படி தெரியும் எப்போ கண்டுபிடிச்சே..?"

"அதெல்லாம் அப்பறம் சொல்லுறேன், இத்தனை நாள் நம்ம கூடவே இருந்திட்டு இதை பத்தி ஒரு தடவை கூட சொல்லலே உன்ன..." என்ற அகிலன் தன் அருகில் நின்றிருந்த எழிலை வெளுத்துக் கட்ட, அவனுடன் சேர்ந்து வேந்தனும் அடிக்க ஆரம்பித்தான்.

"டேய் விடுங்கடா, சொல்லாதது தப்பு தான் வலிக்குது..." எழில் கத்த அவர்களோ அது காதில் விழாதவாறு அடித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் மூவரும் செயலை கண்ட சுதிகீர்த்தி சிரிக்க, நீண்ட நாட்களுக்கு பிறகு அவள் முகத்தில் இருக்கும் சிரிப்பினை கண்டு அனைவரும் சந்தோஷப்பட, தன் மனதில் இருந்த பாரம் முழுதாக நீங்கியது போல உணர்ந்தான் எழிலரசன்.

"உங்க மூணு பேரோட சந்தோஷமும் பிரெண்ட்ஷிப் என்னைக்கும் பிரியாமா இப்படியே இருக்கனும்..." ரத்னா கூற,

"எங்களுக்குள்ள என்னைக்கும் பிறவே வராது அத்தை, எப்பவும் எங்களுக்கு எங்க பிரெண்ட்ஷிப் தான் முக்கியம்..." என்ற அகிலன் தன் இருபுறம் இருந்த தோழர்களில் மீது கை போட்டு கொண்டான்.

அதே நேரம் சித்ராவின் மொபைலுக்கு கீர்த்தியின் பாட்டி அழைப்பு விடுக்க அதை எடுத்தார் சித்ரா.

"ஹ்ம்ம் சொல்லுங்க அத்தை, கீர்த்தி நல்லா இருக்கா..? ஆமா எல்லாரையும் பார்க்குறா ஒரு நிமிஷம் தரேன் அத்தை..."என்றவர் கீர்த்தியிடம் தர அதனை வாங்கினாள்.

"பாட்டி எப்படி இருக்கீங்க...?"

"நல்லா இருக்கேனம்மா, நீ அம்மாவாக போற உனக்கு கண் பார்வை வந்துருச்சி சித்ரா சொன்னா, ரெம்ப சந்தோஷமா இருக்கு கண்ணு பாட்டி ரெண்டு மாசத்துல வந்துறேன், இங்கே அறுபடை நடக்குது அதான் இப்போ வர முடியல..."

"சரி பாட்டி நீங்க மெதுவா வாங்க..."என்றவள் சிறிது நேரம் பேசி விட்டு போனை வைத்தாள்.

அதன் பின் அனைவரும் அவரவர் வேலையை பார்க்கச் செல்ல தன் மனைவியின் அருகில் அமர்ந்தான் யாழ்வேந்தன்.

வேந்தன் அமர்ந்ததும் அவன் கைவளைவில் தன் கையை கோர்த்துக் கொண்டு, "தேங்க்ஸ் யாழ்..." என்றவாறு அவன் தோளில் நிம்மதியாக சாய்ந்தாள்.

தன் மனைவி கூறியதை கேட்டவன் அவளிடம் இருந்து விலகி அவள் கண்ணம் பற்றியவாறு, "இப்படி ஒரு அற்பதமான வாழ்க்கையை தந்ததுக்கு நான் தான் தேங்க்ஸ் சொல்லணும்..." என்றவன் மெல்ல அவள் பிறை நெற்றியில் தன் இதழ் பதித்தான்.

அவளது கைகளோ முதல் முறையாக மன நிறைவுடன் தன் வயிற்றில் வளரும் குழந்தையை வருடியது.

மறுநாள் சந்தோஷமாக ஆபீசிற்குள் நுழைந்த அகிலனை கண்ட அனைவரும் வியப்புடன் குட் மார்னிங் கூற அதை ஏற்றிக் கொண்டு நடந்து வந்தான்.

தன் அறைக்குள் நுழைய போகும் முன் வந்தனா,வளர்மதி இருவரையும் கடந்து செல்ல, வந்தனாவை கண்டவன் மெல்ல புன்னைகைத்தவாறு தன் அறைக்குள் நுழைந்தான்.

"ஐயோ சார் இன்னைக்கு ரெம்ப சந்தோஷமா இருக்காரு, என்ன பார்த்து சிரிச்சிட்டு வேற போறாரு..." சந்தோஷமாக வளரிடம் கூற,

"பெரிய ஹீரோன்னு நினைப்பு..." மனதுக்குள் நினைத்தவன், "சரிடி வேலையை பாரு நம்ம பேசுறதா பார்த்தா வேதாளம் முருங்க மரம் ஏறிரும்..."என்றாள்.

"அதெல்லாம் ஏறாது, அதெப்படி நீயும் உங்க அண்ணனும் உள்ளுக்குள்ள உன்ன வச்சிட்டு வெளியே நடிக்க முடியுது...?"

தன் அண்ணனை பற்றி பேச்சு எடுத்ததில் அவள் புறம் திரும்பியவன், "நீ என்ன சொல்லுற..?நாங்க என்ன பண்ணுனோம்..?" கோவமாக கேட்க,

"சரி சரி கோவப்படாதே சொல்லுறேன், நம்ம செகண்ட் இயர் படிக்கும் போது லேப்ல தீ விபத்து நடந்ததுல அதுல உங்க அண்ணன் ஒரு பொண்ணை காப்பாத்துனால அது யாருன்னு தெரியுமா..?"

"தெரியாது அதை பத்தி ஏன் இப்போ பேசுற..?"

"அது நம்ம அகிலன் சாரோட தங்கச்சி சுதிகீர்த்தி மேடம் தான்..."

"கீர்த்தியா..? நீ என்ன சொல்லுற உண்மையாவா..?"

"ஹ்ம்ம் ஆமா எப்படித்தான் உங்க அண்ணன்னால வெளியே சொல்லாம இருக்க முடிஞ்சதோ, ஆமா அவங்கள நீ பார்த்துருக்கீயா..? நான் சாரோட ரூம்ல இருக்க போட்டோல தான் பார்த்தேன், ரெம்ப அழகா இருக்காங்க..?"

தன் தோழி கூறியதை கேட்டு எதையோ யோசித்தவாறு இருக்க, "வளரு என்னாச்சு..?" என்றவாறு அவளை உலுக்கினாள் வந்தனா.

"இல்ல ஒன்னுமில்லை, இது அகிலன் சாருக்கு தெரியுமா..?"

"ஹ்ம்ம் தெரியும் ரெண்டு நாளுக்கு முன்னாடி நான் தான் சொன்னேன், அது இருக்கட்டும் நீ பார்த்துருக்கையா அவங்கள..?"

"ஹ்ம்ம், நான் அவங்க மேரேஜ்க்கு போயிருந்தேன் அப்போ தான் பார்த்தேன், அவங்க அந்த விபத்துல கண் பார்வையா இழந்துடாங்க..." என்றவளில் நினைவோ அவர்களது திருமணத்தில் நடந்த இளாவின் செயலை நினைத்து.

"இவ என்ன திடிருன்னு பிரீஸ்சாகிறா..?" புலம்பியவாறு

அவளை உலுக்கியவள், "என்னடி..." என்றாள்.

அதன் பின் அவர்கள் திருமணத்திற்கு சென்றதும் இளாவின் அண்ணன் கீர்த்தியின் கணவன், இவர்கள் மூவரும் தோழர்கள் என்று தனக்கு தெரிந்த அனைத்தையும் கூறினாள் வளர்மதி.

"ஓ இவ்வளோ நடந்திருக்கா, சரி வா நாம்ம வேலையை பார்க்கலாம்..." என்க, அதன் பின் இருவரும் தன் வேலையை கவனிக்க ஆரம்பித்தனர்.

அன்றிரவே வந்தனா கூறியதை தன் அண்ணனிடம் கேட்க, "ஆமா வளரு அது கீர்த்தி தான், உனக்கு யார் சொன்னா...?"என்க,

"வந்தனா தான்னா சொன்னா..."

"ஓ அப்போ அவ தான் அகிலன் கிட்ட சொன்னாலா...?"

"ஹ்ம்ம் ஆமா அண்ணா..."என்றவள் சாப்பிட ஆரம்பிக்க,

"அந்த கீர்த்தி புள்ளையா வீட்டிற்கு கூட்டிட்டு வந்துட்டாங்களா கண்ணா..."என்றவாறு கோமதி இருவருக்கும் சாப்பாடு பரிமாற,

"இல்லம்மா இன்னும் ரெண்டு நாளாகும்.."

கீர்த்திக்கு கண் பார்வை வந்ததை அறியாத வளர்மதி, "ஏன் என்னாச்சு அவங்களுக்கு..?" என்றாள்.

கீர்த்திக்கு பார்வை கிடைத்தது அங்கு நடந்த அனைத்தையும் கூற, "ஓ அதான் அகிலன் சார் சந்தோஷமா இருந்தாரோ...?"மனதுக்குள் நினைத்தவள் உன்ன ஆரம்பித்தாள்.

சுதிகீர்த்தியை பரிசோதித்த டாக்டர் அவளை வீட்டிற்கு கூட்டிட்டு போகலாம் என்றார்.

அதை கேட்ட சித்ரா, "அம்மாடி கீர்த்தி ஒரு வாரம் நம்ம வீட்டிக்கு வாம்மா, நீ அம்மாவாக போறேன் தெரிஞ்சதுல இருந்து உன்ன பக்கத்துல வச்சி பாத்துக்கிடனும்

நினைக்கிறேன்..." என்க.

"இல்ல அம்மா நான் வரல அப்பா இன்னும் என் மேல கோவமா தான் இருக்காரு அவர் கோவம் குறைஞ்சதும் வரேன், நீ தினமும் என்ன பார்க்க வாம்மா..." என்றவள் தன் அருகே நின்றிருந்த மாமாமியரை பார்த்தாள்.

"ஆமா சம்மந்தி கீர்த்தி சொன்னது சரி தான் அதுவும் உங்க வீடு மாதிரி தான்..."

அவர் கூறியதை கேட்டவர் மனமேயில்லாமல், "சரிம்மா..." என்க, சிறிது நேரம் தன் தாயை சமாதானப்படுத்தினார்.

அதே நேரம் பில் அனைத்தையும் கட்டி விட்டு வேந்தன் வர அனைவரும் வீட்டிற்கு கிளம்ப ஆரம்பித்தனர்.

வேந்தனின் வீட்டிற்கு அழைத்து வர முதல் முறையாக தன் புகுந்த வீட்டினை கண்டாள்.

வீட்டின் உள்ளே நுழையும் நேரம் அவளை நிறுத்திய ரத்னா, "ஒரு நிமிஷம் அப்படியே நில்லும்மா இதோ வந்துறேன்..."என்றவர் உள்ளே சென்று கையில் எதையோ எடுத்து வர,

"என்ன அத்தை இதெல்லாம்..."

"இனிமே யார் கண்ணும் உங்க மூணு பேர் மேலையும் பட கூடாது..." என்றவர் தன் கையில் வைத்திருந்த வத்தல், உப்பினை வைத்து வேந்தன்,கீர்த்தி வயிற்றில் வளரும் குழந்தை மூவருக்கும் திஷ்டி சுத்தி போட்டார்.

அதன் பின் வீட்டிக்குள் வந்து அனைவரும் ஹாலில் அமர கீர்த்தியின் பார்வையோ வீட்டை சுற்றி பார்த்தது.

தன் அறையை விட சின்னதாக இந்த ஹால்லிருக்க, ஒவ்வொரு பொருளும் சுத்தமாக இருப்பதை கண்டவளின் பார்வையோ ஓர் இடத்தில் அப்படியே நின்றது.

அவள் பார்வை சென்ற இடத்தை பார்த்த வேந்தன் தானும் தொடர்ந்து பார்க்க தங்களது திருமண புகைப்படம் குடும்பத்துடன் இருந்ததை கண்டான்.

"சுதி அதான் நம்ம கல்யாணம் போட்டோ, ஒரு நிமிஷம் இரு..."என்றவன் அதை எடுத்துக் கொண்டு வந்து அவளிடம் தர அதை வாங்கினாள்.

அவளது கண்களோ யாழின் அருகே நின்றிருந்தவனின் மீது இருந்தது.

"இவங்க..." என்றவள் இளாவின் மீது கை வைத்து கேட்க,

"இவன் தான் நம்ம செழியா..." என்றவனின் குரல் சற்று உள்ளே செல்ல, அங்கிருந்த அனைவருமே இளஞ்செழியனின் நினைவில் வருந்தினர்.

"நான் இவங்கள பார்த்திருக்கேன் காலேஜ்ல வச்சி, ஆனா..." என்றவள் எதையோ யோசிக்க,

"அவனும் நீ படிச்சா அதே காலேஜ் தான் படிச்சான், ஆமா நீ என்ன யோசிக்கிற..."

"இல்ல ஒன்னுமில்லை..."

"சரி சரி பேசினது போதும் போம்மா நீ போய் ரெஸ்ட் எடு, நான் உனக்கு சாப்பிட ஏதாவது செய்யுறேன்..."என்ற ரத்னா கிட்சன் செல்ல அவர் பின்னே சித்ராவும் சென்றார்.

"வா சுதி..." என்ற வேந்தன் அவளை அழைத்துக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்து படிக்கையில் படுக்க வைத்தான்.

அவளது நினைவு முழுவதும் இளஞ்செழியனின் மீதிருக்க அவள் எதையோ நினைப்பதை பார்த்தவன், "சுதி நீ தூங்கு..." என்றவன் அவள் தலையை வருடி விட நித்திரைக்குச் சென்றாள்.

நாட்கள் செல்ல கீர்த்தியின் வயிற்றில் உள்ள குழந்தை வளர தன் பிறந்த வீட்டிற்கு இருமுறை சென்று வந்தாலும் தன் தந்தையின் கோவம் மட்டும் குறையாமல் இருப்பதை உணர்ந்தாள்.

அவர் கோவத்தை எப்படியாவது குறைக்க வேண்டும் என நினைத்தவள் தன் தந்தையிடம் பேச நினைத்தாள்.

"யாழ் இன்னைக்கு முக்கியமான வேலை எதுவும் இருக்கா..?" சாப்பிட்டு கொண்டிருந்த தன் கணவனிடம் கேட்டாள் சுதிகீர்த்தி.

"ஏன்மா எங்கையும் வெளியே போகணும் நினைக்கையா...?" என்ற ரத்னா தன் மகனுக்கும், கணவருக்கும் உணவு பரிமாறியவாறு கேட்க,

"ஆமா அத்தை அது வந்து ஆபீஸ் போய்ட்டு வரலாம் நினைக்கேன்..? அண்ணனையும்,அப்பாவையும் எங்க வீட்டுல பார்க்க முடியல அதான்..." தயங்கி கொண்டு கூறினாள்.

"அம்மாடி நீ மாசமா வேற இருக்கே..? இந்த நேரத்துல அடிக்கடி டிராவல் பண்ண கூடாது..."

"அம்மா விடுங்க நான் பத்திரமா கூட்டிட்டு போய்ட்டு வரேன்..."

"சரிடா ஆட்டோ இல்லன்னா டேக்சில கூட்டிட்டு போ,பைக்ல வேண்டாம்..."

"சரிம்மா, சுதி நீ கிளம்பு நான் போய் டேக்சி கூட்டிட்டு வரேன்..."என்றவன் அடுத்தநொடியே அதை அழைத்து வர இருவரும் கிளம்பினர்.

அகிலனின் ஆபீஸ்சில் இறங்கிய இருவரும் உள்ளே செல்ல மெல்ல அவளை அழைத்துக் கொண்டு சென்றான் யாழ்வேந்தன்.

அவர்கள் இருவரும் வருவதை கண்ட அனைவரும் வாழ்த்து கூற சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு எம்,டியின் அறை நோக்கிச் சென்றனர்.

இவர்கள் வருவதை அறிந்த எழில் அவர்கள் முன் வந்து நிற்க, "என்னடா கீர்த்தியை கூட்டிட்டு வந்திருக்கா, எதுவும் முக்கியமான விசியம்மா..?"

"இல்லடா சும்மா தான் வந்தேன் அவங்க அண்ணையும், அப்பாவையும் பார்க்க சொன்னா அதான்..."

"சரி ஓகே எம்.டி சார் மீட்டிங்ல இருக்காரு, அகிலன் ரூம்ல தான் இருக்கான், நீ போம்மா நான் உங்க ரெண்டு பேருக்கும் குடிக்க ஏதாவது கொண்டு வர சொல்லுறேன்..."என்றவன் விலகி செல்ல முயல,

"டேய் எழில் ஒரு நிமிஷம், வளரு இங்கே தான் வேலை பார்க்குறதா சொன்னே..? எங்கடா அவ..."

"எழில் அண்ணா உங்க தங்கச்சி இங்கே வொர்க் பன்னுறாளா..? நான் என் கல்யாணத்துல வச்சி பேசுனது, எங்கண்ணா அவ நான் பார்க்கணும்..."

"பக்கத்து ரூம்ல தான் நியூ ஜாயின்னர்ஸ் எல்லாம் வொர்க் பண்ணுறாங்க வாங்க..."என்றவன் இருவரையும் அழைத்து சென்றான்.

"இவ தான் என் தங்கச்சி வளர்மதி..." என்றவன் தன் தங்கையை அறிமுகப்படுத்த அவளோ தன் முன்னிருந்த கணணியை பார்த்தவாறு இருந்தாள்.

தன் அண்ணனின் குரல் கேட்டு வளர்மதி திரும்ப, அவளை கண்ட சுதிகீர்த்தி இளாவை பற்றி தன் மனதில் தோன்றிய நினைவு என்ன என்பதை இப்போது முழுமையாக உணர்ந்தாள்.

அத்தியாயம் : 19

தன் முன் சுதிகீர்த்தி நிற்பதை கண்ட வளர்மதி, "கீர்த்தி அக்கா நீங்களா..? எப்போ வந்தீங்க..?"என்க,

அவளோ அவள் கூறியதை கூட கேட்காமல் அவளையே பார்த்தவாறு நின்றிருந்தாள்.

"சுதி என்னாச்சு..." வேந்தன் அவளை உலுக்க,

தன் நினைவிலிருந்து கலந்தவள், "ஹாய் வளர்மதி..."என்றவாறு அவள் முன் கை நீட்டினாள்.

"எப்படி இருக்கீங்க கீர்த்தி அக்கா..?"

"முதல அக்கான்னு சொல்லுறதை நிறுத்து என் பேர்

சொல்லியே கூப்பிடுன்னு கல்யாணத்துல வச்சே சொன்னேன்ல..."

"ஓகே கீர்த்தி,உட்காருங்க ஏன் நிக்கிறீங்க..?" என்றவள் தன் இருக்கையை காட்ட,

"சுதி நீயும் இளாவும் படிச்ச அதே காலேஜில தான் நம்ம வளர்மதியும் படிச்சா..."என்று யாழ்வேந்தன் கூற,

இளாவின் பெயரை கேட்டதும் வளர்மதி கலங்க அதை கவனித்தாள் சுதிகீர்த்தி.

"ஆனா நான் வளரை காலேஜ்ல வச்சி பார்த்ததே இல்ல..."என்ற கீர்த்தி வளரை பார்த்தவாறு அழகாய் பொய் கூற,

"நான் உங்களை பார்த்துருகேன்னே கீர்த்தி மேடம்..."என்றவாறு பிரேக் டைம் முடிந்து தன் கேபினுக்கு வந்தாள் வந்தனா.

வந்தனாவை புரியாமல் கீர்த்தி பார்க்க, "இவங்க வந்தனா நியூ ஜாயின்னரஸ் வளரோட பெஸ்ட் பிரெண்ட் ஒரே காலேஜ்..." அவளை அறுமுகப்படுத்தி வைத்தான் எழிலரசன்.

"ஓ நீங்க தான் என் அண்ணா கிட்ட என்ன காப்பாத்துனது எழில் தான் சொன்னீங்களா..?"

"ஹ்ம்ம் ஆமா நான் எதுவும் தப்பா சொல்லிருந்தா சாரி மேடம்..."

"இல்ல எந்த தப்பும் ரெம்ப தேங்க்ஸ்ப்பா..." என்றவள் சிறிது நேரம் பேச அதே நேரம் தன் மீட்டிங்கை முடித்துக் கொண்டு வெளியே வந்தார் ஜெயபிரகாஷ்.

வந்தனா, வளரின் முகம் மட்டும் அவருக்கு தெரிய மற்ற மூவரும் முதுகு காட்டிருக்க, "என்ன நடக்குது ஏன் கூட்டம் போட்டு பேசிட்டு இருக்கீங்க, முதல போய் வேலையை பாருங்க..." நின்ற இடத்திலிருந்து கத்தினார்.

தன் தந்தையின் குரலை கேட்டவள், "அப்பா..."என்றவாறு

திரும்ப, இந்த இடத்தில் இந்த நேரம் தன் மகள் இருப்பாள் என்பதை எதிர்பார்க்காதவர் திகைத்து நின்றார்.

அவர் பார்வையோ ஒரு நொடி அவள் மேடிற்ற வயிற்றினை காண பின் எதையோ யோசித்தவர் வேகமாக தன் அறைக்குள் நுழைந்தார்.

"அப்பா நில்லுங்க ஒரு நிமிஷம்..." என்றவள் வேகமாக அவர் பின்னே செல்ல, "சுதி பார்த்து..."என்றவாறு அவனும் அவள் பின்னே சென்றான்.

"சரி நீங்க வேலையை பாருங்க..."என்ற எழில் தன் தங்கையிடம் கூறிவிட்டு அகிலனின் அறைக்குள் நுழைந்தான்.

"ரெண்டு வருஷம் அப்பறம் நான் உங்கள பார்க்குறேன் அப்பா என் கிட்ட பேச மாடீங்களா...? என் மேல அவ்வளோ கோவம்மா..? எனக்கு பிடிச்ச வாழ்க்கையை நான் வாழனும் நினைச்சேன் அது தப்பா..?" தன் தந்தையிடம் பேசிக் கொண்டிருக்க,

"கீர்த்தி நீ ஏன் இங்கே வந்தே...?" என்றவாறு எம்.டி அறைக்குள் நுழைந்தான் அகிலன்.

"அண்ணா நான் அப்பா கிட்ட பேசணும் தான் வந்தேன், ஆனா..."என கூற வர,

"எல்லாரும் வெளியே போங்க, என் பெர்மிசன் இல்லாம என் ரூம்மிற்க்கு நீங்க எப்படி கெஸ்ட் லாஸ்ட்..."விண்டோ வழியாக பார்த்தவாறு கூறினார்.

"அப்பா நான் உங்க பொண்ணு..."

"பெத்த அப்பன் பேச்சை மீறி நீ கல்யாணம் பண்ணிக்கிட்டையே அன்னைக்கே நீ என் பொண்ணு இல்லைன்னு முடிவு பண்ணிட்டேன், வெளியே போ..."கோவமாக கத்த தன் தங்கையை அழைத்துக் கொண்டு செல்ல முயன்றான்.

"ஒரு நிமிஷம் அண்ணா..."என்றவள் தன் தந்தையை நோக்கிவாறு,

"நீங்களா என்னைக்கு என் கிட்ட பேசுறீங்களோ அது வரைக்கும் நான் உன்கிட்ட பேச மாட்டேன், நான் பண்ணுனது எந்த தப்பும் இல்லை நீங்க சொல்லுவீங்க..." என்றவள் தன் அண்ணன், கணவனுடன் வெளியேறினாள்.

அவள் சென்றதும் தன் செல்ல மகளின் நினைவுடன் இருக்கையில் அமர்ந்தார் ஜெயபிரகாஷ்.

தன் அறைக்கு அழைத்து வந்த அகிலன், "நீ ஏன் இங்கே வந்தே..? வேந்தா நீ ஏன் இவ வரான்னு ஒரு வார்த்தை கூட சொல்லலை...?"என்க,

"இல்ல அண்ணா எனக்கு தான் அப்பாவை பார்க்கணும் போல தோணுனது அதான் வந்தேன்..."

"உனக்கு தான் அப்பா கோவம் தெரியும்ல, அவரை எதிர்த்து கல்யாணம் பண்ணி வச்சதுனால என் கிட்ட இன்னும் ஒரு வார்த்தை கூட பேச மாட்டிக்காரு, எல்லாம் சரியாகிடும் விடு கீர்த்தி நம்ம அப்பா தானே..?"

"ஹ்ம்ம் ஆமா சுதி நீ இதை பத்தி நினைச்சு கவலைபடாதே, இந்தா இதை குடி..." என்றவன் எழில் வந்து கொடுத்த ஜூஸை அவளுக்கு கொடுத்தான் யாழ்வேந்தன்.

அவளும் அதை வாங்கி பருக, "சரி அகில் நாங்க கிளம்புறோம்..."என்க,

"வாங்க நானே வந்து விடுறேன், நீங்க ஒன்னும் தனியா போக வேண்டாம் எனக்கு அந்த சைடு கொஞ்சம் வேலை இருக்கு..."என்ற அகில் இருவரையும் அழைத்துக் கொண்டு சென்றான்.

வீட்டிற்கு வந்தவர்கள் மதிய உணவை முடித்து விட்டு அகில் செல்ல,வேந்தனும் கீர்த்தியை ஓய்வெடுக்க சொல்லி தன் ஷோரூம் கிளம்பினார்.

தன் அறைக்குள் வந்தவளில் மனதில் முழுவதும் வளர்மதி,இளஞ்செழியன் மட்டுமே நிறைந்திருக்க , தன் மனதை திசை திருப்ப நினைத்தவள் அருகில் தன் கல்யாண சிடி இருக்க அதை போட்டு பார்க்க ஆரம்பித்தாள்.

சொந்தகளின் வருகை ஒவ்வொரு வரும் ஆளுக்கொரு வேலை செய்ய அதை கண்டவள் ரசித்துக் பார்த்துக் கொண்டிருக்க தன் தந்தை யாரேவென்று முதல் இருக்கையில் அமர்ந்திருக்க அனைத்தையும் கண்டாள்.

திடிரெண்டு பச்சை பட்டில் எழில் வளர்மதியை அழைத்து வர அவள் வெக்கம்,அவள் முகத்தில் இருந்த பொலிவு,புன்னகை தவழும் முகம் அனைத்தையும் கண்டவளுக்கு இப்போது இருக்கும் வளர்மதி முற்றிலும் வேறொருத்தியாக தெரிந்தாள்.

அவள் பார்வை யாரையோ தேடி ஓர் இடத்தில் நிற்க அங்கு மணமேடையில் ஐயரின் அருகில் நின்றிருந்த இளாவின் மீது நிலைத்து.

அவளை கண்டதும் இளாவின் முகத்திலும் சந்தோஷம் தோன்ற அவளிடம் நோக்கி வர அதே நேரம் தன் அண்ணன் வந்து ஏதோ சொல்ல வளரை கண்டவாறு இளா சென்றது அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதன் பின் நடந்த அனைத்தையும் சிடியில் பார்த்தவள் அடுத்தநொடி எழிலரசனை அழைத்தாள்.

கீர்த்தியிடமிருந்து அழைப்பு வருவதை கண்ட எழில், "என்ன கீர்த்தி சொல்லு காலையில தானே வந்துட்டு போனீங்க ரெண்டு பேரும், எதுவும் பேசணும்மா...?"என்க,

"ஹ்ம்ம் ஆமா நீங்க கொஞ்சம் வீட்டுக்கு வரீங்க நான் வளரை பத்தி உங்ககிட்ட நேர் பேசணும்..."

"வளரை பத்தியா..? சரிம்மா ஈவினிங் வொர்க் முடிஞ்சதும் வரேன்..." என்றவன் யோசித்தவாறு மொபலை வைத்தான்.

ஈவினிங் நேரம் வேலை முடிந்ததும் கீர்த்தியிடம் கூறியது போல் வேந்தனின் வீட்டிற்குச் சென்றான்.

எழிலை கண்ட திருமுருகன், "வாப்பா வா..? என்ன திடிருன்னு வந்திருக்கா..?" என்றவர் அவனை வரவேற்க,

"கீர்த்தி தான் ஏதோ பேசணும் வீட்டிக்கு வாங்கண்ணா சொன்னா அதான் வந்தேன் அப்பா...?"

"ஓ அப்படியா சரி அம்மாடி மருமகளே எழில் வந்திருக்காம்மா..."என்றவர் எழுந்து செல்ல கிட்சனில் இருந்து கையில் காபியுடன் மெல்ல வெளியே வந்தாள் சுதிகீர்த்தி.

"வாங்கண்ணா..." என்றவள் தன் கையில் வைத்திருந்த காபியை அவனுக்கு தந்தவாறு மெல்ல அமர்ந்தாள்.

"என்னமா ஏதோ வளரை பத்தி பேசணும் சொன்னே..? என்னது...?" என்க,

இளா,வளரின் இருவருக்கும் இடையில் இருக்கும் உறவினை பற்றி கூற வேண்டும் என்று நினைத்து தான் எழிலை அழைத்தாள். அனால் அவனை அழைத்தற்கு பின் ஒரு யோசனை தோன்ற எழிலிடம் கூற வேண்டாம் என நினைக்க அவனே இங்கு வந்து சேர்ந்தான்.

"என்னமா ஏதோ யோசிச்சிட்டு இருக்கே..? சொல்லும்மா...?"

"ஒன்னுமில்லை அண்ணா என் கல்யாண போட்டோ வீடியோ எல்லாம் பார்த்தேன், அது வளரு ரெம்ப அழகா சிரிச்ச முகமா சந்தோஷமா இருந்தா..? ஆனா இப்போ அப்படி இல்லையே..? அதான் அதை பத்தி உங்க கிட்ட கேட்கலாம் நினைச்சேன் வேற ஒன்னும் இல்ல...?"

"என்னேன்னு தெரியலம்மா கொஞ்சம் மாசம் முன்னாடி அவளுக்கு வைரல் பீவர் வந்து ஒன் வீக் ஹாஸ்பிட்டல்ல இருந்தா அதுல இருந்து தான் யார் கிட்டயும் பேசமா அமைதியாக இருக்கா..? நானும் அவ இஷ்டப்படி இருக்கட்டும் விட்டுட்டேன், ஆனா இப்போ கொஞ்சம் நாளா ஆபீஸ் வந்ததுல இருந்து பேச ஆரம்பிடிச்சிருக்காம்மா..."

"ஓ அப்படியா சரின்னா, எப்போ ஹாஸ்பிட்டல்ல இருந்தா...?"

"நம்ம செழியா இறந்த நேரம் தான்ம்மா..."

"ஹ்ம்ம் ஓகேன்னா வேற ஒன்னுமில்லை சும்மா தான் கேட்டேன்..."

"சரிம்மா..."சிறிது நேரம் பெரியவர்கள் கீர்த்தி

அனைவரிடமும் பேசி விட்டு சென்றான்.

அன்றிரவே வளரை நினைத்து ஒரு முடிவெடுத்தவள் நிம்மதியாக காலையில் இருந்து தோன்றிய குழப்பம் அனைத்தும் தீர தன் பாட்டியை அழைத்தாள்.

"பாட்டி எனக்கு உங்களை பார்க்கணும் போல ப்ளீஸ் வரீங்களா..?" தன் பாட்டியிடம் கெஞ்ச,

அவரோ அதற்கு ஏதோ சொல்ல, "தேங்க்ஸ் பாட்டி..."என்றவள் சிறிது நேரம் பேசிவிட்டு மொபலை வைத்தான்.

நாளை வேந்தனிடமும், பாட்டியிடமும் எப்படி பேச வேண்டும் என நினைத்தவாறு படுக்கையில் சரிய வேந்தன் வருவதற்குள்ளே நித்திரைக்குச் சென்றாள்.

கதிரவன் வெளிச்சத்தால் விழி திறந்த சுதிகீர்த்தி மெல்ல எழ அதே நேரம் குளித்து முடித்து வெளியே வந்தான் யாழ்வேந்தன்.

"குட் மார்னிங், அதுக்குள்ள ஷோரூம் கிளம்பிடீங்களா..?" என்றவாறு எழுந்து நின்றான்.

"ஹ்ம்ம் ஆமா, இப்போ கொஞ்சம் நாள்ல நல்லா தூங்குற போல, சுடிதண்ணீர் பரப்பி வச்சிருக்கேன் போய் குளிச்சிட்டு வா..."என்றவன் டவலை எடுத்து தர,

அதை வாங்கியவன், "நான் ஒரு முக்கியமான விசியம் சொல்லணும் உன்கிட்ட..."என்க,

"சரிம்மா போ போய் குளிச்சிட்டு வா நான் வெயிட் பண்ணுறேன்..."என்றவன் மெல்ல அவளை பாத்ரூமிற்குள் அழைத்துச் சென்று விட்டு வெளியே வந்தான்.

தன் அறையை விட்டு வெளியே வர அதே நேரம் ரத்னா டீயும்,பாலும் கொண்டு வர, "என்னடா கீர்த்தியை காணும்...?" என்றார்.

"அவ குளிக்கிறாம்மா..."

"ஓ அப்படியா சரி இந்தா டீ, இந்த பாலை அவ வந்ததும் கொடுத்திரு எனக்கு கிடச்சன்ல வேலை இருக்கு..."என்றவர் அவனிடம் கொடுத்து விட்டு செல்ல அதை வாங்கிக் கொண்டு தன் அறைக்கு வந்தான்.

நேரம் செல்ல குளித்து முடித்து கீர்த்தி வெளியே வர தன் கையில் வைத்திருந்த பாலினை அவளுக்கு கொடுத்து விட்டு அவளது ஈர கூந்தலை துவட்ட ஆரம்பித்தான்.

"சொல்லு ஏதோ பேசணும் சொன்னே..?"

"ஹ்ம்ம் ஆமா நான் ஒரு விசியம் பண்ண போறேன், அதுக்கு நீங்க முதல பெர்மிசன் தரனும் எனக்கு..."

"நீ என்ன பண்ணுனாலும் அது நல்லா தான் இருக்கும் சொல்லு என்னனேன்னு, கண்டிப்பா என்னால முடிஞ்சா உதவியை பண்ணுறேன்..."

அவன் தன் மேல் வைத்த நம்பிக்கையை அவன் வாயிலாக கேட்டவள், "ஐ லவ் யூ யாழ்..." என்றவள் சற்று எம்பி அவன் நெற்றியில் இதழ் பதிக்க,

அவள் இரு கண்ணங்களையும் பற்றியவன், "லவ் யூ டி பொண்டாட்டி..."என்றவன் அவள் கண்ணத்தில் இதழ் பதித்தான்.

அவளிடம் இருந்து விலக நினைத்தவன் தன் இதழ் பதித்த அடுத்த கணம் அவளது வெக்கத்தை முகச்சிவப்பையும் ரசித்தவன், அவளது செவ்விதழில் தன் இதழ் பதித்தான்.

அவளும் அவன் செய்கைக்கு ஒத்துழைக்க நீண்ட நேரம் நீடித்துக் கொண்டே செல்ல, அவள் மூச்சு முட்டுவது புரிய அதன் பின்னே அவள் நிலை உணர்ந்து வேகமாய் விடுவித்தான்.

அவனது இதழ் ஒற்றலை ரசித்துக் கொண்டிருந்தவள் அவன் விலகியதும் புரியாமல் அவன் முகம் காண, "சாரி சுதி, உன் நிலைமை என்ன தெரியாம நான் இப்படி பண்ணிட்டேன், இனிமே இப்படி பண்ண மாட்டேன், ஐ ஆம் சாரி..." அவள் கையை பிடித்துக் கொண்டு கெஞ்ச,

தன் கணவனின் கெஞ்சலை கண்டு வாய்விட்டு சிரிக்க ஆரம்பிக்க அவனோ புரியாமல் விழித்தான்.

"என்னாச்சு சுதி ஏன் சிரிக்கிற...?"

"நீங்க கிஸ் பண்ணுறதுனால உங்க குழந்தைக்கும், எனக்கும் ஒன்னுமாகாது மாமா..."சிரித்துக் கொண்டு கூற,

"இது தெரியாமா இத்தனை நாள் வேஸ்ட் பண்ணிட்டேன்னே..." தன் மனைவியின் தோளில் இரு கைகளையும் போட்டவாறு அவளை நோக்கி மறுபடியும் குனிந்தாள்.

"போங்க யாழ்..." அவனை பார்க்க கூட முடியாமல் வெக்கத்துடன் திரும்பி நின்றாள்.

அவளை பின்னிருந்து அணைத்து அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்து அவள் கன்னத்தை உரச ஆரம்பித்தான்.

"ஐயோ முதல் விடுங்க நான் பேசணும் உங்க கிட்ட..."என்றவள் அவனிடமிருந்து விலகி படுக்கையில் அமர,

அவள் அருகில் வந்து அமர்ந்தவன், "சரி சொல்லு..."என்றான்.

"நான் செழியாவோட கடைசி ஆசையை நிறைவேத்தனும் நினைக்கேன்..."

"நீ என்ன சொல்லுற..? செழியா உன் கிட்ட எதுவும் சொன்னான்னா...?"

"இல்ல, செழியன் காலேஜ் படிச்சிக்கிட்டு இருக்கும் போது ஒரு பொண்ணை விரும்புனான். நான் அவங்க ரெண்டு பேரையும் காலேஜில வச்சி பார்த்திருக்கேன்..."என்றவள் காலேஜில் அவர்கள் லவர்ஸ் டே செலிபிரேட் செய்தததை கூறினாள்.

"நான் அவனுக்கு ஒரு நல்ல பிரெண்டா தான் இருந்தேன் ஆனா என் கிட்ட இவ்வளோ பெரிய உண்மையா

மறச்சிருக்கான். அந்த பொண்ணு யாரு சுதி..? இப்போ அவங்க என்ன பண்ணுறாங்கன்னு தெரியுமா..?"

"அந்த பொண்ணு நம்ம எல்லாருக்கும் தெரிஞ்சா பொண்ணு தான்..."

"தெரிஞ்சா பொண்ணா யார் சுதி...?"

"அது வந்து வேற யாருமில்லை நம்ம எழில் அண்ணன் தங்கச்சி வளர்மதி தான்..."என்க,

அவனோ அதை கேட்டு, "வாட்...! "என கத்தியவாறு பேரதிர்ச்சியில் எழுந்து நின்றான்.

அதன் பின் தான் யோசித்தது, கண்டது, விசாரித்தது என அனைத்தையும் கூற தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே அமர்ந்தான் யாழ்வேந்தன்.

"யாழ் என்னாச்சு உங்களுக்கு..?"

"அந்த பொண்ணோட மனசு இப்போ எப்படி இருக்கும், ஒரு பொய்யான வாழ்க்கை வாழ்ந்துட்டு இருக்கா..? ஐயோ இது மட்டும் எழிலுக்கு தெரிஞ்சா...?" அதற்கு மேல் நினைத்து பார்க்க முடியாமல் தவிக்க,

"வளர்மதியோட வாழ்க்கை என்னைக்கும் சந்தோஷமா இருக்கனும்னா இளா கடைசி நிமிஷம் நினைச்சது அவளோட கல்யாணம் தான் அது நடக்கணும் ..."

"வளரை பத்தி உனக்கு தெரியாது அவ உயிரை விடுவாளே தவிர வேற ஒருத்தனை நிச்சியமா கல்யாணம் பண்ண மாட்டா..?"

"நான் ஒன்னு யோசிச்சிருக்கேன், வளரை ஏன் எங்க அண்ணன் அகிலுக்கு கல்யாணம் பண்ணி வைக்க கூடாது, நிச்சியமா அவ வருங்காலத்ததுல சந்தோஷப்படுவா, நீங்க என்ன சொல்லுறீங்க..?"

சில நிமிடங்கள் மௌனமாய் இருந்தவன், "இது நடக்குமா சுதி..? உங்க அப்பா இதுக்கு முதல ஒத்துகிடுவாரா..? அகிலுக்கு வளர் விரும்பினது தெரிஞ்சா அவன்

ஏத்துகிடுவானா இல்ல வளரு தான் அவனை ஏத்துகிடுவாளா..?"

"இது எல்லாத்தையும் காலம் கண்டிப்பா மாத்தும்..."

"எனக்கு நம்பிக்கை இல்ல, வளருக்கு இவ்வளோ அவசிரமா கல்யாணம் பண்ணனும்மா..?"

"இளாவை அவ மனசுல இருந்து முழுசா அழிக்கணும்னா இதை பண்ணி தான் ஆகனும், அப்போ தான் இளா ஆத்மா நிம்மதியாகும்..."என்க,

"சரி சுதி நீ சொன்னது போலவே செய், நான் என்னைக்கும் உனக்கு உதவியா இருப்பேன்..?"என்றவன் தன் மனைவியை அணைத்துக் கொள்ள தன் மனதில் இருந்ததை கூறி விட்ட நிம்மதியில் அவன் நெஞ்சில் சாய்ந்தாள்.

.அத்தியாயம் : 20

தன் உடைகளை எடுத்துக் வைத்துக் கொண்டிருந்த மனைவியை கண்ட யாழ்வேந்தன், “சுதி நீ உங்க வீட்டுக்கு போய் தான் ஆகனும்மா...?” அவள் கைகளை பிடித்துக் கொண்டு கெஞ்சினான்.

“ஹ்ம்ம் ஆமா இன்னும் கொஞ்சம் நேரத்துல பாட்டி, தாத்தா வந்திருவாங்க எங்க வீட்டுக்கு, அண்ணா கூப்பிட போயிருக்கான்...?”

“உன் பாட்டியை வேணா இங்க வர சொல்லேன், ப்ளீஸ் சுதி என்னால நீ இல்லாம ஒரு நொடி கூட இந்த ரூம்ல இருக்க முடியாது, எனக்கு நீ எப்பவும் என் பக்கத்துல இருக்கேன், ப்ளீஸ் டி போகாதே செல்லம்...”

“யாழ் நான் ஏன் இப்போ எங்க வீட்டுக்கு போறேன்னு உங்களுக்கு தெரியும்ல. தெரிஞ்சும் எதுக்கு இப்படி பேசுறீங்க, என்னால மட்டும் உங்கள பிரிஞ்சி இருக்க முடியுமா சொல்லுங்க. சீக்கிரம் வந்துருவேன் ப்ளீஸ்...”

“நீ எந்த நம்பிக்கையில உங்க பாட்டி ஒத்துகிடுவாங்கன்னு சொல்லுறேன். அப்படியே உங்க பாட்டி ஒத்துகிட்டாலும் உங்க வீட்டுலையும் எழில் வீட்டுலையும் இந்த கல்யாணத்துக்கு சம்மதிப்பாங்களா..?”

“என் பாட்டியை பத்தி உங்களுக்கு தெரியாது..? போகப் போக தெரியும்..? வாங்க வந்து என்ன வீட்டுல விடுங்க முதல...”

அவனோ அமைதியாக நிற்க அவன் அருகில் வந்தவள் யாழ் என அழைத்தவாறு தன் கணவனின் நெஞ்சில் சாய, “எனக்கு பயமா இருக்கு சுதி. உனக்கு எதாவது ஒன்னுனா என்னால தாங்க முடியாது. அங்கே உங்க அப்பா இல்ல வேற யாராவது உன்ன ஹார்ஸ்சா பேசிட்டா...? அதான் வேண்டான்னு சொல்லுறேன்..? புரிஞ்சிக்கோம்மா..?” என்க,

“சொன்னா சொல்லட்டும் அவங்க என் குடும்பம் தானே..? நான் நல்லது தானே பண்ண போறேன்..?”

“நம்ம வேணா வளர்மதிக்கு வேற மாப்பிளை பார்க்கலாம்...”

அவளோ அதை கேட்டு அவனிடம் இருந்து விலகி முறைத்தவள், “அப்போ என் அண்ணன் மேல உங்களுக்கு நம்பிக்கை இல்ல அப்படி தானே..?” கோவமாக கூற,

“அப்படி இல்லம்மா உங்க அப்பா நினைச்சா தான் எனக்கு கவலை, வளரு அந்த வீட்டுலயே வாழ போறவா..? அவ பட்ட கஷ்டம் போதும் நினைக்கேன்...?”

“என்னங்க எல்லாம் நல்லதாவே நடக்கும் நான் என் தாத்தா, பாட்டியை முழுசா நம்புறேன். வாங்க போகலாம்...”என்க இதற்கு மேல் அவளிடம் எதுவும் பேச முடியாது என நினைத்தவன் அவளை அழைத்துச் சென்றான்.

திடீரெண்டு வந்து நின்ற தன் மகளை கண்ட சித்ரா, “என்னடி திடீருன்னு வந்திருக்கே..? ஆமா மாப்பிள்ளை எங்கே..? நீ தனியாவா வந்தே..?”என்க,

“இல்லமா அவர் தான் வந்து விட்டுட்டு போனாரு…”.என்றவள் அங்கிருந்த சோபாவில் அமர,

“ஏன் திடீருன்னு வந்திருக்கே..? எதுவும் பிரச்சனை இல்லையே அங்கே..?”

“ஏன்மா பிறந்த வீட்டுக்கு வந்தா எல்லா அம்மாவும் இப்படியே நினைக்கிறீங்க…? நான் சும்மா தான் வந்தேன். பிள்ளை வந்திருக்காலே அவளுக்கு குடிக்க ஏதாவது கொண்டு வரணும் தோணுது, பாருடா உங்க பாட்டி என்ன கவனிக்கே மாட்டிக்கா…” தன் வயிற்றில் கை வைத்துக் கொண்டு கூற,

“சாரிடி மறந்துட்டேன், பொறு உனக்கு குடிக்க கொண்டு வரேன்…” கிட்சன் நோக்கி செல்ல அதே நேரம் அகிலனின் கார் வீட்டின் முன் நின்றது.

“என்ன இது இந்த நேரம் ஆபீஸ்ல இருந்து வந்திருக்கான், என்னவா இருக்கும்…”மனதிற்குள் நினைத்துக் கொண்டிருக்க காருக்குள் இருந்து இறங்கிய தன் மாமியாரை கண்டு திகைத்தார்.

“அடி பாவி மகளே, உங்க பாட்டி வராங்கன்னு ஒரு வார்த்தை சொன்னையாடி..?” தன் மகளை பார்த்து கேட்டவர் தன் மாமியாரை நோக்கி சென்றார் சித்ரா.

“வாங்க அத்தை வாங்க…?நல்லாயிருக்கீங்களா..?மாமா வரலையா..?” என்றவாறு அவர் காலில் விழ,

“இருக்கேன் ஏதோ…”என்றவர் அவரை மனதார ஆசிர்வதித்து உள்ளே சென்றார்.

தாய்மையின் பூரிப்பில் அமர்ந்திருந்த தன் பேத்தியை கண்டவர் அவள் அருகில் சென்று அமர பாட்டி என்றவாறு அவரை கட்டிக் கொண்டாள்.

“எப்படி இருக்கம்மா..?” அவள் தலையை வருடிக்

கொடுத்தவாறு கேட்க,

“எனக்கென்ன பாட்டி உங்க பேரன் எங்களை நல்லா பார்த்துக்கிறான்..?”

“ஆமா நீ ஏன் இங்கே இருக்கே..? மாமியார் வீட்டுல தானே இருக்கனும்..? என்ன அகில் எனக்கு தெரியாம இவளுக்கு வளைகாப்பு போட்டு கூட்டிட்டு வந்துடீங்களா..?” தன் எதிரில் அமர்ந்திருந்த பேரனிடம் கேட்க,

“ஐயோ அத்தை அப்படியெல்லாம் இல்ல. அவ இப்போ தான் வந்தா உங்களை பார்க்க...” என்ற சித்ரா அவருக்கு குடிக்க மோரினையும், தன் மகளுக்கு பழச்சாரினையும், தன் மகனுக்கு டீயும் தந்தாள்.

யார் யார்க்கு என்ன வேண்டும் என்பதை சரியாக அறிந்து தரும் தன் மருமகளை மனதிற்குள் பாராட்டியவர், “சரி பேராண்டி தாத்தா கிட்ட போன் பண்ணி நான் வீட்டுக்கு வந்துட்டேன் சொல்லு...?”என்க,

“சரி பாட்டி சொல்லிறேன், நான் போய்ட்டு வரேன்...”என்றவன் தன் அலுவலகத்திற்கு கிளம்பினான்.

“ஏன் பாட்டி தாத்தாவை கூட்டிட்டு வரல...?”

“அவர் இங்கே வந்துட்டா அங்கே இருக்கிறது எல்லாம் யார் பார்ப்பா..?” என்றவர் தனக்காக ஒதுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்தார்.

சித்ரா தன் வேலையை பார்க்க செல்ல தன் பாட்டியின் பின்னே மெல்ல சென்றாள் சுதிகீர்த்தி.

அவள் அறைக்குள் நுழைந்த அடுத்தநொடி, “என்கிட்ட என்ன பேசணும்..? எதுக்கு இவ்வளோ அவசிரமா என்ன வர வச்சிருக்கே..?” என்றார்.

“நான் உங்க கிட்ட பேச தான் வந்திருக்கேன்னு எப்படி தெரியும் உங்களுக்கு..?”

“நான் இராஜலட்சுமி ஒருத்தவங்க பேச்சை வைச்சே கண்டு பிடிச்சிருவேன், சொல்லு என் கிட்ட என்ன பேசணும்...?”

“இல்ல பாட்டி நீங்க ரெஸ்ட் எடுங்க நாம்ம அப்பறம் பேசலாம்...”என்றவள் வேகமாக செல்ல பார்க்க,

அவள் கை பற்றி தடுத்து தன் அருகில் அமர வைத்தவர், “மனசில ஏதாவது இருந்தா பட்டுன்னு சொல்லிறு, என்கிட்டே சொல்லணும் தானே வந்தே அப்பறம் என்ன சொல்லு..?” என்றார்.

“ஒரு நல்ல காரியத்தை பத்தி தான் உங்க கிட்ட சொல்லுனும்...?”

“நல்ல காரியமா..?அப்பறம் ஏன் தயங்குற..?”

“பாட்டி அண்ணனுக்கு ஒரு பொண்ணு பார்த்திருக்கேன், ரெம்ப நல்ல குடும்பம் அவங்களும் கிராமத்துக்காரங்க தான், நல்ல மனுஷங்க...?”

“பெரியவங்க இருக்கும் போதே நீ அவனுக்கு பொண்ணு பார்த்தது தப்பு இதுல நீ என்ன ஊருல இருந்து வர வச்சி என் கிட்டயே சொல்லுறியா..? இதான் சித்ராவோட வளர்ப்பா...?” கோவத்தில் கத்த,

தன் பாட்டி தான் கூறியதை கேட்பார் என நினைக்க அவரது இந்த கோவத்தை கண்டவள், “சாரி பாட்டி...” என்றாள்.

“இனிமே பெரியவங்க இருக்கும் போது அவங்கள மீறி எதுவும் செய்ய கூடாது...? ஆமா நல்ல குடும்பம் சொன்னியே அந்த குடும்பம் நம்ம எல்லார்க்கும் தெரிஞ்சா குடும்பம்மா...?”

“ஹ்ம்ம் ஆமா பாட்டி நம்ம எல்லாருக்கும் நல்ல பழக்கம்

தான் ஆனா அப்பாக்கு மட்டும் பிடிக்காது அவங்கள..?"

"யார் அவங்க இப்போ எங்கே இருக்காங்க..?"

"இங்கே தான் பாட்டி, என் உயிரை காப்பாத்துனாங்களா அண்ணாவோட பிரெண்ட் எழில் அவங்க தங்கச்சி வளர்மதி தான் பாட்டி, என் கல்யாணத்துக்கு கூட வந்தாங்க நீங்க கூட பேசுனீங்களா அந்த பொண்ணு தான் பாட்டி, ஆனா..."

"ஆனா என்ன சொல்லு...?"

"அவங்க நம்ம மாதிரி வசதியானவங்க கிடையாது, என் வீட்டுக்காரர் மாதிரி கஷ்டபடுற குடும்பம் தான், அப்பா இதுக்கு உறுதியா ஒத்துக்கிட மாட்டாரு, நீங்க தான் பேசணும் ப்ளீஸ்..." என்றவள் இளா,வளர் விரும்பியதை தவிர அவளின் நற்குணம் அனைத்தையும், தன் தந்தையின் கோவம் என அனைத்தையும் கூறினாள்.

"என் பையன் இப்படி மாறிட்டானா, பெத்த பிள்ளைகள் கிட்ட கூட பேச மாட்டிக்கானா..? அப்படி என்ன தகுதி, தகதாரம்,அந்தஸ்து கேட்குது..." கோவமாக தன் மகனை நினைத்து கூறியவர், "நீ போம்மா இனிமே உங்க அப்பனை நான் பார்த்துகிறேன்..." என்றார்.

"பாட்டி அண்ணா கல்யாணம்..."

"இனிமே கொஞ்சம் நாள் இங்கே தான் இருப்பே முடிவு பண்ணி சொல்லுறேன்..." என்க, சரி என்றவாறு வெளியே சென்றார்.

சிறிது நேரம் ஓய்வெடுத்து மாலை நேரம் வெளியே வர ஹாலில் அமர்ந்து தன் மொபலை நோண்டிக் கொண்டிருந்த பேத்தியை கண்டார்.

"என்ன பண்ணுற...?" என்றவாறு அவளின் முன் வந்து அமர,

தன் பாட்டியை கண்டதும், "ஒன்னுமில்லை பாட்டி..."

என்றவள் மொபலை டேபிளில் வைத்தாள்.

“எங்கே உங்க அப்பா இன்னும் வரலையா..?”

“இல்ல பாட்டி...”

தன் அத்தை ஹாலில் வந்து அமர்ந்ததை அறிந்த சித்ரா அவர் ஊரிலிருந்து கொண்டு வந்த முறுக்கையையும், சுக்கு போட்ட காப்பியையும் கொண்டு வந்தார்.

“இந்தாங்க அத்தை எடுத்துக்கோங்க...”என்றவர் அதை தர அதனை வாங்கிக் கொண்டவர், “அம்மாடி மருமகளே ஊருல இருந்து சுத்தமான,நெய், தேன், குங்கும பூ எல்லாம் கொண்டு வந்திருக்கேன். அதை என் பேத்திக்கு கொடுத்திரு...”

“சரிங்க அத்தை...” பணிவுடன் கூறிய சித்ரா சமயலறைக்குச் சென்றார்.

அதே நேரம் யாழ்வேந்தன் வீட்டுக்குள் நுழைய, “அடடா வாங்க மருமகனே..?” இன்முகத்துடன் இராஜலட்சுமி வரவேற்க,

“வணக்கம் பாட்டி நல்லா இருக்கீங்களா..? என்ன ஆசிர்வாதம் பண்ணுங்க..?” அவர் காலில் விழுந்து வணங்கியவன் கீர்த்தியின் அருகில் அமர்ந்தான்.

சுற்றி நிறைய இடங்கள் இருப்பினும் அவன் தன் மனைவியின் அருகில் அமர்வதை கண்ட பாட்டி, “எனக்கு என்ன மருமகனே நல்லா இருக்கேன், என்ன நீங்க இப்படி இழச்சிட்டீங்க, என் பேத்தி கவனிப்பு சரியில்லையோ..?” என்க,

“அப்படியெல்லாம் இல்ல பாட்டி சுதி என்ன நல்லா கவனிச்சிக்கிறா கொஞ்சம் வேலை அதிகம் அதான் பாட்டி...”

அவன் தன் பேத்தியை விட்டு கொடுக்காததை மனதில்

குறித்தவர், “சரிங்க மருமகனே..?” என்றார்.

“பாட்டி நீங்க என்ன அகில் மாதிரியே கூப்பிடுங்க, நீங்க வாங்க எல்லாம் வேண்டாம்...”

“என்ன இப்படி சொல்லுறீங்க..? நீங்க இந்த இராஜலட்சுமி வீட்டு மருமகன் மரியாதையோட நடந்துறது தான் எங்க பண்பு...”

“ஆனா பாட்டி...”என்று ஏதோ கூற அவனின் கையை இறுக பற்றினாள் சுதிகீர்த்தி.

தன் மனைவியை பார்த்தவன் அதன் பின் அமைதியாக இருக்க, பாட்டியோ பொதுவான விசியங்களை பற்றி பேச ஆரம்பித்தார்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்க வெளியே கார் வரும் ஓசை கேட்க, தனித் தனியாக வந்து இறங்கிய மகனையும், பேரனையும் கண்டார்.

கோட் சூட் உடையில் தன் டையை கழட்டியவாறு சூ சத்தம் தரையில் பதிய நடந்த வந்த தன் மகனை கண்டவர், அவனின் பின் நார்மல் ஷர்ட் அண்ட் பேன்ட் அணிந்து முகத்தில் சோர்வு இருந்தாலும் அது தெரியாமல் மெல்ல நடந்து வரும் தன் பேரனையும் கண்டார் இராஜலட்சுமி பாட்டி.

“சித்ரா ஒரு கப் காபீ கொண்டு வா..?” என்றவாறு தன் அறைக்கு செல்ல, எப்போதும் சரி என்று சொல்லும் மனைவியின் பதில் இன்று வராமலிருக்க சித்ரா கத்தியவாறு திரும்பினார்.

ஹாலில் இருந்த அனைவரையும் அவரையே பார்க்க தன் தாயை கண்டவர், “அம்மா எப்போ வந்தீங்க...? ஏன் நீங்க வராத சொல்லவே இல்ல..? அப்பா வரலையா..?”என்றவாறு அருகில் வர,

“இந்த கேள்வியை எல்லாரும் கேட்டுட்டாங்க..?இப்பவும் இந்த நேரம் தான் ஆபீஸ்ல இருந்து வருவியா...?”

“ஆமாம்மா...?” என்றவரின் பார்வை வேந்தன், கீர்த்தியின் புறம் சற்று சென்று விட்டு திரும்பியது.

தன் மகனின் பார்வையை அறிந்த பாட்டி, “இந்த வீட்டு மருமகன் வந்திருக்கான் வான்னு கேட்க மாட்டியா..?”தன் மகனை பார்த்து கேட்க,

அவரோ பேச்சை மாற்றும் விதமாக, “சித்ரா அம்மாவுக்கு எதுவும் சாப்பிட கொடுத்தியா..?” என்றார்.

சித்ராவோ அமைதியாக தலையாட்ட தன் மகனின் பதிலுக்காக காத்திருந்தான் இராஜலட்சுமி பாட்டி.

“அம்மா நீங்க பேசிட்டு இருங்க நான் போய் பிரெஸ்சாகிட்டு வரேன்...” என்ற ஜெயபிரகாஷ் தன் அறைக்குள் வேகத்துடன் நுழைந்தார்.

மதியம் தன் பேத்தி கூறியதையே நினைத்திருக்க அங்கே ஒரு அசாத்திய அமைதி நிலவியது.

அதை கலக்க நினைத்த வேந்தன், “சரி பாட்டி நான் கிளம்புறேன் நாளைக்கு வரேன்...” என்றவன் எழுந்து நிற்க,

“நில்லுங்க மருமகனே அதுக்குள்ள கிளம்பிட்டா எப்படி. இருந்து சாபிட்டு போங்க நான் சொன்னா கேட்பீங்கன்னு நினைக்கிறேன்...”

“சரி பாட்டி...”என்றவன் அதற்குள் மேல் பேச முடியாமல் அமர அனைவரும் சிறிது நேரம் பேச ஆரம்பித்தனர்.

நேரம் செல்ல அவர்கள் அருகில் வந்த சித்ரா, “அத்தை சாப்பாடு எல்லாம் ரெடியாகிருச்சி சாப்பிட வாங்க...”என்க அதே நேரம் குளித்து முடித்து வெளியே வந்தான் அகிலன்.

அதன் பின் அனைவரும் உன்ன அமர தன் மகன் மட்டும் வராததை கண்ட பாட்டி, “அகிலா நீ போய் உங்க அப்பாவை கூட்டிட்டு வா...?”என்க,

“பாட்டி நானா..! அது வந்து...”

“நான் போய் கூட்டு வரேன் அத்தை...” என்ற சித்ரா அவர் மறுத்தும் கூறும் முன்னே வேகமாய் சென்றனர்.

தன் பேத்தி கூறிய அனைத்தையும் தன் கண் கண்டவர் பொறுமையுடன் அமைதியாக இருக்க, தன் கணவனை சாப்பிட அழைத்து வந்தார் சித்ரா.

டைனிங் டேபிளில் அருகே வந்தவர் வேந்தன், கீர்த்தி இருப்பதை கண்டவர், “நீங்க சாப்பிடுங்க நான் அப்பறம் சாப்பிடுக்கிறேன்...”என்றவர் திரும்பி செல்ல,

“ஒரு நிமிஷம் நில்லுடா...” என்ற இராஜலட்சுமி வேகமாய் அவர் அருகில் வர, மற்ற அனைவரும் தன் இருக்கையில் இருந்து எழுந்தனர்.

“நீ என் பிள்ளையே இல்லடா...” என்றவர் அனைவரும் முன்பு தன் மகனின் கண்ணத்தில் விரல் தடம் பதிய அறைந்தார்.

அத்தியாயம் 21

தன் தாய் அறைந்ததை உணர்ந்து கண்ணத்தில் கை வைத்துக் கொண்டு கோவத்துடன் நிற்க, அதே நேரம் சிறியர்வர்கள் இருவரும் பாட்டி....! என கத்தியவாறு தன் தந்தையின் புறம் வந்து நின்றனர்.

“பாட்டி நான் சொல்லுறேன் தப்பா நினைக்காதீங்க..? அவர் உங்க பையன் தான், ஆனா இப்போ அவர் எங்க அப்பா, எங்க ரெண்டு பெரும் முன்னாடி நீங்க அவரை அடிக்கிறது தப்பு பாட்டி...?” அகிலன் தன் தந்தையை அடித்த கோவத்தில் பேச,

“ஆமா பாட்டி அண்ணா சொல்லுறது சரி தான், அப்பா என்ன தப்பு பண்ணுனாலும் அதுக்காக நீங்க அவரை அடிச்சிருக்க கூடாது...” சுதிகீர்த்தி கூறினாள்.

தன் பேரன், பேத்தி இருவரையும் முறைக்க அவரோ அதற்கு அசராமல் தந்தையின் புறம் நின்றனர்.

இருவரும் அவர்கள் தந்தையின் மீது வைத்திருந்த அன்பினை நினைத்து மகிழ்ந்தவர், “பாருடா உன் ஸ்டேடஸ் இது தான், அவங்க ரெண்டு பேரும் உன் மேல வச்சிருக்கிற அன்பு, பாசம் இது தாண்டா..? தகுதி,தகாதாரம்,அந்தஸ்து பார்க்குறையே அந்த தகுதி அந்த பணமா இப்போ உன் கூட துணை நின்னது..? இப்படி பெத்த பிள்ளைகள் கூட பேசமா வீம்பாய் இருந்து அப்படி என்னடா சாதிக்க போறா..? உன் பொண்ணு இன்னைக்கு உயிரோட இருக்குறாளே அதற்கு உன் பணம் காரணமா...? அன்னைக்கு அந்த பையன் பணக்கார வீட்டு பொண்ணு நினைச்சு காப்பாத்தாமா போயிருந்தா உன் பணம் வந்து அவளை காப்பாதிருக்கும் சொல்லு...? பணக்காரனை இருந்தா மட்டும் எல்லா சாதிச்சிரலாம் நினைக்காதே அது என்னைக்கும் உன் கூட நிரந்திரமா இருக்காது..? உன் வாழ்க்கை முழுக்க கடைசி நிமிஷம் வரைக்கும் கூட இருக்க போறது இவங்க மட்டும் தாண்டா..? உன்ன எதிர்த்து இவங்க ரெண்டு பேர் கல்யாணத்தை நடத்தி வைச்சான் சொல்லி நீ பெத்த பையன் கிட்ட பேசாம இருக்கையா..?

அவன் நினைச்சா ஒரு நிமிஷசத்துல உன் கிட்ட உள்ள எல்லாத்தையும் பறிச்சிட்டு உன்ன விட்டு போக முடியும். ஆனா அவன் அப்படி பண்ணுனான சொல்லு அப்பா தான் வேணும் உன் கூடவே இருக்கிறானே. அவன் வைச்சிருக்கிற பாசம் தாண்டா நீ சொன்ன ஸ்டேடஸ்..? இப்போ இந்த பிள்ளைக்கு என்னடா குறைச்சல் உன் மக எவ்வளோ சந்தோஷமா வாழ்றான்னு ஒரு பத்து நிமிஷம் அவ கூட இருந்து பாரு தெரியும்..? அவளுக்கு பிடிச்ச டிரெஸ், அவளுக்கு தேவையான பணம், போக காரு, லண்டன் படிப்பு எல்லாம் அவளுக்கு கொடுத்தியே ஒரு

நொடி நாளும் நான் சந்தோஷமா இருக்கேன்ப்பா சொல்லிருக்காளா உன்கிட்ட..? அந்த பொண்ணு கண் பார்வை கிடைக்க ஏதாவது பண்ணுனையா..? சொல்லுடா சொல்லு நீ இதுவரைக்கும் அவங்க சந்தோஷத்துக்காக என்ன பண்ணுனா...?" கோவமாக தன் மகனிடம் அவர் கேட்ட கேள்வியில் அங்கிருந்த அனைவருமே ஒரு நொடி ஆடி போய் நின்றனர்.

தன் தாய் கேட்ட கேள்வியில் பதில் சொல்ல முடியாமல் ஜெயபிரகாஷ் அமைதியாக நிற்க, அவரை முறைத்தவாறு நின்றார் இராஜலட்சுமி பாட்டி.

நேரம் செல்ல அங்கே அசாத்திய அமைதி மட்டுமே நிலவ, "என்ன எதுவும் சொல்ல முடியலையா..? உன்ன முடியாது நான் கேட்ட எந்த கேள்விக்கும் உன் கிட்ட பதில் கிடையாது இதான் உண்மை, நான் வளர்த்த வளர்ப்பா இப்படி பண்ணிருக்கே நினைக்கும் போது இந்த உலகத்துல நான் இருக்கணும்மானு தோணுது..." கோவமாக கத்த,

இதுவரை தன் பாட்டி கூறியதை கேட்ட அதிர்சியோ இல்லை இவ்வளோ நேரமாக நின்றிருந்த களைப்போ ஏதோ ஒன்று சுதியை மயங்கச் செய்ய தலையை பிடித்துக் கொண்டு கிழே விழ ஆரம்பித்தாள்.

அவள் விழும் அவளை பிடித்த ஜெயபிரகாஷ், "அம்மாடி கீர்த்தி..."பதறிக் கொண்டு அழைத்தவாறு தன் மடியில் தாங்கினார்.

"டேய் அகில் டாக்டர்க்கு போன் பண்ணடா..? ஐயோ கீர்த்தி எழுந்திரும்மா...?" அவள் முகத்தை தட்டி எழுப்பினார்.

"அதெல்லாம் டாக்டர்க்கு போன் பண்ண வேண்டாம்..." தன் தாயின் குரலை கேட்டவர்,

"அம்மா அவ சுயநினைவு இல்லாம இருக்கா, நீங்க வேண்டாம்ன்னு சொல்லுறீங்க..?" பதட்டத்துடன் கேட்க,

“மருமகனே அவளை ரூமுக்கு தூக்கிட்டு போங்க, அகில் அவருக்கு ஹெல்ப் பண்ணு...”என்க,

“சரி பாட்டி...”என்றவன் அவளை தூக்க, இருவரும் அவள் அறைக்குச் அழைத்துச் செல்ல பின்னே மற்ற அனைவரும் சென்றனர்.

சித்ரா கையில் தண்ணீர் கொண்டு வர அதை வாங்கிய பாட்டி அவளின் ஒரு புறம் அமர்ந்து முகத்தில் தெளிக்க சிறிது நேரத்தில் கண் விழித்தாள்.

தன் மகள் கண் விழித்ததை கண்ட பின்னே நிம்மதியாக உணர்ந்த ஜெயபிரகாஷ், “கீர்த்தி நீ நல்லா இருக்கீல..? உனக்கு ஒன்னும் இல்லையே..?” தன் மகளின் அருகே அமர்ந்து பதட்டத்துடன் கேட்க,

தன் தந்தை தன்னிடம் பேசிய ஆர்ச்சியத்தில் அமைதியாக இருக்க, “என்னச்சும்மா ஏதாவது பேசும்மா அப்பா கிட்ட..?” என்க, “அப்பா....”என்றவாறு தன் தந்தையின் நெஞ்சில் சாய்ந்தாள்.

தன் மகளின் தலையை வருடியவாறு, “என்ன மன்னிச்சிரும்மா நான் உன் மேல கோவப்பட்டது தப்பு தான், நீ பேசாம இந்த அப்பாவால இருக்க முடியாதும்மா..? ரெண்டு நாளுக்கு முன்னாடி நீ ஆபீஸ் வந்து பேசும் போதே புரிஞ்சிகிட்டேன்டா, அகில் நீயும் என்ன மன்னிச்சிருடா...?” தன் அருகில் நின்றிருந்த மகனிடமும் கூற,

“யார் என்ன சொன்னாலும் நீங்க என்னைக்கும் எங்க செல்ல அப்பா தான்...”என்ற அகில் தன் தந்தையின் தோளில் சாய,தன் மகள் மகன் தலையை வருடியவாறு நிம்மதியாக தன் முன் நின்ற தாயை கண்டார்.

தன் தாயின் அருகே வந்தவர், “அம்மா என்ன மன்னிச்சிருங்கம்மா..? எனக்கு எல்லாத்தையும் புரிய வச்சிடீங்க..? இனிமே இந்த தப்பை பண்ணவே மாட்டேன்..?”

என்றவர் அவர் காலில் விழுந்து மன்னிப்பு வேண்டினார்.

அதன் பின் தன் மருமகனை நோக்கி வந்தவர், “மாப்பிளை நீங்களும் என்ன மன்னிச்சிடுங்க..? கீர்த்தி மேல உள்ள பாசத்துல முட்டாள் தானமா பண்ணிட்டேன்..?”என்க,

“ஐயோ சார் என்ன இது நீங்க போய் என் கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிட்டு...”

“இது ஒன்னும் ஆபீஸ் இல்லடா வீடு, எங்க அப்பா நீ மாமான்னு கூப்பிடு, இல்லைனா உன்ன தொலைச்சிடுவேன்...” அகிலன் தன் தோழனின் மீது கை போட்டு கூறினான்.

“சரி சரி நான் இன்னொரு முக்கியமான விசியம் சொல்லணும்..?” என்றவரின் பார்வையோ தன் பேத்தியின் முகத்தில் இருக்க,

“என்னம்மா சொல்லணும் சொல்லுங்க..?”

தன் மகனின் புறம் திரும்பியவர், “அகிலுக்கு ஒரு பொண்ணு பார்த்திருக்கோம், வர்ற வெள்ளிகிழமை நல்ல நாள். எல்லாரும் பொண்ணு வீட்டுக்கு போகணும், இந்த பொண்ணை தேர்தெடுத்தது என் பேத்தி, இன்னும் ரெண்டு நாள் தான் இருக்கு எல்லாருக்கும் வருவீங்கன்னு நினைக்கிறேன்...” என்க,

“என்ன அத்தை சொல்லுறீங்க ரெம்ப சந்தோஷமா விசியம்..? யாரு பொண்ணு கீர்த்தி...” தன் வருங்கால மருமகளை யாரென்று அறிய ஆவலாய் கேட்க,

அவள் பார்வையோ தன் தந்தையை மேல் இருக்க, என்ன யோசித்தாளோ தயங்கியவாறு தன் கணவனை பார்க்க அவனோ விழிகளால் நம்பிக்கை அளித்தான்.

“அண்ணா உனக்கு இப்போ கல்யாணத்துல விரும்பம் தானே..?”

“இல்ல கீர்த்தி எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம் நான் இன்னும் கொஞ்சம் பிசினஸ் டெவலப் பண்ணனும், ஒரு ஒன் இயர் போகட்டும் ப்ளீஸ் பாட்டி...”என்க,

“அதெல்லாம் முடியாது உன் வயசு தானே மருமகனுக்கு அவர் கல்யாணம் பண்ணி பிசினெஸ் பார்க்கலையா..? நீ இந்த கல்யாணத்துக்கு ஒத்துகிறா இல்லைனா இந்த பாட்டி என்னைக்கும் உன்கிட்ட பேச மாட்டா..?”

அவனோ சில நொடி அமைதியாக இருந்தவன் பின், “எனக்கும் கல்யாணத்துல சம்மதம்..?என்றான்.

“இப்பவாவது என் மருமக யாருன்னு சொல்லுடி...?” சித்ரா கேட்க,

“சொல்லுறேன்ம்மா, அப்பா நீங்க கண்டிப்பா ஒத்துகிடுவீங்களா பொண்ணு யாருன்னு சொன்னா...?”

“நீ கண்டிப்பா உங்க அண்ணனுக்கு நல்ல பொண்ணா தான் பார்த்திருப்பே..? எனக்கு இதுல முழு சம்மதம் தான்...”

“தேங்க்ஸ்ப்பா, நம்ம எழில் அண்ணா தங்கச்சி வளர்மதி தான் அந்த பொண்ணு, இவங்க மூணு பேரோட பிரண்ட்ஷிப் சொந்தமான நல்லாயிருக்கும் நினைச்சி தான் இந்த முடிவு எடுத்தேன்...”

“ரெம்ப சந்தோஷம்டி அந்த பொண்ணை உன் கல்யாணத்துல வச்சே பார்த்தேன் நல்ல குணம் அமைதியான பொண்ணு, நம்ம அகிலுக்கு பொருத்தமா இருப்பா..?” சித்ரா சந்தோஷத்தில் கூற,

“ஆமா நானும் ஆபீஸ்ல வச்சி ரெண்டு மூணு தடவை பார்த்திருக்கேன். நல்ல பொண்ணு தான் அம்மா நீங்க சொன்ன மாதிரியே வெள்ளிக்கிழமை போய் பார்த்திட்டு வந்திரலாம்...” என்றார் ஜெயபிரகாஷ்.

அங்கிருந்த அனைவருமே சந்தோஷப்பட, “நான் இப்பவே

எழில கால் பண்ணி சொல்லிறேன்...?”
வேந்தன் அனைவரும் சம்மதம் கூறிய சந்தோஷத்தில் கூற,

“இல்ல வேண்டாங்க ப்ளீஸ், நம்ம கிளம்பும் போது சொன்னா போதும்..?”கீர்த்தி கூற, அவள் கூற்றில் நிச்சியம் ஏதாவது ஒரு காரணம் இருக்கும் என நம்பியவன் சரி என்றான்.

அதன் பின் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சிரித்து பேசியவாறு இரவு உணவை முடிக்க, முதல் முறை தன் குடும்பம் சந்தோஷத்தில் திளைத்தை கண்டு மகிழ்ச்சியோடு அவர்களுடன் கலந்து கொண்டார் ஜெய்பிரகாஷ்.

வேந்தன் தன் வீட்டிற்குச் செல்ல அனைவரிடமும் விடை பெற்றுக் கிளம்ப, “ஒரு நிமிஷம் நில்லுங்க மருமகனே..?” என்ற பாட்டி,

“அம்மாடி சித்ரா நான் ஊருல கீர்த்திக்கு கொண்டு வந்த எல்லாத்தையும் கொண்டு வா, கீர்த்தி நீயும் மாப்பிள்ளை கூட கிளம்பு, நீ வந்தா வேலை நல்ல படியா முடிஞ்ச்சிருசீல..? ரெண்டு பேரும் தனியாயெல்லாம் இருக்க வேண்டாம், டேய் பேரா ரெண்டு பேரையும் கூட்டிட்டு போய் பார்த்து பத்திரமா விட்டுட்டு வா...”என்றார்.

தன் பேத்தி, மருமகன் முகத்தில் இருந்த வருத்தத்தை கண்டு இப்படி கூற, இருவரும் சந்தோஷமாக கிளம்ப ஆரம்பித்தனர்.

அவர்கள் சென்றதும் அறைக்குள் நுழைந்த தாயின் பின்னே சென்ற ஜெயபிரகாஷ் அவர் காலடியில் அமர்ந்து அதை பிடித்தவாறு, “அம்மா என்ன மன்னிச்சிடுங்கம்மா..?நான் எவ்வளோ பெரிய தப்பு பண்ணிட்டேன்னு இப்போ நீங்க புரிய வச்சீடீங்க..?”என்க,

“பெத்த பையனை நல் வழியில கொண்டு வர்றது ஒரு அம்மாவோட கடமைடா...”என்றவர் தன் மகனின் தலையை வருடிக் கொடுத்தார்.

வீட்டிக்குள் நுழைந்த தன் மகனையும், மருமகனையும் கண்ட ரத்னா, “என்ன இது கீர்த்தி காலையில தானே அவங்க வீட்டுக்கு போனா அதுக்குள்ள கூட்டிட்டு வந்துட்டே..?” கேட்க,

“சொல்லுறேன்ம்மா...” என்றவன் அவளை அங்கிருந்த சோபாவில் அமர வைத்து கீர்த்தியின் வீட்டின் நடந்த அனைத்தையும் கூறி முடித்தான்.

அதே நேரம் ஜெயபிரகாஷ் போன் செய்து தன் சம்மதியிடம் தான் செய்த செயலை நினைத்து மன்னிப்பு வேண்டினார்.

“அப்படியா ரெம்ப சந்தோஷம் ஒரு வழியா எல்லாம் முடிவுக்கு வந்திட்டு..?அந்த வளரு பிள்ளை நல்ல குணம், நம்ம செழியா மட்டும் இருந்தா அவனுக்கே கல்யாணம் பண்ணி வச்சிருப்பேன்...” ரத்னா கூற,

அதே கேட்ட இருவரும் ஒரே போல், “அத்தை..! அம்மா...!”என்றனர்.

“அதான் எல்லாம் முடிஞ்சி போச்சே, சரி சரி போங்க போய் படுங்க நேரமாச்சு...”என்றவர் தன் கணவனை அழைத்துக் கொண்டு ரத்னா செல்ல, வேந்தனோ இளாவின் போட்டோ அருகில் சென்று நின்றான்.

“டேய் செழியா..?எங்களால முடிஞ்ச வரைக்கும் அந்த புள்ளைக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சி தர முடிவு பண்ணிட்டோம், இதுக்கு அப்பறம் நடக்க போறதை நீ தாண்டா முடிவு பண்ணனும்...” என்க,

“எல்லா நல்ல படியா தான் நடக்கும் வாங்க போய் படுக்கலாம்...” என்றவள் வேந்தனை அழைத்துக் கொண்டுச்

சென்றாள்.

மறுநாள் விடியல் அழகாய் துவங்க முகத்தில் ஒரு சந்தோஷத்துடன் ஆபீசிற்குச் சென்றான் அகிலன்.

அலுவலகத்திற்குள் நுழைந்தவன் தன் அறை நோக்கி செல்ல ஒரு நொடி அவனின் பார்வை வளர்மதியை நோக்கி செல்ல, அவனோ தனக்கு மனைவியாக போகிறாள் என்ற நம்பிக்கையில் முதல் முறையாக ரசிக்க ஆரம்பித்தான்.

இதை எதையும் அறியாத வளர்மதி தன் வேலையை கவனித்துக் கொண்டிருக்க புன்னைகை தவழும் முகத்துடன் தன் அறைக்குள் நுழைந்தான் அகிலன்.

அதை பின் வேணுமென்றே அவளிடம் வேலை கூறுவது போல் வர சொல்லி பேச மறுநாள் அவள் கூறும் பதிலுக்காக காத்திருந்தான்.

ஏனோ இன்று முழுவதும் அகிலனின் பார்வையில் ஏதோ ஒரு வித்தியாசம் இருப்பதை உணர்ந்தவள் தனக்கு நேரமாகி விட்டதை உணர்ந்து தன் அண்ணனுடன் கிளம்பினாள்.

மறுநாளும் வர அனைவரும் எழில் வீட்டிக்கு கிளம்ப, தன் தாய் கூறியதை கேட்ட ஜெயபிரகாஷ் தானே அழைத்து வளரை பெண் கேட்டு வருவதாக எழிலிடம் கூற அவனோ சந்தோஷத்தில் மிதந்தான்.

“அம்மா..! அம்மா..!” கத்தியவாறு வீட்டிக்குள் நுழைய,

“என்னடா ஏன் இப்படி கத்துறா..?” என்க, தன் அண்ணனின் குரல் கேட்டு வெளியே வந்தாள் வளர்மதி.

“அம்மா ஒரு சந்தோஷமான விசியம் நம்ம வளரை பொண்ணு கேட்டு அகில் வீட்டுல இருந்து எல்லாரும் வாராங்களாம்..? அகிலனோட அப்பாவே எனக்கு போன் பண்ணி சொன்னாரு..? நீங்க வீட்டை கொஞ்சம் கிளீன்

பண்ணி வைங்க..? வளரு நீ ரெடியாகுமா, அம்மா நான் போய் தேவையானதை வாங்கிட்டு வரேன்...”என்றவன் மழை பெய்ந்து ஒய்ந்தது போல் கூறி விட்டு சென்றான்.

அதன் பின் நேரம் செல்ல கூறியது போல் அனைவரும் எழிலனின் வீட்டிக்கு வருகை புரிந்தனர்.

அகிலனின் குடும்பத்தை கண்ட எழில், “வாங்க சார், வாங்க பாட்டி, வாங்கம்மா...”என அனைவரையும் வரவேற்க தன் மகனின் பேச்சுக் குரல் கேட்டு வெளியே வந்த கோமதி அனைவரையும் வரவேற்று அமர வைத்தார்.

“இவங்க தான் என் அம்மா...” என்றவன் தன் அறிமுகப்படுத்தி வைத்து அவருக்கு வந்தவர்களை அறிமுகப்படுத்தி வைத்தான்.

“ஆமா எங்கே எங்க வீட்டு மருமகள், கூட்டிட்டு வாங்க அவளை பார்க்க தானே நாங்க எல்லாரும் வந்திருக்கோம்...” இராஜலட்சுமி பாட்டி கூற,

“ஒரு நிமிஷம்மா, இதோ கூட்டிட்டு வரேன்...” என்ற கோமதி அவள் அறை நோக்கி செல்ல,

“நானும் உங்க கூட வரேன் அத்தை...” சுதிகீர்த்தி அவருடன் எழுந்து செல்ல சிறிது நேரத்திற்கு பிறகு வளர்மதியை அழைத்துக் கொண்டு வெளியே வந்தனர்.

புடவையில் தேவதையாய் ஜொலிக்க தலை குனிந்து நடந்து வந்த வளர்மதியை கண்டவனின் பார்வை அவள் மீதே இருக்க, தன் தாய் கொடுத்த டீயை வாங்கிக் கொண்டு அனைவரிடமும் கொடுத்து பொதுவாக வந்தவர்களிடம் ஆசிர்வதாம் வாங்கினாள்.

“அம்மாடி வளர்மதி என் பேரனை கட்டிக்க உனக்கு சம்மதம் தானே...?” இராஜலட்சுமி பாட்டி கேட்க,

வேந்தனும், கீர்த்தியும் அவள் கூறும் பதிலுக்காக

பதட்டத்துடன் காத்திருக்க, மெல்ல சம்மதம் என்று தலையசைத்தாள்.

அதை கேட்ட அனைவரும் சந்தோஷப்பட அகிலனோ வானில் பறக்க ஆரம்பித்தான்.

அத்தியாயம் : 22

வளர்மதி சம்மதம் கூறியதில் வேந்தன், கீர்த்தி இருவரும் அதிர்ச்சியாகி நிற்க மற்ற அனைவரும் சந்தோஷத்தில் மிதந்தனர்.

“ரெம்ப சந்தோஷம் அப்போ இப்பையே தட்ட மாத்திக்கிற வேண்டியது தானே...?” இராஜலட்சுமி பாட்டி கூற, “அம்மா அப்பா இல்லாம எப்படிம்மா..?” ஜெயபிரகாஷ் கூறினார்.

“டேய் உங்க அப்பா கல்யாணத்துக்கு வந்தா போதும் அவரும் சரி தான் சொல்லுவார்...? ஒரு நிமிஷம் இப்பவே நான் ஜோசியரை வர சொல்லுறேன்...” என்ற இராஜலட்சுமி பாட்டி யாரையோ மொபைலில் அழைத்து வர சொன்னார்.

“சம்மந்தியம்மா உங்களுக்கு இதுல சம்மதம் தானே..? ஒன்னும் பிரச்சனை இல்லையே..?” கோமதியிடம் சித்ரா கேட்க,

“இப்படி ஒரு நல்ல வாழ்க்கை என் பொண்ணுக்கு கிடைக்க போகுதுன்னு நினைக்கும் போது சந்தோஷமா இருக்கும், எனக்கு இதுல முழு சம்மதம்...”கோமதி கூற தன் அறைக்குள் நுழைந்தாள் வளர்மதி.

நேரம் செல்ல அனைவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்க இராஜலட்சுமி பாட்டி அழைத்த ஜோசியர் அங்கு வந்து சேர்ந்தார்.

அவரை வரவேற்ற பாட்டி இருவரும் ஜாதகத்தையும் கொடுத்து பார்க்க சொல்ல, “பாட்டி இதெல்லாம் கண்டிப்பா பார்க்கணும்மா..?” வந்தவர் எதுவும் மாறாக சொல்லிவிடுவாரோ என்ற பயத்தில் கீர்த்தி கேட்க,

“நீ அமைதியா இரு, அதான் அவர் பார்க்குறாளுல..? இதெல்லாம் ரெம்ப முக்கியம்..?” என்க, அதன் பின் அவர் கூற போகும் பதிலுக்காக அமைதியாக காத்திருந்தனர்.

இருவர் ஜாதகத்தையும் சில நேரம் பார்த்து ஏதோ எழுதியவர் அதன் பின் பாட்டியிடம், “இராஜலட்சுமி அம்மா ரெண்டு பேருக்கும் எல்லா பொருத்தமும் இருக்கு, ரெண்டு பேரரோட ஜாதகமும் அம்சமானது, இப்படி ஒரு பொருத்தம் யாருக்கும் வராது...”என்க,

அதை கேட்ட அனைவரும் ஒவ்வொரு விசியமும் வந்ததில் இருந்து நல்லதாகவே நடப்பதை கண்டு மகிழ, தன் அறையில் அழுது கொண்டிருந்த வளர்மதி அதை கேட்ட எரிச்சலுற்றார்.

“ரெம்ப சந்தோஷம் சாமி, அப்படியே மூகூர்த்த தேதியும் கையோட குறிச்சிருங்களேன்..? ரெண்டு குடும்பமும் இங்கே தான் இருக்கோம்...”

“சரிங்க அம்மா...” என்றவர் சிறிது நேரம் எதையோ பார்த்து பின் நல்ல மூகூர்த்த தேதியை குறிக்க ஆரம்பித்தார்.

“இராஜலட்சுமி அம்மா வர்ற பண்னெண்டாம் தேதி நல்ல மூகூர்த்தம் அதை விட்டு இன்னும் ரெண்டு மாசம் கழித்து தான் இருக்கு, நடுவுல எதுவும் நல்லதா  இல்லாம..? நீங்க இந்த கல்யாணத்தை சீக்கிரம் பண்ணுறது தான்ம்மா நல்லது....”

“சரி சாமி நாங்க அப்படியே பண்ணிறோம்...”

“சரிங்கம்மா  நல்லது...”

“பெரியவங்க எல்லாரும் என்ன மன்னிச்சிருங்க, நான் சொல்லுறேன்னு தப்பா நினைக்காதீங்க, இன்னும் ஒரு வாரம் தானே இருக்கு கல்யாணத்தை இவ்வளோ அவசிரமா பண்ணனும்மா..?” எழில் கேட்க,

“டேய் என்னடா இது நல்ல விசியத்தை ஏன் தள்ளி போடனும் நினைக்கே..?” அவன் அருகில் வந்து நின்று வேந்தன் கேட்டான்.

அவன் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறிந்த ஜெயபிரகாஷ், “எழில் நீ உன் தங்கச்சி மட்டும் எங்க வீட்டுக்கு அனுப்புனா போதும், வேற எதுவும் செய்ய வேண்டாம்..?” என்றார்.

“ஆனா சார் அதெப்படி செய்யாம இருக்க முடியும் எனக்கு ஒரே தங்கச்சி...”

“சரி உன்னால எவ்வளோ செய்ய முடியமோ அதை மட்டும் செய், மத்த ஏற்பாடு எல்லாம் நாங்க பார்த்திகிறோம், எங்கள பொறுத்த வரைக்கும் உங்க வீட்டு பொண்ணு எங்க வீட்டுக்கு வந்தா போதும்...” இராஜலட்சுமி பாட்டி கூற, அவனோ தன் தாயை கண்டார்.

அவரோ சரி என்று கூற சொல்ல, “எங்களுக்கு சம்மதம் தான் வர்ற மூகூர்த்ததுலையே கல்யாணத்தை வச்சிக்கிடலாம்...”என்றான் எழிலரசன்.

அதன் பின் வந்த ஜோசியர் இருவரும் நிச்சிய பத்திரிக்கை எழுதி வாசிக்க, அதே நேரம் வளர்மதியை அழைத்துக் கொண்டு வந்து முன்னே அமர வைத்தனர்.

அகிலன், வளர்மதி இருவரின் முன்னிலையில் நிச்சிய பத்திரிக்கை வாசித்து இரு வீட்டாரும் பூ,பழம், புடவை அடங்கிய தாம்பால தட்டினை மாற்றிக் கொண்டனர்.

இனிதே நிச்சியம் முடிய வந்த ஜோசியர் கிளம்ப சிறிது நேரம் கழித்து அகிலனின் வீட்டாரும் கிளம்ப ஆரம்பித்தனர்.

“சரிங்க அப்போ நாங்க கிளம்புறோம், கல்யாணத்துக்கு தேவையான ஏற்பாடெல்லாம் பண்ணனும்ல போய்ட்டு வரோம்…” என்க இன்முகத்துடன் அனுப்பி வைத்தனர்.

அனைவரும் வெளியே செல்ல எதார்ச்சியாக திரும்பிய கீர்த்தி, வளர்மதி தன் தலையில் வைத்திருந்த பூவினை கோவத்துடன் கழட்டி எறிவதை கண்டவாறு சென்றாள்.

மாப்பிள்ளை வீட்டாரை வழியனுப்பி வைத்து வந்த கோமதி தன் மகளின் செயலை கண்டு கோவத்துடன் அவர் அருகில் வந்தார்.

“லூசாடி நீ இப்படி பண்ணி வச்சிருக்கே..? அவங்க எவ்வளோ நல்ல குடும்பமா இருக்காங்க..? நீயெல்லாம் அங்கே போக கொடுத்து வச்சிருக்கனும்டி..”என்க,

“நிறுத்துமா அதான் நீ சொன்னதை செய்ஞ்சிட்டேல இப்போ சந்தோஷம் தானே..? நிம்மதியா இரு…”கோவத்துடன் தன் அறைக்குச் சென்று படுக்கையில் படுத்து இளாவின் நினைப்பில் அழுது கரைந்தாள்.

வளர்மதி கத்திக் கொண்டு செல்லும் அதே நேரத்தில் உள்ளே வந்த எழில் தன் தங்கையின் செயலையும், தாயின் செயலையும் கண்டு புரியாமல் நின்றாள்.

“அம்மா என்னாச்சு இங்கே என்ன நடக்குது..? வளரு ஏன்

கோவமா போற..?"

"ஒன்னுமில்லைடா..." என்றவர் அவன் காலையில் அகிலனின் வீட்டார் வருவதாக கூறி விட்டு சென்ற பின் நடந்த அனைத்தையும் கூற ஆரம்பித்தார்.

அகிலன் கூறி விட்டு வெளியே செல்ல, "ஐயோ என்னால நம்பவே முடியல..? இவ்வளோ வேலைகள் இருக்கே..? நான் எப்படி பர்க்கே..?" என புலம்பியவாறு ஹாலினை சுத்தப்படுத்த,

"அம்மா எனக்கு இதுல விரும்பம் இல்ல அவங்கள வர வேண்டான்னு சொல்ல சொல்லுங்க..?" வளர்மதி கூறியதை கேட்டு முகத்தில் இருந்த சந்தோஷம் வடிய அதிர்ச்சியுடன் அவள் அருகில் வந்தார்.

"என்னடி சொல்லுற..?"

"ஆமாம்மா, எனக்கு இந்த ஜென்மத்துல கல்யாணமே வேண்டாம், நான் இப்படியே இருந்துறேன்..."என்க, அடுத்தநொடி அவள் கண்ணத்தை பதம் பார்த்தார்.

"என்ன வார்த்தைடி சொல்லுற, ஒரு பொண்ணுக்கு முக்கியமான பந்தமே கல்யாணம் தான் அதுவே வேண்டான்னு சொல்லுறியே..? என்னடி ஆச்சு உனக்கு..?"

கண்ணத்தில் கை வைத்தவாறு, "ப்ளீஸ்ம்மா என்ன கட்டாயப்படுத்தாதே நான் இப்படியே உங்க கூடவே இருந்திறேன், இல்ல உங்களுக்கு பாரமா இருக்கேன்னா சொல்லிருங்க வேற எங்கையாவது போயிறேன், எனக்கு கல்யாணம் மட்டும் வேண்டாம்ம்மா ப்ளீஸ்..." அழுகையுடன் கெஞ்சி கதற,

தன் மகளின் இந்த செயலை கண்டு பதறியவர், “ஏன்டி இப்படி பேசுற..?நீ கல்யாணமே பண்ண மாட்டேன் சொல்லுறதுக்கு காரணம் என்னடி..? ஒரு வேலை உன் மனசுல வேற யாரும் இருக்காங்களா..?” பதட்டத்துடன் கேட்டார்.

தன் தாய் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் அமைதியாக கண் மூடி நிற்க, அவள் கண் முன்னே இளாவே வந்து நின்றான்.

“நான் இப்போ என்ன சொல்லணும் இளா..? என்ன நீ இத்தனை நாள் உயிரோட கொன்னது போதாதா..? என்னால முடியல இளா...?” மனதிற்குள் நினைத்தவள் தாங்க முடியாது வெளிப்படையாக கதறி அழுதவாறு தரையில் அமர,

தன் மகளின் இந்த செய்கையை கண்டு முற்றிலும் பதறியவர், “அடியேய் என்னடி இது, பொண்ணு பார்க்க வராங்கன்னு சொன்னதுக்கே இப்படி பண்ணுற..? உண்மையை சொல்லுடி மனசுல வேற யாரும் இருக்காங்களா..?” தன் மகளின் முகத்தை நிமிர்த்தி பதட்டத்துடன் கேட்டார்.

“அம்மா...”என்றவள் தன் தாயை அணைத்துக் கொள்ள சிறிது நேரம் அமைதியாக செல்ல,

“என்னால உங்களை பிரிஞ்சி இருக்க முடியாதும்மா, எனக்கு கல்யாணம் வேண்டாம்...” அழுகையுடன் கூறினாள்.

இப்போது சற்று நிம்மதியானவர், “இங்க பாரும்மா என்னக்காவது நீ ஒரு வீட்டுக்கு போய் தான் ஆகனும்..? நாங்க எங்க போக போறோம் இங்கே தான் இருப்போம்..? நீ இதை பத்தி கவலைப்படமா கிளம்பு, இப்போ என்ன பொண்ணு தான் பார்க்க வராங்க,கல்யாணம் இல்லியே..? போம்மா போ...”என்றவர் தன் மகளை கிளம்ப சொல்லி

அவர் அறைக்குச் அனுப்பி வைத்தார்.

எழில் சென்ற பின் நடந்ததை இப்போது கோமதி கூற, “நான் கூட வேற என்னவோ நினைச்சிட்டேன், சரிம்மா நான் போய் கல்யாணத்துக்கு தேவையான வேலையை பார்க்குறேன்...” என்றவன் வெளியே செல்ல கணவனின் முன் சென்று நின்றார்.

“என்னங்க நான் முதல் முறையா நம்ம பையன் கிட்ட பொய் சொல்லிருக்கேன். எப்படியாவது நீங்க தான் நம்ம பொண்ணு மனசை மாத்தி அவளை நல்லபடியா வாழ வைக்கணும். நான் பண்ணது தப்பு தான் அவளை ஒத்துக்க வைக்க எனக்கு வேற வழி தெரியல....”என்றவரின் நினைவுகோ தன் மகனிடம் கூறியதில் இருக்கும் பொய்களை நினைத்தது.

எழிலிடம் வளர்மதி கூறிய சிலவற்றை மற்றும் கூறியவர் கடைசியில் அவள் விட்டு பிரிந்து செல்ல வேண்டும் அதற்காக தான் கல்யாணம் வேண்டாம் என கூறியதாக பொய் கூறினார்.

“யாரையாவது உன் மனசுல நினைக்கையா..?” என்று தான் கேட்ட கேள்வியில் தன் மகளின் அமைதியே உண்மையை விளக்க,

“அடியேய் நல்லா கேட்டுக்கோ இப்போ மட்டும் நீ ரெடியாகி வரல உன் அம்மா உயிரோட இருக்க மாட்டா..? உங்க அப்பன் கிட்ட போயிருவேன்டி. இப்போ என்ன பண்ணனும் நீயே முடிவு பண்ணு. உங்க அம்மா சொன்னதை செய்வா...”என்றவர் கோவத்துடன் செல்ல அழுகையுடன் தன் அறைக்குள் நுழைந்தாள் வளர்மதி.

அதன் பின் நேரம் செல்ல மாப்பிள்ளை வீட்டார் வந்து கல்யாண தேதி குறித்து சென்றது என அனைத்தையும் தன்

கணவனின் போட்டோவை பார்த்து நினைத்தவாறு நின்றார்.

திருமணத்திற்கு தேவையான ஏற்பாடுகள் அனைத்தையும் பரபரப்பாக செய்து கொண்டிருக்க மறுநாளே அகிலனிடம் சென்று திருமணத்திற்கு சம்மதம் இல்லை என கூற நினைத்தாள்.

ஆனால் அதை முறியடிப்பது போல் கோமதி அவளை வேலைக்குச் செல்ல வேண்டாம் என சொல்ல, எழிலும் தன் தாய் சொல்லை கேட்டு அவளை வீட்டிலே இருக்க வைத்தான்.

இந்த திருமணம் நல்ல படியாக நடக்க வேண்டும் என்று கோமதி பரிதவித்துக் கொண்டிருக்க அதே நேரம் கீர்த்தியும், வேந்தனும் அதையே நினைத்துக் கொண்டிருந்தனர்.

அகிலனிடம் பேசி நிறுத்த வேண்டும் என்று வளர்மதி நினைத்துக் கொண்டிருக்க, அவள் ஆசையை நிறைவேற்றுவது போல் அந்த நாளும் வந்தது.

கல்யாணத்துக்கு புடவை, நகை, திருமாங்கல்யம், எடுக்க அகிலனின் வீட்டாரும், வளர்மதியின் வீட்டாரும் இருவரும் கிளம்பினர்.

முதலில் வர மறுத்தவள் பின் அகிலனிடம் பேசியே ஆக வேண்டும் என்று தோன்ற அவர்களுடன் கிளம்பினாள்.

அகிலனோ சந்தோஷத்தில் திளைக்க அதை கண்ட வேந்தன் தன் மனைவியிடம், “சுதி எல்லா நல்லாத தானே நடக்கும், அகில் ரெம்ப சந்தோஷம இந்த கல்யாணத்தை எதிர்பார்த்து கிட்டு இருக்கான்..?” என்க,

“கண்டிப்பா வளர் மனசு மாறும், எனக்கு நம்பிக்கை

இருக்கு…” என்றவள் தன் வருங்கால அண்ணிக்காக மூகூர்த்த புடவையை அவர்கள் கடையிலே தேர்வு செய்ய ஆரம்பித்தாள்.

வளரின் பார்வை அடிக்கடி தன்னை பார்ப்பதை உணர்ந்த அகிலன் அவள் எதையோ தன்னிடம் பேச நினைக்கிறாள் என்பதை உணர்ந்தான்.

தன் தாயின், பாட்டியின் அருகில் அமர்ந்திருந்த வளர்மதியை நோக்கி வந்தவன், “அம்மா உங்க மருமகளை ஒரு நிமிஷம் என்கூட அனுப்புறீங்களா..?என்க, அவர்களோ சிரித்தவாறு அனுப்பி வைத்தனர்.

வளரை அழைத்துக் கொண்டு அகில் செல்ல அதை கண்ட வேந்தன்,கீர்த்தி, கோமதி மூவருமே தவிப்புடன் இருந்தனர்.

அவளை தனியாக அழைத்து வந்தவன், “என்னாச்சு மதி..? ஏன் என்னையே பார்த்தே..? என்கிட்டே எதுவும் சொல்லனுமா…?”என்க,

இளா மட்டுமே தன்னை மதி என்றும் அழைக்கும் நினைவு வர அவன் நினைப்பில் அப்படியே நிற்க, அவளது தீடிரெண்டு கலங்கிய முகத்தை கண்டவன், “மதி என்னாச்சு…? ஆர் யூ ஓகே…?” என்றான்.

தன் நினைவிலிருந்து கலந்தவள், அகிலன் அழைக்கும் மதி என்ற அழைப்பும் ஒருமையில் தன்னை அழைத்து பேசும் பேச்சு ரெண்டும் அவளை கோவப்படுத்த, “முதல மதி என்ன கூப்பிடடாதீங்க…?” என்க,

“ஏன் உன் பேர் அது தானே நான் அப்படி தான் கூப்பிடுவேன். நான் ஒன்னு சொல்லட்ட நீ அடிக்கடி கோவப்படுறது எனக்கு பிடிச்சிருக்கு…”

இரண்டு வருடங்களுக்கு முன் இளஞ்செழியனும் இதையே கூற அகிலனின் முன் நின்ற இந்த சில கணங்கள் இளாவின் நினைப்பு அதிகமாக வருவதை உணர்ந்தாள்.

“நீ முதல என்ன சொல்ல வந்தே அதை சொல்லு...” அவள் அமைதியை பார்த்து அகிலன் கேட்க,

“நான்...எனக்கு இந்த கல்யாணம்...” தடுமாறி கூற வர, அதே நேரம் வேந்தனிடம் இருந்து அழைப்பு வர அதை எடுத்துக் பேசிக் கொண்டிருந்தான்.

“என்ன வளர் தனியா நிக்கிற..? அண்ணன் போன் பேசுறானா..? சரி வா போகலாம்...” அங்கே வந்த கீர்த்தி அவளை அழைத்துக் கொண்டு கிளம்பினாள்.

அதன் பின் அவள் செய்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியை தழுவ அன்றைய நாளும் முடிந்து திருமண நாளும் வந்தது.

திருமணதிற்கு முந்தைய நாள் இரவே ரிஷப்சன் வைத்திருக்க அவளது காலேஜ் பிரெண்ட்ஸ், வந்தனா ஆதி என அனைவரும் வருகை புரிந்தனர்.

பிரமாண்டமான மாளிகை போன்ற ஹோட்டல் கார்டன்னின் விளக்கொளி வெளிச்சத்தில் நெருப்பின் மேல் நிற்பது போல் அகிலனின் அருகே தவிப்புடன் நிற்க வந்தவர்கள் அனைவரும் அப்போதே வாழ்த்த ஆரம்பித்தனர்.

ஆதி வர நிச்சியம் தன்னை வளர்மதி அறிமுகப்படுத்த மாட்டாள் என்பது அறிந்த ஆதி தன்னை தானே அறிமுகப்படுத்தி கொண்டான்

அதே நேரம் அகிலனுக்கு ஏதோ ஒரு அழைப்பு வர அதை எடுத்துக் கொண்டு சற்று விலகினான்.

“வளர் எனக்கு இப்போ தான் சந்தோஷம இருக்கு. இளாவோட கடைசி ஆசையை நீ இவ்வளோ சீக்கிரம் நிறைவேத்திட்டா...?”

“நீங்க என்ன சொல்லுறீங்க ஆதிண்ணா..?”

“ஹ்ம்ம் ஆமா நீ ஒரு நல்ல வாழ்க்கையை அமைசிக்கிடனும் தான் அன்னைக்கு உன் கிட்ட கடைசியா பேச வந்தான், ஆனா அதுக்குள்ள..... சரி விடு இதை உன்கிட்ட மேரேஜ் கிபிட்டா கொடுக்க சொன்னா. நான் வந்ததே அதுக்காக தான் சரி கிளம்புறேன்...” என்றவன் கையில் ஒரு சிறு பாக்ஸ்சை தந்து விட்டு சென்றான்.

ஆதி செல்ல அதே நேரம் வந்தனா வர, தன் அழைப்பை முடித்துக் கொண்டு வந்தான் அகிலன்.

““கங்டராஸ் வளர், கங்ராஸ் சார்...” வந்தனா அவளை அணைத்துக் கொண்டு வாழ்த்த அமைதியாக ஏற்றுக் கொண்டாள்.

வளர்மதி கையில் வைத்துக் கொண்டிருந்த பாக்ஸ்சை கண்டவன், “என்னது அது கொடு பார்க்கலாம், வந்தனா இது உங்களோட கிபிட்டா...?” கேட்டவாறு அதை பிரிக்க அதில் ஒரு பிரேஷ்லெட் இருந்தது.

அதை பார்த்ததுமே வளர்மதி விழிகளில் கண்ணீர் எட்டி பார்க்க அருகிலிருந்த வந்தனாவின் கைகளை இறுக பற்றினாள்.

இளா கையில் அணிந்திருந்த பிரேஷ்லெட் இன்று

அகிலனின் கையில் இருக்க, “வாவ் சூப்பர் வந்தனா நைஸ் கிபிட். மதி உன் கையை கொடு...”என்றவன் அவள் மறுத்தும் பேசும் முன் கையை இழுத்து அனைவரும் முன்னிலையிலும் போட்டு விட்டான்.

நேரம் செல்ல அங்கே நிற்க முடியாமல் தவித்தவள், “நான் ரூமிற்கு போறேன் ஐ ஆம் சாரி...” என்ற வளர்மதி அங்கிருந்து கிளம்பினாள்

தன் அறைக்கு சென்றவளோ இளா தந்த பிரேஷ்லெட் பிடித்தவாறு அழுது கரைய ஆரம்பித்தாள்.

மறுநாள் விடியல் இதற்கு மேல் தன்னால் நிச்சியம் இந்த திருமணத்தை நிறுத்த முடியாது என்பது உறுதியாக தோன்ற உயிரற்ற ஜடம் போல் மணமேடையில் அகிலனின் அருகில் அமர்ந்தாள்.

போலிவற்று இருந்தாலும் அவள் இயற்கையான அழுகு அங்கிருந்த அனைவரையும் கவரச் செய்ய, ஐயர் கூறிய அனைத்து மந்திரங்களுக்கும் அப்படியே இருவரும் கூற ஆரம்பித்தனர்.

அவர் கூற சொன்ன வார்த்தைகளும் அனைத்தும் அகிலனின் மனதில் ஆழமாய் பதிய, அக்னி சாட்சியாக வளர்மதியின் சங்கு கழுத்தில் மூன்று முடிச்சிட்டு தன்னவளாக மாற்றிக் கொண்டான்.

## அத்தியாயம் : 23

வளர்மதியின் சங்கு கழுத்தில் அக்னி சாட்சியாக மூன்று

முடிச்சு போட, கண் மூடியவள் விழிகளுக்குள் இளா வந்து நிற்க இருட்டுக்குள் மூச்சு முட்டுவது போல் உணர்ந்தாள்.

அதன் பின் அவள் அருகில் நெருங்கி வந்து பிறை நெற்றியில் திலகம் வைக்க, விழி மூடி இருந்தவள் முதல் முறையாக அவன் நெருக்கமும், அவன் வாசமும் உணர்ந்து விழி திறந்து அகிலனை காண, முகத்தில் புன்னைகையுடன் அவள் நெற்றியில் வைத்து விட்டான்.

அகிலனின் முகத்தில் இருந்த சந்தோஷம் அவளை என்னவோ செய்ய தன் முன்னிருந்த அக்னியை கண்டாள்.

வளர்மதியின் கரத்தை தீடிரெண்டு பற்ற அவளோ அதை உணர்ந்து அவனிடமிருந்து தன் கையை விடுவிக்க முயல அதற்குள் அவளுடன் எழுந்து நின்றான்.

அகிலன் தன் கழுத்தில் மூன்று முடிச்சிட்டு தன் மனைவியாக்கி கொண்டாலும் நிச்சியமாக தன் மனதில் அகிலன் இல்லை என்பது புரிய வேறு வழியின்று அவனுடன் அக்னியை வலம் வந்தாள்.

அனைவர் முன்னிலையில் தன் முன் குனிந்து பாத விரல் பற்றி மென்மையாய் மெட்டி அணிவித்து விட முதல் முறை அவன் முன் நிற்க முடியாமல் குற்ற உணர்வு தாக்க தவித்தாள்.

அதன் பின் அவன் முகத்தை காண விரும்பாமல் தவிர்க்க, பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கியவர்கள் வந்தவள் அனைவரின் வாழ்த்தையும் வேந்தனின் பெற்றோர் வாழ்த்தையும் பெற்றனர்.

வளர்மதியின் கையில் அணிந்திருந்த பிரேஸ்லெட் வந்தனா மற்றும் சுதிகீர்தியின் அலங்காரத்தால் வளையல்களில் நடுவில் முழுதும் மறந்திருந்தது.

செய்ய வேண்டிய சடங்குகள் அனைத்தும் செய்து முடிக்க மணமக்களை வீட்டிற்கு அழைத்து செல்ல ஆரம்பித்தனர்.

அகிலனின் வீட்டுக்குள் வலது கால்லை எடுத்து வைத்து வந்தவளை பூஜை அறைக்குள் சென்று விளக்கேத்த வைத்தனர்.

அவளோ அவர்கள் கூறியதை உயிரற்ற ஜடம் போல் செய்ய அதற்கு மாறாக மகிழ்ச்சியுடன் இருந்தான் அகிலன்.

வளர்மதியின் முகத்தில் ஏதோ ஒரு தவிப்பு, கலக்கம் இருப்பதை உணர்ந்த பாட்டி அமைதியாக அவளை கவனித்துக் கொண்டிருக்க, அனைவரும் வளர்மதியின் வீட்டிற்கு கிளம்ப ஆரம்பித்தனர்.

“அம்மா நீங்க எல்லாரும் போய்ட்டு வாங்க எனக்கு ரெம்ப அசைதியா இருக்கு..?நான் இங்கையே இருக்கேன் எப்படியும் நீங்க போய்ட்டு இங்கே தானே வருவீங்க..?” இடுப்பில் கை வைத்துக் கொண்டு சோர்வுடன் சுதிகீர்த்தி கூற,

“அதெப்படி வளர் பக்கத்துல யாரவது இருக்கணும்ல..? அதுவும் இல்லாம இங்கே நீ மட்டும் எப்படி தனியா இருப்பே..?” சித்ரா கேட்க,

“நான் இருக்கேன் அத்தை, நீங்க போய்ட்டு வாங்க...?” தன் மனைவியை பார்த்தவாறு கூறினான் யாழ்வேந்தன்.

“எல்லாரும் போய்ட்டு வாங்க என்னால இதுக்கு மேல நடக்க முடியாது நானும், உங்க மாமாவும் என் பேத்தியை கவனிச்சிக்கிறோம்...” என்ற இராஜலட்சுமி பாட்டி அவர்களை அனுப்பி வைக்க, சரி என்றவாறு தன் மனைவியை முகத்தை கண்டவாறு சென்றான்.

அனைவரும் செல்ல ஹாலில் மெல்ல அமர்ந்த தன் பேத்தியின் அருகில் அமர்ந்த பாட்டி, “என்னாச்சு கீர்த்தி முடியலையா...?” தன் புடவை முந்தானையால் அவள் முகத்தை துடைத்துக் கொண்டு கேட்டார்.

“நின்னுட்டே இருந்தது கால் தான் வலிக்கு...” என்க,

“ஆறு மாசம் தான் ஆகுது அதுக்குள்ள முடியலைன்னு சொல்லுறா..? சரிம்மா நீ ரெஸ்ட் எடு அவங்க வர்ற ரெண்டு மணி நேரமாகும்...”என்றவர் தன் பேத்தியை அவள் அறைக்குச் அழைத்துச் சென்று படுக்க வைத்தார்.

கீர்த்தியின் அருகில் அமர்ந்த பாட்டி அவள் தலையை வருடியவாறு, “கீர்த்தி நான் உன்கிட்ட ஒரு விசியம் கேட்கணும், நீ உண்மையை மட்டும் சொல்லணும்...?” என்க,

அவரது முகபாவனையை வைத்தே ஏதோ வில்லங்கம் வர போகிறது என்பதை உணர்ந்தவள் மெல்ல எழுந்து அமர்ந்தாள்.

“என்ன பாட்டி கேட்கணும்..? கேளுங்க..?”

“வளரு பிள்ளைக்கு இந்த கல்யாணத்துல சம்மதம் தானா..?”

அவர் அப்படி கேட்டதில் விழித்தவள், “ஏன் பாட்டி அப்படி கேட்குறீங்க..? அன்னைக்கு எல்லாரும் முன்னாடி சம்மதம் தானே சொன்னா..?” என்க,

“ஆனா அவ முகத்துல கொஞ்சம் கூட கல்யாண கலையே இல்லையே, எதையோ இழந்த மாதிரி இருக்கா..? எனக்கு என்னமோ அவளுக்கு விரும்பம் இல்லைன்னு தான் தோணுது..?”

“இல்ல பாட்டி அவளுக்கு சம்மதம் தான் நான் அவங்க அம்மா கிட்ட கூட பேசுனேன். ஏன் ஒரு மாதிரி இருக்கான் கேட்டேன். அவ இப்போ தானே படிச்சி முடிச்சா இன்னும் கொஞ்ச நாள் அவங்க கூட இருக்கனும் அசைப்படுறா போல, அதுவும் இல்லாம அவளுக்கு எந்த வேலையும் இன்னும் செய்ய தெரியாதாம்..? குடும்பத்தை நினைச்சி பிரிய போறோம் கவலை தான் வேற ஒன்னும் இல்ல. உங்கள நினைச்சி வேற ரெம்ப பயப்பிடுறா நீங்க மருமகள் இப்படி தான் இருக்கனும், இப்படி தான் நடக்கணும் கண்டீசன் போடுவீங்கன்னு நினைக்கிற...” என்றவள் தன் பாட்டியையே கடைசியில் கூறி வைத்துக் கூறினாள்.

தன்னை நினைத்து ஒருத்தி பயப்பிடுகிறாள் என்ற நினைப்பில் பாட்டி மனதிற்குள் பெருமிதம் கொள்ள, “சரிம்மா நீ தூங்கு, அவளுக்கு மெல்ல மெல்ல நான் எல்லாத்தையும் சொல்லி கொடுத்துட்டு போறேன்...” என்றவர் எழுந்து செல்ல,

முதல் முதலாக தன் பாட்டியை நம்ப வைத்த நினைப்பில் ஒரு வழியாக இவர்களது திருமணம் முடிந்த சந்தோஷத்தில் நிம்மதியாக துயில் கொள்ள ஆரம்பித்தாள்.

அதே நேரம் இங்கு எழில் வீட்டின் அனைவரும் சந்தோஷமாக இருக்க ஒரு வாரத்திற்கு பின் தன் தாயின் முகத்தில் இருந்த சந்தோஷத்தை கண்டாள் வளர்மதி.

“இந்தாங்க எல்லாரும் காபி எடுத்துக்கோங்க...” என்ற கோமதி வந்தவர்கள் அனைவர்க்கும் தர, அவருக்கு உதவினார் சித்ரா.

காலையில இருந்து அகிலனின் அருகிலே இருப்பது என்னவோ செய்ய அவனை விட்டு செல்ல நினைத்தவள் எழுந்து நின்றாள்.

அவள் எழுந்து வேகத்தில் அனைவரும் அவளையே பார்க்க,

“என்னமா என்னாச்சு..?” சித்ரா கேட்க,

“அது வந்து...” என்ன சொல்வது என தெரியாமல் தயங்க,

“அம்மா மதி பிரெஸ் ஆகனும் சொன்னா நான் தான் போக சொன்னேன்...” என்ற அகிலன் தன் தாயை பார்த்தவாறு கூற, திரும்பி அவனை கண்டாள்.

“சரிம்மா நீ போம்மா..?” என்றதும் வளர்மதி அங்கிருந்து தப்பினால் போதும் என்ற நினைப்பில் வேகமாய் தன் அறை நோக்கி செல்ல அவள் பின்னே வந்தனாவும் சென்றாள்.

அவள் அறை கதவினை சாத்திய வந்தனா, “உனக்கு அறிவிருக்கா இல்லையா..? இப்படியாடி நடந்துக்குவா எல்லார் முன்னாடியும்..?” கோவத்துடன் கேட்க,

“என்ன பண்ண சொல்லுற, நான் விருப்பம் இல்லைன்னு சொல்லியும் என்ன போர்ஸ் பண்ணி எங்க அம்மா பண்ணி வச்சிருக்காங்க இந்த கல்யாணத்தை...”

“இங்க பாரு இது தான் உன் வாழ்க்கை அகிலன் சார் தான் உன் கணவன். இதை நீ இனிமே ஏத்துகிட்டு தான் ஆகனும், நான் ஆரம்பத்துல இருந்தே சொல்லிட்டு தான் இருக்கேன், இளஞ்செழியனுக்கு உனக்கும் நடுவுல இருக்கிற ரிலேசன்ஷிப் காதல் இல்ல, இல்லாதவன் மறுபடியும் வர முடியாது இதுக்கு மேலையும் நீ செத்து போனா உன் காதல நினைக்கிறது தப்பு...”

“செத்து போனா காதலா இல்ல..?”

“எனக்கு வர்ற கோவத்துக்கு உன்ன அரைஞ்சிருவேன். இனிமே நீ அகிலன் சாரி மேல வைக்க போற காதல், அன்பு, பாசம் இது எல்லாம் தான் அழியாது...”

“வந்தனா நான் தனியா இருக்கனும் நினைக்கிறேன் ப்ளீஸ் இங்கே இருந்து போ…”

“போறேன் ஆனா ஒன்னு நீ இதுக்கு அப்பறம் அந்த இளாவை நினைச்சா உன் கழுத்துல இருக்குதே இதுக்கான மதிப்பு உனக்கு தெரியலைன்னு தான் அர்த்தம் போய்ட்டு வரேன்…”என்றவள் வெளியே செல்ல படுக்கையில் சரிந்தாள்.

நேரம் செல்ல தன் அறை கதவினை யாரோ தட்டும் ஓசை கேட்க கண்களை துடைத்துக் கொண்டு எழுந்து நின்று கண்ணாடியில் முகத்தை கண்டவள் பின் சென்று திறந்தாள்.

வெளியே அகிலன் நிற்பதை கண்டவள் அமைதியாக இருக்க, “உள்ள வரலாம..?என்க, வழிவிட்டு நின்றாள்.

அவள் அறை முழுவதும் பார்வையால் அலசியவன், “வெரி நைஸ் பார்க்க இந்த ரூம் அழகா இருக்கு. இது மாதிரியே நம்ம ரூமையும் ரெடி பண்ணிரு…”என்றவன் அவள் கபோர்ட் அருகில் செல்ல,

வேகமாய் அவன் அருகில் வந்தவள், “நீங்க ஏன் இங்கே வந்தீங்க..?” என்றான்.

“நான் உன் ஹஸ்பெண்ட் யாரோ மாதிரி கேட்குற..?” கூறியவாறு திரும்ப தனக்கு வெகு அருகில் அவன் முகம் கண்டதும் வேகமாய் பின் நகர்ந்தாள்.

“சாரி, நீங்க வெளியே போங்க நான் கிளம்பி வரேன்…”

அவள் அருகில் வந்தவன் மெல்ல அவன் முகம் நோக்கி குனிந்து, “கொஞ்சம் நேரம் கூட உன் ரூம்ல இருக்க விட மாட்டிகே..? வாழ்க்கை முழுக்க நம்ம ஒண்ணா ஒரே ரூம்ல தான் வாழ போறேன் அதை மறந்துறதே…” கண்ணடித்து

கூற, அப்படியே சிலை போல் அசையாமல் நின்றாள்.

அவளின் செய்கையை கண்டு சிரித்தவன், “சீக்கிரம் கிளம்பி வா, நம்ம வீட்டுக்கு போகலாம்...” கூறியவன் அங்கிருந்து வெளியே சென்றான்.

சிறிது நேரத்தில் கிளம்பி வெளியே வர மறுபடியும் அனைவரும் எழில் வீட்டிற்கு கிளம்ப தன் பிறந்த வீட்டை மறந்து புகுந்த வீட்டிக்கு பயணித்தாள் வளர்மதி.

தூங்கி எழுந்த சுதிகீர்த்தி வெளியே வர அதே நேரம் அனைவரும் உள்ளே வர புன்னைகை தவழும் கீர்த்தியின் முகம் அனைவரையும் வரவேற்றது.

“இப்போ எப்படி இருக்கே சுதி...?” யாழ்வேந்தன் கேட்க, லேசாக சிரித்தவாறு தலையை மட்டும் அசைத்தாள்.

வந்த விருந்தாளிகள் அனைவரும் செல்ல, “கீர்த்தி உன் அண்ணியை கூட்டிட்டு உன் ரூமுக்கு போ, நான் போய் டின்னர் ரெடி பண்ணுறேன்...” என்ற சித்ரா கிட்சன் நோக்கி செல்ல,

வளரை அழைத்துக் கொண்டு அவள் அறைக்குச் செல்ல, மற்ற அனைவரும் அங்கயே அமர்ந்தனர்.

நேரம் செல்ல சிறிது நேரத்திலே விருந்தே தயாரித்த சித்ரா அனைவரையும் சாப்பிட அழைக்க ஒன்றாக சாப்பிட அமர்ந்தனர்.

இந்த இடைப்பட்ட நேரத்தில் தங்கள் வீட்டு பழக்க,வழக்கம் அனைத்தையும் இராஜலட்சுமி கூறிருக்க அதை காதில் கேட்க கூட மறுத்தாள்.

அவள் நினைவுகள் முழுவதும் இந்த வீட்டில் தான் எப்படி இருக்க போகிறோம், தன் வாழ்க்கை இது மட்டுமே இருந்தது.

இரவு உணவு முடித்ததும் அவரவர் வேலையை பார்க்கச் செல்ல, பால் செம்பினை கொண்டு வந்த சித்ரா அதை தன் மருமகள் கையில் கொடுத்தாள்.

காலையிலிருந்து அவர் செய்ய சொன்ன அனைத்தையும் செய்தது போலவே இப்போது அதை வாங்க, அதன் பின்னே அவர்களின் எண்ணம் புரிந்தது.

அவர்களிடம் மறுத்து பேசவும் வழியின்றி நிற்க, “அகிலன் கொஞ்ச கோவப்படுவான். ஆனா பாசமானவன், இனிமே நீ தான் அவனோட முழு பொறுப்பு, ஒரு அம்மாவா நான் செய்ய வேண்டியா எல்லா கடமையையும் என் பையனுக்கு செய்ஞ்சிட்டேன். இனி அவனுக்கு எல்லாம் நீ தான். போம்மா கீர்த்தி உங்க அண்ணியை கூட்டிட்டு போ...”என்க,

“சரிம்மா...” என்றவாறு அழைத்துச் செல்ல அவர்கள் எதிரில் வந்து நின்றார் இராஜலட்சுமி பாட்டி.

பாட்டியை பார்த்த வளர்மதி, “இவங்க என்ன அட்வைஸ் சொல்ல போறாங்க...?” நினைத்தவாறு நின்றாள்.

“முதல் முறையா உன் வாழ்க்கையை தொடங்க போற..? பெரியவங்க கிட்டயும், கடவுள் கிட்டயும் ஆசிர்வாதம் வாங்கணும் உனக்கு தெரியாதா...?” சற்று கோவமாக கேட்க,

அவளோ பதில் கூறமால் அமைதியாக நிற்க, “வா முதல...”என்றவர் பூஜை அறைக்கு சென்று அவளை கடவுளை வணங்க சொல்லி கீர்த்தியுடன் அனுப்பி வைத்தார்.

தலையாட்டி பொம்மை போல் அவர்கள் அனைவரும் சொல்லும் சொல்லுக்கு தான் அசைவது ஒரு வித எரிச்சலை தர அந்த கோவத்தை யாரிடமும் கட்டுவது என தெரியாமல் நடந்து வந்தாள்.

“வளர் இதான் உன் ரூம், உள்ளே போ அண்ணா வெயிட் பண்ணுறான் குட் நைட்....” என்றவள் செல்ல வேறு வழியின்றி உள்ளே நுழைந்தாள்.

தன் மனதில் இருந்த இருட்டை போல் அந்த அறையும் இருட்டில் இருக்க மெல்ல தேடி அங்கிருந்த சுவிட்சை ஆன் பண்ணினான்.

ஆன் பண்ணியவளோ அந்த அறை முழுவதும் பூக்களால் அலங்கரிப்பட்டு இருப்பதை பார்த்தவாறு விழிகளை சுழற்ற விண்டோ அருகில் பட்டு வேஷ்டி சட்டையில், கையை குறுக்காக கட்டிக்கொண்டு புன்னைகையுடன் நின்ற அகிலனை கண்டாள்.

அவன் புன்னைகை அவளை மேலும் கோவமாக்க அவனிடம் காட்ட விரும்பாமல் அமைதியாக நிற்க அவள் அருகில் வந்தான் அகிலன்.

அவன் காலடி ஓசையிலே தன் அருகில் வருவது புரிய, அவள் அருகில் வந்து நின்றவன், “மதி...” உருகிய குரலில் ஆசையாய் அழைக்க,

இளா தன்னை கடைசியாக அழைத்த அழைப்பு மதி நினைவு வர, கோவத்துடன் இருந்தவள் முழுதும் கரைந்து கலங்க ஆரம்பிக்க அவனிடம் முகத்தை காட்டாமல் திரும்பினாள்.

“கடவுளே ஏன் என்ன இப்படி சோதிக்கிற...” விழிகளில் அவளையும் அறியாமல் கண்ணீர் வர,

தான் அழைத்ததும் அவள் திரும்பியதை கண்டவன், “மதி நீ ஏன் இந்த கல்யாணத்தை நிறுத்த முயற்சி பண்ணுனா...? என்க,

அவன் கூறியதை கேட்டவளோ தன் கையில் வைத்திருந்த பால் செம்பு நழுவ அப்படியே கதறலுடன் தரையில் அமர்ந்தாள்.

## அத்தியாயம் : 24

தரையில் அமர்ந்து அழும் தன்னவளை கண்டவன் மனமோ வெதும்பி தவிக்க சிறிது நேரம் அமைதியாக செல்ல அவள் கூறுவாள் என்ற நம்பிக்கையில் நின்றிருந்தான்.

“என்னால இந்த உறவை ஏத்துக்க முடியாது அதான் வேண்டான்னு சொன்னேன்..? நான் இளாவை நேசிச்சேன், என்னால அவனை மறைக்க முடியுமான்னு தெரியல..? இந்த நொடி வரைக்கும் என் மனசுல அவன் மட்டும் தான் இருக்கான். நான் இந்த கல்யாணத்துக்கு மனப்பூர்வமா ஒத்துகிடல...?” அழுது கொண்டே இளாவிற்கு தனக்கும் இரண்டு வருடங்களுக்கு முன் ஏற்பட்ட காதலை கூறினாள்.

அவளோ அழுதவாறு அகிலனிடம் மறைக்க விரும்ப மனமின்றி இத்தனை நாட்களாக மனதிற்குள் வைத்திருந்த, தங்கள் காதல், இருவருக்கிடையில் நடக்கும் சண்டை, துக்கம், கவலை,புலம்பல், அனைத்தையும் மனமிட்டு கூறி முடித்தாள்.

அவள் மனதில் வேறொருவன் இருக்கிறான் என்ற செய்தி அவன் நெஞ்சை சுட, அவள் முன் வந்து நின்றான்.

“அழுதது போதும் மதி முதல எழுந்திரு...” அவன் குரல்

ஓசை அவளை என்னவோ செய்ய, அகிலனின் முகம் கண்டவாறு எழுந்து நின்றாள்.

இதுவரை கோவமுகம்,புண்னகை முகம் மட்டும் அவனிடமிருந்து கண்டவள் அவன் கலங்கிய முகம் கண்டு அதிர்ச்சி அடைந்தாள்.

“யாரு இளா..? இப்போ எங்கே இருக்கான்..? இந்த ஒரு காரணத்துக்காக தான் வேண்டான்னு சொன்னையா..?”

“ஹ்ம்ம் ஆமா, உங்க பிரெண்ட் வேந்தன் அண்ணன் தம்பி இளஞ்செழியன் தான்...” என்றவளோ அழுகையில் கரைய,

அவன் யாரென்று உணர்ந்த பின்னே விதியின் செயலை நினைத்து தன் மூச்சினை வெளியிட்டவன், “ஹே கியூட்டி முதல அழுகுறத நிறுத்திடி...” என்றவளோ தன்னவளின் அழுகையை நிறுத்த அவள் எதிர்பாரா நேரம் அவளை இழுத்து தன் நெஞ்சில் புதைத்தான்.

அவனது இந்த செய்கையை எதிர்பாராதவள் அழுகையை நிறுத்தி அவனிடமிருந்து விலக முயல அவனோ அதை உணர்ந்து தன் பிடியை அழுத்தி தன்னுடன் நெருக்கினான்.

“விடுடா என்ன முதல...”என்றவள் அவன் முதுகில் தன் கையை வைத்து குத்த,

அவனோ அதை கண்டு கொள்ளாதவாறு எல்லையில்லா சந்தோஷத்தில் தன்னவள் நெருங்கிய அணைப்பை உணர்ந்து, “ஐ லவ் யூ டி பொண்டாட்டி...” என்றான்.

அவன் கூறியதை கேட்டவளோ எரிச்சலுடன், “இப்போ நீ விட போறியா..? இல்ல கத்தி எல்லாரையும் கூப்பிடவா..?” அவனை அடித்தவாறு கூற,

தன்னவளின் அடி பஞ்சை போல் மெதுவாக இருக்க, “நீ கூப்பிட்டா அவங்க வந்திருவாங்களா...? நீ எவ்வளோ சத்தம் போட்டாலும் அது இந்த ரூமை தவிர யாருக்கும் கேட்காது..? இது நம்ம பஸ்ட் நைட் மா...”என்றவன் அவள் கழுத்தில் தன் முகம் வைத்து உரசினான்.

அவனது உரசல் உடல் முழுவதும் சிலிர்க்க அதை உணர்ந்தவளோ, “ப்ளீஸ் அகில் என்ன விடு. என் மனசை புரிஞ்சிக்கோ என்னால முடியல...” விழிகளில் கண்ணீர் வர அதை உணர்ந்தவோ மெல்ல தன் அணைப்பை விட ஆரம்பித்தான்.

அவன் விட்டதும் வேகமாய் அவனிடமிருந்து விலக பார்க்க அவளை தன் இரு கைகளால் சிறை செய்தவள், “என்ன விட்டு அவ்வளோ சீக்கிரம் போகணும் நினைக்கையா..? அது நான் செத்தாலும் நடக்காது..?எப்போ இதை உன் கழுத்துல கட்டுனனோ அந்த நிமிஷத்துல இருந்து நீ என் பொண்டாட்டி, இனிமே நீ எனக்கு மட்டும் தான் சொந்தம்...” என்றவளோ அவளை தன் இரு கைகளிலும் தூக்க, அவளோ அதிர்ச்சியானாள்.

அவளது விழிகளை கண்டு மயங்கியவன், “உன் கண்ணுல ஏதோ ஒரு பவர் இருக்கு...” என்க,

இளா தன்னிடம் அடிக்கடி இதை கூறியதை நினைக்க, அவளை தன் படிக்கையில் படுக்க வைத்தவன், “ஹே கியூட்டி எதை பத்தியும் நினைக்காம நல்லபடியா தூங்கு குட் நைட்...” அவள் கண்ணத்தை மெல்ல வருடியவாறு நெற்றியில் இதழ் பதித்து கூறி விலகினான்.

தன் நினைவிலிருந்து கலைந்தவள் அவன் செய்கை உணர்ந்து தன் அருகிலிருந்த தலையணை எடுத்து வீச அதை சிரித்தவாறு வாங்கி கொண்டு அவளை நோக்கி கண்ணடித்து விட்டு வெளியேறினான்.

அவன் சென்ற பின் அகிலன் செய்த செயலை நினைத்தவள் எரிச்சலுடன் யாருமற்று கத்தியவள் படுக்கையில் சாய எதையோ யோசித்தவாறு சிறிது நேரத்தில் உறங்க ஆரம்பித்தாள்.

தன் மனதில் இருந்த இளா தன்னை விட்டு விலகி சென்று கொண்டிருப்பதை அவள் உணராமல் நித்திரையில் இருக்க, அதை உணர்ந்த அகிலனோ நிம்மதியாக வளர்மதிக்காக காத்திருந்தான்.

மறுநாள் விடியல் புதுயிடம் என்பதால் சீக்கிரமே கண்விழித்த வளர்மதி தன் இரு கைகளையும் சோம்பல் முறித்தவாறு எழ மெல்ல விழி திறந்தாள்.

தன் முன்னிருந்த கண்ணாடியில் தன் பிம்பத்தையே பார்க்க புதியாய் இருந்த மஞ்சள் கயிறு அவளுக்கு மேலும் அழகு சேர்த்தது.

தன் பிம்பம் தனக்கே அழகாய் தெரிய, “நமக்குள்ள தான் நேத்து நைட் ஒன்னுமே நடக்கலையே..? அப்பறம் ஏன் உனக்கு இவ்வளோ அலுப்பு...?” தன் பின் கேட்ட அகிலனின் குரலில் வேகமாய் திரும்பினாள்.

படுத்துக் கொண்டு ஒரு கை அவன் தலையை தாங்கியவாறு இருக்க வேகமாய் படுக்கையை விட்டு எழுந்தவள், “நீயா..? நீ ஏன் என் பக்கத்துல படுத்தே..?” கோவத்துடன் கேட்க,

தான் அவளை அணைத்ததில் இருந்து தன்னை ஒருமையில் பேசுவதை கண்டவன், அவளது பேச்சு, செய்கை, முகபாவனை, கோவம் என ஒவ்வொரு செயலையும் ரசித்தான்.

“என் ஒருத்தனுக்கு மட்டும் தான் உன் பக்கத்துல படுக்குற

உரிமை இருக்கு..?” என்றவாறு படுக்கையில் இருந்து தாவி அவள் முன்னே வந்து நின்றான்.

“குட் மார்னிங் பொண்டாட்டி...” கண்ணடித்து கூற, “இடியட்...”என்றவாறு அருகிலிருந்த பாத்ரூமிற்குள் நுழைந்தாள்.

அதே நேரம் வெளியே டோரை தட்டும் ஓசை கேட்க, “இதோ வந்துட்டேன்...” என்றவாறு சந்தோஷமாக திறந்தாள்.

வெளியே தன் தாய் நிற்பதை கண்டவள், “குட் மார்னிங் அம்மா...”என்க,

தன் மகன் முகத்தில் இருக்கும் சந்தோஷத்தை கண்டவர், “ வளர் எங்கடா..?”என்றார்.

“அவ பிரெஸ்சாகிட்டு இருக்காம்மா, உள்ளே வாங்க...”

“இல்ல பரவாயில்லை இருக்கட்டும் இந்தா ரெண்டு பேருக்கும் டீ இருக்கு சீக்கிரம் குடிச்சிட்டு கிளம்பி கிழே வாங்க, அப்பறம் அவளோட திங்க்ஸ் நேத்து கீர்த்தி ரூம்ல விட்டுட்டா இந்தா எல்லாம்...” என்றவர் இரண்டையும் கொடுத்து விட்டு செல்ல, அதை வாங்கி கொண்டு உள்ளே வந்தான்.

அவளை சீண்ட நினைத்தவன், “மதி சீக்கிரம் வாடி...” ஏக்கத்துடன் அழைக்க,

அடுத்தநொடி அவன் நினைத்தது போல் டோரை திறந்து கொண்டு வந்தவள், “இங்க பாரு இப்படி என்ன கூப்பிடாதே..?” கூறியவள் முகத்தை திருப்பிக் கொண்டு செல்ல,

“சரி கூப்பிட மாட்டேன்...”

அவன் படக்கென்று ஒத்துக் கொண்டதை கேட்டவள் அவன் புறம் திரும்பி, "என்ன சொன்னா..?" என்றாள்.

"இனிமே மதின்னு கூப்பிட மாட்டேன்..? போ அந்த டீயோட சூடு போகுறதுல்ல குடி. உன் திங்க்ஸ் எல்லாம் இருக்கு சீக்கிரம் கிளம்பு கிழே போகனும்..."

அவளோ அதற்கு பதில் கூறாமல் தன் உடையை எடுக்க, அவளை தாண்டி சென்றவன் அந்த பெரிய அறைக்குள் இருந்த இன்னொரு டோரை திறந்து கொண்டு சென்றான்.

அவன் சென்றதை கவனித்தவள், "ஓ இதுக்குள்ள இன்னொரு ரூம் வேற இருக்கா...?" புலம்பலுடன் தன் உடைகளை எடுத்துக் கொண்டு பாத்ரூமிற்குள் நுழைந்தாள்.

குளித்து முடித்து வெளியே வந்தவள் கண்ணாடியின் முன் நின்று தன் முகத்தை காண அதே நேரம் அந்த அறையிலிருந்து ரெடியாகி வெளியே வந்தான் அகிலன்.

"நீ இன்னும் கிளம்பலையா..?"

"உனக்கு என்ன ஒரு நிமிஷத்துல கிளம்பிருவா, ஆனா என்னால எல்லாம் அப்படி முடியாது. நீ போ நான் வரேன்..."

"உன்னால கிழே வர முடியாது உனக்கு வழி தெரியாது. சீக்கிரம் கிளம்பு நான் வெயிட் பண்ணுறேன்..." என்றவள் படுக்கையில் அமர,

"எனக்கு பார்க்க கண்ணும், நடக்க காலும் இருக்கு. எனக்கு வர தெரியும், நீ முதல போ..."கோவத்துடன் கத்தினாள்.

"சரி ஓகே..."என்றவன் எழுந்து வெளியே செல்ல, அதன் பின்னே நிம்மதியாக தன் அலங்காரத்தை முடித்துக்

கொண்டு கண்ணாடியின் முன் நின்றான்.

நீண்ட நாட்களுக்கு பின் தன்னை அலங்கரித்தை நினைத்தவள் மனம் எதையோ நினைக்க போக, அதற்குள் அவள் மொபைல் ஓசை எழுப்பியது.

புதிதாக இருந்த நம்பரை பார்த்தவள் யோசனையுடன் எடுத்து, “ஹலோ...”என்க,

“என்ன பொண்டாட்டி இன்னுமா கிளம்பல...”என்ற அகிலனின் குரலில் கோவம் தலைக்கேற, “என் நம்பர் எப்படி கிடைச்சது..?” யோசித்தவாறு பதில் கூறாமல் கட் பண்ணினாள்.

கடைசியாக ஒரு முறை தன்னை தானே பார்த்து விட்டு வெளியே வர அங்கே கிழே செல்லும் படிகட்டுக்கான வழியே இல்லாமல் இருந்தது.

“நேத்து கீர்த்தி எப்படி கூட்டிட்டு வந்தாங்க...?” யோசித்தவாறு நிற்க,

“என்னாச்சு வழி தெரியலையா..?” தனக்கு அருகில் அகிலனின் குரல் ஒலிக்க, பட்டென்று விலகினாள்.

“சரி வா...”என்றவன் அவள் கை பற்றி நேராக இழுத்து செல்ல, அவளோ அப்போதும் அவன் செல்லும் வழியை காணாமல் கையை அவனிடம் இருந்து விடுவிக்க போராட அதற்குள் படிகட்டின் அருகே வந்தான்.

இப்போது அவள் கையை விட்டவன் பார்வை கிழே இருக்க அவளும் அவனை தொடர்ந்து கண்டாள்.

“நம்ம இப்போ இங்கே வந்தோம்...”யோசித்தவள் திரும்பி

தன் அறையை காண அவள் பார்வை சென்ற வரை ஒரு அறை கூட இல்லாமல் இருந்தது.

“வா போகலாம்...”என்றவன் கீழே செல்ல அதன் பின் அமைதியாக எதை பற்றியும் யோசிக்காமல் அவன் பின்னே நடந்து வந்தாள்.

கீழே அனைவரும் ஹாலில் அமர்ந்திருக்க அவர்களை நோக்கி வர, “என்ன கீர்த்தி இங்க இருக்கே..?” கிண்டலுடன் கேட்டவாறு அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான் அகிலன்.

பார்வையால் தன் மனைவியை காண யாரும் அறியா வண்ணம் முறைத்தள் அவன் அருகில் வந்து அமர அதே நேரம். “ஏண்டா நான் இங்க இருக்கிறது உனக்கு பிடிக்கலையோ..?” என்றாள் சுதிகீர்த்தி.

“என் பாசமான தங்கச்சி நீ தான் வேந்தன் இல்லாம இருக்க மாட்டியே அதான் கேட்டேன்...”என்க,

கீர்த்தியோ அகில் முகத்தில் இருக்கும் சந்தோஷம், வளர்மதி அமைதியாக அவன் அருகில் வந்து அமர்ந்தது அனைத்தையும் கண்டு பேச கூட முடியாமல் அமர்ந்திருந்தாள்.

“நான் இங்கே தாண்டா இருக்கேன்...” என்ற யாழ்வேந்தன் ஜாக்கிங் முடித்து உள்ளே நுழைந்தான்.

அகில் முகத்தில் இருக்கும் சந்தோஷத்தை உணர்ந்த வேந்தன், அருகிலிருக்கும் வளர்மதியை கண்டவன், “நான் போய் பிரெஸ்சாகிட்டு வரேன்...” பொதுவாக கூறிவிட்டு தங்கள் அறைக்குள் நுழைந்தான்.

அவன் பின்னே மெல்ல கீர்த்தியும் எழுந்து செல்ல, வளரின்

பார்வையோ அந்த வீட்டை சுற்ற ஆரம்பித்தது.

தாத்தா, ஜெயபிரகாஷ் இருவரும் பேப்பர் படித்துக் கொண்டிருக்க,வளரின் பார்வை செல்லும் விதத்தை உணர்ந்த பாட்டி, “அம்மாடி சித்ரா இங்க வா…”என்றார்.

அடுத்தநொடி, “என்ன அத்தை சொல்லுங்க…”என்றவாறு அவர் முன் வந்து நின்றார் சித்ரா.

“உன் மருமகளை கூட்டிட்டு போய் கிட்சனை காட்டு…”என்க, அவளோ அதை கேட்டு பாட்டியை பார்த்தாள்.

தன் மொபலை நோண்டிக் கொண்டிருந்த அகிலன் மனதிற்குள் சிரிக்க, “இல்ல அத்தை இருக்கட்டும், இன்னைக்கே எதுக்கு. நான் முடிச்சிறேன் அத்தை எல்லா வேலையும்…” என்றார் சித்ரா.

“அதெப்படி இனிமே அவளோட பொறுப்பு தான் அதெல்லாம். கூட்டிட்டு போ…”என்க, அமைதியாக அவளை அழைத்துக் கொண்டு சென்றார்.

இதுவரை அகிலனை முறைத்துக் கொண்டிருந்தவள் முதல் முறையாக பாட்டியை மனதிற்குள் திட்டியவாறு சென்றாள் வளர்மதி.

வேந்தன் அறைக்குள் நுழைய அவள் பின்னே நுழைந்த சுதிகீர்த்தி அவன் அருகில் வந்து நின்றாள்.

“அகில்…” இருவரும் ஒரே போல் கூற, அதை நினைத்து சிரித்தவர்கள் பின், “யாழ் அகில் ரெம்ப சந்தோஷமா இருக்கிறான்ல என்னால நம்பவே முடியல, இதெப்படி நடக்கும்…” சுதிகீர்த்தி யோசனையுடன் வேந்தனிடம் கூறினாள்.

“இந்த ஒரு வாரத்துல வளர் மனசு மாறிருக்குன்னு நினைக்கிறேன், இல்ல எல்லார் முன்னாடியும் நடிக்கிறாங்களோ என்னவோ...? ஒன்னும் புரிய மாட்டிங்குது...”

“இல்லங்க எங்க அண்ணன் முகத்தில இருக்கிறது உண்மையான சந்தோஷம் தான் என்னால அதை உறுதியா சொல்ல முடியும்..?ஆனா கல்யாணம் நடக்கும் போது கூட வளரு டல்லா தானே இருந்தா..?என்ன நடந்திருக்கும் நேத்து நைட் ரெண்டு பேருக்கும் நடவுல..?” கீர்த்தி யோசித்தவாறே கூற,

“நமக்கு என்ன நடந்தது அதான் நடந்திருக்கும் அதெல்லாம் நீ யோசிக்காதே தப்பு...”அவள் தோளில் கைபோட்டு அணைத்தவாறு கூறினாள்.

“சும்மா இருங்க யாழ், போங்க போய் முதல குளிச்சிட்டு வாங்க...” என்றவள் அவனிடமிருந்து விலகி டவலை எடுத்து தர,

“பாட்டி சொன்ன மாதிரி இப்போயெல்லாம் நீ என்ன கவனிக்கவே மாட்டிக்கே..?” வருத்ததுடன் கூற,

“அதெல்லாம் அப்பறம் தான் முதல போங்க...”என்றவள் மகிழ்ச்சியுடன் அவனை தள்ள முடியாமல் பாத்ரூமிற்குள் தள்ளினாள்.

அதன் பின் அவன் குளித்து முடித்து வெளியே வர அவனுக்கு தேவையான உடையை எடுத்து தர சிறிது நேரம் கழுத்து இருவரும் கிளம்பி வெளியே வந்தனர்.

சித்ராவும் காலை உணவை சமைத்து முடிக்க அனைவரும் ஒன்றாக உண்ண அமர, “இவ்வளோ பெரிய வீட்டுல இத்தனை பேருக்கு சமைக்க ஏன் ஒரு சமையல்காரங்க கூட

இல்ல, ஒரு வேலை நம்மல சமையல்காரியா ஆக்கிடுமோ இந்த பாட்டி...”மனதிற்குள் நினைத்துக் கொண்டு ஓரக்கண்ணால் பாட்டியை பார்த்தவாறு வளர்மதி சாப்பிட,

அவள் மனதிற்குள் நினைத்தை அறிந்த அகிலன் திடீரெண்டு சிரிக்க, “என்ன புதுமாப்பிள்ளை திடீருன்னு சிரிக்கிற...?” வேந்தன் கேட்க,

“நீ இப்போ நினைச்சதா சொல்லவே...”மெல்ல தன் மனைவியின் புறம் குனிந்து கேட்டான் அகிலன்.

“என்ன அண்ணா சொல்லு அவர் தான் கேட்குராருல..?”

“சொல்லட்டா மதி...”அவளை நோக்கி கேட்க அங்கிருந்த அனைவரின் பார்வையையும் அவள் புறம் சென்றது.

அனைவரும் தன்னை பார்ப்பதை உணர்ந்து தவிப்புடன் இருக்க, “சாப்பிடற நேரம் என்ன பேட்சு. முதல எல்லாரும் சாப்பிடுங்க..?” என்ற தாத்தாவின் குரலில் அனைவரும் அமைதியாக உண்ண, அவரை ஒரு நன்றி பார்வை பார்த்தவள் தன் அருகில் நின்றிருந்த கணவனை கண்டு முறைத்தாள்.

அத்தியாயம் : 25

அகிலன் வீட்டில் அவரவர் அவர்களது வேலையை செய்ய, நைட் தாத்தா மட்டும் ஊருக்கு கிளம்ப இருப்பதால் அவர்க்கு தேவையானதை எடுத்துக் வைத்துக் கொண்டிருந்தார் பாட்டி.

அகிலன் வெளியே சென்றிருக்க, சித்ரா சமயலறையில் இருக்க எதையோ யோசித்தவாறு ஹாலில் தனியாக அமர்ந்திருந்தாள் வளர்மதி.

தன் அறையில் இருந்து வெளியே வந்த கீர்த்தி வளர்

தனியாக அமர்ந்திருப்பதை கண்டவள், "என்னாச்சு வளர் ஏதோ யோசிச்சிக்கிட்டு இருக்கே போல..? ரூமிற்கு போக வேண்டியது தானே ஏன் காலையில இருந்து இங்கையே இருக்கே..." கேட்டவாறு அவள் அருகில் வந்து அமர்ந்தாள்.

"போக வழி தெரிஞ்சாத தான் போக மாட்டேன்னா...?" மனதிற்குள் நினைத்தவள், அவள் தன் பதிலுக்கு காத்திருப்பது புரிய, "கீர்த்தி எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணுறீங்களா..?" என்றாள்.

"என்ன ஹெல்ப் சொல்லு கண்டிப்பா பண்ணுறேன்..." என்க,

"எனக்கு இந்த வீட்டை கொஞ்சம் சுத்தி காட்டுறீங்களா..? சும்மா உட்கார்ந்து கிட்ட இருக்க போர் அடிக்கு அதான்..."

"அதுக்கு என்ன வா எல்லார் ரூமையும் காட்டுறேன்..." என்றவள் மெல்ல அவளுடன் பேசியவாறு கிழே இருந்த அனைத்து அறையையும் காட்ட, கீர்த்தி கூறியதை கேட்டவாறு அவளுடன் நடந்து வந்தாள்.

"சரி மேல போலாம்..." என்றவள் மேல ஏற அதே நேரம் உள்ளே நுழைந்த அகிலன் அதை கண்டான்.

"என்ன பண்ணுறீங்க ரெண்டு பேரும்...?" என்றவாறு அவர்களை நோக்கி வந்தான்.

"வளருக்கு நம்ம வீட்டை சுத்தி காட்டுனேன்..."

அதை கேட்டு சிரித்தவன், "சரி நீ போ கொஞ்சம் நேரம் உட்காரு நீ படி எல்லாம் ஏற வேண்டாம், நானே கூட்டிட்டு போறேன்..." என்க,

அகிலன் கூறியதை கேட்டு வளர்மதி முறைக்க, "என்ன

அண்ணா இன்னைக்கு புல்லா சிரிச்சிட்டே இருக்கே..?" என்றாள் சுதிகீர்த்தி.

"எல்லாம் உங்க அண்ணியின் செயல் தான்..." அவள் அருகில் நின்று வளரின் தோளில் கை போட்டவாறு கூறினான்.

மனதிற்குள் சந்தோஷப்பட்டவள், "சரிண்ணா நீ போ ஈவினிங் கோவில் போகணும் அம்மா சொன்னாங்க. அப்படியே கிளம்பி வந்திருங்க..?" என்றவள் தன் அறை நோக்கிச் சென்றாள்.

"போலாமா பொண்டாட்டி..."புண்னைகைத்தவாறு கூறியவன் அவளை அழைத்துக் கொண்டு செல்ல,

"முதல கையை எடு..." என்றவள் அவனின் கையை எடுத்து விட்டு தள்ளி நின்று நடக்க ஆரம்பித்தாள்.

அவள் முன்னே செல்ல, தன் மனைவியின் நடை அழகையும், அவள் நடை அழக்கு ஏற்றவாறு ஆடும் பின்னலிட்ட கூந்தல் அசைவையும் கண்டவாறு அவள் பின்னே சென்றான்.

மேல் ஏறி வந்தவள் தன் பார்வையால் அதை அலச அதன் பின்னே இந்த அறை கிழே இறங்கும் படிக்காக கட்டப்பட்டது என்பதை உணர்ந்தாள்.

அந்த அறையில் இரண்டு கண்ணாடி டோர் இருக்க, லெப்ட் சைடு செல்ல அதை கண்டவோ, "அது தான் நம்ம ரூம் போக வேண்டிய வழி. இப்போ வா நம்ம ரைட் சைடு போகலாம்..." என்க,

"எனக்கு ரூமிற்கு போனா போதும் வேற எங்கையும் போக விரும்பல..." என்றவள் அந்த டோரை நோக்கி செல்ல,

அவள் முன்னே வந்து நின்றவள், “அங்கே போய் என்ன பண்ண போற வா கொஞ்சம் நேரம் பால்கனி பக்கம் போகலாம்...” என்றவாறு அவளை மறுபுறம் இழுத்து சென்றான்.

“எனக்கு வர தெரியும் கையை விடு...”என்றவள் அவனிடமிருந்து தன் கையை உருவிக் கொள்ள, அதை கண்டு சிரித்தவாறு அந்த டோரை திறந்தான்.

அதை திறந்ததும் சில்லென்ற காற்று வீச அங்கே ஓர் அறை மட்டும் இருக்க அதை தாண்டி அவளை பால்கனிக்கு அழைத்துச் சென்றான்.

பசுமை தோட்டம் போன்று வண்ண மலர்கள் பூத்துக் குலுங்க, அங்கே அமர்வதற்கு என்று சேர்கள் இருக்க அதை கண்டவாறு முன் சென்று நின்றாள்.

அவள் நின்ற அடுத்தநொடியே அது முன்புற பால்கனி என்பது புரிய கிழே காண கேட்டிலிருந்து உள்ளே வரும் வழியின் இருபுறம் அழகு செடிகள் ஒரே போல் வெட்டப்பட்டு வளர்ந்திருந்தது.

காம்பவுண்டின் அருகில் பெரிய மரங்கள் வளர்ந்திருக்க ஒரு புறம் ஸ்சும்மிங் பூல். மற்றொரு புறம் விளையாடுவதற்கு ஏற்றவாறு அமைந்திருந்தது.

அதை அனைத்தையும் தன் விழிகளால் அலசியவள் மனதில் அவனுக்கும் தனக்கும் மலைக்கும் மடுவுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை உணர்ந்தாள்.

அதன் பின்னே அவள் மனதில் பல கேள்விகள் உதிக்க, திரும்பி அகிலனை கண்டாள்.

அதுவரை அவள் பார்க்கும் அழகை ரசித்துக் கொண்டிருந்தவன் அவள் தீடிரெண்டு தன்னை கண்டதும் புருவம் உயர்த்தி என்ன என்று வினவினான்.

அவன் இரு புருவங்களையும் ஒரே போல் உயர்த்தும் அழகை தன்னையும் அறியாமல் ஒரு நொடி ரசித்தவள் பின், "நான் கல்யாணத்தை நிறுத்த முயற்சி பண்ணுறேன்னு தெரிஞ்சும் நீங்க ஏன் என்ன கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க..? உங்க அந்தஸ்துக்கு நான் நிச்சியமா பொருந்த மாட்டேன்..?" என்க,

அவள் தீடிரெண்டு மரியாதையாக உரைப்பதை உணர்ந்தவன் அவளை கண்டு முறைக்க, "நான் என்ன கேட்டேன்னு இவன் முறைக்கான்...?" யோசித்தவாறு இருக்க,

அவள் அருகில் வந்து நின்றவள், "காரணம் சொல்லியே தான் ஆகனும்மா..?" என்றாள்.

"ஹ்ம்ம் ஆமா..."

"சொன்னா எனக்கு என்ன தருவே..." என்றவனின் பார்வையோ அவளின் இதழில் மேல் இருக்க, அவன் பார்வையை உணர்ந்தவளோ கோவத்துடன் முகத்தை திருப்பிக் கொண்டு நின்றாள்.

அவள் திரும்பியதும் குறும்பு தவழ. அவள் கழுத்தில் வளைவில் முகம் புதைத்து அவள் வைத்திருந்த மல்லிகை பூவின் வாசத்தின் நுகர்ந்து அவளை பின்னிருந்து இறுக்கியவாறு, "சொல்லனும்மா..?" என்றான்.

அகிலனின் கை தன் கையோடு சேர்த்து தன்னை இடையோடு வளைத்து இறுக்கியிருக்க,அவன் தாடையை கழுத்து வளைவில் வைத்து ஆட்டும் போது அவன் மீசை தன் காதில் உரசுவதை உணர்ந்தவள், "விடு என்ன நீ ஏன்

இப்படி பண்ணுற. எனக்கு தான் எதுவும் பிடிக்கலைன்னு சொல்லுறேன்ல....”கத்தியவள் அவனிடம் இருந்து விலகி நிற்க,

“எனக்கு ரெம்ப பிடிச்சிருக்கு நீ கேட்ட கேள்விக்கான பதிலும் இது தான்...” என்க, அவளோ அவன் கூறியதை யோசித்து குழம்பி நிற்க அதை கண்டு சிரித்தான்.

“நான் உன்ன என் உயிரா நேசிக்கிறேன். நீ என்னைக்கும் எனக்கு மட்டும் தான் சொந்தம். அதான் நீ நிறுத்த முயற்சி பண்ணுறேன்னு தெரிஞ்சும் நான் உன்ன கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.. போதுமா நீ கேட்ட கேள்விக்கான பதில்...”

தான் நேற்று இரவு வேறொருவனை விரும்பியதாக கூறியதும் அவன் முகம் கலங்கியதை நினைத்தவள் எதையோ யோசித்தவாறு, “சரி நேத்து நான் விரும்புனதை சொன்னதும் அந்த பையன் யாருன்னு ஏன் கேட்டீங்க..? ஒரு வேலை இளா...” இளாவின் பெயரை மொழிந்ததும் அதற்கு மேல் எதுவும் பேச முடியாமல் அமைதியாக நிற்க,

அவள் மனதை அறிந்தவன், “இளா உயிரோட இருந்திருந்தாலும் நீ என் கூட தான் சேர்த்திருப்பே..?” அவளின் கையை பற்றிக் கொண்டு உறுதியாக கூறினான்.

அகிலனின் மனதில் இருந்த உறுதியை அவன் விழிகளில் கண்டவள் அமைதியாக நிற்க, “இந்த ஜென்மத்துல உனக்கானவன் நான் மட்டும் தான். நீ உன் மனசுல இருக்கிற பல விசியங்களை இன்னும் புரிஞ்ச்சிக்கிடல. நீ அதை சீக்கிரமே புரிஞ்சிக்கிட முயற்சி பண்ணுவ எனக்கு நம்பிக்கை இருக்கு..? வா நம்ம ரூமுக்கு போகலாம்...” என்றவன் அவளை அழைத்துக் கொண்டு செல்ல,

எதுவும் கூறமால் மனதில் அவன் கூறியது போல் பல யோசனைகள் நிறைந்த குழப்பத்துடன் அகிலன் இழுத்த இழப்பிற்கு அவன் பின்னே சென்றான்.

தன் அறைக்கு வந்தவனோ நீரை எடுத்து தர அதை வாங்கி அமைதியாக பருக, “எதை பத்தியும் யோசிக்காம சீக்கிரம் கிளம்பு கோவிலுக்கு...” என்றவன் அவள் கன்னத்தை லேசாக தட்டி விட்டு செல்ல அந்த செய்கை அவளுக்கு தன் தந்தையின் செயலை நினைவு படுத்தியது.

“ஏதோதோ சொல்லி என்ன குழப்பி விட்டிட்டு இவன் மட்டும் நிம்மதியா போறான்...” மனதுக்குள் அவனை திட்டியவள் தன் யோசனை அனைத்தையும் ஒதுக்கி வைத்து கிளம்ப ஆரம்பித்தாள்.

நேரம் செல்ல வேகமாய் கிளம்பி கிழே வர அதே நேரம் அனைவரும் கிளம்பி வந்தனர்.

அவள் சுடிதார் அணிந்திருப்பதை கண்ட இராஜலட்சுமி பாட்டி, “இங்க பாரு மருமகளே..? உங்களுக்கு இப்போ தான் புதுசா கல்யாணம் நடந்திருக்கு. உங்களை பார்க்க கல்யாணத்துக்கு வர முடியாத விருந்தாளிகள் எல்லாம் வருவாங்க. அதுனால கொஞ்சம் நாள் நீ புடவை கட்டு...”என்க,

“சரி பாட்டி...” அமைதியாக கூற அனைவரும் முன்னே செல்ல வளரின் அமைதி அகிலனை என்னவோ செய்ய தன் மனைவியின் அருகில் வந்து நின்றான்.

“ஹே கியூட்டி பாட்டி அப்படி தான் நீ கண்டுக்கிடாதே..?”

அவனை கண்டு முறைத்தவள், “நைட் உங்க தாத்தா ஊருக்கு போறாருல அவர் கூட எப்படியாவது அனுப்பி வைச்சிருங்க. எப்போ பார்த்தாலும் ரூல்ஸ் போட்டுக்கிட்டு இருக்காங்க...” கூறியவள் முன்னே செல்ல, அவள் கூறியதை கேட்டு புன்னகையுடன் பின்னே சென்றான்.

அதன் பின் அனைவரும் ஒன்றாக அருகிலிருந்த கோவிலுக்கு சென்று இரவு வீடு திரும்ப, தன் தாத்தாவை அழைத்துக் கொண்டு வளர்மதியின் கோவத்தையும்

வாங்கிக் கொண்டு ஸ்டேஷன் சென்று விட்டு வந்தான்.

ஹாலில் வளர் இல்லாததை கண்டு தன் தங்கையிடம் அவளை கேட்க, “வளர் அப்பவே சாப்பிடு ரூமுக்கு போய்ட்டா..?”என்க,

“சரி குட் நைட்...” என்றவன் மாடி நோக்கி செல்ல, வேந்தனும்,கீர்த்தியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

வளரின் கோவத்தை நினைத்தவாறு மேல வர பால்கனிக்கு செல்லும் டோர் திறந்திருப்பதை கண்டவன் அவள் அங்கே தான் இருப்பாள் என்ற நம்பிக்கையில் அதை நோக்கிச் சென்றான்.

அவன் நினைத்தது போலவே வளர் அங்கிருக்க அவள் அருகில் வந்து நின்றான்.

“நான் எப்படி இருக்கனும் எங்க வீட்டுல கூட யாரும் எதுவும் சொன்னது கிடையாது. ஆனா இங்கே உங்க பாட்டி...?” கோவமாக அவனிடம் கேட்க,

“மதி உன் மனசை என்னால புரிஞ்சிக்க முடியுது. பாட்டி கேரக்டர் பத்தி உனக்கு தெரியாது. கொஞ்சம் நாள்க்கு அப்பறம் உனக்கு தெரிஞ்சிரும். கீர்த்திக்கு குழந்தை பிறக்குற வரைக்கும் தான் இங்கே இருப்பாங்க. கொஞ்சம் நாள் தான்மா...” தன்னவளிடம் கெஞ்சினான்.

“சரி...”என்றவள் முன்னே செல்ல அங்கிருந்த ஓர் பூட்டியை அறையை கண்டாள்.

“இது யார் ரூம், நம்ம இந்த ரூமிற்கு வந்திருமா..? எனக்கு இங்கே இருக்க ரெம்ப பிடிச்சிருக்கு...” என்றவள் அந்த ரூமை திறக்க போக,

அவள் கை பற்றி தடுத்தவன், “இந்த ரூமிற்கு யாரும் போக

கூடாது, வா லேட்டாகிருச்சி தூங்கலாம்...” என்றவன் அவளை அழைத்துச் செல்ல முயன்றான்.

“ஏன் படத்துல, நடகத்துல வர்ற மாதிரி இந்த ரூமுக்கு ஒரு கதை இருக்கு போல...” கிண்டலாக கேட்க,

“ஹ்ம்ம் ஆமா, இப்போ போகலாம் வா...” என்றவன் அவளை இழுத்துக் கொண்டு சென்றான்.

மறுநாள் விடியல் அழகாய் விடிய உள்ளிருக்கும் அறையிலிருந்து ஆபீஸ் செல்ல கிளம்பி வெளியே வந்தான் அகிலன்.

“நான் ஆபீஸ் போய்ட்டு வரேன்...”என்க,
“ஒரு நிமிஷம் நில்லுங்க நான் வீட்டுக்குள்ள அடைஞ்சி கிடைக்க விரும்பல...? நான் மறுபடியும் ரீ ஜாயின் பண்ணலாம் நினைக்கேன். இதுக்கு உங்க பாட்டி திட்டுவாங்களா..?”

“தெரியல அவங்க கிட்ட நீயே கேளு. நான் கிழே இருக்கேன் வா...” என்றவன் வெளியே செல்ல அவன் பின்னே சென்றான்.

“என்னாச்சு...” அவள் தன் பின்னே வருவதை உணர்ந்து கேட்க, “கிழே வரேன் பாட்டி கிட்ட கேட்க...” என்றாள்.

“இப்படியேவா...?”

“உங்க பாட்டி தானே புடவை கட்ட சொன்னாங்க..?அதான் கட்டுனேன்...”

“நீ யாருக்காவும் உன் கொள்கையை மாத்த மாட்டேன் நினைச்சேன் ஆனா இவ்வளோ சீக்கிரம் மாறிட்டே. எனக்கு கூட இந்த ட்ரெஸ் தான் ரெம்ப பிடிச்சிருக்கு...” என்றவனின் பார்வையோ அவள் இடையில் பதிக்க,

அவனை கண்டு முறைத்தவள் கோவத்துடன், “எல்லாம் என் நேரம்...” என்றாள்.

“ஆபீஸ் போகும் போது எதை போட்டு வருவே அதையே போட்டு வா...” என்றவன் வெளியே செல்ல தன் உடைகளை எடுத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

ஹாலில் தன் தந்தை கிளம்பி அமர்ந்திருப்பதை கண்டவன் அவர் அருகில் வர, “என்னடா அதுக்குள்ள ஆபீஸ் வர..?”என்க,

“இல்லப்பா அங்கே வேலை ரெம்ப இருக்கு...”

“சரிப்பா, அப்போ ரெண்டு பேரும் ஒரே போலவே போகலாம்...” ஜெயபிரகாஷ் கூற, அதே நேரம் தன் கணவனுடன் வெளியே வந்தாள் சுதிகீர்த்தி.

“அப்பா நாங்க எங்க வீட்டுக்கு கிளம்புறோம்...”என்க,
“என்னமா நல்ல காரியம் முடிஞ்சி ரெண்டு நாள் நடந்திருக்கு உங்க அம்மா உன்ன சரியாவே கவனிச்சிருக்க மாட்டா. இருந்து ரெண்டு நாளுக்கு அப்பறம் போம்மா...”

“இல்லப்பா வளைகாப்பு போட்டதுக்கு அப்பறம் இங்கே தானே இருப்பேன்...” என்றவள் ஏதோதோ சொல்லி தன் தந்தையை சமாதானப்படுத்த அதே நேரம் ஜீன்ஸ் அண்ட் டாப்ஸ் அணிந்து கிழே வந்தாள் வளர்மதி.

அகிலனின் பார்வையோ அவளை விட்டு நகர கூட மறுக்க, தன் மருமகள் செய்யும் சமையலை கவனித்து முடித்து வெளியே வந்தார் இராஜலட்சுமி பாட்டி.

அவள் அணிந்திருந்த உடையை கண்டவரோ அவளை நோக்கி வர அதை கண்ட அகிலன், “பாட்டி நான் என் பொண்டாட்டியை தினமும் ஆபீஸ் கூட்டிட்டு போகலாம் நினைக்கேன்..?” என்றவாறு அவள் தோளில் கை போட்டு கூறினான்.

“ஆனா இவ எப்படி...” என்றவர் ஏதோ கூற வர, “பாட்டி...” என்றவாறு திடீரெண்டு தன் பாட்டியை அணைத்துக் கொண்டான்.

“என் செல்ல பாட்டி மாட்டேன் மட்டும் சொல்லாதீங்க ப்ளீஸ். அவ என் பக்கத்துல என் ரூம்ல என் கூடவே இருப்பா பாட்டி. இந்த சான்ஸ்சை மிஸ் பண்ண விரும்பல. ப்ளீஸ் பாட்டி ஹெல்ப் பண்ணுங்க நான் உங்க செல்ல பேரன்ல...” அணைத்துக் கொண்டு அவருக்கு மட்டும் கேட்கும் குரலில் கூற,

தன் பேரனின் செயலை கண்டு சிரித்தவர், “சரி விடு...” என்க, “தேங்க்ஸ் பாட்டி...”என்றான்.

“சரி. வளரை நீ கூட்டிட்டு போ ஆனா இப்போ இல்ல நீங்க மறுவீடு போய்ட்டு வந்ததுக்கு அப்பறம்...”என்று அனைவர் முன்னிலையிலும் கூற,

அதை கேட்டவளோ புண்ணகையுடன் அகிலனை காண அவள் தன்னை கண்டு முதல் முறையாக சிரிப்பதை பார்த்து சந்தோஷமாக தன் தந்தையுடன் கிளம்பினாள்.

அவன் சென்றதும் கீர்த்தி கிளம்புவதாக வளரிடம் கூற மனதில் பாட்டியை பார்த்து எதையோ யோசித்தவாறு நின்றாள் வளர்மதி.

## அத்தியாயம் : 26

கீர்த்தி கிளம்புவதாக கூற எதையோ யோசித்த வளர்மதி தன் பாட்டியின் அருகே சென்றாள்.

“பாட்டி பெரியவங்க இருக்கும் போது நான் பேசுறது தப்பு தான், ஆனா என் மனசுல பட்டதை சொல்லணும் நினைக்கிறேன் சொல்லலாமா..?” தயக்கத்துடன் கேட்க,

“நீ இந்த வீட்டோட மருமகள். உனக்கு என்ன செய்யணும்

தோணுதோ அதை தாராளாமா செய்யலாம். ஆனா ஒன்னு அது இந்த வீட்டோட நம்மைகாக மட்டும் தான் இருக்கனும்...”என்க,

“சரி பாட்டி. நீங்க ஏன் கீர்த்தி கூட அவங்க வீட்டுக்கு போக கூடாது. அவங்களை பக்கத்துல இருந்து பத்திரமா கவனிச்சிக்கிடுவீங்களே..? எனக்கு தெரியும் வேந்தன் அண்ணன் அவங்க அம்மா, அப்பாவும் நல்ல கவனிச்சிக்கிடுவாங்க. ஆனாலும் நீங்க பக்கத்துல இருந்து பார்த்துக்கிட்ட மாதிரி வராதுல...”

“ஹ்ம்ம் ஆமா அத்தை வளர் சொல்லுறது சரி தான். இந்த நேரத்துல என்னால தான் அவ பக்கத்துல இருக்க முடியல. நீங்களனாலும் இருங்க அத்தை ப்ளீஸ்...” சித்ரா கூற,

அவரோ யோசிக்க, “பாட்டி ப்ளீஸ் அங்கே வாங்க..? நீங்க வந்தா அம்மாக்கு, சுதிக்கு  துணையா இருப்பீங்க..? ஏதாவது எமர்ஜென்சினா நீங்க கை வைத்தியம் கூட பார்ப்பீங்க..? வாங்க பாட்டி கொஞ்சம் நாள் தானே...?” வேந்தனும் கூற, அனைவரும் கூறியதை கேட்டவர் தனக்கும் பேத்தியின் அருகில் இருக்க வேண்டும் என்ற தோன்ற சரி என்றார்.

அதன் பின் சிறிது நேரத்தில் அவரும் கிளம்பி வர மூவரும் வேந்தனின் வீட்டுக்கு சென்றனர்.
அவர்கள் சென்றதும், தன் மருமகளின் அருகில் வந்து அமர்ந்து சித்ரா, “ரெம்ப நன்றிம்மா...”என்றார்.

“என்னாச்சு அத்தை எதுக்கு தேங்க்ஸ் சொல்லுறீங்க..?”

“எப்படியோ என் மாமியாரை இங்கே இருந்து அனுப்பிட்டையே அதுக்கு தான்மா...”நிம்மதியாக கூற,

“நம்மள தான் இந்த கிழவி டார்ச்சர் படுத்துன்னு நினைச்சா நம்ம அத்தையை அதை விட டார்ச்சர் படுத்திருக்கும்

போலியே..? நொந்து போய் பேசுறாங்களே..?” மனதிற்குள் நினைத்தவள்,

“என்னாச்சு அத்தை பாட்டியை உங்களுக்கு பிடிக்கதா..?” என்றாள்.

“ஐயோ அப்படியெல்லாம் இல்லமா அவங்க ரெம்ப நல்லவங்க தான். ஆனா அவங்க பார்வை கழுகு பார்வை அவங்க கிட்ட யாராலையும் தப்ப முடியாது. நம்ம என்ன பண்ணுனாலும் கவனிச்சிக்கிட்டே இருக்கும். நான் எல்லாம் உங்க மாமாவை கட்டிட்டு வந்த புதுசுல தினமும் தப்பு பண்ணி திட்டு வாங்கிட்டே தான் இருப்பேன். அதுக்கு அப்பறம் பிள்ளைகள் பிறந்ததும் பிசினஸ் பார்க்கணும் சொல்லி இங்கே கூட்டிட்டு வந்துட்டாரு...”

“ஒரு வேலை அகிலனுக்கும், எனக்கும் இடையில இருக்குற உறவுல இதுக்கு எதுவும் டவுட் இருக்குமோ அதான் முறைச்சிட்டே இருக்கா...”மனதுக்குள் நினைக்க,

“சரிம்மா நீ போய் ரெஸ்ட் எடு. நான் போய் எல்லாருக்கும் லஞ்ச் ரெடி பண்ணுறேன்...”என்க,

“நானும் வரேன் உங்க கூட. ஆனா எனக்கு சமைக்க தெரியாது நீங்க கத்து தரீங்களா..?” தயக்கத்துடன் கேட்க,

“அதுகென்ன வா கொஞ்சம் கொஞ்சா சொல்லி தரேன்...” என்றவர் முதல் முறையாக தன் பேச்சு துணைக்கு ஆள் கிடைத்ததை நினைத்து சந்தோஷமாக அழைத்துச் சென்றார்.

“ஏன் அத்தை இவ்வளோ பெரிய வீட்டுல சமைக்க மட்டும் யாரும் இல்ல...?”

“அது என் மாமியார் உத்திரவு சமையல் மட்டும் நான் தான்

செய்யணும். எப்பவும் புருஷனுக்கும், பிள்ளைக்கும் நான் தான் சமைச்சி தரனும் சொல்லிருக்காங்க...” என்க,

அதன் பின் இருவரும் சிறிது நேரம் பேசியவாறு தன் மருமகளுக்கு தன் கைபக்குவதை கூறி கொண்டு சமைத்து முடித்தனர்.

அனைத்தையும் முடித்தவர் இரண்டு லஞ்ச் பாக்ஸ் ரெடி செய்ததை புரியாமல் பார்க்க, “என்ன பார்க்குற இது யார்க்குன்னு நினைக்கையா..? எல்லாம் உன் புருஷனுக்கும், உங்க மாமனார்க்கும் தான்...?”என்க,

“அவங்க ஸ்கூல் படிக்கிற பிள்ளைகள் பாரு லஞ்ச் பாக்ஸ் கொடுத்து விட...”மனதுக்குள் நினைத்துக் கொண்டிருக்க,

“என்னடா சின்ன பிள்ளைகளுக்கு குடுக்கிற மாதிரி குடுக்கிறாங்கன்னு நினைக்கையா..?”

தன் மனதுக்குள் நினைத்ததை அவர் கூறியதை கண்டு திகைத்து நிற்க, “அவங்கள மதியம் சாப்பிட வைக்க எனக்கு வேற வழி தெரியல. எப்போ பார்த்தாலும் வேலை தான். அதுவும் அகில் இருக்கானே அவனை எல்லாம் சாப்பிட வைக்க கெஞ்சனும் கொஞ்சம் நேரம் கழிச்சி போன் பண்ணி. நீயே சொல்லு சம்பாறிக்கிறது எதுக்கு நல்லா இருக்க தானே..? அப்போ சாப்பிட்டா தானே நல்லா இருக்க முடியும். ஏதாவது சொன்னா மூக்கு மேல கோவம் வரும் உன் புருஷனுக்கு..” பேசியவாறு ட்ரைவரை அழைத்து மதிய உணவை கொடுத்து முடித்தார்.

“அகிலுக்கு அவ்வளோ கோவம் வருமா...” நினைத்தவள், தன் அத்தை கூறிய அனைத்தையும் கேட்டுக் கொண்டிருக்க, அப்போதே மனதிற்குள் ஒரு வித பயம் அவளை வந்து சூழ்ந்தது.

அவரோ தன் இருந்த கவலை அனைத்தையும் கொட்ட ஒருத்தி கிடைத்து விட்டாள் என்ற சந்தோஷத்தில் புலம்பி முடித்தார்.

“சரிம்மா நீ போ போய் கொஞ்சம் நேரம் ஓய்வெடு, நானும் போய் தூங்குறேன்...”என்றவர் தன் அறைக்குச் செல்ல, அவளும் மாடியேறி தன் அறைக்குச் சென்றாள்.

தன் அறைக்குள் நுழைந்தவளின் மனமோ அகிலனை சுற்றியது. ஆபீஸ்லில் வேலை நிமிர்த்தமாக அவன் சில நேரங்களில் கோவப்படுவதை அறிந்திருந்தாள்.

ஆனால் அதை வீட்டில் காட்டுவான் என்பதை கேட்டவளோ தன் அண்ணன் அடிக்கடி அகிலனின் கோவத்தை இரவு உணவு உண்ணும் போது தன் தாயிடம் கூறுவதை நினைத்தவாறு படுக்கையில் சாய்ந்தாள்.

தன்னையும் அறியாமல் உறங்க, நேரம் செல்ல திடீரெண்டு தன் அருகில் அகில் இருப்பதை போல் உணர்ந்தவள் வேகமாய் விழி திறந்து எழ, “என்னாச்சு மதி..? எதுவும் பகல் கனவு கண்டியா..?” படுக்கையில் அமர்ந்து லேப்டாப்பில் எதையோ நோண்டிக் கொண்டிந்த அகிலன் அவளை பார்த்து கேட்டான்.
மதி வந்த இந்த ரெண்டு நாளில் அவன் மற்ற அனைத்திற்கும் உள்ளறையை பயன்படுத்த, தூங்கும் போது மட்டும் அவள் அருகிலே தங்களில் படுக்கையில் படுத்தான்.

அதை அறிந்தவளோ எதுவும் பேசாமல் அமைதியாகவே இருக்க, அவனுக்கோ அது சந்தோஷத்தை அளித்தது.

“என்ன பண்ணுற உன் கிட்ட தான் கேட்குற எதுவும் கணவு கண்டியா...? இந்தா இந்த தண்ணியை குடி....” என்றவன் எழுந்து வந்து நீரை எடுத்து தர அதை வாங்கி பருகினாள்.

மணியை பார்க்க அது மதியம் மூன்றை காட்ட, “இவன் எப்படி இந்த நேரத்தில் வீட்டிற்கு வந்தான்...” மனதிற்குள் யோசித்தவள் அதையே அவனிடம் கேட்டாள்.

“இன்னைக்கு ஈவினிங் உங்க வீட்டுக்கு போறோம். இன்னும் ரெண்டு நாள் அங்கே தான். மறுவீட்டுக்கு அத்தை நம்மள கூப்பிட்டுருக்காங்க. போதுமா நல்ல தூக்கம் போல சீக்கிரம் கிளம்பு...”என்க, தன் வீட்டிற்கு செல்ல போகும் நினைப்பில் அமைதியாக கிளம்ப ஆரம்பித்தாள்.

அவள் கிளம்பிக் கொண்டிருக்க, “ஆமா பாட்டியை இங்கே இருந்து அனுப்பிட்டேன்னு கேள்விப்பட்டேன். ரெம்ப சந்தோஷம் போல..?” என்க,

அவனை கண்டு முறைத்தவள், அதான் நீங்க பண்ணலையே அப்பறம் ஏன் கேட்குறீங்க..?” என்றவள் தன் உடைகளை எடுத்துக் கொண்டு பாத்ரூமிற்குள் நுழைந்தாள்.

அதன் பின் அவள் வீட்டிற்கு செல்ல, இந்த மூன்று நாட்களில் அவள் எப்படி மாறி இருக்கிறாள் என்பதை அவளை பார்த்த அடுத்த கணமே புரிந்து கொண்டார் கோமதி.

எழிலும், கோமதியும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்க, இதற்கு முன் இரண்டு,மூன்று முறை வந்திருந்து, இருவரிடமும் நன்றாக பழகியிருந்ததால் அந்த வீட்டின் ஒருவனாக இருந்தான் அகிலன்.

அனைவரும் அமர்ந்து ஒன்றாக இரவு உணவை முடிக்க, “வளரு மாப்பிள்ளை ரூமுக்கு கூட்டிட்டு போ, லேட்டாகிருச்சி தூங்கட்டும்...” என்ற கோமதி அவள் கையில் பால் கிளாசை தர,

அதனை வாங்கியவள் தன் அண்ணனுக்கு குட் நைட் கூறியவள் அவன் அருகில் இருந்த அகிலனை காண, அவனும் குட் நைட் கூறி கொண்டு அவள் பின்னே

சென்றான்.

அகிலனின் பார்வை ஒவ்வொரு நொடியும் தன் மகள் மேல் இருப்பதும் அவள் கண்ணசைவை புரிந்து கொண்டு அகிலன் அவள் பின்னே செல்வது அனைத்தையும் கண்ட கோமதி நிம்மதியாக உறங்கச் சென்றாள்.

தன் அருகில் நுழைந்து பால் கிளாசை அங்கிருந்த டேபிளில் வைத்தவளின் மனமோ பல கேள்விகளை உதித்தது.

அங்கே நான்கு பேர் படுத்து உருளும் அளவுக்கு பெட்டிருக்க. இங்கே இரண்டு பேரே படுப்பதற்கே நெருக்கமாய் இருப்பது போல் இருக்க அதனை கண்டவாறு நின்றாள்.

“ஹேய் பொண்டாட்டி...” கிறக்கமாய் அழைத்தவாறு அவளை பின்னிருந்து அணைத்தவன்,

“இந்த அகிலை பார்த்தா பாவமா இல்லையா..? எத்தனை நாள் தான் நீ இப்படி தள்ளியே இருக்க போறே. உன் மனசை நான் கொஞ்சம் கூடவா பாதிக்கல..? ஐ லவ் யூ டி கியூட்டி...” என்றவன் கைகளோ அவள் கொடி இடையிலிருந்து நழுவி வயிற்றில் பதிந்து தன்னுடன் சேர்த்து அணைக்க,

அவனது முகத்தை கழுத்து வளைவில் வைத்து உரசியவன் மெல்ல கிழிறங்கி தன்னவனின் முதுகில் இதழ் பதிக்க, “நோ...” என கத்தியவாறு தன் காதினை மூடினாள்.

“யேய் என்னாச்சு மதி...?” அகிலனின் குரல் சற்று தூரத்தில் அழைக்க மெல்ல விழி திறந்தவளோ அவன் தரையில் பெட்ஷீட்டை விரிப்பதை கண்டாள்.

“இப்போ என்ன நடந்தது...? நீங்க எப்படி அங்கே...?” குழம்ப,

“என்ன நீ இன்னைக்கு முழுக்க கனவுலையே வாழுற..?”

என்றவாறு அவள் அருகில் வர,

“கிட்ட வராதீங்க அங்கயே இருங்க...” என்க, அவள் கூறியதை கேட்டவனோ மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

“ஆமா நீ நின்னுட்டே என்ன யோசிச்சே..?”

“ஒன்னுமில்லை நீங்க ஏன் கிழே படுக்க போறீங்க..?”

“ஒ அப்போ நம்ம மேலையை படுக்கலாம்மா...?”

“அதெல்லாம் இல்ல நான் கிழே படுக்கிறேன். உங்களுக்கு இது பழக்கம் இருக்காது நீங்க மேலையே படுங்க...” என்றவள் பெட்ஷீட்டை எடுத்து கிழே விரித்து படுத்தாள்.
“நான் வெகேஷன் போகும் போதெல்லாம் டென்ட் போட்டு கிழே தான் படுப்பேன்...” என்க,

“முதல லைட் ஆப் பண்ணிட்டு தூங்குங்க...” என்றவள் கண் மூட, நின்றவாறே அவள் முகத்தை கண்டவன் பின் படுக்க ஆரம்பித்தான்.

நேரம் செல்ல மெல்ல விழி திறந்தவள் லேசாக எழுந்து அவனை காண அவனோ அழந்த உறக்கத்தில் இருந்தான்.

“என்ன இது அவங்க வீட்டுல ஏ,சி ல தூங்கினவங்களுக்கு இங்கே பேன் காத்துலையும் தூக்கம் வரும்மா..?” யோசித்தவாறு நித்திரைக்குச் சென்றாள்.

மறுநாள் விடியல் துவங்க அவனுக்கே முன்னே எழுந்து குளித்து முடித்தவள் அவனுக்கு ரெடியாக தேவையானைதையும் எடுத்து வைத்து வெளியே வந்தாள்.

கிச்சனுக்குள் நுழைந்த தன் மகளை கண்ட கோமதி, “நீ

சந்தோஷமா தானே இருக்கே..? அம்மா உனக்கு எதுவும் தப்பா பண்ணலையே..?" என்க,

"எனக்கு இன்னும் தெரியல நீ பண்ணி வைச்ச இந்த கல்யாணம், தப்பா சரியான்னு...?" என்றவள் தனக்கான டீயை கலந்து கொண்டு வெளியே வந்தாள்.

தன் மகள் கூறியதை கேட்டவரோ குழப்பத்துடன் இருக்க, அதே நேரம் வெளியே வந்து அமர்ந்த மதி இரண்டு நாள்களாக இளாவின் நினைப்பு தனக்கு வராததை நினைத்தாள்.

"என்ன இது..? நானா இது..? என் காதல் பொய்யா..? நான் எப்படி இவ்வளோ சீக்கிரம் இளாவை மறக்க ஆரம்பிடிச்சேன்..." மனதுக்குள் நினைத்தவள் வேகமாய் தன் அறைக்குள் நுழைந்தாள்.

தன் அறையில் நுழைந்தவள் அங்கிருந்த தன் கபோர்டை திறந்து அவன் தனக்கு முதல் முறை அழித்த பரிசினை எடுத்தாள்.

இராதையை தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டிருந்தவன் கிருஷ்ணன்னின் புகைப்படத்தை வருட அதே நேரம் அவள் பின் வந்து நின்ற அகிலன், "வாவ் நைஸ் பிட்சர். உன் பிரெண்ட் பிரசன்ட் பண்ணுனாங்களா...?" என்க,

"இளாவோட பஸ்ட் கிபிட்..." என்றவள் அவன் நினைவில் கலங்கியவாறு கிருஷ்ணை வருட,

"இந்தா கிப்ட்டை உனக்கு அவன் கொடுத்தானா...?"

"ஹ்ம்ம் ஆமா, கியூட் லவ்வர்ஸ்..."

"எனக்கு தெரிஞ்சி புராண கதையில ராதையோட காதல்

அவளுக்கு கிடைக்கலன்னு நினைக்கிறேன். கிருஷ்ணருக்கு ராதையின் மேல காதல் இருந்தா இந்த ஒரு சூழ்நிலையிலும் விட்டுட்டு போயிருக்க மாட்டான். நீ அவன் இந்த கிப்டை கொடுக்கும் போதே…”

“நிறுத்துங்க அகிலன். இப்போ என்ன சொல்ல வரீங்க உன் காதல் உனக்கு கிடைக்கல சொல்லி என்ன குத்துறீங்களா..? ஆமா என் காதல் எனக்கு கிடைக்கல தான், இந்த நேரம் இளா மட்டும் இருந்திருந்தா உங்களால இப்படி பேச முடியுமா சொல்லுங்க….” கோவமாக கத்த,
“ஹேய் நான் என்ன நினைச்சு சொன்னா நீ என்ன நினைக்கிற…” என்றவளோ அவள் கையை பற்ற முயல,

அவளோ இரண்டடி பின் நகர, “நான் மட்டும் அன்னைக்கு போன் பண்ணாம இருந்திருந்தா இன்னைக்கு இளா இருந்திருப்பான். அவன் இந்த உலகத்துக்கு இல்லாததுக்கு நான் தான் காரணம். நான் தப்பு பண்ணிட்டேன். என் காதலை நானே இழந்துட்டேன்…” அப்படியே புலம்பியவாறு சுவற்றோடு சேர்ந்து தரையில் அமர்ந்து அழுதாள்.

அவள் அருகில் வந்து மண்டியிட்டவன், “உன் காதலை நீ இழக்கல மதி. உன் கண்ணு முன்னாடி தான் இருக்கு. ஆனா அதை நீ இன்னும் உணராம இருக்கே..?உங்க அம்மா நிச்சியமா இளாவும் நீயும் சேர்ந்து வாழ ஒத்துக்க மாட்டாங்க..?அவன் இந்த நேரம் இருந்திருந்தாலும் நீ எனக்கு தான் சொந்தமா வந்திருப்பே..? இது நீ பிறக்கும் போது அந்த கடவுள் முடிவு பண்ணுனது. முதல அழுறதை நிறுத்து மதி….சரி எனக்கு ஒன்னு மட்டும் சொல்லு இந்த மூணு நாளா நான் உன் கூட இருக்கும் போது இளா நினைப்பு உனக்கு வந்ததா..?” என்க,

அகிலன் கூறியதை கேட்டதும் நிமிர்ந்து அவன் விழிகளை கண்டவன் அடுத்தநொடி அவன் நெஞ்சில் வந்து விழுந்து கதறி அழ ஆரம்பித்தாள்.

அத்தியாயம் : 27

நாட்கள் செல்ல மறுவீடு முடிந்து வளர்மதியின் தன் வீட்டிற்கு அழைத்து வந்தான் அகிலன்.

“மதி. நாளையில இருந்து ஆபீஸ் வரீயா..?” என்க, அவளோ அவன் முகத்தை பார்க்காமல் சரி என்றாள்.

அவளாக அன்று தன்னை அணைத்தற்கு பிறகு தன் முகம் காணாமல் இருப்பதை உணர்ந்தவன் தான் எதுவும் தவறாக பேசிவிட்டோமோ என நினைத்தான்.

அமைதியாக படுத்தவளை கண்டவன், “மதி நான் எதுவும் தப்பா பேசிருந்தா சாரி. நீ ஏன் என் முகத்தை பார்க்க மாட்டிக்கே..? நீ கோவமா இருந்தாலும், அழுதுட்டு இருந்தாலும் என்ன பார்த்து தானே பேசுவே..? இப்போ என்ன...” படுத்திருந்தவளை பார்த்தவாறு கேட்க,

“எனக்கு கொஞ்சம் டைம் வேணும் இந்த உறவை ஏத்துக்க. ப்ளீஸ் இதுக்கு மேல எதுவும் கேட்காதீங்க...”என்றவளோ தன் பெட்ஷீட்டை இழுத்து மூடினாள்.

இதற்கு மேல் அவளிடம் எதுவும் பேச முடியாது என்பது தோன்ற, “குட் நைட்...” என்றவன் லைட்டை ஆப் பண்ணி திரும்பி படுத்தான்.

அவளது மனம் முழுவதும் பல சிந்தனைகள் ஓட அதிலிருந்து எப்படி விடுவது என தெரியாமல் உறக்கம் வரமால் தவித்தாள்.

அதே நேரம் அவனும் அவள் கூறிய கடைசி வாரத்தையை நினைக்க, “தான் அவளிடம் கட்டாயப்படுத்தி எதுவும் செய்யவில்லை. அப்படி இருக்கையில் அவள் கூறிய வார்த்தை எதற்காக...” நினைத்தவாறு தன் உறக்கத்தை துளைத்தான்,

மறுநாள் விடியல் எப்போதும் போல் விடிய சீக்கிரம் எழுந்தவள் ஆபீஸ் செல்ல கிளம்பினாள்.

நேரம் செல்ல இருவரும் கிளம்பி கிழே வர, “வளர் நீயும் இன்னைக்கு ஆபீஸ் போறியா..?” சித்ரா கேட்க,

“ஆமா அத்தை…”

“ஒ சரிம்மா வா வந்து சாப்பிடு அப்பறம் லேட்டாகிரும்…”என்றவர் மூவரையும் அழைத்து உணவு பரிமாறினாள்.

“அத்தை நான் ஆபீஸ் போகிறது உங்களுக்கு சம்மதம் தானே..?” அவர் முகபாவனையை பார்த்து கேட்க,

“சந்தோஷம் தான்ம்மா என்ன மறுபடியும் நான் தனியா தான் இருக்கனும்…”

“அத்தை நான் வேண்ணா கீர்த்தி வர வரைக்கும் வீட்டுலையே உங்க கூட இருக்கவா..?”

“வேண்டாம்மா வேண்டாம், நீ ஆபீஸ் போ இங்கே விட அங்கே வேலை அதிகமா இருக்கு, நீ போனா கொஞ்சம் இவங்களுக்கு ஹெல்பா இருக்கும். என் மருமகள் என்ன மாதிரி சமையல் கட்ட கட்டிகிட்டு இருக்க எனக்கு சம்மதம் இல்ல…”என்க, அகிலன், ஜெயபிரகாஷ் இருவரும் சித்ராவின் முகத்தை தவிப்புடன் கண்டனர்.

“அம்மா யூ ஆர் ரியலி கிரேட்…” என்ற அகிலன் தன் தாயை பாசமாய் அணைத்துக் கொள்ள, மூவரும் கிளம்ப ஆரம்பித்தனர்.

அகிலன் கார் ஓட்ட ஜெயபிரகாஷ் முன்னிருக்கையில் அமர்ந்திருக்க பின் சீட்டில் அமர்ந்திருந்தாள் வளர்மதி.

மிரர் வழியாக தன் மனைவியை கண்டவன் காரை எடுக்க முதலில் டெக்ஸ்டைலில் தன் தந்தையை விட்டான்.

“அம்மாடி வளர் இது நம்ம கடை தான் உள்ளே வா அப்பறம் போகலாம் ஆபீஸ்க்கு..?”

“இல்ல மாமா இருக்கட்டும் நான் அப்பறம் வரேன்...” என்க, அவரும் சரி என்று உள்ளே செல்ல இருவரும் அப்படியே கிளம்பினர்.

காரில் அமைதி மட்டுமே நிலவ அதை கலக்க நினைத்தவன், “எழில் கிட்ட நீ வர்றதா சொல்லிட்டையா..?”என்க,

“இல்ல சொல்லலை...”

“சரி...”என்றவன் அவள் பேசும் மனநிலையில் இல்லை என்பதை உணர்ந்தவன் அதன் பின் அமைதியாகச் சென்றான்.

இருவரும் ஆபீசிற்குள் நுழைய அங்கிருந்த அனைவரின் பார்வையும் அவர்கள் மீதே இருந்தது.

“நான் போறேன்...” என்றவள் வேகமாய் செல்ல முயல, அவள் கை பற்றி தடுத்தவன், “எங்கே போற நம்ம ரூமிற்கு போகலாம்...?” என்றான் அகிலன்.

அவள் பதில் கூறும் முன்னே அங்கே அனைவரும் கூட ஒரே பாராட்டும்,கைதட்டலும் வந்து குமிய, பிரகாஷ்,எழில் இருவரும் வெட்டிங் கேக்குடன் வந்து நின்றனர்.

“ஏய் என்ன இதெல்லாம்...”

“சார் நீங்க ரெண்டு பேரும் ஜோடியா வந்திருக்கீங்க..? அதான் இந்த ஸ்மால் ப்ரெசென்ட். சார், வளர் மேடம் ரெண்டு பேரும் கட் பண்ணுங்க...” பிரகாஷ் கூற,

இந்த ஆபிஸ்சில் புதிதாக அவன் இருப்பதை கண்டவள் யாரென்று பார்க்க அவள் பார்வையை உணர்ந்த அகிலன், “ இவன் பேர் பிரகாஷ். இங்கே இருக்கிற எல்லாரையும் நீ அல்ரெடி பார்த்திருப்பே ஆனா இவனை மட்டும் பார்த்திருக்கே மாட்டே..? இவன் ஒரு வருஷத்துக்கு முன்னாடி எனக்கு பி.ஏ வா வொர்க் பண்ணுனான். இப்போ பேக்டரில மேனேஜரா வொர்க் பண்ணுறான்...”என்க, அகிலன் கூறியதை கேட்டவள் மெல்ல புன்னகைத்தாள்.

அவள் கை பற்றி கேக்கை வெட்ட, “மேடம் சாருக்கு ஊட்டுங்க..?” அங்கிருந்த சில பேர் கூற, அமைதியாக அதை எடுத்து அவனுக்கு ஊட்டினாள்.

அதன் பின் அவனும் ஊட்ட அனைவரும் வாழ்த்து கூறி பொக்கே கொடுத்து செல்ல தன் அறைக்குச் அழைத்துச் சென்றான்.

“நான் உங்க கூட வரேன்னு ஏன் சொன்னேங்க..? எதுக்கு இதெல்லாம்...”என்றவள் தன் கையில் வைத்திருந்த அனைத்தையும் அங்கிருந்த டேபிளில் வைத்தாள்.

“நான் சொல்லலை பிரகாஷ் கிட்ட அப்பா சொல்லிருப்பாரு போல...” என்றவன் அவளுக்கு உதவ அருகில் வர,

“நான் எப்பையும் போலவே வொர்க் பண்ணுறேன்..?

அதை கேட்டு கோவத்துடன் அவளை தன் புறம் திருப்பியவன், “நீ என்ன தான் நினைச்சிக்கிட்டு இருக்கே..? நான் உன்னோட ஹஸ்பன்ட் அது உனக்கு புரியலையா..? ஒரு வேலை நான் அந்த உரிமையை எடுத்துகிட்டா தான்

ஹஸ்பன்ட்ன்னு நினைப்பு வந்து நான் சொல்லுறதை கேட்பையா சொல்லு...” அவள் முகம் நிமிர்த்தி தன் முகம் காண வைத்து கோவத்துடன் கத்தினான்.

முதல் முறை அவன் தன் மேல் காட்டும் கோவத்தை கண்டவள், அவனிடமிருந்து நகர முயல, அதன் பின்னே அவள் மேல் காட்டிய கோவத்தை நினைத்த அகிலன் அவளை இழுத்து தன் நெஞ்சில் புதைத்தான்.

“சாரி மதி நீ என் பக்கத்துலே இருக்கனும் நினைச்சேன்..? அதான் உன்ன ஆபீஸ்க்கு கூட்டிட்டு வந்தேன். ஆனா நீ வெளியே போய் வொர்க் பண்ணனும் சொல்லுற..? உனக்கு தேவையான எல்லா ஏற்பாடு பண்ணிட்டேன் பாரேன்...” என்றவன் அவளை தன்னிடம் இருந்து விலக்கி அவளுக்காக தன் அறையையே மாற்றியதை காண வைத்தான்.

அதை கண்டவளோ, “அகில் நான் தப்பு பண்ணுறேன் தோணுது..?நான் உங்களுக்கு பொருத்தமான...” கூற வர, அதற்குள் எழில் டோரை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

“சாரி நான் எதுவும் டிஸ்டர்ப் பண்ணிட்டேன்னா..?”

“இல்லடா எழில். சொல்லு என்ன விசியம்..?” என்க,

அவன் எதையோ கூற அவர்கள் பேசுவதை கண்டவள் அமைதியாக விலகி சென்று தனக்காக அவன் தயாரிக்கப்பட்ட சேரில் அமர்ந்தாள்.

எழிலிடம் பேசிக் கொண்டு இருந்தாலும் அவன் பார்வை தன் மனைவியின் மீது இருக்க தன்னவளில் செயல் மனதை குளிரச் செய்தது.

லேப்டாப், லேன்லைன், பைல் என தனக்கு தேவையான அனைத்தும் தன் முன்னிருக்க நிமிர்ந்து அகிலனை காண அதே நேரம் அவனும் அவளை கண்டவாறு இருந்தான்.

இருவரின் பார்வையும் ஒரே நேர்கோட்டில் இருக்க எழிலின் வார்த்தைகளோ காற்றில் சென்று கொண்டிருந்தது.

நேரம் செல்லவே தன் பேசுவதை அவன் உணரவில்லை என்பதை அறிந்தவன், “டேய் அகில்...”அவனை உலுக்க,

“என்னடா நான் சொன்னது புரிஞ்சதா..? இல்லையா..?”

“டேய் மச்சான் நான் இப்போ தான் வந்திருக்கேன் கொஞ்சம் நேரம் என்ன விடேன்டா..?”

“என்னமோ பண்ணு கல்யாணத்துக்கு அப்பறம் மாறிட்டடா...” என்றவன் வெளியே செல்ல அவளை கண்டவாறு தன் இருக்கையில் அமர்ந்தாள்.

அவளோ என்ன செய்வது என தெரியாமல் மெயில் ஓபன் பண்ண அவள் என்ன வேலை செய்ய வேண்டும் என்பதை அவன் அனுப்பியிருந்தான்.

அதன் பின் அதை வாசித்தவள் அகிலன் செய்ய சொன்ன அனைத்தையும் முடித்து அவனுக்கு மெயில் அனுப்ப மணி இரண்டைக் கடந்தது.

பசி வயிற்றக் கிள்ளுவது உணர்ந்தவள் வந்தனாவின் நினைவு வர அகிலனின் அருகே சென்றாள்.

அவள் வந்ததை கூட உணராமல் வேலை செய்து கொண்டிருக்க, “அகில்..! அகில்..!” அவனை அழைத்தாள்.

தன் மனைவியின் குரலில் நிமிர்ந்து கைகளை முறித்திக் கொண்டு தலையை இருபுறமும் அசைத்தவாறு, “சொல்லு மதி...” என்றான்.

“இது லஞ்ச் டைம் நான் வந்தனா கூட போய் சாப்பிடவா. ப்ளீஸ் அவ கிட்ட நான் கொஞ்சம் பேசணும் நினைக்கேன்...” டேபிளை பார்த்தவாறு கூற,

“சரி போ அம்மா கொடுத்த லஞ்ச் அங்கே இருக்கு எடுத்துட்டு போ, ஏதாவது வேணும்னா கேன்டீன்ல வாங்கிக்கோ...” என்க சரி என்றவாறு தனக்காக உணவினை மட்டும் எடுத்துக் கொண்டு சென்றாள்.

முன்பு இங்கே வேலை செய்யும் போது அவள் ஒவ்வொரு முறையும் தன்னை எதிர் நின்று பார்ப்பது, பேசுவது, என அவளது செய்கையை நினைக்க, ஆனால் இப்போது எல்லாம் உரிமையும் வந்த பின் அவள் தயங்கி கொண்டு தன்னிடம் பேசுவதை கண்டவன் அதை மாற்ற வேண்டும் என முடிவெடுத்தான்.
அதன் பின் அவள் அனுப்பிய மெய்லை கண்டவன் அதை பிரித்து படித்து பார்க்க ஆரம்பித்தான்.

வெளியே வந்த வளர்மதி வந்தனா இருக்கும் இடத்தை நோக்கி செல்ல அதே நேரம் அவளும் தன் லஞ்ச்சை எடுத்துக் கொண்டு கேண்டீன் செல்ல ஆரம்பித்தாள்.

வளர் கையில் லஞ்சுடன் வருவதை கண்டவள், “என்ன வளர் நீ சாப்பிடலையா..?”என்க,

“இல்ல உன் கூட சாப்பிடறேன்னே ப்ளீஸ்டி. நான் உன் கிட்ட கொஞ்சம் பேசணும்..?

“சரி சார் கிட்ட சொல்லிட்டையா..?”

“ஹ்ம்ம் சொல்லிட்டேன் அவர் தான் போக சொன்னாரு…” என்க, அதன் பின் இருவரும் செல்ல ஆரம்பித்தனர்.

கேண்டீனின் வந்து அமர வளர் இப்போதும் வந்தனாவுடன் சாப்பிட வருவதை கண்ட அனைவரும் அவர்களுக்கு ஏதேதோ பேசிக் கொண்டனர்.

“சரி சொல்லு என்ன பேசணும்…?”

“என்னால முடியல. இதுக்கு மேல நான் எவ்வளோ தான் தாங்கனும். என்னால பொய்யான வாழ்க்கை வாழ முடியல வந்தனா..?நான் பெரிய தப்பு பண்ணிட்டு இருக்கேன்…?”

“என்ன சொல்லுற உங்களுக்கு எதுவும் சரியில்லையா..? நான் அன்னைக்கு அவ்வளோ அட்வைஸ் பண்ணியும் நீ அகிலன் சாரை எடுத்துகிட மாட்டிக்கே அப்படி தானே..? “

“என்னால எப்படி முடியும் வந்தனா. நான் இளாவை விரும்புனேன் அப்படி இருக்கும் போது எப்படி அகிலன் கூட வாழ முடியும். அது நான் செய்யிற மிகப்பெரிய துரோகம்…”
“ அகிலன் சார் உன் மேல வைச்சிருக்கிற காதல், அன்பு, பாசம், அக்கறை எல்லாம் பாரு. அப்போ தெரியும் நீ பண்ணிட்டு இருக்கிறது தான் தூரோகம் தெரியும். அவர் உனக்காக என்ன எல்லாம் செயஞ்சாருன்னு தெரியுமா..? என்ன இங்கே வேலைக்கு சேர்த்ததே உனக்காக தான். உன் மனசுல இளா இருந்தான்னு தெரிஞ்சும் அவர் உன் மேல வைச்சிருக்கிற நம்பிக்கையை இழக்கமா இருக்காரு அவர்க்கு நீ தூரோகம் பண்ணிறாதே. காலம் கடந்து போனாலும் சார் உனக்காக என்னைக்கும் காத்துகிட்டு தான் இருப்பாரு..?

நீ பொய்யான வாழ்க்கை வாழுறேன்னு சொன்னீல..? நீ வாழுற இந்த வாழ்க்கை தான் நிஜம், இனிமே அகிலன் சார் தான் உனக்கு எல்லாமே. இப்போ கூட நீ இளாவை

விரும்புனேன் தான் சொன்னே..? விரும்பிக்கிட்டு இருக்கேன் சொல்லையே..? எனக்கு நம்பிக்கை இருக்கு உன் மனசு முழுமையா அகிலன் சாரை ஏத்துக்கும். சீக்கிரம் சாப்பிடு லஞ்ச் டைம் முடிய போகுது..."என்க,

வந்தனா கூறிய அனைத்தையும் கேட்டவளுக்கு அகிலன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் இப்போது செவியில் ஒலித்தது.

அகிலனின் அருகில் இருக்கும் போதெல்லாம் இளா தன் மனதில் இல்ல என்பதை உறுதியாக தோன்ற, தன் மனம் அகிலனை ஏற்றுக் கொள்ள நினைக்கிறதா என்ற குழப்பத்தில் உண்ண ஆரம்பித்தாள்.

தன் திருமணம் முடிந்து ஒரு வாரம் மட்டுமே சென்றிருக்க அதற்குள் தன் மனதில் அகிலன் நுழைவதை உணர்ந்தாள்.

"வளர் வா போகலாம்..."என்க, சரி என்றவாறு இருவரும் கிளம்ப அவரவர் இடத்திற்கு கிளம்ப ஆரம்பித்தனர்.

அகிலனின் அறைக்குள் நுழைய அப்போதும் அவன் வேலை செய்து கொண்டிருப்பதை கண்டவள் தன் லஞ்ச் பாக்ஸ்சை வைக்க போக அதில் உணவு அப்படியே இருப்பதை கண்டாள்.

மணியோ மூன்றை கடந்திருக்க இன்னும் அவன் உண்ணாமல் இருப்பதை கண்டவள் அவன் அருகில் செல்ல போக அதே நேரம் சித்ரா அவளை அழைத்தார்.

தன் அத்தையின் அழைப்பை பார்த்தவள், "சொல்லுங்க அத்தை..?"என்க,

"ரெண்டு பேரும் சாப்டீங்களா..?நீ இருக்கேன்னு தான் அவனுக்கு நான் போன் பண்ணல..."

“சாப்டோம் அத்தை ரெண்டு பேரும். நீங்க கவலைப்படாதீங்க...” என்க சரி என்றவாறு சித்ரா நிம்மதியாக வைத்தார்.

அகிலனின் அருகில் வந்தவள் அவனை ஒரு வார்த்தை கூட சாப்பிட சொல்லாததை நினைத்து தன்னையே நொந்தவள் குற்ற உணர்வுடன் அவனை அழைத்தாள்.

அவனோ லேப்டாப்பில் பார்வையை பதித்தவாறு, “சொல்லு மதி சாப்பிடையா..?” என்க,

“ஹ்ம்ம் நீங்க இன்னும் சாப்பிடல..?”

“எனக்கு பசிக்கல நான் அப்பறம் சாப்பிடறேன்...” என்றவன் லேப்டாப்பில் குறியாய் இருக்க, அதை அப்படியே மூடி வைக்க வேண்டும் என்று தோன்ற அதை செய்ய முடியாது அமைதியாக தன் இருக்கையில் அமர்ந்தாள்.

தன் இருக்கையில் வந்து அமர்ந்தாலும் பார்வை முழுவதும் அகிலனின் மீதே இருக்க சிறிது நேரம் சித்ராவிடம் தாங்கள் சாப்பிட்டதாக கூறியதை நினைத்தாள்.

அகிலன் சாப்பிடாமல் இருப்பது என்னவோ செய்ய பொறுமையின்றி அவன் அருகில் சென்றாள்.

“சாப்பிட்டு வேலையை பார்க்கலாம்ல..?”

மதியின் குரலில் நிமிர்ந்து அவளை கண்டவன் குறும்புடன், “வேலை ரெம்ப இருக்கு பொண்டாட்டி எனக்கு பதிலா நீ வேணா செய்யிறையா..?” என்க,

அவள் நிச்சயமாக தன்னிடம் கோவமாக வாதாடுவாள் என நினைத்திருக்க, அவளோ சரி என்க ஆர்ச்சிரியத்துடன் அவள் முகம் கண்டான்.

“எழுந்திருங்க என்னால முடிஞ்ச வரை நான் பார்க்குறேன். நீங்க போய் சாப்பிடுங்க...” என்க, அமைதியாக எழுந்து சென்றான்.

அவன் செல்ல அவனது சேரில் எப்படி அமர்வது யோசித்தவாறு தயங்கி கொண்டு நிற்க, அதை கண்டவனோ, “இந்த சேர்ல உட்காருரா முழு உரிமை உனக்கும் இருக்கு...” என்றவன் அவளை அமர வைத்து தன் லஞ்ச்சை எடுத்துக் கொண்டு அவள் அருகிலே அமர்ந்தான்.

“என்னாச்சு..?”

“ஒன்னுமில்லை நான் சாப்பிடறேன். நான் சொல்லுற டிசைன் மட்டும் மேட்ச் பண்ணு...” என்றவன் சாப்பிட்டாவாறே அவளுக்கு சொல்லி கொடுத்தான்.

அதன் பின் வந்த நாட்களில் இருவரும் சேர்ந்தே ஆபீஸ் வர, அவள் அறியாமலே தான் இல்லாமல் இந்த நிர்வாகத்தை எப்படி நடத்த வேண்டும் என்பதை கொஞ்சம் கொஞ்சமாக சொல்லி கொடுத்தான்.

தன் மனதில் இருந்த குழப்பம், கவலை, குற்றவுணர்வு அனைத்தையும் ஒதுக்கி வைத்தவள் அவன் சொல்லி கொடுத்த ஒவ்வொன்றையும் மனதில் பதித்தாள்.

நாட்கள் செல்ல அவனுடன் இருந்த இந்த சில நாட்களிலே அவனின் பல முகங்களையும் ஒவ்வொருத்தரிடமும் அவன் பேசும் விதம், எத்தனை பிரச்சனை வந்தாலும் அதை எளிதாக கையாளும் அவனின் செயலில். கம்பெனி வளர்ச்சி என அனைத்தையும் அவன் அருகிலே இருந்து கவனித்தாள்.

தன் மனம் அகிலனை ஏற்க நினைக்கிறது என்பதை அறியாமல் வளர்மதி இருக்க, ஒவ்வொரு நொடியும் அவள் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறிந்தே இருந்தான்

அகிலன்.

அத்தியாயம் : 28

அகிலன் ஏதோ முக்கியமான காண்ட்ராக்கு தேவையானதை ரெடி பண்ணிக் கொண்டிருக்க, இருவரும் வீட்டிற்கு வந்தும் அதே வேலையையும் தொடர்ந்தனர்.

நடு இரவை நெருங்க முகத்தில் தூக்கம் தண்டவமாடா அதை அறிந்த அகிலன், “மதி நீ தூங்கு. ஹெல்ப்க்கு தேங்க்ஸ் இன்னும் கொஞ்சம் தான் நான் முடிச்சிருவேன்...” என்க, சரி என்றவாறு தன் புறம் சென்று படுத்துக் கொண்டாள்.

அதன் பின் அவனோ தன் வேலையில் கவனத்தை பதிக்க மணியோ இரண்டை கடந்தது.

மறுநாள் விடியல் ஆறு மணிக்கே எழுந்தவன் வளரை பார்க்க அவள் இப்போதும் தூங்கிக் கொண்டிருக்க கிளம்ப ஆரம்பித்தவன் ஒரு பேப்பரை எடுத்து சிறு குறுப்பினை எழுதி அவள் அருகில் வைத்தான்.

தன் லேப்டாப் பேக்கினை எடுத்துக் கொண்டு அவள் நெற்றியில் மெல்ல இதழ் பதிக்க தன்னவளின் முக சினுங்களை ரசித்தவன், “என்னால நீயும் கஷ்டப்படுற. சாரிம்மா...“ என்றவன் கிளம்பினான்.

நேரம் செல்ல மெல்ல விழி திறந்தவள் மணியை பார்க்க அதுவோ எட்டை காட்ட அகிலன் எழுதி வைத்த பேப்பர் அவள் கண்ணில் பட்டது.

“நான் இன்னைக்கு காண்ட்ராக் விசியமா சீக்கிரம் போறேன் அது முடிஞ்சி ஆபீஸ் வர டென் ஓ க்ளாக் மேலாகும். நீ அப்போ வந்தா போதும். தேங்க்ஸ் பார் யுவர் ஹெல்ப் கியூட்டி ..?”

அதை வாசித்தவளோ சிரித்தவாறு தன் மொபலை எடுத்து அவனுக்கு ஆல் தி பெஸ்ட் என்ற மேசேஜ் அனுப்பி விட்டு கிளம்ப ஆரம்பித்தாள்.

அவன் கூறியது போலவே மெல்ல கிளம்பி தன் அத்தையிடம் கூறிக் கொண்டு ஆபீஸ் சென்றாள்.

இப்போதெல்லம் அவள் நுழையும் போது அனைவரும் குட் மார்னிங் சொல்ல சிறு புன்னைகை தலையசைப்புடன் ஏற்றுக் கொண்டு அகிலனின் அறைக்குள் நுழைந்தான்.

தன் முன் நின்ற இருவரிடமும், எழிலிடம் உட்ச கோவத்தில் எதையோ கூறிக் கத்திக் கொண்டிருக்க அதே நேரம் உள்ளே நுழைந்தாள் வளர்மதி.

அகிலனின் கர்ஜிக்கும் குரலில் அதிர்ந்து நிற்க தன்னவளை கண்டவன் அப்படியே நிறுத்தி விட்டு இருக்கையில் சென்று அமர்ந்தான்.

அந்த இருவரும் வெளியே செல்ல அவர்கள் பின்னே எழிலும் செல்ல, “அண்ணா என்னாச்சு..? ஏன் அவர் இவ்வளோ கோவமா இருக்காரு...?” என்க,

“ஒரு கவர்மெண்ட் காண்ட்ராக் கான்செல் ஆகிட்டு அதான் இவ்வளோ கோவமா இருக்கான். அவனுக்கு இந்த கோவம் ஒன்னும் புதுசு இல்ல. கொஞ்சம் நேரத்துல சரியாகிடுவான். நான் கிளம்புறேன்...” என்றவன் வெளியே செல்ல.

அவனது மூன்று நாள் கடின உழைப்பு வீணாகி போனதில் அவன் மனதில் இருக்கும் கவலையும் அதனால் ஏற்பட்ட கோவத்தையும் அறிந்தவள் அமர்ந்திருந்த அகிலனின் அருகில் சென்றாள் வளர்மதி.

தன் முன்னிருந்த பேப்பர் வைட்டை உருட்டிக் கொண்டிருக்க, “அகில்...” என்றவாறு அவன் கையை பற்றினான்.

“விடு மதி...” என்றவன் கோவத்துடன் அவள் கையை தட்டி விட்டு எழ,

முதல் முறை தானாக சென்று அவனை தொட, ஆனால் அவனது இந்த செயலில் கலங்கியவள் தன் கணவனை காண அவன் மூக்கில் இருந்து வந்த ரத்தம் அவளை பதறச் செய்தது.

“ஐயோ..! அகில் ரத்தம்...” பதறியவள் தன் கைகுட்டையை எடுத்து அவன் முகம் பற்றி துடைக்க, அவள் பதட்டத்தையும், தொடுகையையும் உணர்ந்த பின்னே கோவம் முழுதும் குறைய மதி முகம் கண்டான்.

அவளது பார்வையில் இருந்த தவிப்பினை உணர்ந்தவன் அவள் நீண்ட நாட்களுக்கு பின் தன் முகத்தை கண்டதை நினைத்தவன் அவளை இழுத்து அணைத்தான்.

தன் நெஞ்சில் வந்து விழுந்தவளை தனக்குள் புதைக்க அவளும் அமைதியாக இருக்க தன் கோவத்தை அவள் அணைப்பில் கரைத்தான்.

நேரம் செல்ல அவளிடம் தன்னிடம் இருந்து விலக்கியவன், “நம்ம பண்ணுனா எல்லா டிசைன் வேஸ்ட்டாயிருச்சி மதி..?”என்க,

“இல்ல அகில், அந்த டிசைன் நமக்கு யூஸ்புல்லா தான் இருக்கும். நீங்க வொரி பண்ணிகாதீங்க..?”

அதை கேட்டவனோ தன் இருக்கையில் அமர்ந்து தலையில்

கை வைக்க, “ஆர் யூ ஓகே..?” என்றாள்.

“ஹ்ம்ம் சரியா தூங்காதது தலை வலிக்கு...”

அவன் கண்கள் சிவந்திருக்க மூக்கிலும் ரத்தம் வழிந்தோட, இப்போது தலைவலி என்று கூற தவிப்புடன், “வாங்க அகில் ஹாஸ்பிட்டல் போலாம்...”என்க,

“இல்ல வேண்டாம்....”

“அகில் ப்ளீஸ்...” தன் கணவனிடம் கெஞ்ச அமைதியாக அவளுடன் கிளம்பினான்.

தன் அண்ணன்னிடம் கூறி விட்டு ஹாஸ்பிட்டல் அழைத்துச் செல்ல அவனை பரிசோதித்த டாக்டர், “மிஸ்டர் அகிலன் உங்களுக்கு இந்த வயசுல இவ்வளோ பிரஷர் இருக்க கூடாது. தயவு செய்து அதை குறைக்க பாருங்க. மைன்ட்டா ரீலாக்ஸ்சா வச்சிக்கோங்க. எங்கையாவது வெளியே போய்ட்டு வாங்க கொஞ்சம் நாள். அப்பறம் நான் தர பிரஷர் மாத்திரை எல்லாம் சரியா எடுத்துக்கோங்க...” என்க,

அவர் கூறிய அனைத்தையும் அகிலனின் அருகில் அமர்ந்திருந்த மதி அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

அதன் பின் அவனை வற்புறுத்தி வீட்டுக்கே அழைத்து செல்ல தன் மகனும், மகளும் மதிய நேரம் வீட்டிற்கு வர புரியாமல் விழித்தார்.

“என்னடா என்னாச்சு..? அதுக்குள்ள வந்துடீங்க..?”

“அத்தை அவருக்கு கொஞ்சம் தலைவலி அதான் டாக்டர் கிட்ட காட்டிட்டு வீட்டுக்கு வந்துட்டோம்...”

“ஐயோ கண்ணா என்னடா திடீருன்னு...?” என்றவாறு தன் மகனின் அருகில் அமர்ந்து தலையை வருடிவிட தன் தாயின் மடியில் தலை சாய்ந்தான்.

“அம்மா எனக்கு ஒன்னும்மிலை நல்லா தான் இருக்கேன்..? மதி தான் வேண்டான்னு சொன்னாலும் என்ன வீட்டுக்கு கூட்டிட்டு வந்துட்டா..?”

“முதல நம்ம உடம்பை நல்லா கவனிச்சிகிடனும் அப்பறம் வேலை எல்லாம். வளர் ஏதாவது பிரச்சனையா ஆபீஸ்ல..?”

“அம்மா என்னமா...”

“நீ சும்மா இரு. நீ சொல்லும்மா...” என்க, ஆபீஸ் நடந்தது டாக்டர் கூறியது அனைத்தையும் மெல்ல கூறி முடித்தாள்.

“நான் எத்தனை தடவ சொல்லுறேன் கோவத்தை கட்டுபடுத்துன்னு. அதிக கோவம் உடம்புக்கு ஆகாதுடா...”

“சரிம்மா சரி நான் கேட்குறேன் இப்போ நான் என் ரூமிற்கு போறேன்...” என்றவன் மாடிக்கு செல்ல,

“கவலைப்படாதீங்க அத்தை...”

“அவனுக்கு கோவம் வந்தா என்ன பண்ணுவான் அவனுக்கே தெரியாது அப்படி வரும். இதுல இருந்து அவன் என்னைக்கு தான் விடுபட போறான்னோ...” சித்ரா புலம்பிக் கொண்டு செல்ல, தன் அண்ணன் அகிலனின் கோவத்தை அடிக்கடி கூறுவதை நினைத்தாள்.

இரவு ஜெயபிரகாஷ் வர தன் கணவனிடம் அனைத்தையும் கூறினாள் சித்ரா.

“என்னங்க கொடைக்கானல்ல நம்ம கெஸ்ட்ஹவுஸ் இருக்குல அங்கே ஒரு பத்து நாள் வளரையும்,அகிலனையும் அனுப்பி வைக்கலாம். அவன் கொஞ்சன் டென்ஷன் இல்லாம இருப்பான். கல்யாணம் முடிஞ்சதுல இருந்து ரெண்டு பேரும் எங்கையும் தனியா வேற போகல. நீங்க என்ன சொல்லுறேங்க..?”

“சரிம்மா நீ சொல்லுறது போலவே பண்ணிறலாம்...” என்றவர் அதற்கான ஏற்பாடை செய்ய மறுநாளே இருவரையும் அனுப்பி வைத்தனர்.

அகிலனோ அவளுடன் தனியாக இருக்க போவதை நினைத்து சந்தோஷப்பட, வளரோ இப்பயணம் தன்னை எந்த மணநிலைமைக்கு கொண்டு செல்ல போகிறதோ என்ற நினைப்பில் இருந்தாள்.

அகிலனுக்காக சரி என்று ஒத்துக் கொள்ள கொடைக்கானலுக்கு இருவரும் கிளம்பினர்.

இருவரும் அந்த நீண்ட பயணத்தை காரிலே தொடர மலையை ஒட்டியவாறு இருந்த பாதையில் வேடிக்கை பார்த்தவாறு அனைத்தையும் மறந்து அந்த இயற்கையை ரசித்தவாறு சென்றாள்.

வளரின் முகத்தில் இருக்கும் மகிழ்ச்சி அவனை உற்சாகமூட்ட சந்தோஷமாக தன் கெஸ்ட்ஹவுஸ் வந்து சேர்ந்தனர்.

காரினை விட்டு இறங்கியதும் குளிர் தாக்க தான் அணிந்திருந்த ஜெர்க்கின்குள் கையை நுழைத்தாள்.

“வா மதி இதான் நம்ம கெஸ்ட்ஹவுஸ் நாங்க அடிக்கடி வருவோம். கீர்த்திக்கு ஆக்சிடென்ட் ஆனதுனால இருந்து எங்களால வர முடியல...” என்றவன் அவளை அழைத்துக்

கொண்டு உள்ளே நுழைந்தான்.

“நம்ம நாளையில இருந்து எல்லா இடத்தையும் போய் சுத்தி பார்க்கலாம். எனக்கு கொஞ்சம் அசதியா இருக்கு வா ரூமிற்கு போகலாம்...” என்க, சரி என்றவாறு அவன் பின்னே சென்றாள்.

அதன் பின் இருவருமே பயணத்தின் களைப்பு தீர ஓய்வெடுக்க மறுநாளில் இருந்து தனக்கு தெரிந்த இடங்கள் எல்லாம் சுற்றி காட்ட ஆரம்பித்தான்.

“நீ முதல் முதலா இப்போ தான் வரீயா..?”

“ஹ்ம்ம் ஆமா...”

“உனக்கு இந்த கிளைமேட் ஓகே தானே..? ஹோட்டல் பூட் சாப்பிடுவையா...? ட்ராவல் எல்லாம் செட்டாகும் தானே. எதுவும் பிரச்சனை இல்லியே...” கிளம்பும் முன்பே அனைத்தையும் அவளிடம் கேட்க,

அவன் அக்கறையை கண்டு மகிழ்ந்தவள் மெல்ல தலை அசைத்தாள்.

அதன் பின் அவள் சம்மதத்துடன் வெளியே அழைத்துச் செல்ல, அவன் தன்னை வெளியே பாதுகாக்கும் விதம். தன்னிடம் கேட்டு செய்யும் செயல், ஒரே சில நேரங்களில் அவன் தொடுகை என அனைத்தையும் அவள் மனம் அறியாமலே ரசித்தாள்.

நாட்கள் செல்ல ஒவ்வொரு நாள் ஒவ்வொன்றாக லேக்,பால்ஸ்,பார்க்,டால்பின் நோஸ்,கோக்கர்ஸ் வாக்,வெள்ளி நீர் வீழ்ச்சி பூங்கா,குறிஞ்சி கோவில் என அனைத்தையும் சுற்றி காட்ட இடையில் அடிக்கடி ஆபீஸ்சில் இருந்து அழைப்பு வர அதையும் சமாளித்தான்.

தினமும் இரவு தான் கண்ட அனைத்தையும், வந்தனா, கீர்த்தி, எழில் தன் அத்தை என அனைவரிடமும் சந்தோஷமாக கூறினாள்.

அவள் புன்னைகை தவழும் முகத்தை காணும் போதெல்லாம் தனக்கு ஏதோ சாதித்த உணர்வு தோன்ற, அவளுக்காக இங்கையே, தன் பெற்றோர், சொந்தம், ஆபீஸ் அனைத்தையும் இழந்து அவள் அருகில் எத்தனை நாட்கலானமும் இருக்கலாம் என்றே எண்ணினான்.

இப்போது வளர்மதி ஏதோ உண்ணும் அளவிற்கு சமைக்க கத்துக் கொண்டிருக்க அன்று ஏனோ வெளியில் செல்லாமல் வீட்டிலே இருக்க, தன்னால் முடிந்ததை செய்ய அவளுக்கு உதவினான் அகிலன்.

“இங்கே பிரெஷ் கேரட் ரெம்ப கிடைக்கும் நான் போய் பக்கத்துல வாங்கிட்டு வந்துறேன்...” என்றவன் வெளியே சென்றாள்.

அவளோ மற்ற காயை வெட்டிக் கொண்டிருக்க திடீரெண்டு அகிலனின் மொபைல் ஓசை எழுப்ப, “ஓ மொபைல் வச்சிட்டு போய்ட்டாறா..?” புலம்பியவாறு அதை எடுத்தாள்.

“சார் நான் விக்னேஷ் பேசுறேன், நியூ மாடல் உங்களுக்கு மெயில்...” கூறிக் கொண்டிருக்க,

“நான் வளர் பேசுறேன். அவர் கொஞ்சம் பிஸியா இருக்காங்க நீங்க எதுவா இருந்தாலும் மாமா கிட்ட கேடுக்கோங்க...” என்றவள் மொபலை வைக்க, அடுத்தநொடி எதையோ யோசித்து தன் அண்ணனுக்கு அழைத்தாள்.

தன் அண்ணன் எடுத்ததை உணர்ந்தவள், “அண்ணா அவர் ரிலாக்ஸ்சா இருக்கனும் தான் இங்கே வந்திருக்கோம்,

அப்பவும் போன் பண்ணி ஏதாவது கேட்டு டென்ஷன் ஆக்குறாங்க. ப்ளீஸ் இனிமே யாரும் போன் பண்ண கூடாது அதுக்கு நீங்க தான் பொறுப்பு...” என்றவள் அவன் பதில் கூறும் முன்னே மொபைலை வைத்தாள்.

மொபைலை வைத்தவள் திரும்ப கைகளை குறுக்காக கட்டிக் கொண்டு அவளை பார்த்தவாறு நின்றான் அகிலன்.

அகிலனை கண்டவள் ஒரு நொடி திடுக்கிட, “கேரட் வாங்கிட்டீங்களா நான் போய் ரெடி பண்ணுறேன்...” என்றவள் அவன் வைத்திருந்தை எடுத்துக் கொண்டு செல்ல,

அவள் கை பற்றியவன், “ஒரு நிமிஷம்...” என்றவாறு தன் அருகில் இழுத்தான்.

அவளோ ஒரு புறமாக திரும்பியிருக்க, “என்ன புதுசா என் மேல அக்கறைப்படுற..? ஒரு வேலை என்ன விரும்ப ஆரம்பிடிச்சிட்டையோ..?” தன்னவளை நோக்கி கேட்க, அவளோ அதற்கு பதில் கூறாமல் அமைதியாக இருந்தாள்.

அவள் இரு கைளைகையும் பற்றி தன் புறம் திருப்பியவன் தன் முகம் காண வைக்க. அவளோ அவனை பாராமல் தலை குனிந்தாள்.

மதி தன்னை பார்க்காமல் தலை குனிய, அவள் அக்கறை அங்கிருந்த சூழல் இருவருக்கும் இருக்கும் தனிமை அனைத்தும் சேர்ந்து தன் வசம் இழந்தான்.

தன்னவளில் மதி முகத்தை காண விரும்பியவன், “மதி...” உருகிய குரலில் அழைக்க, உள்ளுக்குள் புதிதாய் ஓர் மாற்றத்தை உணர்ந்தாள்.

மெல்ல நிமிர்ந்து அகிலனின் முகம் காண அவனோ ஆசையாய் தன்னவளில் அருகில் நெருங்கினான்.

இப்போது தன் மனம் முழுதாய் அகிலனை ஏற்க நினைக்கிறது என்பதை உணர ஆரம்பிக்க, தன்னை நெருங்கி வந்து கொண்டிருந்த அகிலனின் சுவாசத்தை உணர்ந்தாள்.

ஆசையாய் அவள் முகத்தை தன் கையில் ஏந்த காண முடியாது தன் கண்களை வெட்கத்துடன் மூடினாள் வளர்மதி.

தன்னவள் சிவந்த முகத்தை ரசித்தவன் அவள் இதழ் நோக்கி குனிய அதே நேரம் வந்தனாவிடம் இருந்து வளர்மதிக்கு அழைப்பு வந்தது.

அழைப்பினை உணர்ந்து வேகமாய் இருவரும் ஒரே நொடியில் விலக தன் மொபலை எடுத்து ஆன் பண்ணினாள்.

“சொல்லு வந்தனா...?” என்க அவனோ அங்கிருந்த சோபாவில் சென்று அமர்ந்தான்.

“ஐயோ..! இன்னைக்கு நவம்பர் பத்தா..?சாரிடி மறந்திட்டேன் ஹாப்பி பர்த்டே வந்தனா...” தன் தோழிக்கு வாழ்த்து கூற,

அதே நேரம் அவள் கூறிய நவம்பர் பத்து என்ற தேதியை கேட்டு அதிர்ச்சியாகி எழுந்து நின்றான்.

தன் தோழியிடம் பேசி முடித்து மொபலை வைத்தவள் திரும்பி அகிலனை காண அவனது அதிர்ச்சி அவளுக்கு குழப்பத்தை தந்தது.

அவன் அருகில் வர, “மதி இன்னைக்கு நவம்பர் பத்தா,

அப்போ நாளைக்கு பதினொன்னு. இல்ல நம்ம இப்போ வீட்டுக்கு போகணும் மதி நீ சீக்கிரம் கிளம்பு…” என்க, அவளோ எதற்கென்று புரியாமல் நின்றாள்.

“அகில் என்னாச்சு இது ஈவினிங் இப்போ எப்படி..?நாளைக்கு என்ன..?”

“எனக்கு தெரியாது நாம்ம வீட்டுக்கு போகணும். ஏன் என் கிட்ட வீட்டுல யாருமே சொல்லலை…” புலம்ப,

அவனது இந்த வேகத்தை கண்டவள் அவனிடம் பேச முயல அதை தடுத்தவன் நைட் ட்ராவல் என்றும் பாராமல் கிளம்பினான்.

அத்தியாயம் : 29

நடுஇரவில் வந்து நின்ற தன் மகனையும், மருமகளையும் கண்ட பெற்றவர்கள் புரியாமல் நின்றனர்.

“டேய் என்னடா என்னாச்சு..? போய் ஒரு வாரம் தான் முடிச்சிருக்கு அதுக்குள்ள வந்துடீங்க..? எதுவும் பிரச்சனையா..?” சித்ரா சற்று பதட்டத்துடனே கேட்க,

“அம்மா நாளைக்கு நவம்பர் பதினொன்னு. ஏன் எனக்கு நியாபகம்படுத்தல..? இந்த நேரம் ஏன்மா எங்களை அனுப்பி வச்சீங்க..?”

“அகில் அதுக்காக இந்த நடுராத்திரையிலையா வருவே..? வரும் போது ஏதாவது ஆகிருந்தா என்னாயிருக்கும் அறிவிருக்கா இல்லையாடா உனக்கு…?” ஜெயபிரகாஷ் கோவத்துடன் கத்த, மதியோ புரியாமல் நின்றாள்.

“டேய் கண்ணா உன்ன எதுக்கு டிஸ்டர்ப் பண்ணனும் தான் நாங்க சொல்லல. நீ இப்போ தான் வளர் கூட தனியா

வெளியே போயிருக்கே. அதான்டா நியாபகம்படுத்தல..?” தன் மகனின் கண்ணத்தில் கை வைத்துக் கொண்டு அன்புடன் சித்ரா கூற,

“சரிடா அகில் நீ முதல வளரை கூட்டிட்டு போ. நாங்க எல்லாம் ஏற்பாடும் பண்ணிட்டோம். பாவம் பாரு எவ்வளோ சோர்ந்து போயிருக்கா..?” தன் மருமகளை பார்த்து கூறிய ஜெயபிரகாஷ் இருவரும் மாடிக்கு அனுப்பி வைத்தார்.

அவர்கள் இருவரும் மேலேற பெற்றவர்கள் இருவரும் தங்கள் அறைக்குள் நுழைந்தனர்.

அவர்கள் பேசுவதை குழப்பத்துடன் கேட்டவள் படியேறிக் கொண்டிருந்த அகிலனை கேட்க ஆரம்பித்தாள்.

“அகில் நாளைக்கு என்ன நாள்..? நீங்க ஏன் இவ்வளோ டென்ஷன்னாகுறீங்க..?”அவன் பின்னே நடந்தவாறு கேட்க, அவனோ அமைதியாக பால்கனி நோக்கி சென்றான்.

அவளும் புரியாமல் அவன் பின்னே செல்ல பூட்டிக் கிடைந்த அந்த அறையை திறந்து உள்ளே சென்றான்.

படுக்கையில் சில பொம்மைகள் விளையாட்டு பொருட்கள் அந்த அறை முழுவதும் கிடைக்க நான்கடி உயரத்தில் அகிலனின் சிறு வயது போட்டோ மாலையுடன் இருந்தது.

தன் கணவன் உயிருடன் தன் முன் நிற்க அவனது போட்டோவிற்கு மாலை  அணிந்திருபதை கண்டு வளர் அதிர்ச்சியுடன் அகிலனை பார்க்க அவன் விழிகளில் கண்ணீர் வழிந்தோடியது.

அகிலனின் கண்ணீரை முதல் முறை கண்டவள், “அகில்..” என்றவாறு அவன் அருகில் நெருங்க, “ருத்ரா...” கத்தியவாறு தரையில் அமர்ந்தான்.

அவன் கதறலை கண்டவள் அந்த அறையை காண, இரட்டையராய் இருந்த அகிலன் மற்றும் இன்னொருவரின் சிறு வயது போட்டோ அங்கே பல தொங்க விடப்பட்டது.

அதன் பின்னே அனைத்தும் புரிய, "அகில்...?" என்றவள் அவன் அருகில் அமர்ந்து அவன் கையை ஆறுதலாய் பற்ற, அவளது மடியில் தலை சாய்ந்தான்.

"ஏன் ருத்ரா என்ன விட்டு போனே..?"ருத்ரா..!" புலம்பியவாறு கதற,

இளா இறந்த அன்று ஆருதலின்று தான் தவிப்பது போலவே இப்போது அகிலன் தவிக்க, அவன் மனதில் இருக்கும் வலியை உணர்ந்தவள் அவன் தலை கோதினாள்.

"அகில்..." அவனை அழைக்க,

"ருத்ரனும், நானும் டுவிங்க்ஸ் இது தான் எங்களோட ரூம். நான் செகண்ட் ஸ்டாண்டர்ட் படிக்கும் போது மாடிப் படியில இருந்து கிழே விழுந்து இறந்துட்டான். என் கூடவே இருப்பான், என்னோட பெஸ்ட் எனக்கு சின்ன வயசுல எல்லாமா இருந்தது அவன் தான். நாளைக்கு அவனோட நினைவு நாள்..." ருத்ராவின் நினைவில் அவனை பற்றி கூற,

அவன் தலையை வருடியவாறு அகிலன் கூறிய அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தாள் வளர்மதி.

ருத்ரனின் நினைவில் புலம்பியவாறு வளர்மதியின் ஆறுதலால் பயணம் செய்த அலுப்புடன் நித்திரைக்குச் சென்றான்.

அகிலன் உறக்கத்திற்கு சென்றதை உணர்ந்தவள் அவன் தலையை தரையில் வைத்து மெல்ல எழுந்து படுக்கையில் இருந்த தலையணையை எடுத்து அவனுக்கு வைத்தவள்.

அங்கிருந்த ஏ.சியை ஆண் பண்ணிவிட்டு பெட்ஷீட்டை எடுத்து போர்த்தினாள்.

மணியை பார்க்க அதுவே நள்ளிரவு இரண்டைக் காட்ட அங்கிருந்த பொருட்கள் ஒவ்வொன்றையும் பார்க்க ஆரம்பித்தாள்.

ஸ்கூல் யூனிபோர்ம், அவர்கள் வரைந்த ட்ராயிங் விளையாட்டு பொருட்கள் சிறு வயதில் வாங்கிய பரிசுப்பொட்ருகள் என அனைத்தையும் பார்த்தாள்.

கதிரவன் தான் இருக்கும் இருப்பிடத்தை காட்ட கிளம்பி கொண்டு வளர்,அகிலன் இருவரும் கிழே வர அவர்களுக்காக கீர்த்தி,வேந்தன்,பாட்டி பெற்றவர்கள் என அனைவரும் காத்திருந்தான்.

“மாமா திதி கொடுக்க எல்லாம் ஏற்பாடும் பண்ணியாச்சு..?” வேந்தன் கூற, சரி என்றவாறு அனைவரும் கிளம்பினர்.

பல மணி நேரம் பயணத்திற்கு பிறகு ஓர் சிவன் கோவிலுக்கு செல்ல அங்கிருந்த குளக்கரையில் ஐயருடன் காத்திருந்தான் எழிலரசன்.

அதன் பின் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்ய அகிலனும், ஜெயபிரகாசும் ருத்ராவின் போட்டாவை பார்த்தவாறே ஐயர் கூறிய மந்திரத்தை அப்படியே கூறினர்.

பிண்டத்தை அங்கிருந்த குளக்கரையில் கரைத்து நீரில் முழ்கி வர காலையிலிருந்து அகிலன் யாரிடமும் பேசாமல் அமைதியாக இருப்பது வளர்மதியை என்னவோ செய்தது.

அனைவரும் சேர்ந்து அங்கிருந்த சிவனை வழிபட்டு சிறிது நேரம் அமர அகிலனின் அருகில் அமர்ந்தாள்.

தன் கையில் வைத்திருந்த அவன் சட்டையை தந்தவள், “அகில் ஆர் யூ ஓகே..?” என்க, அவனோ பதில் கூறாது அதை வாங்கிக் கொண்டு எழுந்து சென்றான்.

“வளர் இன்னைக்கு ஒரு நாள் அவன் யார்கிட்டையும் பேசவும் மாட்டான். சாப்பிடவும் மாட்டான். அவன் நினைப்பு முழுக்க ருத்ரன் மேல தான் இருக்கும்...” சித்ரா கூற அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

அதன் பின் அனைவரும் வீட்டுக்கு செல்ல அகிலனோ தன் அறைக்குள் நுழைய ஈவினிங் நேரம் கீர்த்தியை மட்டும் அழைத்துக் கொண்டு கிளம்பினான் வேந்தன்.

காலை உணவு, மதிய உணவு மறுத்த அகிலனின் செயலை நினைத்தவள் மனம் தாங்க முடியாது அவனுக்காக பாலை சூடு பண்ணி எடுத்துக் கொண்டு மேலறினாள்.

அதை கண்ட சித்ரா தடுக்க போக அவரை வேண்டாம் என்றார் இராஜலட்சுமி பாட்டி.

நிச்சியமாக அவன் பால்கனியில் தான் இருப்பான் என்பதை உணர்ந்தவள் அங்கே செல்ல அவள் நினைத்தது போலவே இருந்தான் அகிலன்.

“அகில் ப்ளீஸ் நீங்க பேசலைனாலும் பரவாயில்லை இந்த பாலை மட்டும் குடிச்சிருங்க..?” என்றவள் அங்கிருந்த டேபிளில் வைத்து செல்ல, அவள் கையை பற்றி தடுத்து நிறுத்தினான்.

தன் கையை பற்றியதும் திரும்பியவள், “என்ன அகில்...”என்க,

அவளை இழுத்து தன் நெஞ்சில் சாய்த்தவன் அவள்

தலையை வருடிக் கொண்டு, “பத்து மாசத்துக்கு முன்னாடி இளா இறந்த போது நீயும் இதை விட அதிகமான வலியை அனுபவிச்சிருப்பீல..?” என்றான்.

இளா இறந்த நொடி தான் பட்ட வேதனை கண் முன் தோன்ற, “ஹ்ம்ம்...” என்றவள் விழிகளில் கண்ணீரோடு அவன் நெஞ்சில் ஒட்டினாள்.

“மனசுல ஏதாவது கஷ்டம் இருந்தா என் கிட்ட வெளிப்படையா சொல்லிரு மதி..? மனசுல வச்சிருக்காதே அது எவ்வளோ பெரிய வலின்னு தெரியும்...”

“அன்னைக்கு இளாவோட முகத்தை கடைசியா பார்க்கணும் நினைச்சேன் ஆனா...”அதற்குள் மேல் கூற முடியாமல் கதற அவன் அணைப்பு மட்டுமே அவளை சரி செய்தது.

நாட்கள் விரைந்தோட அகிலனோ தன் தொழிலில் கவனமாயிருக்க அவனுக்கு எப்போதும் போல் உதவிக் கொண்டிருந்தாள் வளர்மதி.

தன் மனதில் அகிலன் இருப்பதை உணர்ந்தாலும் அவனிடம் கூற முடியாமல் மனதில் ஏதோ ஒன்று தடுக்க தவித்தாள்.

சுதிகீர்த்திக்கு இப்போது ஒன்பதாவது மாதம் நடக்க அவள் வளைகாப்பிறகு நாள் குறித்து அதற்கான ஏற்பாடுகள் நடைபெற ஆரம்பித்தது.

வளைகாப்பு நாளும் வர வேந்தனின் வீட்டிற்குச் செல்ல அனைவரும் கிளம்ப ஆரம்பித்தனர்.

திருமணம் முடிந்து நான்கு மாதங்களுக்கு பின் இப்போது தான் புடவை கட்ட கண்ணாடியின் முன் வந்து நின்றாள் வளர்மதி.

தன் அத்தை தந்துவிட்ட சென்ற மல்லிகை பூவினை பின்னலிட்ட கூந்தலில் சூட அதே நேரம் பட்டு வேஷ்டி சட்டையில் உள்ளறையில் இருந்து வெளியே வந்தான் அகிலன்.

“மதி போகலாமா..?” என்க,

“ஹ்ம்ம்...”என்றவாறு திரும்ப இருவரும் ஒருவரை ஒருவர் தாங்கள் அணிந்த உடையை பார்த்துக் கொண்டிருந்தனர்.

திருமணத்தன்று அவன் பட்டுவேஷ்டி சட்டை அணிந்திருந்தாலும் தான் அன்று காணாது நினைத்தவள் இப்போது காண முயல அவன் பார்வை தன் மேல் இருப்பதை உணர்ந்து தலை குனிந்தாள்.

அவள் அருகில் வந்தவன், “நீ அடிக்கடி இப்படி புடவை கட்டுறையா ப்ளீஸ்...?” தன்னவளிடம் கெஞ்ச,

மெல்ல நிமிர்ந்து அவன் விழிகளை கண்டவள், “ஏன்..?” என்றாள்.

“நான் இதுக்கு முன்னாடி இவ்வளோ அழகா புடவை கட்டி யாரையும் பார்த்தது இல்ல அதான்...”

அவன் கூறியதை கேட்டு புரியாமல் விழிக்க, “இவ்வளோ அழகா நீட்டா எப்படி உன்னால மடிப்பு வைக்க முடியுது. நீ நடக்கும் போது கிழே உள்ள அந்த மடிப்பு உன் கால் கொலுசு ஓசைக்கு ஏத்தவாறு ஆசையும். நான் முதல் முறையா வேந்தனோட கல்யாணத்துல தான் புடவையில பார்த்தேன் அப்பவே பிடிச்சிருந்தது உன்னை. ஆனா நான் நினைச்சி கூட பார்ககல நீ என் மனைவியா வருவேன்னு.

கீர்த்தியும், பாட்டியும் நீ தான் பொண்ணுன்னு சொல்லும் போது நான் எப்படி இருந்தேன் தெரியுமா..? மறுநாள் உன்ன

பார்க்காம ஒரு நொடி கூட இருக்க முடியல. கீயூட்டா இருக்கே மதி. அழகான புருவத்தை இன்னும் அழகாக்குது உன்னோட அந்த சின்ன கோபுர பொட்டு. ஆனா ஒன்னு குறையுது...” என்றவனோ அருகிலிருந்த குங்குமத்தை பார்க்க அவள் பார்வையும் அவனை தொடர்ந்து.

அதை எடுத்தவன் அவள் கையில் தர புரியாமல் விழித்தாள் வளர்மதி.

“அம்மா வச்சிக்கிற மாதிரி இதை நீயும் நெத்தியில வச்சிக்கோ அப்போ தான் அழகா இருப்பே..? ஆமா நீ ஏன் அப்படி வச்சது இல்ல..?”

அவளோ அமைதியாக வாங்கிக் கொண்டு கண்ணாடியின் முன் நின்றவள் அதை தன் நெற்றி வகிட்டில் முதல் முறையாக வைக்க, புண்னகை தவழும் முகத்துடன் தன்னவனில் பின் நின்று கண்டான் அகிலன்.

“இப்போ தான் சூப்பரா இருக்கே..?” என்க, கண்ணாடி பிம்பத்தில் தன் முகம் காண நெற்றில் வைத்த குங்குமம் தன்னை மேலும் அழகாக்கியது போல் உணர்ந்தாள்.

அதே நேரம் அகிலனின் மொபைல் ஓசை எழுப்ப தன் தந்தையிடமிருந்து வருவதை கண்டவன், “சரி வா போகலாம் டைம்மாச்சு..?” என்றவன் அவளை அழைத்துக் கொண்டு செல்ல அவள் மனம் முழுதும் இப்போது தன்னிடம் அகில் கூறியதை நினைத்தது.

இருவரும் தம்பதியராய் கீழிறங்கி வர அங்கிருந்த மூவருமே அவர்கள் பொருத்தத்தை கண்டு ஆர்சிரியப்பட்டனர்.

அதன் பின் அனைவரும் வேந்தனின் வீட்டிக்கு கிளம்ப காரை ஓட்டும் போது மிரர் வழியாக அடிக்கடி தன்

மனைவியை கண்டான்.

வேந்தனின் வீட்டில் அனைவரும் இறங்க தன்னவள் மனம் இப்போது என்னிலையில் இருக்குமோ என்று நினைத்து கலங்க, அவளோ வாசலில் நின்ற வேந்தன்,எழிலை கண்டு புன்னகை பூத்தாள்.

அவர்கள் வந்ததை அறிந்த ரத்னா, திருமுருகன் இருவரும் வெளியே வந்து வரவேற்க, அனைவரும் அதை ஏற்று உள்ளே செல்ல சற்று தயங்கினாள் வளர்மதி.

அதை கண்ட அகிலன் அவள் கையை பற்ற, “வாம்மா வளர்மதி இப்போ தான் எங்க வீட்டுக்கு முதல் முறை வரே..? இதை உன் பிறந்த வீடா நினைச்சிக்கோ வா...?” ரத்னா அழைக்க அவளோ அகிலனை கண்டாள்.

தன்னவளை தோளோடு அணைத்து சந்தோஷமாக வீட்டுக்குள் அழைத்து செல்ல, அதை கண்ட வேந்தன் மனநிறைவுடன் வந்தவர்களை வரவேற்றான்.

அதன் பின் கீர்த்தியை அலங்கரித்து அவள் அறையிலிருந்து அழைத்து வந்து அவளுக்காக சடங்கினை செய்ய ஆரம்பித்தனர்.

சீமந்த பாட்டு இராஜலட்சுமி பாட்டி பாட முதலில் ரத்னா தங்கவளையலிட்டு சந்தனம் பூசி தொங்க மற்ற அனைவரும் அவளுக்கு சந்தனம் பூசி வளையலிட்டனர்.

தாய்மையில் பூரிப்பில் களைப்பு இருந்தாலும் அதையும் மீறி தன் மனைவி அழகாய் தெரிய அவளையே கண்டவாறு இருந்தான் வேந்தன்.

“டேய் உன் தங்கச்சி நீ என்ன செயஞ்ச போறே..? பாட்டி தன் பேரன் அகிலனை கண்டு கேட்க,

“இந்த வாழ்க்கையை எனக்கு கொடுத்ததே அண்ணன் தான் இதுக்கு மேல என்ன பாட்டி வேணும்...” கீர்த்தி வேந்தனை பார்த்தவாறு பாட்டியிடம் சந்தோஷமாக கூறினாள்.

“நான் தாய்மாமா ஆக போறேன் அப்படி இருக்கும் போது என் தங்கச்சிக்கு செய்யாமையா இருப்பேன்...” என்ற அகிலன் மதியை காண, கீர்த்தியின் முன் வைத்திருந்த தம்பாளத்திலிருந்து ஒரு பாக்ஸ்சை எடுத்தாள்.

அதை திறந்தவள் அதிலிருந்த வைரவளையலை எடுத்து அகிலனை காண, “போ போட்டு விடு மதி...”என்றான்.

அவளோ தன் அத்தையை காண அவரும் அதையே கூற கீர்த்திக்கு அதை போட்டு விட்டாள்.

அதன் பின் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து முடிக்க சீமந்த சாப்பாட்டையும் முடித்து கீர்த்தியையும் அழைத்துக் கொண்டு கிளம்ப ஆரம்பித்தனர்.

அவளோ பிரிவினை நினைத்து தவிப்புடன் வேந்தனை பார்க்க அவனோ சந்தோஷமாக அவளுடனே வந்தான்.

அதன் பின் நாட்கள் செல்ல கீர்த்திக்கு குழந்தை பிறக்க இன்னும் இருபது நாளே இருக்க அவளோ சோர்வாகவே இருந்தாள்.

கீர்த்தி வீட்டில் இருப்பதால் அவளது பேச்சு துணைக்கும் பாதுகாப்புக்கும் பாட்டி,சித்ரா, மதி அருகிலே இருக்க, அகிலனும் மதி ஆபீஸ் வராததை கண்டு கொள்ளவில்லை.

தன்னிடம் அவள் மனதில் இருப்பதை கூற முடியாமல் தவிப்பதை உணர்ந்தவன் அவளாகவே கூற வரும் காத்திருந்தான் அகிலன்.

ஈவினிங் நேரம் பாட்டியும், சித்ராவும் கோவிலுக்கு சென்றிருக்க ஏனோ அன்று கால் அதிகமாக வலிப்பதை உணர்ந்த கீர்த்தி வளரிடம் கூறினாள்.

அவளோ சிறிது நேரம் பாதம் பற்றி அழுத்தி விட, “சாரி வளர் என்னால உனக்கு கஷ்டம்...” என்க,

“எனக்கு என்ன கஷ்டம். நீங்க தான் பாவம்...” என்றவள் அமுக்கி விட,

“வளர் இது அண்ணன் வர்ற நேரம் தான் நீ போன் பண்ணி கால் வலி டேபிலேட் வாங்கிட்டு வர சொல்லுறியா..? ப்ளீஸ்...”

“சரி சொல்லுறேன்...” என்றவள் அகிலனுக்கு அழைக்க அதே நேரம் அவனோ ட்ராவலில் இருந்தான்.

சிறிது நேரம் அழைப்பு போய் கொண்டேயிருக்க அழைப்பை எடுத்தவன், “சொல்லு மதி...” என்றான்.

“அகில் நீங்க வரும் போது கீர்த்திக்கு டேபிலேட் வாங்கிட்டு வாங்க...”

“மதி நீ சொல்லுறது புரியல இங்கே கொஞ்சம் ட்ராபிக்கா இருக்கு நான் காரை நிறுத்துறேன்...”சொல்லும் முடிக்கும் முன்னே அவன் லைன் கட்டாக, ட்ராவலில் இருக்கிறான் என்பதை அறிந்தவளோ பதட்டத்துடன் தான் மொபலை தவற விட்டாள்.

“வளர் என்னாச்சு..?” என்றவாறு மெல்ல எழுந்து கீர்த்தி வர,

“கீர்த்தி அகில் ட்ராவல்ல இருக்காருன்னு தெரியாம நான் போன் பண்ணிட்டேன்...”

“சரி வளர் அதுக்கு என்ன...?”

“இல்ல நான் அவர்...” அவள் மனம் முழுதும் இப்போது இளாவிற்கு நடந்ததே நினைக்க, வியர்த்து கொட்ட தன் மொபலை எடுத்தாள்.

திடீரெண்டு அவன் அழைப்பு துண்டித்ததை நினைத்தவள் மறுபடியும் கீர்த்தியின் மொபைலில் இருந்து அழைக்க அவனுக்கோ அது செல்ல மறுத்தது.

“போன் வேற போக மாட்டிங்குது. எனக்கு பயமா இருக்கு...” மதியோ கண்கள் கலங்க அழுகையுடன் கூற, அதன் பின்னே கீர்த்திக்கு இளாவின் நினைப்பு வர அவள் தவிப்பு புரிய,

“வளர் அண்ணனுக்கு ஒன்னும்மாகாது பத்து நிமிஷத்துல வந்துருவான் பாரேன்...” என்க, அவளோ அதை கேட்டு அகிலனின் வருகைக்காக தவிப்புடனும், அழுகையுடனும் காத்திருந்தாள்.

அத்தியாயம் : 30

தன் தந்தை தனக்காக சென்று உயிர் இழந்தததையும், இளாவும் தன்னுடன் பேசிக் கொண்டு சென்றதால் உயிர் இழந்ததையும் நினைத்தவள் இப்போது அகிலனின் வருகைக்காக தவிப்புடன் காத்திருந்தாள் வளர்மதி.

அவள் தவிப்பை சோதிக்காமல் விரும்பாமல் அகிலன் வீட்டுக்குள் நுழைய, அகிலனை முழுதாய் கண்டவள் அழுகையுடனும், முகத்தில் நிம்மதியுடனும், “அகில்...!” என்றவாறு ஓடிச் சென்று அணைத்துக் கொண்டாள்.

மதியின் இந்த செய்கையில் புரியாமல் நின்றவன் அவள் முதுகை ஆதரவாய் வருடியவாறு, “மதி என்னாச்சு..? முதல

அழுகுறத நிறுத்து..?" என்றவன் தன்னிடமிருந்து விலக்கி உள்ளே அழைத்து வந்தான்.

"அண்ணா உன் போன் திடீருன்னு கட்னானதுனால உனக்கு ஏதாவது ஆச்சோன்னு நினைச்சு வளர் பயந்துட்டா..? உன் மேல இவ்வளோ அன்பும், காதலும் இருக்கும் நான் நினைக்கல. நீ வளர் கிடைக்க கொடுத்து வச்சிருக்கணும்னா..." கீர்த்தி கூற,

அதை கேட்டவனோ தன் அருகில் நின்றிருந்த மதியை காண அவளோ அவனை கண்டவாறு அமைதியாக நின்றிருந்தாள்.

இருவரையும் கண்ட கீர்த்தி மனதுக்குள், "கடவுளே இவங்க என்னைக்கும் பிரியமா சந்தோஷம இருக்கனும். ஏற்கனவே வளர் மிகப்பெரிய வேதனை அனுபவிச்சி வந்திருக்கா..? இதுக்கு மேல கஷ்டபடுத்தாதேப்பா..?இளாவை வளர் விரும்பினா உண்மை யாருக்கும் தெரிய கூடாது. இப்போ போல எப்பவும் வளர் மனசுல அகில் இருக்கனும்..." அவர்களை கண்டவாறு கடவுளிடம் வேண்டினாள் சுதிகீர்த்தி.

அதே நேரம் கோவிலுக்கு சென்ற சித்ரா, பாட்டி இருவரும் இவர்கள் மூவரும் நின்று கொண்டிருப்பதை பார்த்தவாறு உள்ளே நுழைந்தனர்.

"என்னாச்சு ஏன் மூணு பேரும் நிக்கிறீங்க..?"

"ஒன்னுமில்லைம்மா அண்ணா இப்போ தான் வந்தான். அதான் அவன் கிட்ட டேபிலேட் வாங்க சொல்லிட்டு இருந்தேன்..." கீர்த்தி கூற,

"என்னாச்சு உனக்கு..." பதறியவாறு பெரியவர்கள் இருவரும் அவள் அருகில் வர, வளரின் பார்வை முழுதும்

அகிலனிடமே இருந்தது.

அதன் பின் நேரம் செல்ல இரவு உணவை முடிக்க அது வரை தவிப்புடனே இருந்த வளரை யாரும் அறியாவண்ணம் கண்டவாறே இருந்தான் அகிலன்.

தன் அறைக்குள் நுழைந்த அடுத்தநொடி வளரின் தவிப்பை காண முடியாது அவள் கை பற்றி தன் முன் திருப்பினான்.

“என்னாச்சு மதி..? எனக்கு தான் ஒன்னும்மில்லையே. மொபைல் சார்ஜ் இல்லாம சுவிட்ச் ஆப் ஆனதுனால லைன் கட்டாச்சு. இப்போ நான் உன் முன்னாடி நல்லா தானே இருக்கேன்..? இன்னுமும் நீ ஏன் ஏதையோ நினைச்சு தவிக்கிற..? என் கிட்ட ஏதாவது சொல்லனும்னா சொல்லிரு. இப்படி மனசுலே வச்சிக்கிட்டு இருக்காதே...?” என்க,

அவள் பதிலுக்காக காத்திருக்க அவளோ பதில் கூறாமல் அமைதியாக இருக்க, “மதி முதல என்ன பாரு..?” என்றவன் தன் முகம் காண வைத்தான்.

“மதி நீ மௌனம் சாதிக்கிறது எதுக்குன்னு சொல்லு...?”

அவனுக்கு தான் பதில் அளித்தே ஆக வேண்டும் என்பது புரிய, “பயமா இருக்கு அகில் என் வாழ்க்கையை நினைச்சா எனக்கே..?” என்றவள் திரும்பி படுக்கையை நோக்கி செல்ல,

அவளை செல்ல விடாமல் தடுத்து கை பற்றி இழுத்தவன், “என்ன பயம் சொல்லு..?”என்க,

அவன் விழிகளை கண்டவள் மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, “நான் உங்களை நேசிக்கிறேன் அகில். நீங்க என் வாழ்க்கை முழுக்க என் கூட துணையா இருக்கனும் நினைக்கேன். ஆனா என்னைக்காவது ஒரு

நாள் நீங்க கோவத்துல இருக்கும் போது நான் இளாவை விரும்புனதா சொல்லிக் காட்டிருவீங்கலேன்னு பயமா இருக்கு. இந்த ஒரு விசியம் தான் உங்க கிட்ட என்ன நெருங்க விடமா தவிக்குது...” அழுகையுடன் கூறி முடிக்க,

“நீ நினைக்கிறது சரி தான் மதி. நான் கோவத்துல என்ன பேசுறேன்னு எனக்கே தெரியாது. உன் மனசுல இப்படி ஒரு நினைப்பு எப்போ வந்ததோ இனிமேல் உன்னால என் கூட வாழ முடியாது. ஆனா ஒன்னு நீ என்ன விட்டு போனா அடுத்த நிமிஷம் நான் இந்த உலகத்தை விட்டு போயிருவேன். நான் அக்னி சாட்சியா என் உயிர் இருக்குற வரைக்கும் உனக்கு துணையா, உனக்கு பாதுகாவலனா, உன் உயிர் தோழனா, உனக்குள்ள சரி பாதியா இருப்பேன் சத்தியம் பண்ணிருக்கேன்..? அந்த சத்தியத்தை என்னைக்கும் காப்பாத்துறவனா தான் நான் இருப்பேன்..?”

“சாரி அகில்...” சந்தோஷம் கலந்த அழுகையுடன் அவனை அணைக்க,

“என்னால உன் மேல கோவப்பட முடியாது மதி. நான் எவ்வளோ கோவத்துல இருந்தாலும் உன் முகம் பார்த்தா மட்டும் போதும். உன்ன என்னைக்கு ஹாஸ்பிட்டலுல வச்சி பார்த்தேன்னோ அப்பவே நீ என் மனசுல பதிஞ்சவா..? நான் உன் கிட்ட முதலே சொல்லிருக்கேன் இளாவை நீ விரும்பவே இல்லைன்னு. அப்படி இருக்கும் போது நான் எப்படி கோவத்துல அதை சொல்லி காட்டுவேன்னு நினைக்கிற மதி. உன்னோட முதல் காதல் நான் மட்டும் தான் அதை உனக்கு புரிய வைக்கணும் தான் நான் காத்துகிட்டு இருந்தேன்...”

அவன் கூறியதை கேட்டவள் புரியாமல் அகிலனை காண, “நீ என்னைகாவது இளா கூட திருமண பந்தத்தோட இருக்குற மாதிரி நினைச்சி பார்த்திருக்கீங்க..? அதை விடு மதி இப்போ உன் மனசுல என்ன நினைக்கிற..?”என்க,

“தெரியல அகில். எனக்கு நீங்க வேணும் உங்கள இழக்க கூடாதுன்னு நினைக்கிறேன். நீங்க என் மேல வச்சிருக்கிற நேசத்துக்கு நான் உண்மையா இருக்கனும் நினைக்கேன்..?”

“இது போதும் மதி உன் மனசுல நான் இருக்கேன் தெரியுறதுக்கு. ஐ லவ் யூ மதி...” என்றவள் அவளை தன்னுடன் அணைத்து முன் நெற்றியில் இதழ் பதித்தான்.

அவனுள் துடிக்கும் இதயத்தின் ஓசையை உணர்ந்தவள் தன்னவளின் அணைப்பில் கரைந்தாள்.

“அகில் நான் உங்களை நேசிக்கிறேன். என்ன ஏத்துகிடுவீங்களா உங்க மனைவியா..?” கண் மூடி அவன் இதயத்தின் துடிப்பை கேட்டவாறு கேட்க,

தன்னிடம் இருந்து விலக்கியவன் அவள் கைகளை பற்றி தன் நெஞ்சில் வைத்து, “இந்த உயிர் உனக்காக மட்டும் தான்....” என்றான்.

அதை கேட்டவளோ சந்தோஷத்தில் திளைக்க, “மதி இந்த ஹார்ட் உன்கிட்ட ஏதோ சொல்லுது என்னேன்னு கேளேன்...” என்றவன் அவள் இடையில் கை வைத்து தன் அருகில் இழுத்து நெஞ்சில் சாய்த்தான்.

“என்ன சொல்லுது புரிஞ்சதா..?” என்க, அவளோ மெல்ல நிமிர்ந்து அகிலனின் முகம் கண்டவள், “புரியல...” என்றாள்.

“புரியலையா..? அப்போ புரிய வச்சிற வேண்டியது தான்...” என்றவன் தன்னவளை தன்னுடன் அணைத்து குனிந்து அவள் பூவிதழ் தேனை பருக ஆரம்பித்தான்.

நேரம் செல்ல பருகி முடித்தவன் பூவினை தன்னிடமிருந்து விலக்கி அந்திவனமாய் சிவந்திருந்த தன்னவளின் மதி

முகம் கண்டவன், “எனக்கு நீ வேணும் மதி...” என்க,

அதை கேட்டவளோ அவன் முகத்தை கூட காண முடியாது தலை குனிய அவளை அள்ளிச் சென்று படுக்கையில் கிடத்தினான்.

தன்னவளில் மேல் வைத்த தீராக் காதலுடன் ஒர்ருடலாய் கலந்து புது சங்கமத்தை தோற்றுவிக்க, தன் பெண்மை என்னவென்று தனக்கே உணர்த்திய தன் மனம் கவர்ந்தவனுக்கு தன்னை முழுதாய் அர்பணித்து புதுயுகம் கண்டாள்.

ஆறு மாதங்களுக்கு பிறகு

மண்டபவம் முழுதும் ஆட்கள் நிரம்பி வழிய உற்றார், உறவினர், சொந்தங்கள் என அனைவரும் வருகை புரிந்திருக்க, வாசலில் இன்முகத்துடன் பட்டு வேஷ்டி சட்டையில் வேந்தன்,அகில் நிற்க அவர்களுக்கு பின்னால் எழிலரசன் வெட்ஸ் சஞ்சனா என்ற பெயர் பலகை அனைவரும் வரவேற்றது.

தன் கணவனை தேடி வந்த கீர்த்தி, “யாழ் என்ன இது இங்கே நின்னுட்டு இருக்கீங்க..? உள்ளே எவ்வளோ வேலை இருக்கு இங்கே ஒரு ஆள் இருந்தா போதும்...?இவனை பாட்டி கிட்ட கொடுத்து கொஞ்சம் நேரம் வச்சிருக்க சொல்லுங்க...” என்றவள் படபடவென கூறி விட்டு தன் கையில் வைத்திருந்த ஐந்து மாத குழந்தையை கொடுத்து விட்டு சென்றாள்.

“யேய் சுதி ஒரு நிமிஷம் நில்லு...” என்க,

அவளோ அதை கேட்காதது போல் செல்ல, “ “உனக்கு நைட் இருக்குடி...” மனதுக்குள் நினைத்தவன். கையில் வைத்திருந்த தன் பையனை காண அவனோ தன்

தந்தையை கண்டு சிரிக்க ஆரம்பித்தான்.

தன் செல்ல மகனின் சிரிப்பை கண்டவன் உலகமே மறந்தது போல் அவனை தூக்கி கொண்டு வேடிக்கை காட்டச் சென்றான்.

வந்தனா,ஆதி இருவரும் புதுமண தம்பதியராய் வர அவர்களை வரவேற்ற அகில், “வாங்க ரெண்டு பேரும். நல்லா இருக்கீங்களா..? மதி உள்ள தான் இருக்கா..?” என்க,

“சார் வளர் இன்னும் என் மேல கோவமா தான் இருக்காளா..?”

“நீங்க ஆதியை விரும்பினது சொல்லலைன்னு தான் கோவம் வேற ஒன்னும் இல்ல. கண்டிப்பா இப்போ அவ பேசுவா. வாங்க நானே கூட்டிட்டு போறேன்...” என்ற அகில் அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு மதியை தேடிச் சென்றான்.

அவளோ அந்த மண்டபம் முழுவதும் தேடியும் காணாமல் போக அதே நேரம் அவனை தாண்டிச் சென்ற தன் மாமியாரியிடம், “அத்தை மதி எங்கே..?” என்றான்.

“வாம்மா வந்தனா உட்காருங்க. அகில் அவ மேல கல்யாண மாலை எடுக்க போயிருக்கா...?” என்றவர்  விலகி செல்ல,

“நான் போய் கூப்பிட்டு வரேன் நீங்க உட்காருங்க...” என்றவன் மாடிக்குச் சென்றான்.

டேபிளில் இருந்த திருமண மாலையை எடுத்து வளர்மதி திரும்ப கையை கட்டிக்  கொண்டு டோரில் சாய்ந்தவாறு நின்றான் அகிலன்.

“அகில் நீங்களா..? இங்கே என்ன பண்ணுறீங்க..?” என்றவள் அவனை நோக்கி வர,

அகிலன் அன்று கூறியது போல் தன்னவளின் கொலுசொலி ஓசைக்கு ஏற்றவாறு புடவை மடிப்பு ஆட அதை கண்டவன் தன் அருகில் வந்ததும் இடையோடு சேர்த்து அணைத்தான்.

“ஐயோ அகில் என்ன இது...? விடுங்க..?புடவை கசங்குது உங்களுக்கு நீட்டா இருந்தா தானே பிடிக்கும்...” என்றவள் இரு கைகளிலும் மாலையை வைத்துக் கொண்டு கூற,

“முடியாது. புடவையை கசங்க வைக்கிறது எனக்கு ரெம்பவே பிடிக்கும்...” என்றவன் அவள் செவ்விதழில் தன் இதழ் பதித்து தன் தேடலை தொடங்க, பிடிப்பின்று தன் கையில் வைத்திருந்த மாலையை தவற விட்டாள்.

அவன் நெஞ்சில் கை வைத்து சட்டையை இறுக பற்ற அது அவனுக்கு ஒத்துழைக்க நீண்ட நேரம் நீடித்த தன் தேடலை ஒரு வழியாக முடித்தான்.

தன்னவளின் பூவின் வாசத்தை நுகர்ந்தவாறு கழுத்து வளைவில் முகம் வைத்து உரச அதற்குள் மூச்சினை வாங்கியவள் தாங்கள் இருக்கும் நிலை உணர்ந்து, “அகில் விடுங்க...” என்றாள்.

கஷ்டப்பட்டு தன்னிடம் இருந்து விலக்க, “எனக்கு நீ வேணும் மதி. இன்னைக்கு வீட்டுக்கு வந்துரு ப்ளீஸ். ஒரு வாரம் நீ இல்லாம தவிச்சிட்டேன்...” என்க,

அவன் தன் மேல் வைத்துள்ள காதலை எண்ணி மகிழ்ந்தவள், “அண்ணா கல்யாணம் தான் முடிஞ்சிரும்ல. அதுக்கு அப்பறம் நான் அங்கே இருந்து என்ன பண்ண போறேன்...” கூறியவாறு அவனிடம் இருந்து விலகி நின்றான்.

“ஐ மிஸ் யூ கியூய்டி...”

“என்ன அகில் நான் எப்படி இப்படியே வெளியே போகுறது...” என்றவள் கசங்கிருந்த தன்னை சரி செய்ய,

“அப்போ நான் எப்படி போறதாம்...” என்றவன் குனிந்து தன் சட்டையை பார்க்க அவளோ வெக்கத்தில் தலை குனிந்தாள்.

அதன் பின் நேரம் செல்ல மெல்ல தன்னை சரி செய்து கொண்டு மாலையை எடுத்துக் கொண்டு வெளியே போக, அவள் பின்னே சென்றான் அகிலன்.

தன் தோழி வந்தனாவை பார்த்ததும் கோவம் அனைத்தும் பறந்து போக இன்முகத்துடன் இருவரையும் வரவேற்றாள்.

நேரம் செல்ல வேந்தன், அகிலன் இருவரும் எழிலை அழைத்து வந்து மனையில் அமர வைக்க, அதே நேரம் சஞ்சனாவை கீர்த்தியும்,மதியும் அழைத்து வந்தனர்.

பெரியவர் முன்னிலையில் அக்னி சாட்சியாக சஞ்சனாவின் கழுத்தில் எழில் மூன்று மூடிச்சி போட அனைவரும் அர்ச்சதை தூவி வாழ்த்தினர்.

சஞ்சனாவின் நெற்றியில் திலகம் வைத்து மூன்று முறை அக்கினியை சுற்றி வந்து முழுதாக தன்னவளாக ஏற்றுக் கொண்டான்.

இனிதே அவர்களின் திருமணம் முடிய வந்தவர்கள் அனைவரும் பரிசுப்பொருள் கொடுத்து வாழ்த்து கூறி செல்ல, வேந்தன், அகில் இருவரும் தன் மனைவியுடன் வந்து தன் நம்பனுக்கு வாழ்த்து கூறினர்.

அதே நேரம் கிழே இருந்த கோமதி, “அம்மாடி வளரு, கீர்த்தி

உங்க அண்ணனையும், அண்ணியும் சாப்பிட கூப்பிட்டு வாங்க...” என்க,

“சரிம்மா...” என்றவர்கள் சஞ்சனா அழைத்து செல்ல, “வாடா போகலாம்...” என்ற வேந்தன் எழிலை அழைத்துச் செல்ல முயல,

“ஒரு நிமிஷம் நில்லுங்கடா...” என்றவன் இருபுறமும் நின்ற தன் தோழர்களின் மேல் கை போட்டு முன்னே பார்க்க அந்த அழகான காட்சியை புகைப்படமாக பதிவிட்டது அவர்கள் முன்னிருந்த கேமரா.

இவர்களின் நட்பின் மேல் இருந்த நம்பிக்கை இன்று மூவருக்கும் உறவாய் மாறியிருக்க அது என்றும் அழியாது இருக்கும் என்ற நம்பிக்கையில் சென்று வருவோம்.

நன்றி...!